உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம் வேதசாரம்.

ஸ்ரீகாசிவாசி சாம்பவஸ்ரீ

செந்திநாதையரவர்களால்

இயற்றப்பெற்று,

உபந்யாசவாயிலாகவும் பத்திரிகைகள்வாயிலாகவும்

சைவசித்தாந்த சமயப்பிரசாரணஞ்செய்து

வாராநின்ற

சைவசித்தாந்த மகாசமாஜத்தார்

விருப்பத்திற் கிணங்க,

மஹாவித்வான் புரசை-அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கரும் தமிழ்ப்பண்டிதருமாகிய

புரசை-சுந்தரமுதலியாரவர்கள் குமாரர்

சி. ஏகாம்பரமுதலியாருடைய மனைவியாரும்

ஷை சமாஜத்தின் வனிதையர் வகுப்புக் காரியதரிசியுமாகிய

ஆண்டாளம்மையெனப் பெயரிய

மங்கையர்க்கரசியாரால்

சென்னை

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிங்கள ௵ சித்திரை மீ 1917







நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறை யிருக்கு
மிடங் தெரிவித்தருளிய திருநாரையூர்ப்
பொல்லாப்பிள்ளையார்.





Solden & Co., Printers, Madras S.E.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பொல்லாப்பிள்ளையார் தோத்திரம்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

கார்முகு கொன்றையன் கங்கை கொண்கன்
பார்முகு காறப் பாரத முடித்த
முண்டகக் கண்ணனு முண்டகக் கண்ணனும்
பண்டகத் திற்றம் பான்மை பெரிதென
வுள்ளி யடிமுடி யுறுதுமென் றளவி
னெள்ளிட லாகு மிரண்டொரு வங்க
டுன்ன வொறுத்த தூமணிச் சோதியன்
கன்ன லஞ்சிலைக் காமற் காய்ந்த
பால லோசனன் பசுபதி பாம
ஞல போசன னருளிய செல்வன்
கல்லாப் புல்லர் காணாப் பாஞ்சுடர்
பொல்லாப் பிள்ளை புனிதவத் துவித
வத்து தந்தி வத்திரன் முத்தி
வித்து ஞான வித்தகன் வருமிடை
யூற்றின் கடவு ளொற்றைக் கொம்பன்
மாற்றின் றுயர்ந்த மதிக்கோணப் பொன்னடி
சேக்குமென் னெஞ்சிற் றிருவரு ளொன்றும்
பூக்கு மாங்கே புலமணங் கொளவே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.


இருகுடங்கொண் டொருகுடத்தில் வெண்பொடிபெண் கொடியாக வெழுவித் தோனைத், திருவருளாற் பாலருந்தி யேடதனை யாற்றிலிட்ட தெய்வக் கோவை, யருமறையின் றலைக்கொழுந்தை யாகமத்தின் றனிமுதலை யடியார் வாழ்வைப், பரசமய கோளரியைக் கவுணியர்கு லாமணியைப் பகரு வாமே.

திருநாவுக்கரசுநாயனார்.

இடையறாப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு முழவா ரத்திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே பதித்த நெஞ்சு
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட வுவனைக் கொண்டே, யிருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாள னெல்லா முய்யப், பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமா ளென்றுந், திருமணக்கோ லப்பெருமாண் மறைப்பெருமா ளெமதுகுல தெய்வ மாமால்.



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருவணக்கம்.



நிலைமண்டிலவாசிரியப்பா.

பொன்னார் மேனியன் பின்னார் சடையினன்
பற்கநா மத்த னற்கரு ணைக்கட
லீந்த நிகமமு மாய்ந்ததந் திரமு
நன்னயத் தமிழுடைப் பன்னிரு முறையுங்
கசடறக் கல்லா வசடரை யிடித்துப்
படிவுறப் புரிமார் கடிவறப் பன்னா
லோய்வின் றெழுதுஞ் சாய்வி லருளின
னானமொன் றில்லா ஞான தீர
னம்புயத் தார்கொள் செம்புயத் தண்ணல்
வரமா விட்ட புரமா மூரினன்
நந்தங் குருமணி செந்திநா தைய
னற்றாட் டுணையே பற்றாக் கோடும்
பரவுதும் பணிகுதும் விரவுதா முளத்தே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருந்துதிக்கு மாழியிடை முன்வருநஞ் சஞ்சினரா யமரர் யாரு
மருந்துதிக்கு நீயெனவஃ தருந்துபிரான் செவிசாய்க்கு மடுக்கு நால்வ
ரிருந்துதிக்கு மானொலிக்கு நஞ்செந்தி நாதகுரு வாசை யால்யாந்
தருந்துதிக்கு முளமிரங்கி யேற்றருளிக் கருணைமிகத் தழைக்கு மாலோ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கத்தியரூபச் சிறப்புப்பாயிரம்.



சூரியனார்கோயில்

அதிவருணாச்சிரம ஆசாரியவரிய சைவசமய பரிபாலக

ஸ்ரீ சிவாக்கிர யோகீந்திர ஞானசிவாசாரிய

சுவாமிகளாதீனத்து

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர்கள் அருளியது.

தேவருள் தேவதேவனாகிய பரமசிவன் மேலாயினானென்பது வேதாகமபுராணேதிகாசங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்தாற்போல, அவனை வழிபடுதற்கு நிலைக்களமான சமயமும் ஏனைச்சமயங்களுக் கெல்லாம் மேலானதென்பது அவற்றிற்கெல்லாம் ஒப்பமுடிந்ததே யாம்.

உயிர்கள் நன்னெறியொழுகி வீடுபேறடைதற்குரிய நூல்கள் வேதாகமங்களேயாயினும், அவைதாம் அளவிலவாகலின் முழுவ தும் உணர்ந்து மெய்ப்பொருள் தெரிந்து வீடுபேறடைதல் முற் செய்தவப்பேற்றூற் சிவஞானது திருவருள்பெற்றூர்க் கன்றி ஏனை யோர்க்கு ஒல்லாதாகும்; ஆகலின் பரதகண்டத்திலே சைவசமயப் பிரவேசகராய் உமாசமேத பரமேசுவர பாதாரவிந்தத்தில் மெய்ய ன்புடையராகிய நன்மக்கள் ஓதி யுணர்ந்து நற்கதியடைதற்பொரு ட்டு எழுந்த நூல்கள் **வேதசாரம்** எனப்படும் **தேவார** முதலிய **திருமுறைகளே**யாம்.

இத்திருமுறைகளின் மகத்துவம் அருள்வடிவாகிய உண்மை நாயன்மார் திருவாக்கினின்றும் திருப்பாசுரம் எழுந்தமாத்திரத் தில் அந்நாயன்மார் உலகோபகாரமாகக் கருதியவாறு எலும்பு பெண்ணாகச்செய்தல் முதலிய அநுக்கிரக கிருத்தியங்களைச் செய் தருளிய சிவபெருமானே அறியுந் தரத்ததன்றிப் பிரமாதி தேவ ராலும் அறியும் பான்மைத்தன்று.

இவ்வியல்பினவாய தமிழ்வேதங்கள் ஆரியவேதங்கள் போலச் சிவபெருமானுடைய தடஸ்த சொரூப விலக்கணங்களையும் விபூதி உருத்திராக்ஷமகிமைகளையும் பிரணவம் பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களையும் சரியை கிரியை யோக ஞானங்களையும் அன்புநெறியையும் இன்னோரன்ன பலவற்றையும் விரித்துக் கூறுவனவாம்.

எசுர் சாகையினரும் காசிபகோத்திரத்தினரும் ஆபத்தம்ப சூத்திரத்தினருமாகிய நமது சேந்திநாதையர்அவர்கள் இருமொழி வேதங்களினும் அங்ஙனம் பரந்துகிடந்த வாக்கியங்களைப் பொருளொருமைப்பட எடுத்துத் தொகுத்து, "தேவாரம் வேதசாரம்" எனப்பெயரிட்டு வடமொழிவல்லுநரேயன்றி ஏனையோரும் அறிந்துகொள்ளுமாறு இந்நூலை இயற்றினார்கள். இவர்கள் தமிழ்மொழி வல்லோர் கற்றறிந்துகளிக்குமாறு ஸ்ரீகண்டபாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரகடனஞ்செய்தும், வடமொழியுதாரணங்களுடன் சிவஞானபோதவசனாலங்காரதீபத்தை எழுதி வெளிப்படுத்தியும், சைவஸ்தாபன நூல்களைச் சதாகாலமும் ஆராய்ச்சிசெய்து பரமதநிராகரணஞ் செய்தும் தமதுகாலமுழுவதையும் சைவசமயாபிவிருத்தியின் பொருட்டே உபயோகப்படுத்திவருகின்றார்கள்.

இவர்களியற்றிய சிவஞானபோதவசனாலங்காரதீபம் தேவாரம் வேதசாரம் என்னும் நூல்களை அச்சிட்டுப் பிரகடனஞ் செய்ய முன்வந்த சிரஞ்சீவி ஏகாம்பரமுதலியார் மங்கையர்க்கரசியார் என்பவர்கள் அரோகதிடகாத்திரராயிருந்து இவ்வியல்பினவாகிய சிவபுண்ணியங்களை மேன்மேலும் செய்து புத்தி முத்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் திருவருளைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சத்தியரூபச் சிறப்புப்பாயிரம்.

"சிவனொடொக்குந் தெய்வந் தேடினு மில்லை
அவனொடொப் பாரிங் கியாவரு மில்லை
புவனங்க டந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச்ச டைமுடித் தாமரை யானே."

என்று திராவிட சுருதிமுதலியன கிளந்தோதப்பெறூஉம் ஒப்பி லியாகிய அநாதிமுத்தபதியெனப்படுஞ் சிவபெருமான் அநாதி பெத்தபசுக்களாகிய ஆன்மாக்கள்பொருட்டு இகபரசாதனங்கட் கேதுவாக அருளிச்செய்த முதனூல்கள் சாமானியசுருதியெனப் படும் இருக்காதிவேதங்களும், பிரபலசுருதியெனப்படும் காமிகாதி ஆகமங்களுமாம். ஏனைய நூல்கள் இவற்றினின்று விரிந்தனவாம். அது, "வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்" என்னுந் திராவிட சுருதியானு மூணர்க. சாமானியம் பிரபலம் என்பன முறையே பொது, சிறப்பு என்னும் பொருள்களைத் தந்து நின்றன.

உலகர்பொருட்டு அருளிச்செய்யப்பட்டமையின் வேதம் பொதுநூல் எனவும், சத்திநிபாதர்பொருட்டு அருளிச்செய்யப் பட்டமையின் ஆகமம் சிறப்புநூல் எனவும் கொள்ளப்படும். இத னை, "ஆரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா, நீதியினு லுல கர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது" என்னுந் திராவிட சுரு தியானுணர்க.

இனிமற்றொன்று:—அக்கினி இந்திரன் வருணன் முதலிய கடவுளர் உபாசனைகளும் இருக்குமுதலிய சுருதிகளில் மிகுத்துக் கூறப்படினும், அக்கினி முதலிய நாமங்கள் மகாருத்திரராகிய சிவ பிரானது திருநாமங்களாம் என்றும், சிவபெருமானே (தத்துவா தீத) பரமவியோம அத்தியக்ஷர் என்றும், எல்லாத் தேவர்கட்கும் முற்பட்டவர் என்றும், அவரை இதயத்தில் உபாசிப்பவனே அன் னத்தை நாவினாற் கிரகிக்கின்றவன் என்றும் அச்சுருதிகளே

சித்தாந்தஞ் செய்து போதரலின் அவற்றைச் சிறப்புநூல்கள் எனலாமோ எனின், ஆகாது; யாதினாலெனின், அவ்வக்கினி முதலியோரையும் ஒருங்குகூறிப் போதலானென்க. ஆகலான் அத்துணை பற்றி அவைபொதுநூல்களே எனவும், காமிகாதி சுருதிகள் அங்ஙனமின்றிச் சிவபிரான் ஒருவரையே கூறிப்போதலின் சிறப்புநூல்களே எனவும் கொள்ளப்படும்.

காமிகாதி சுருதிகள் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கடவுளர் வழிபாடுகளும் மிகுத்துக் கூறிப்போதலின் அவைகளும் பொது நூல்கள் எனப்படாவோ எனின், சிவபிரான் அடியார்க்கனுக்கிரகஞ் செய்யும்பொருட்டு அவ்வப்போழ்து கொண்டருளிய மூர்த்தங்களே விநாயகமூர்த்த முதலியன ஆகலான் அதுகடாவன்றென விடுக்க.

உலகர்களாகிய அபக்குவ ஆன்மாக்கள் சோபானமுறையானே கீழ்க்கீழ்ச் சமயங்களைப் பற்றி அவ்வச் சமயக்கடவுளரை வழிபட்டு மேன்மேற் சமயங்களில்வந்து, ஈற்றில் "இராசாங்கத்தமர்ந்த வைதிகசைவத்தைத் தலைப்பட்டு அச்சமயக்கடவுளாகிய சிவபிரானை ஆகமத்திற்கூறிய சரியை கிரியை யோக ஞானங்களாலே வழிபட்டு முறையே சாலோக சாமீப சாரூபமாகிய பதமுத்திகளையும் சாயுச்சியமாகிய பரமுத்தியையும் அடைவர்.

மேற்கூறிய படிமுறையாற்றானே பரமுத்தியைத் தலைப்படல் வேண்டுமென்பதும், சைவசமயமே மெய்ச்சமயம் என்பதும்,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" எனவும்,

"சாவிபோ மற்றச் சமயங்கள் புக்குநின்
றாவி யருதேயென் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற" எனவும்

வரும் திராவிடசுருதிகளானறிக.

இக்கருத்துப்பற்றியே தாயுமானசுவாமிகளும்,

> சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
> கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
> பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
> தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என்றருளிச் செய்ததூஉமென்க.

இருந்தவாற்றால் வேதத்துள் ஏனைத்தேவர்கட்குத் தலைமை கூறப்பட்டது பக்குவத்திற்கேற்ப ஆன்மாக்கள் ஒவ்வொருவரைத் தத்தமக்குக் கடவுளாகக்கொண்டு சமுத்திர கலச நியாயமாக ஒவ்வொரு மதம் உண்டாக்கி அவ்வவற்றைக் கடைப்பிடித் தொழுகுதற் பொருட்டென்பதூஉம், அவ்வொழுக்கத்திற் கேதுவாய மதங்கள் அவ்வான்மாக்கள் சோபானமுறையானே மேன்மேற் சேறற்குக்காரணம் என்பதூஉம் பெறப்பட்டவாறு காண்க. "அருமறையாகம முதனூலனைத்து முரைக்கையினானளப்பரிதா மப்பொருளையானருளாலணுக்கள்—தருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்றர்க்க மொடுத்தரங்களினாற் சமயஞ்சாதித்து" என்னுஞ் சுருதியானும் அது பொள்ளெனப்புலப்படும்.

அவர் தலைமை இத்துணைப் பயன்படன் மாத்திரைக்கேயன்றிப் பரமுத்திக்குக் காரணமாகக் கூறப்பட்டதன்று. அதற்குக் காரணம் மகாசங்கார காரணராகிய சிவபிரான் வழிபாடே யென்றுணர்க; அது,

> "பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
> விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது மென்றல்
> உருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றே
> பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ.
>
> காரெழில் புரையு மேனிக் கண்ணனை யென்னைப் பின்னை
> யாரையும் புகழும் வேத மரன்றனைத் துதித்த தேபோல்
> ஓருரை விளம்பிற் றுண்டோ வுரைத்தது முகம னென்றே
> பேருல கறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே.
>
> நான்மறை தனிலோர் பாக னாரமார் கடவுட் சென்னி
> மேன்மைய தியம்பு மெம்மை விண்ணவர் தம்மை யேனைப்
> பான்மைகொள் பூதந் தன்னைப் பல்பொரு டனையும் பாதி
> தான்மொழிந் திடுமா லீது தவறல வுணர்தி தச்சோய்.

நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைகொ ணெஞ்சர் தீரா விழுமவெந் நிரயம் வீழ்வர்
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்கள்
எம்மையுந் துயர மென்னு மிருங்கடற் படுப்ப ரன்றே.

கானுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்பர்
ஆனவ ரென்று மன்னுற் கடித்தொழில் புரிந்து வாழும்
வானவ ரென்று மெம்மை வழுத்தினர்க் கருள்வோ மல்லா
வேனையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே யிருத்தும் யாமே.

பதியரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுநா மென்றே
விதியொடு மறைகள் கூறு மெய்ம்மையைத் தெளிய வேண்டின்
இதுவென வுரைப்பன் யாங்க ளிவ்வர சியற்ற வீசன்
அதிர்கழ லருச்சித் தேத்து மாலயம் பலவுங் காண்டி.

அவனருள் பெறுது முத்தி யடைந்தன ரில்லை யல்லால்
அவனரு ளின்றி வாழு மமரரும் யாரு மில்லை
அவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யாணை
அவனல திறைவ னில்லை யவனீ யடைதி யென்றான்."

எனப் பிரமா தக்கனுக்கு உபதேசித்த பொருளையுடைய உபப்பிருங்கணத்தானு மறிக.

வேதத்துள் மற்றத் தேவர்களோடு சேர்த்துப் பொதுவாகக் கூறப்பட்ட சிவபிரான் தலைமையைத் தேவார முதலிய திருமுறைகள் ஆன்மாக்கள் பரமுத்தி யெய்துமாறு அவனை வழிபடற்பொருட்டுச் சிறப்பாக எடுத்துக் கூறிப் போதரும் வனப்பு மிகுதிப்பாட்டின்மேலும், சிவாகமங்களுட் கூறியவாறே வேதத்துள்ளும் கூறப்படும் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் என்பன வற்றையும், சிவபிரானே மகாப்பிரளயகாலத்தும் அழியாதிருப்பவர், ஆன்மாக்களுக்குத் தலைவர் என்றற்றொடக்கத்த மகாவிசேட விஷயங்களையும் ஆங்காங்கு மிகத்தெளிவுறக் கூறிப்போதரும்தனிமிகு மகத்துவம் வாய்ந்தன. இவ்வுண்மையை,

வடமொழி தென்மொழிகளில் வல்லுநராய், அவற்றொடாங்கிலமும் பயின்று, சுவமத ஸ்தாபனமும் புறமத நிராகரணமும் செய்து சைவ சமயத்தைப் பரப்புதற் பொருட்டும் தமிழ்க்கல்வியை விளக்குதற் பொருட்டும் உடல் பொருள் ஆவி மூன்றனையும் அவற்றின் பொருட்டுத் தத்தஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்போல, இருமொழியினும் வல்லுநராய், ஆங்கிலமும் பயி

ன்று சுவமதஸ்தாபனமும் புறமத நிராகரணமுஞ் செய்தலிற்றானே தங்காலம் கருத்து முதலியவற்றைப் போக்குகின்ற காசிவாசி ஸ்ரீ ௵ ஸ்ரீ செந்திநாதையரவர்கள் நன்கினுணர்ந்து, உணர்ந்த மாத்திரையி னமையாது, அதனை வடமொழி உணராத் தென்மொழி யாளர்க்கும் தென்மொழி உணரா வடமொழியாளர்க்கும் இருமொழிப் பிரமாணங்களாலும் தெரிக்க விரும்பி, அங்ஙனந் தெரிக்கு முகத்தானே சிவபிரானே எப்பொருட்குமிறைவனென் பதை, வாயுமுகத் தசையாத வச்சிரமலைபோலவும் அக்கினி முகத் தழியாத தங்கம்போலவும் நனிதவ நிறுவி "தேவாரம்வேதசாரம்" எனப்பெயரிய நூலொன்று இயற்றினார்கள். அதனை,

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்னுங் கருதிப்படி சிவஞானபோத வசனாலங்கார தீபமுத லியவற்றை அச்சிடுவித்து உலோகோபகாரமாகப் பரப்பிய புண் ணியமுடையர்களும், சைவசித்தாந்தமகா சமாசத்திற்சேர்ந்து, பொதுநயங்கருதிப் பலப்பல சற்கருமங்கள் செய்து வருபவர்களு மாகியம-௱-௱-ஸ்ரீ ஏகாம்பரமுதலியாரவர்களும் அவர்கள் மனைவியா ராகியமங்கையர்க்கரசியாரும் அச்சிடுவித்துப் பரப்பி முன்போலப் புண்ணியம்புகழ் முதலியவற்றைப் பெறுவாராயினர்.

இத்தகைய சிவபுண்ணியாபிவிருத்திக்குரிய செயல்களைச் செய்து போதராநின்ற இத்தம்பதிகள் இன்னும் இவைபோன்ற பெருஞ் செயல்களைச் செய்து, "நாம்பெற்ற வின்பம் பெறுக வி வையகம்" என்றபடி தாம்பெற்ற வின்பம் உலகம் பெற்றின்புறு மாறு பெருவாழ்வடைந்து நீடுவாழும்படி பரங்கருணைத் தடங் கடலாகிய பசுபதிப் பெயரிய ஒருதனி முதல்வர் பேரருள் பாலிக் கும்வண்ணம் அவர் திருவடிக்கமல முடிமிசைக் கொண்டு நனி பழிச்சுதும்.

இங்ஙனம்,

சுவாமிநாதபண்டிதர்.

சிவமயம்.

பத்தியரூபச் சிறப்புப்பாயிரம்.

உலகுதனிற் பலவகைய சமயங்க ளுளவவற்று ளுயர்வொப் பின்றி
யிலகுமொரு சைவமத வுண்மையினை யாவருமிங் கினிதி னேர
விலகிமல மொதுங்கவரு டருஞான சபையினிடை மேல தாகு
மலகிலொளிப் பொருள்காட்டுந் தில்லையெனும் பெரும்பதியு மமர்தலானும்

ஈசனமர் தருங்காசி முதலியவா லயங்களெல்லா மிலங்க லானும்
பாசவிமோ சனமருளுங் கங்கைமுதற் றீர்த்தமெலாம் பயிற லானு
மாசகல்சுத் தாத்துவித சித்தாந்த சைவநெறி மருவு ஞான
தேசிகர்பற் பலர்வந்து திருவவதா ரம்புரிந்த செய்கை யானும். ௨

மெய்ம்மைநெறி புகல்வேத வாகமமா தியநூல்கள் விளங்க லானுஞ்
செய்வமுனி வர்களிருந்து தவம்புரிதற் கிடமாகித் திகழ்த லானு
முய்யுநெறி கருதியம ருலகினரும் வந்தரனை யுவந்து பூசை
செய்யுமொரு திறத்தாலும் பரதகண்ட முலகினிடைச் சிறந்துற் றன்றே.

அப்பரத கண்டத்திற் றென்னாட்டி லவதரித்தா ரகில முய்ய
வொப்பில்சிர புரத்தலைவர் வாகீசர் சுந்தரரென் றோது மூவர்
அப்பெரியோர் மூவர்களு மரனமரா லயங்கடொறு மடைந்தே யன்பிற்
செப்பினர்க டேவார மருமறைநா லிதுவென்று செகத்தோர் கொள்ள. ௪

எலும்பினைப்பெண் ணுருவாக வியற்றியது கற்புணையா விருளார் பௌவஞ்
செலும்படிசெய் திட்டதுமு னுண்டமறைப் பாலகனைச் சினவி டங்கர்
சலம்புலரு மோடையினீ ருடனடைந்து தரப்புரிந்த சால்பிற் றின்னுஞ்
சொலும்பரிசோ தேவாரஞ் செய்தபெரு மற்புதங்க டுணையிற் றன்றால். ௫

அன்னதொரு தேவார மறைப்பொருளைத் தன்னகத்து ளடக்கி நின்ற
தென்னுமதை யினிதுணரச் சுருதியுறும் வாக்கியங்க ளெடுத்துக் காட்டிப்
பன்னுபுரா ணாதிகளின் வாக்கியமு மவற்றினொடும் பயிலக் கூட்டி
நன்னயநூ றேவாரம் வேதசா ரப்பெயரி னல்கி னானால். ௬

யாவர்களு மியற்றரிய விப்பனுவல் செய்தளித்தோன் யாவ னென்னிற்
றேவர்களுக் கரியானைத் தேவாதி தேவனைத்தன் சிந்தை யுள்ளே
பாவனைசெய் தளவில்பர மானந்த வாரிதியிற் படிந்து நின்றோன்
மூவகைய பாவனையுங் கடந்தத்து விதமென்று முடிவு செய்தோன். ௭

நாட்டியுயர் சித்தாந்த தத்துவத்தின் முடிபுதனை ஞாலத் தோர்க்குக்
காட்டவோரு படமுமத னியலுணர்த்த வினாவிடையுங் கருதிச் செய்தோ
னீட்டுபுக ழுடைவாத ராயணர்சூத் திரத்தினுக்கு நீலகண்டர் [டோன்.
தீட்டியபா டியந்தமிழிற் பெயர்த்தெழுதா வெழுத்தினிடைச் சிறப்பக் கண்

சிவஞான போதமெனுஞ் சித்தாந்த முதனூற்குச் சிவஞா னப்பேர்த்
தவஞான முனிவர்தரு முரையதனைத் தழுவியொரு தகுதி யார்தத்
துவஞான முறுவசன வலங்கார தீபமொன்று துலங்கத் தந்தோ
னவஞானந் தருமாயா வாதிகளாங் கயத்திரளை யடக்குஞ் சிங்கம். க

வேதமுட னாகமங்கண் மிருதிமுதற் கலைகளெலா மிகவு மாய்ந்தோன்
காதலொடுந் தண்டமிழிற் சித்தாந்த சாத்திரத்தின் கரையுங் கண்டோ
னோதமுறும் பரசமயப் படுகுழிவீ ழுலகோரை யெடுத்துச் சைவ
போதமா நெறிவிடுக்கும் பிரசங்க சாதுரியம் பொருந்துஞ் செல்வன். கo

திருமருவுஞ் சூரியனார் கோயிலா தீனமிகச் சிறப்ப வைகுங்
குருபரபில் வருமுத்துக் குமாரகுரு வெனும்பேர்கொள் குரவ னீந்த[ர்சங்கந்
பெருமைகொளுஞ் சித்தாந்த சிகாமணிப்பேரொடுஞ்சென்னைப் பெரியோ
தருமொருபேர் கிறீஸ்துமத கானகோ டரியென்று தழைக்க நின்றோன்.

சத்தினுடன் சதசத்து மசத்து மெனும்பொருணிலைமை தனையிங்காயு,
முத்தமர்கட் கொருகுருவா யவற்றினியல் புணர்த்திடுவோ னொழுக்கம் பூ
ண்டோன், சுத்துபுனற் கடலுலகில் வைத்திலகும் புகழாளன் காசி வாசி,
பத்திநெறி யுறுஞ்சேந்தி நாதமறை யவனென்று பகர்வோ னன்றே. கஉ

உலகமெலா மிகுபுகழ்பெற் றோங்குசைவ சித்தாந்த மகாச மாசத்
திலகமென விளங்குமங்க சிரத்தையினர் சிவசமய விருத்தி செய்யப்
பலகலைகள் பளகறவே பார்த்தச்சிற் பதிப்பித்துப் பலர்க்கு நல்கிக்
கலகமிலாப் புலவோர்கள் களிசிறப்பக் கண்டுநனி தாங்க ளிப்போர். கங

இத்தகையே காம்பரனு மிவன்மனைமங் கையர்க்கரசி யென்ன வாழும்
புத்தியுறு மாதுமிகப் புகழ்தேவா ரம்வேத சார மென்னும்
மெய்த்தகைய நூறன்னை மேதினியோர் பயனெய்த விருப்பமுற்றுச்
சித்தமொரு மித்துநனி சிறந்தவச்சிற் றீட்டியுப கரித்தார் தேர்மின். கச

இங்ஙனம்,

சி. கணே சையர்

புன்னை மாநகரம்

யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விசேஷவிஞ்ஞாபனம்.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந் [வாய்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமு
முய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

சைவ நன்னெறியார் மெய்யறிவுடையீர்!

அநாதிமலமுத்தராகிய மனாதிகடந்த தனிப்பெருங்கருணை வள்ளலார், எத்திறத்துயிர்களும் தம்மையுந் தந்தலைவனையுங் காணுவாறு, ஆணவ வல்லிருளுட்பட்டிருத்தலின், புறவிருளிற் புக்கார்க்குக் கைவிளக்குதவுதல்போல வேதசிவாகமங்களைத் திருவாய்மலர்ந்தருளினரென்ப. அவற்றுள் வேதம் சூத்திரம் போன்றிருக்தலிற் பொதுநூல் எனவும், ஆகமம் அதற்குப் பாஷ்யம் போன்றிருத்தலிற் சிறப்புநூலெனவும் பெற்று ஒருபொருளுடையனவேயாம். தருக்கவியாகரணாதி கருவிநூல்களைக் கடைபோகக்கற்று வேதசிவாகமங்களின் பொருளை யறுதியிட்டறிவது அரிதாயினமையின், அவற்றிற்கு அபார்த்தங்கூறி இடர்ப்பட்டு மலைந்தனராக, அருட்பெருங்கடலாகிய ஆலமர்கடவுள் அவற்றின் பொருளையினிது விளக்கிச் சைவசமயத்தை நிலைபெறுத்தற்கு ஸ்ரீகைலாசத்திருந்த ஸ்கந்தாதியரை அடுத்தடுத்துத் திருவவதாரஞ் செய்யுமாறு பணித்தனர். அவர்கள் ஸ்ரீஞானசம்பந்தாதி ஆசாரியர்களாகத் திருவவதாரஞ்செய்து வேதசிவாகமங்களை வடித்துச்சாரங்கொண்ட தெவிட்டாத தெள்ளமுதத்தைத் தமிழாகிய மாணிக்கச் செப்பினிட்டு அருளினரென்க. இவ்வுண்மை தமிழ்வேதம் என்னும் பெயரானே அறியக்கிடப்பினும், சில்வழிப்பெயருக்கும் பொருட்கும் இயைபின்றிக் **கருட்டுக் கண்ணனைச்** *செந்தாமரைக்கண்ணன் என்று பெயர் வழங்கக் காண்டலின், இஃதங்ஙனமன்றெனப் பெயரோடு பொருளும் பொருத்தமாமாறு விளக்குதலாவசியகமாயிற்றென்க. அதுகண்டு யாம் இருமொழி வல்லுநராய்ச் சைவசமய நூலாராய்ச்சியிற் றலைநின்ற சாம்பவஸ்ரீ* **காசிவாசி செந்திநாயையாவர்கள் 'தேவாரம் வேதசாரம்'** *என்னும் மாட்சிமைதங்கிய நூல்வரைந்து வைத்திருப்பதாக அறிந்து அதனை அவர்களிடத்தில் வேண்டிப் பெற்று வெளியிட்டேம். இந்நூல் சைவசமயிகட்கு இன்றியமையாததொன்றே; ஒவ்வொரு சிவநேசச்செல்வர் கரத்தினும் இருக்கற்பாலதொன்றே.*

ஷை 'தேவாரம் வேதசாரம்' என்னும் நூலின் இன்றியமையாமை கருதியும் மற்றை நூல்கள் வெளிப்படற்கு உதவியாதல் கருதியும், சைவாபிமானிகள் ஷை நூலை விலைக்குப்பெறின், சிவபுண்ணியத்தைக் கொள்ளை கொள்வரென்பது திண்ணம்.

யாம் "சிவஞானபோத வசனாலங்காரதீபம்" "தேவாரம் வேதசாரம்" ஆகிய இவ்விரு பெருநூல்களை அச்சிட்டுளம். நம் சென்றகாலத்தநுபவத்தைக் கொண்டளவிடின், ஷை நூற்பிரதிகள் விலைப்படச் சிலதலைமுறைகள் செல்லுமெனத் தோன்றுகின்றது.

எமக்குப் புத்தகவியாபாரம் ஜீவனோபாயமன்றென்பதனை அறியாதாரிலர். எங்ஙனமாயினும் சைவவுலகம் வாழ்வதற்கு இன்றியமையா நூல்கள் சிலவற்றை முன்னின்று உழைத்துக் கைப்பொருளும் இயன்றவளவு செலவிட்டு அச்சேற்றி உலகிற்குதவிச் சிவபுண்ணியங் கைக்கொண்டு எடுத்த பிறப்பினைச் சபலமாக்கவேண்டுமென்பதே ஒருகாலும், இருகாலும், முக்காலும் எமக்கு ஆசை யென்றறிக. ஆகலினன்றே, அச்சுத்தாளும் மையும் மும்மடங்கு விலைகொண்டு நிற்பது நோக்காது இந்நூல்களை ஈண்டு வெளியிடத் துணிந்ததென்க. அவ்வாசை சைவாபிமானிகள் உதவியாலன்றி ஈடேறுமாறின்ருகலின், அவர்கள் ஷை நூல்களை விலைக்குப் பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேம்.

இங்ஙனம்,

சி. ஏகாம்பரன்.

மங்கையர்க்கரசி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இந்நூலின்கணுள்ள

விஷய அகராதி அநுக்கிரமணிகை.

பக்கம்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உபோற்காதம்

உமாசமேதராய், அதிபரமாப்தராய், அபகதபாப்மத்துவாதி (சர்வஞ்ஞுதாதி) எண்குணங்களையுடையராயுள்ள சிவபெருமான் ஆன்மாக்கள்பொருட்டு அருளிச்செய்த முதனூல் வேதம். இந்த வேதம் என்னும் மொழி ரூடப்பெயரால் இருக்காதி வேதங்களையும், யோகப்பெயராற் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும் உணர்த்தும்; ஆகமம் என்னும் மொழியும் ரூடப்பெயராற் காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும், யோகப்பெயரால் இருக்காதி நான்கு வேதங்களையும் உணர்த்தும். சிக்ஷை முதலிய அங்கங்கள் ஆறும், ஸ்மிருதிமுதலிய உபாங்கங்கள் நான்கும், தனுர்வேதமுதலிய உபவேதங்கள் நான்குமாகிய பதினான்கும் வேதத்தினும், உபாகமங்கள் இருநூற்றேழும் ஆகமப்பிரகரணங்களும் ஆகமத்தினும் அடங்கும். இந்த வேதமும் சிவாகமமும் பொருளினால் ஒற்றுமையுடையனவாம். ஸ்ரீநீலகண்டசிவாசாரிய சுவாமிகளும் "வேதசிவாகமங்கட்குப் பேதம் கண்டிலம்" என்று பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்தில் (உ. உ. ௩அ) வரைந்தருளினார்கள்.

சாந்தோக்கியோபநிடதத்து எ. க. உ-ம் மந்திரத்தில் "இதிகாசபுராணமானது வேதம் என்று கூறப்படலானும், வாயுசங்கிதை பூருவபாகத்து உஅ-ம் அத்தியாயத்து ௬, ௯, க0-ம் சுலோகங்களிலே வேதத்துக்கு இதிகாசபுராணங்கள் உபப்பிருங்கணங்கள் என்று கூறப்படலானும், வேதாகம இதிகாசபுராணங்கள் வேதம் என்னும் மொழியினாற் கூறப்படுதற்குமுரியன.

ஆன்மா பாசபடலம் நீங்கிச் சிவனாது அபகதபாப்மத்து வாதி (சர்வஞ்ஞதாதி) எண்குணங்களைச் சாமியமாய் அடைதலே மோக்ஷலட்சுமிப்பிரயோஜனமாம் என்று தியானயோகம்பற்றி வேதாந்தம் கூறலானும், சர்வஞ்ஞதாதி எண்குணங்களையும் சாமியமாய் அடைதலே நெறியாம் என்று ஞானயோகம்பற்றி ஆகமாந்தம் கூறலானும், வேதாந்தமும் ஆகமாந்தமும் (வேதாந்த சித்தாந்த) மகாவாக்கிய பரமசிவாஹம்பாவனைத் தடஸ்தசிதம்பா துரியநிலையிலே சாமியமாகும். இவ்வுண்மையுணர்ந்தே "பண்டை மறைகளுமது நானனேனென்று பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே" என்றும், "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்றும், "நாடிவிரண்டந்தம் பேதமதென்னிற் பெரியோர்க்கபேதமே" என்றும் பெரியோர் பகர்ந்தார். வேதாந்தசாரமாய், வேதாந்தத்தெளிவாய், தியானயோகம் கடந்ததாயுள்ளவிடத்திலே பேசப்படும் சித்தாந்த ஞானபாதத்தில் ஆன்மாவும் சிவமும் சொரூபநிலையிற் சாமியமுற்று நிற்குநிலை அன்புமாத்திரையினாலேயாம். இது பாவனையிறந்து நின்றநிலை. இவ்வன்புநிலை திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாகிய ஸ்ரீமீனாட்சியம்பாசமேத சோமசுந்தரப்பெருமான் அருளிய அன்பினைந்திணை என்னும் அகப்பொருளிலக்கணத்தினாலும் உணரப்படும். அனந்தகோடி சென்மங்களிலீட்டிய அளவிறந்த பசுபுண்ணியங்களினாலே நற்குலத்துதித்துச் செய்யும் சிவபுண்ணியங்களினாலேதான் சிவபெருமானிடத்துக் குன்றாத பேரன்பு உதிக்கும். அந்தப் பேரன்பு பொருளையேனும் புகழையேனும் பற்றிநிற்காது. இதுபற்றியே திருவாசம் "புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே" என்று அருளிற்று. இவ்வியல்பினதாய அதீத சிவபோக அன்புநிலை அடைந்தவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சைவசமய ஸ்தாபனாசாரியர் முதலாயினோரும் அந்நிலை அடைந்த மற்றைச் சிவாநுபூதிச் செல்வருமாம். அவர்கள் அங்ஙனம் அந்நிலையில் நின்றார்கள் என்பதற்கு அவர்கள் அருளிய தமிழ்வேதத் திருவாக்குகளே சான்றாம்.

காசுமீர, நேபாள, பங்காள, பாஞ்சால, இந்துஸ்தானமுதலிய உத்தரதேசங்களிலுள்ள பாஷைகளையும், மலையாளம், மஹாராஷ்டம், தெலுங்கு, கன்னடம், தமிழ்முதலிய தக்ஷிணதேச பாஷைகளையும் அடக்கி, இமாசலத்தையும் ஈழத்தையும் பிங்கலைநாடி இடைநாடிகளாய்க்கொண்ட பரதகண்டத்திலே, பொதியமலைப்பெருமானாகிய அகஸ்தியமகாமுனிவர்க்குத் தமிழ் அறிவுறுத்திய பரமாசாரியராகிய முருகப்பிரானது வரைப்பாயுள்ள திருவேங்கடத்தை வடவெல்லையாகக்கொண்டு விளங்கிச் சிற்றிடமுடையதாய்ப் பிரகாசிப்பது தமிழ்நாடே; இந்தத் தமிழ்நாட்டிலே தமிழ்பேசும் பல்லோர் ஏகான்மவாதம், வைஷ்ணவம், மத்துவமுதலிய சமயத்தோராய் ஒழுக, பரம்பரைச் சைவசமயத்தவராய் இருப்பவரும் ஊழ்வசத்தினாற் சைவசமயத்துருத்து லோகாயதவொண்டிறற்பாம்பினாலும் மிண்டிய மாயாவாதச் சண்டமாருதத்தினாலும் தாக்குண்டாராக, இடத்தினாலும் தொகையினாலும் மிகச் சிறுமைபூண்டோராய் ஆரியவேதத்தில் இன்னபொருள்தான் பொதிந்துளதென்று வடமொழி வியாகரணமுதலிய கருவிநூல்கொண்டும் அறியமாட்டாதவராயுள்ள சைவசமயிகள்பொருட்டுக் கலியுகாரம்பத்திலே வேதமகோததியைப் பருகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய நான்கு சிவஞானமுகில்களைச் சிவபெருமான் இரங்கி அனுப்பித் தமிழ்வேதமழையைக் கைம்மாறு கருதாவண்ணம் பொழியுமாறு செய்தருளினார். இதனாற் சிவபெருமான் சைவசமயிகள்மீது கொண்ட கருணைக்கடலுக்கோர் கரைகாணலாகுமோ? ஆகாது! ஆகாது!! இருக்காதி வேதசாரமாய் வேதாந்தமாயுள்ள தமிழ்வேதத்தைப் பெறுதற்கு வைதிகசைவசமயிகளாகிய யாமெல்லாம் முன் என்ன தவஞ் செய்தோமோ? அறிகிலேம்!

"ஆண்டவன்றன்னை யடிமையென்றுரைத்தும் அடிமையை ஆண்டவனென்றும்" உரைக்கும் கூற்றுக்கியையப் பரமான்மாவல்லாத ஆன்மாவைப் பரமான்மா என்று விபரீதமாகவுரைக்கும் ஏகான்மவாதபரமாய் இயற்றிய உபநிடதபாஷ்யம், பிரஹ்மசூத்திரபாஷ்யம், கீதாபாஷ்யம் என்னும் பிரஸ்தானத்திரயங்களையும்,

தமிழிலே அவற்றை அநுசரித்துவந்த கைவல்லியநவநீதம், விசாரசாகரம், விசாரசந்திரோதயம், விருத்திப்பிரபாகரம், தத்துவாநுசந்தானம், தத்துவபோதினி, ஆன்மபுராணமுதலிய நூல்களையுமே ஞானசாஸ்திரங்கள் என்றும், பிரஹ்மவித்தைக்கு உரிய நூல்கள் என்றும் புகழ்ந்தும், அந்தப் பசுநூல்களை நிர்க்குணப்பிரஹ்மோபாசனை உணர்த்தும் உயர்ந்த நூல்கள் என்றும், அருணூலாகிய தமிழ்வேதத்தை நிர்க்குணோபாசனைக்குச் சாதனமாய்ச் சகுணோபாசனையை உணர்த்தும் தாழ்ந்த நூல் என்றும் அறியாமை மேற்கொண்டு குழறுபடை செய்து சிவத்துரோகிகளாகின்றார்கள் பலர். ஐயகோ! இவர்கள் அறிவு என்னே! என்னே!! ஏகான்மவாத சாங்கியயோகத்துக்குரிய நிர்க்குணபாவனையானது சம்தம்சபதிதநியாயம்பற்றிப் பௌதிகசகுணயோகம் அத்தியாசிரமபாசுபதயோகம் என்னும் இருபாவனைகளுக்கிடையில் அகப்பட்டுள்ளதென்பது "மகாவுக்கிரவீரபத்திராஸ்திர"த்து ரு௲-ம் பக்கத்து உ௭0-ம் பிரிவுமுதல் அ0-ம் பக்கத்து ௲௬௪-ம் பிரிவிறுதியாகவும், "சிவஞானபோதவசனலங்காரதீப"த்துச் "சமயாதீதம் வேதசாரசைவசித்தாந்தம்" என்னும் விஷயத்தின் கீழ் உரு-ம் பக்கத்து அ-ம் பிரிவுமுதல் க௬-ம் பிரிவிறுதியாகவும் பலபிரமாணங்கள்கொண்டு ஸ்தாபித்துள்ளேம். ஆண்டாண்டுக் காண்க.

தேவாரமுதற் பெரியபுராணமிறுதியாகிய பன்னிருதிருமுறைப்பொருள்கள் (மூவிதபாவனைகளுள்ளே முதலாவதாகிய விமலசத்துவப்பிரதானமூலப்பிரகிருதி மாயோபாதிகனும் கற்பித ஆபாசனுமாகிய தாழ்ந்த ஈசுரனது சகுணவழிபாட்டினும் உயர்ந்த இரண்டாவதாகிய நிர்க்குண ஆன்மப்பிரஹ்மோபாசனைக்குரிய சர்வசாரமுதலிய அபரசுருதிகளுக்கு அப்பாற்பட்டு விளங்கும் வேதாந்தசூத்திரத்துக்கு ஆதாரமாகிய ஈசகேநாதி பரோபநிடதமுடிவாகிய அத்தியாசிரமபாசுபதயோகத்துக்குரிய துரிய ஞானயோகஸ்தானமாகிய முப்பத்தாறுவது சிவதத்துவத்தின்பாற்பட்ட பரமாகாய திருச்சிற்றம்பலத்து மகாசங்காரமகாருத்திரசமஷ்டிரூப

சதாசிவராகிய மகாதாண்டவேசுவரரின் மேலனவாம் என்று உண்மை கடைபிடிக்க.

வடமொழிவல்லோராய சிவபக்தப்பெரியோர் இதிகாசபுராணவாயிலாக வேதாந்தம் எனப்படும் ஈசகேநாதி உபநிடதப்பொருள்களை ஆராய்வாராயின், திருவருள்வாயிலாக அவரெல்லாம் தமிழ்வேதம் வேதசாரம் என்று அறியவல்லுநராவார். அவ்வுபநிடதப்பொருள்களை ஏகான்மவாதம்பற்றிச் செய்த பாஷ்யம்வாயிலாக ஆராயப்புகின், அவை தமிழ்வேதப்பொருளாய் முடியா.

ஹ்வம் தேவேஷு ப்ராஹ்மணஃ।

த்வம் தேவேஷு ப்ராஹ்மணஃ।

"நீர் தேவர்களுள்ளே பிராஹ்மணர்" என்று சாமவேதீய பிரபதப்பிராஹ்மணமுதலிய பரசுருதிகளிற் புகழப்படும் சிவபெருமானை "என்னிடத்தில் ஈசுரனும் சிவனும் பொய்" என்னும் அபரசுருதி வாக்கியங்கொண்டு சகுணப்பாற்பட்ட கற்பித ஈசுரர் என்று புறக்கணித்து, மீளா அடிமையாம் ஆன்மாவாகிய நம்மைப் பிரஹ்மமென்று மதித்து, சிவபெருமானிலே முற்றிநிற்குஞ் சுருதிகளையெல்லாம் நம்மீதேற்றி, அடிமுடி தேடிய பிரமவிஷ்ணுக்களையும், சிவநிந்தனைபண்ணி யாகஞ்செய்த தக்கனையும் போலக் கருதிய பயன்கள் அடையாமை மாத்திரையே யன்றித் துன்புமுறுதல் அறிவின்பாற் படாதென்றொழிக. சிவாகமங்களையும் தமிழ்வேத முதலியவற்றையும் விதிப்படி ஓதி யுணரின் உபநிடதமந்திரங்களின் உண்மைப்பொருள்களைக் காணலாம். (பசுவாகிய) ஆன்மாவைப் பிரஹ்மமென்று கூறும் ஏகான்மவாத பாஷ்யத்தைப் பார்த்து, சிவபரத்துவஞ் சாற்றும் அவ்வுபநிடதங்களைப் பசுநூல் என்று தூஷித்து ஒதுக்கி நம்மவர் சிவத்துரோகத்துக்கு ஆளாகாவண்ணம் தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகமுதலியன உபநிடதங்களுக்கு மாறுபடாது உண்மைப்பொருள் பொதிந்துள என்று உணர்த்தற்கே தேவாரம் வேதசாரம் என்னும் இந்நூலை எழுதத்துணிந்தேம். தமிழ்வேதமஹோததியில் ஆழ்ந்துகிடக்

ரும் பெரிய சிவரத்தினசம்பந்தப்பொருள்களைச் சிற்றறிவினே னுடைய நாயேன் எடுத்துரைப்பேன் என்பது பெரியோர்க்கு நகைப் பை விளைக்குமேனும், என்னுள்ளே அங்ஙனம் லோகோபகார மாகச் சிறிதாயினும் எழுதிவைக்கவேண்டுமென்று எழுந்த ஆசை யானது அந்நகைப்பைப் பொருட்படுத்தாது ஓங்கிநிற்றலால் அதன்வயப்பட்டெழுதாநின்றேன்.

தேவாரம் வேதசாரம் என்றமையால் வேதத்தின் மொழி பெயர்ப்புத்தான் தேவாரமோ எனின், அங்ஙனமன்று; பின் அதன் கருத்து என்னையெனில், வேதம் என்று மேலே நிரூபிக்கப் பட்ட வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம், இதிஹாச புராணம் என்பவைகளிலே இலைமறை காய்கள்போன்றும், மணன் மலையிற் பொற்பொடிகள் போன்றும் அங்கங்கே இலங்கும் சீவான் மபரமான்மாக்களின் ஐக்கியத்தினால் நேர்ந்த ஆனந்த நிலைகளை யும், சிவபெருமானது அளவிறந்த குணாதிசயங்களையும், இலக் கணங்களையும், எந்தத் தேவராலும் முடிக்க இயலாதனவாய், அச் சிவபிரான் ஒருவராலே முடிக்கப்பட்டனவாயுமுள்ள அளவிறந்த வீரச்செய்கைகளையும், பிறவற்றையும் * குணோபசங்காரக் கிரமத் தினால் ஆதரம் கொண்டியைத்துப் புகழ்ந்து † தேவாரம் துதிப்பதி னால் அது வேதசாரம் எனப்படும். இங்ஙனம் சிவோபாசனையிலே ஒருங்கு சேர்த்துத் தியானித்தல்வேண்டுமென்பது பிரஹ்மசூத் திரசைவபாஷ்ய (௩. ௩. ௩௯; ௩. ௩. ௨௩) த்தினால் அறியக் கிடக்கின்றது. இம்முறைகொண்டே ஒவ்வோர் தேவாரப்பதிகங் களினும் சிவபிரானார் குணங்களையும் வீரச்செய்கைகளையும்

---

* குணோபசங்காரம் குணங்களைத் தொகுத்துக் கூறல். † எழுதிரு முறைகள் அடங்கிய தேவாரத்தைக் கூறவே உபலக்ஷணையினால் திருவாசக முதலிய ஏனைய திருமுறைகளும் தழுவப்படும்.

அமைத்து, அந்தந்தச் சிவஸ்தலவாசிகள் சிவபெருமானைத் தியானித்துத் துதித்து உய்யவேண்டும் என்னும் திருவுளக்கருத்தினால் அப்பதிகங்கள் அருளிச்செய்யப்பட்டனவாம் என்க.

இவ்வரிய பெரிய செயல்முற்றுப்பெறுமாறு செய்தருளிய சிவபெருமானையும், உமையம்மையாரையும், விநாயகப்பெருமானையும், முருகப்பிரானையும், ரிஷீந்திரராகிய அகத்தியரையும், சைவ சமயஸ்தாபனாசாரியர்களையும் திரிகரணங்களினாலுஞ் சந்ததம் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

ஸ்ரீகாசிவாசி - செந்திநாதையர்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம.

தேவாரம் வேதசாரம்.

கணபதி.

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே.

—ஞா, திருவலிவலம்.

நடேசர்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே.

—ஞா, கோயில்.

உமையம்மையார்.

இமையாதுயிராதிருந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி
யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகைலாயம்.

விநாயகர்.

கோவாயவிந்திரனுள்ளிட்டாராகக்
குமாரனும்விக்கினவிநாயகனும்
பூவாயபீடத்துமேலயனும்
பூமியளந்தானும்போற்றிசைப்பப்
பாவாயவின்னிசைகள்பாடியாடிப்
பாரிடமுந்தாமும்பரந்துபற்றிப்
பூவார்ந்தகொன்றைபொறிவண்டார்க்கப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே.

—நா, திருப்புறம்பயம்.

சுப்பிரமணியர்.

கள்ளிமுதுகாட்டிலாடிகண்டாய்
காலனையுங்காலாற்கடிந்தான்கண்டாய்
புள்ளியுழைமானின்றோலான்கண்டாய்
புலியுரிசேராடைப்புனிதன்கண்டாய்
வெள்ளிமிளிர்பிறைமேற்சூடிகண்டாய்
வெண்ணீற்றான்கண்டாய்நஞ்சேந்தின்மேய
வள்ளிமணாளற்குத்தாதைகண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

—நா, திருமறைக்காடு.

அகஸ்தியர்.

மங்கலக்குடியீசனைமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணொடுமண்ணுநேர்
சங்குசக்கரதாரிசதுர்முக
னங்ககத்தியனும்மர்ச்சித்தாரன்றே.

—நா, திருமங்கலக்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

வையமகிழயாம்வாழவமணர்வலிதொலைய
வையன்பிரமபுரத்தாற்கம்மென்குதலைச்செவ்வாய்
பையமிழற்றும்பருவத்துப்பாடப்பருப்பதத்தின்
றையலருள்பெற்றனனென்பர்ஞானசம்பந்தனையே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

திருநாவுக்கரசுநாயனுர்.

நற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தஞ்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றிப்பிறப்பறவீரட்டர்பெய்கழற்கு
ளுற்றவனுற்றவிடமடையாரிடவொள்ளமுதாத்
துற்றவனூரினுவுக்கரசேனுந்தூமணியே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

சுந்தரமூர்த்திநாயனுர்.

கூற்றுக்கெவனோபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றுத்தொடையலுமின்னடைக்காயுமிடுதருமக்
கோற்றெரித்துகூனனுங்கூன்போய்க்குருடனுங்கண்பெற்றமை
சாற்றித்திரியும்பழமொழியாமித்தரணியிலே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

மாணிக்கவாசகசுவாமிகள்.

வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனைவண்டில்லைமன்னைத்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்
பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே.

—கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்.

(க) மகாப்பிரளயகாலத்திற் சிவபெருமான் ஒருவரே உளராயினர்.



𑌨𑌾𑌸𑌦𑌾𑌸𑍀𑌨𑍍𑌨𑍋 𑌸𑌦𑌾𑌸𑍀𑌤𑍍।

நாஸதாஸீந்நோ ஸதாஸீத்।

—இருக்குவேதம், க0. கஉகூ. க

𑌤𑌦𑍇𑌕𑌂 (𑌆𑌸𑍀𑌤𑍍)।

ததேகம் (ஆஸீத்)।

—இருக்குவேதம், க0. கஉகூ. உ

𑌕𑌾𑌮𑌸𑍍𑌤𑌦𑌗𑍍𑌰𑍇 𑌸𑌮𑌵𑌰𑍍𑌤𑌤।

காமஸ்ததக்ரே ஸமவர்த்தத।

—இருக்குவேதம், க0. கஉகூ. ச

"மகாப்பிரளயகாலத்திலே அசத்தும் இல்லை; சத்தும் இல்லை; அந்த ஒன்று இருந்தது; அதினின்று முதற்கண்ணே காமம் எனப்படும் பராசத்தி உளதாயிற்று" என்று இருக்குவேதமும்,

𑌯𑌦𑌾𑌤𑌮𑌸𑍍𑌤𑌨𑍍𑌨 𑌦𑌿𑌵𑌾𑌨 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌨𑌸𑌨𑍍𑌨𑌚𑌾𑌸𑌚𑍍𑌛𑌿𑌵
𑌏𑌵𑌕𑍇𑌵𑌲𑌃। 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰
𑌜𑍍𑌞𑌾 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌾 𑌪𑍁𑌰𑌾𑌣𑍀॥

யதாதமஸ்தந்ந திவாந ராத்ரிர்நஸந்நசாஸஞ்சிவ ஏவ கேவல꞉ । ததக்ஷரந் தத்ஸவிதுர்வரேண்யம் ப்ரஜ்ஞாச தஸ்மாத் ப்ரஸ்ருதாபுராணீ॥

"எப்போது இருள் உளதாய்ப் பகலுமின்றி இரவுமின்றிச் சத்துமின்றி அசத்துமின்றி இருந்ததோ, அப்போது சிவன் ஒருவரே இருந்தார்; அந்தச் (சிவ) சூரியனுடைய அந்த அழியாத முக்கியப்பொருளாகிய பிரஞ்ஞை எனப்படும் பழைய பராசத்தி உதித்தார்" என்று சுவேதாசுவதரமும் கூறுமாற்றால், இருக்குவேதத்திலே ஏகம் எனக் கூறப்பட்டது சிவபெருமான் என்றும், அவரினின்று பின்னர்த் தோற்றியவர் பராசத்தி என்றும் பெறப்படுகின்றது. (அஃதாவது சந்திர சூரியரொளியெல்லாம் ஒழிந்து, பகலிது இரவிது எனப் பகுத்தலில்லாத சூனியமாய், நாமரூப விசேஷமின்றி, ஸ்தூல சூக்கும சேதநாசேதனமாகிய (சத்து)

பசு, (அசத்தின்) பாசத்தின் வியக்திநிலையற்று, ஈதெல்லாம் இருண்மயமாயிருந்த அந்தக் காலத்திலே அந்தச் சிவபிரானுர் * அத்துவிதீயராய், கேவலராய், சிவப்பிரகாசராய்த் தம்மினின்று பகுக்கப்படாத வியல்படைந்த சேதனுசேதனச் சத்தியோடுளராயினுர் என்பதாம்.)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே.

—ஞா, திருமறைக்காடு.

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போ
யிருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமுங்
கருடங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே.

—நா, தனித்திருவிருத்தம்.

(உ) எண்ணிறந்த பிரமவிஷ்ணுக்கள் முதலாயினோர் ஒழிந்தகாலத்தும் சேஷித்து அழியாது நிற்பவர் சிவபெருமான்.

மமாபி விஷ்ணோர்ஜநகம் தேவமீட்யம் யோந்தகாலே ஸர்வலோகாந்ஸம்ஜஹார । ஸ ஏகஃச்ரேஷ்டச்ச (ஸர்வசாஸ்தா) ஸ ஏவ வரிஷ்டச்ச ।

மமாபி விஷ்ணோர்ஜநகம் தேவமீட்யம் யோந்தகாலே ஸர்வலோகாந்ஸம்ஜஹார । ஸ ஏகஃச்ரேஷ்டச்ச (ஸர்வ சாஸ்தா) ஸ ஏவ வரிஷ்டச்ச।

"பிரமாவாகிய எனக்கும், விஷ்ணுவுக்கும் பிதாவாயும், வந்திக்கற்பாலராம் தேவராயும், முடிவுகாலத்திலே சமஸ்தலோகங்களை

---

* அத்துவிதீயராதல் தம்மாட்டொடுக்கிய பசுக்களிற் கலந்திருத்தல்.

யும் ஒடுக்குகின்றவராயும் எவர் இருக்கின்றாரோ, அவர் ஏகரும், சிரேஷ்டரும், வரிஷ்டருமாகிய (சிவபெருமானும்)" என்று சரபோபநிடதம் சாற்றுகின்றது.

𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍋𑌟𑌯𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑍇 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌜𑌾𑌃।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍋 𑌹𑌰𑌯𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃।
𑌆𑌜𑍍𑌞𑌯𑌾𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌶𑍂𑌲𑌿𑌨𑌃॥

ஸஹஸ்ரகோடயஸ்ஸந்தி ப்ரஹ்மாண்ட ஸ்திர்யகூர்த்வஜா:।
ப்ரஹ்மாணோ ஹரயோ ருத்ராஸ்தத்ர வ்யவஸ்திதா:।
ஆஜ்ஞயாதேவதேவஸ்ய மஹாதேவஸ்ய சூலிந:॥

—ஆதித்தியபுராணம்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇𑌶𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍌 𑌲𑌯𑌃।
𑌏𑌕𑍋𑌹𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍀𑌶𑌃 𑌕𑌾𑌲𑌃 𑌕𑌵𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃॥

ப்ரஹ்மநாராயணேசாநாந்த்ரயாணும் ப்ரக்ருதௌ லய:।
ஏகோஹி பகவாநீச: கால: கவிரிதி ஸ்ம்ருத:॥

—கூர்மபுராணம்.

𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑌾𑌖𑍍𑌯𑌾 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃।
𑌹𑌰𑌯𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌏𑌕 𑌏𑌵 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

அஸங்க்யாதாச்ச காலாக்யா அஸங்க்யாதா: பிதாமஹா:।
ஹரயச்சாப்யஸங்க்யாதா ஏக ஏவ மஹேச்வர:॥

—இலிங்கபுராணம்.

𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌵𑌿𑌲𑌯𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃।
𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 𑌵𑌾𑌸𑌵𑌾𑌦𑌯𑌃॥

அஸங்க்யா விலயம் யாந்தி ப்ரஹ்மாண: பண்டிதோத்தமா:।
அஸங்க்யா விஷ்ணவோ ருத்ரா அஸங்க்யா வாஸவாதய:॥

—ஸ்காந்தபுராணம்.

"பிரமாண்டத்திலே பிரமா விஷ்ணு உருத்திரர்கள் ஆயிரகோடியினர் குறுக்கும் மேலுமாக அங்கங்கே தேவதேவராகிய சூலபாணியாரின் ஆஜ்ஞையால் ஸ்தாபிக்கப்பட்டுளர்" என்றும், "பிர

மவிஷ்ணு ருத்திரர் என்னும் மூவர்க்கும் லயம் பிரகிருதியிலே யாக, பகவானும், காலரும், கவியுமாகிய சிவபெமான் ஒருவரே (எஞ்சி) உளர்" என்றும், "எண்ணிறந்த காலர்களும், எண்ணிறந்த பிரமாக்களும், நாராயணர்களும் (ஒழிந்துவிட) சிவபெருமான் ஒருவரே (எஞ்சி) உளராயினர்" என்றும், "எண்ணிறந்த பிரமாக்களும், எண்ணிறந்த விஷ்ணுக்களும், எண்ணிறந்த உருத்திரர்களும், எண்ணிறந்த இந்திரர்களும் ஒழிந்தார்கள்" என்றும் ஆதித்தியபுராண முதலியவைகளிலே கூறப்பட்டுள்ளது.

சேத்துச்செத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ
வத்தனென்றரியோடுபிரமனுந்
துத்தியஞ்செயநின்றநற்சோதியே.

நூறுகோடிபிரமர்கணொந்தினு
ராறுகோடிநாராயணரங்ஙனே
யேறுகங்கைமணலெண்ணிலிந்திர
ரீறிலாதவனீசனொருவனே.

வாதுசெய்துமயங்குமனத்தரா
யேதுசொல்லுவீராகிலுமேழைகாள்
யாதோர்தேவரெனப்படுவார்க்கெலா
மாதேவன்னலாற்றேவர்மற்றில்லையே.

கூவலாமைகுரைகடலாமையைக்
கூவலோடொக்குமோகடலென்றல்போற்
பாவகாரிகள்பார்ப்பரிதென்பராற்
றேவதேவன்சிவன்பெருந்தன்மையே.

தாயினுநல்லசங்கரனுக்கன்ப
ராயவுள்ளத்தமுதருந்தப்பெறூர்
பேயர்பேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயன்மாயத்துப்பட்டமனத்தரே.

—நா, ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

(௩) உபநிடதங்களிற் பிரதிபாதிக்கப்படும் பிரஹ்மசப்தம் சிவபெருமானை உணர்த்துமெனல்.

பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்து "அந்தராதிகணத்" (௧. ௧. ௨௨) தினும், "அந்தரியாமியதிகாணத்" (௧. ௨. ௧௯) தினும், "காரியாதிகரணத்" (௪. ௩. ௧௩) தினும் அமிர்தம் என்னும் மொழி சிவபெருமான் திருநாமம் எனக் கூறப்படலானும்,

𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑍇𑌵𑌾𑌮𑍃𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।

தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே।

"அது பிரஹ்மம்; அதுவே சிவம்" என்று கடோபநிடதத் (௫. அ; ௬. ௧) திற் கூறப்படுகின்றமையானும்,

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌫𑍁𑌟𑌮𑍍।

ப்ரஹ்மேதி சிவசக்த்யோஸ்து ஸர்வாத்மத்வமிதி ஸ்புடம்।

"சிவனாதும் சத்தியாரது சர்வாத்துமகத்துவமே பிரஹ்மம் எனல் வெளிப்படை" என்று கைலாசசங்கிதை (௧௧. ௪௦) யிற் கூறப்படலானும்,

𑌏𑌕𑍋 𑌹𑌿 𑌨𑌾𑌮𑌭𑍇𑌦𑍈𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌸 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌶𑌿𑌵𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌯𑍋𑌗𑌤𑌃॥

ஏகோஹி நாமபேதைஸ்து ஸ்திதஸ்ஸ பரமேச்வர:।
ப்ருஹத்வாத் ப்ரஹ்மணத்வாச்ச சிவோ ப்ரஹ்மைவ யோகத:॥

"ஏகராகிய பரமேசுவரரே நாமபேதங்களினால் நிலையுற்றனர்; மேன்மையினாலும் பெருமையினாலும் யோகப்பெயராற் பிரஹ்மம் எனப்படுவது சிவபெருமான்" என்று பராக்கியாகமத்தினும்,

𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑍀 𑌯𑌸𑍍𑌸𑌦𑌸𑌦𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃।
𑌸 𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑌸𑍍𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌃॥

ஸச்சிதாநந்தரூபீயஸ்ஸதஸத்வ்யக்திவர்ஜித:।
ஸசிவஸ்ஸர்வகஸ்ஸத்பிர் ப்ரஹ்மசப்தேந சப்தித:॥

"சச்சிதானந்தரூபியாய்ச் சேதனுசேதனப்பிரபஞ்சத்துக்கு வேறாய் வியாபகராயுள்ள சிவபெருமான் பிரஹ்மசப்தத்தினாற் கூறப்படுகின்றார்" என்று அஜிதாகமத்தினும்,

𑌶𑌿𑌵𑌂 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑌨𑍂𑌪𑌮𑌮𑍍 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌶𑌿𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂𑌤𑌤𑍍𑌚 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌮𑍍 ।
𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌬𑍃𑌂𑌹𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

ஶிவம் பராத்பரம் ப்ரஹ்மம்ப்ரமேயமநூபமம்।
ஶுத்தத்வாச்ச ஶிவம் ப்ரோக்தம் ஸ்வயந்தச்ச பராத்பரம்।
ப்ருஹத்வாப் ப்ருஹ்மரூபாச்ச ப்ருஹ்மமித்யபிதீயதே॥

"அளக்கவொண்ணாததாய், உவமனில்லாததாய், பராத்பரமாயுள்ள பிரமமானது சிவம்: அது சுவயமே பராத்பரமாயும் சுத்தமாயுமிருத்தலிற் சிவம் எனப்படும்; மேன்மையினாலும் பேருருவமுடைமையானும் அது பிரஹ்மம் எனப்படும்" என்று காரணகமத்தினும், வாதுளாதி ஆகமங்களினும் கூறப்படலானும் பிரஹ்மமே திராவிடசுருதிகளிற் சிவன் எனப்படுகின்றது.

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மா
னவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தா
லிவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே.

—நா, தனித்திருவிருத்தம்.

மாவினேடருமாமறைவல்லமுனிவனுங்
கோவினார்குறுகச்சிவன்சேவடிகோலியுஞ்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே.

—நா, திருச்சிக்கல்.

சிவனெனுமோசையல்லதறையோவுலகிற்றிருநின்றசெம்மையுளதே, யவனுமொரையமுண்ணியதளாடையாவததன்மேலொராடலரவங், கவணளவுள்ளவுண்குகரிகாடுகோயில்கலனாவதோடுகருதி, லவனதுபெற்றிகண்டுமவனீர்மைகண்டுமகநேர்வர்தேவரவரே.

—நா, சிவனெனுமோசை.

பெற்றிமையொன்றறியாததக்கனதுவேள்விப்
பெருந்தேவர்சிரந்தோள்பற்கரங்கண்பீடழியச்
செற்றுமதிக்கலைசிதையத்திருவிரலாற்றேய்வித்
தருள்பெருகுசிவபெருமான்சேர்தருமூர்வினவிற்
றெற்றுகொடிமுல்லையொடுமல்லிகைசெண்பகமுந்
திரைபொருதுவருபுனல்சேரரிசிலின்றென்கரைமேற்
கற்றினநன்கரும்பின்முளைகறிகற்கக்கறவை
கமழ்கழுநீர்கவர்கழனிக்கலயநல்லூர்காணே.

——௬, திருக்கலயநல்லூர்.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்
புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுளெழுபரஞ்சோதி
யுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானே
திருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்த
வின்பமேயென்னுடையன்பே.

—திருவாசகம்.

---

(௪) இருதயகுகையின்கண்ணே பிரவேசித்தவர் சிவபெருமான்.

தம் துர்தர்ஶம் கூடமநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம்|

தம் துர்தர்ஶம் கூடமநுப்ரவிஷ்டம் குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம்|

"காண்டற்கரியரும், மறைவினரும், (சீவான்மாவோடு உடலகத்தே) கூடப்பிரவேசித்தவரும், குஹைக்குள் மறைந்தவரும், குஹைக்கணமர்ந்தவரும், பழையருமாயினோர் (சிவபெருமான்)" என்றது கடவல்லியுபநிடதம். (௨. ௧௨)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தி
நலஞ்சுடரேநால்வேதத்தப்பானின்ற
சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற
சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை
நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னு
ணிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற
கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்
கனகமாமணிநிறத்தெங்கடவுளானே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

---

(௫) சீவான்ம பரமான்மாவாகிய இருபக்ஷிகள்.

ஆவலாவணா ஸயுஜா ஸவாயா ஸமானம்
வூக்ஷம்வரிஷஷ ஜாதெ | தயொரநூ: விவலும்
ஸாஅத்வ நஸ்நூநெநூ ஙிவாகஸீதி॥

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே । தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்யந ச்நநந்யோபிசாகஸீதி॥

"பிரியா நண்பினையுடைய இருபக்ஷிகள் (சீவான்ம பரமான்மாக்களாகிய ஆன்மாவும் சிவபெருமானும்) ஒரே விருக்ஷத்தில் (சரீரத்தில்) இயைந்துள்ளன; அவற்றுள் ஒன்று (சீவான்மா) இனிய பழத்தை (போகத்தை) துய்க்கின்றது; மற்றது (பரமான்மா) உண்ணாது பார்த்துக்கொண்டிருக்கின்றது" என்று இருக்குவேத (௧. ௧௬௪. ௨0) மும், முண்டகோபநிடத (௩. ௧. ௧) முங்கூறுகின்றன.

* மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.

—சு, திருவாரூர்.

---

* மீளா அடிமை என்றமையினால் ஆன்மாவும், உமக்கே ஆளாய் என்றமையினாற் பரமான்மாவும் பெறப்பட்டன.

அன்னமிரண்டுளவாற்றங்கரையினிற்
றுன்னியிரண்டுந் துணைப்பிரியாதன்னந்
தன்னிலையன்னந்தனியொன்றதென்றக்காற்
பின்னமடவன்னப்பேறணுகாதே.

—திருமந்திரம்.

---

(௬) பிரமவிஷ்ணு உருத்திரர்களுக்குத் தலைவர் சிவபெருமான்.

𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌚𑌨𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 । 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 । 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌸𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌸𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 । 𑌸 𑌏𑌵 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌸𑌕𑌾𑌲𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌸 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 ॥

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம் । த்யாத்வா முநிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் । ஸ ப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரம: ஸ்வராட் । ஸ ஏவ விஷ்ணு ஸ்ஸப்ராணஸ்ஸகாலோக்நிஸ்ஸ சந்த்ரமா:॥

"பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தருமாகிய உமாசகாய சிவபெருமானை முனியானவன் தியானித்துப் பூதகாரணரும் சமஸ்த சாக்ஷியுமாயினாரை இருளுக்குமேற்போய் அடைகின்றான்; * அவர் பிரமா; அவர் உருத்திரர்; அவர் இந்திரர்; அவர் அக்ஷரர்; அவர் பரமசுவராட்டு; அவரே விஷ்ணு; அவர் பிராணன்; அவர் காலர், அக்கினி, சந்திரன்" என்று கைவல்லியோபநிடதமும்

---

* ஈண்டு அவர் பிரமா, அவர் விஷ்ணு, அவர் உருத்திரர் என்றமையால் அவர் மூவர்க்கும் துரியராதல் பெறப்பட்டது.

𑌯𑍋 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌸 𑌭𑌗𑌵𑌾𑌂𑌯𑌶𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌭𑍂𑌰𑍍𑌭𑍁𑌵𑌸𑍍𑌸𑍁𑌵𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌵𑍈 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃। 𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

யோ வை ருத்ரஸ்ஸபகவாங்யச்ச ப்ரஹ்மா பூர்புவஸ் ஸுவஸ் தஸ்மை வை நமோநம꞉ । யச்ச விஷ்ணுர் யச்ச மஹேச்வர꞉।

"எவர் பகவானாகிய உருத்திரரோ, எவர் பிரமாவோ, எவர் பூர்ப்புவர்சுவரோ அவர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம், எவர் விஷ்ணுவோ, மகேசுவரரோ (அவர்க்கு நமஸ்காரம்)" என்று அதர்வசிரோபநிடதமும் கூறுமாற்றாற் பிரம விஷ்ணு உருத்திராதியரெல்லாம் சிவபிரானது விபூதியாம் என்றும், இம்மூவரையும் கடந்தவர் அச்சிவபிரானே என்றும் அறியற்பாற்று.

தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகானீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே.

—ஞா, திருமுதுகுன்றம்.

சிவனாகித்திசைமுகனாய்த்திருமாலாகிச்
 செழுஞ்சுடராய்த்தீயாகிநீருமாகிப்
புவனாகிப்புவனங்களனைத்துமாகிப்
 பொன்னாகிமணியாகிமுத்துமாகிப்
பவனாகிப்பவனங்களனைத்துமாகிப்
 பசுவேறித்திரிவானோர்பவனாய்நின்ற
தவனாபதலையாலங்காடன்றன்னைச்
 சாராதேசாலநாட்போக்கினேனே.

—நா, தலையாலங்காடு.

குற்றமொன்றடியாரிலாராகிற்
 கூடுமாறதனைக்கொடுப்பானைக்
கற்றகல்வியிலும்மினியானைக்
 காணப்பேணுமவர்க்கெளியானை
முற்றவஞ்சுந்துறந்திருப்பானை
 மூவரின்முதலாயவன்றன்னைச்
சுற்றுநீள்வயல்சூழ்திருநீடூர்த்
 தோன்றலைப்பணியாவிடலாமே.

—சு, திருநீடூர்.

(எ) சிவபெருமான் உமாபதி எனப்படுதல்.

𑌅𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌪𑌤𑌯 𑌉𑌮𑌾𑌪𑌤𑌯𑍇...... 𑌨𑌮𑌃|

அம்பிகாபதய உமாபதயே......நமஃ।

"அம்பிகாபதியார்க்கு, உமாபதியார்க்கு *நமஸ்காரம்*" *என்று தைத்திரீய ஆரணியக* (கo. உஉ. சo) *த்திலும்*,

𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂|

உமாஸஹாயம் பரமேச்வரம்।

"உமாசமேதராகிய சிவபெருமானை" *என்று கைவல்லியோபநிடதத்திலும் ஏனைய இதிகாசபுராணாதிகளிலும் கூறப்படுகின்றது.*

உண்ணாமுலையுமையாளோடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான் மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே.

—ஞா, *திருவண்ணாமலை.*

ஓதிமாமலர்கடேவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட்சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவேயணியணாமலையுளானே
நீதியாநின்னையல்லாநினையுமாநினைவிலேனே.

—*நா*, *திருவண்ணாமலை.*

(அ) கேநோபநிடதத்து உமையம்மையார் (இமவான் மகளாதலில்) ஐமவதி எனப்படுதல்.

𑌸 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵𑌾𑌕𑌾𑌶𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌜𑌗𑌾𑌮 𑌬𑌹𑍁𑌶𑍋𑌭𑌮𑌾𑌨𑌾𑌮𑍁𑌮𑌾𑌂 𑌹𑍈𑌮𑌵𑌤𑍀𑌂 𑌤𑌾𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌕𑌿𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌿𑌤𑌿|

ஸ தஸ்மிந்நேவாகாசே ஸ்த்ரியமாஜகாம பஹுசோபமாநாமுமாம் ஹைமவதீந்தாம் ஹோவாச கிமேதத்யக்ஷமிதி।

"அந்த ஆகாசத்திலே மிகுந்த பிரகாசமுடையரும் ஐமவதியுமாகிய அந்த மாதை (இந்திரன்) அடைந்து அவளை நோக்கி, அந்த யக்ஷர் யாரென்று கேட்டான்" என்று கேநோபநிடத (உரு) மும்,

𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌯𑌂𑌵𑍍𑌯 𑌵𑌵𑌨𑌭𑌂 𑌗𑍇𑌹𑌂 𑌵𑌿𑌤𑌾𑌮𑌨𑍍𑌤𑌾।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑌹𑌿𑌤 𑌸𑍍𑌤𑌸𑍍𑌸𑍍𑌮𑍍𑌯 𑌗𑌵𑌮𑍋 𑌨 𑌸𑍍𑌸𑌾𑌦𑌾𑌸𑍍𑌸𑌹𑌃।
𑌸𑍋𑌽𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌣 𑌜𑌨𑌕𑍍𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤 𑌸𑍍𑌸𑍍𑌵𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾।
𑌤𑌯𑌾𑌽𑌪𑌿 𑌜𑌨𑌿𑌤𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌸𑌦𑌾 𑌦𑌾𑌕𑍍𑌷𑌾𑌯𑌣𑍀𑌤𑌿 𑌮𑌾𑌮𑍍।
𑌤𑌦𑌾𑌹𑌮𑍈𑌵 𑌶𑌕𑍍𑌤𑌾𑌽𑌪𑌿 𑌸𑍋𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌹𑌾𑌵𑌨𑍇𑌶𑍍𑌵𑌰।
𑌤𑌦𑌦𑍍𑌯𑌮𑍇𑌵𑌰𑌂 𑌦𑍇𑌹𑌿 𑌕𑌾𑌤𑍍𑌰𑍁𑌹𑌿 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑌸𑍍𑌤𑌸𑌾𑌮𑍇।
𑌇𑌤𑌿 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌕𑌥𑌿𑌤𑍇 𑌦𑍇𑌵𑌃 𑌸𑍍𑌮𑌿𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌭𑌾𑌷𑌤।
𑌕𑍁𑌯𑌾𑌤𑍍 𑌦𑌾𑌕𑍍𑌷𑌾𑌯𑌣𑍀𑌸𑍍𑌵𑌾𑌮𑍇𑌵 𑌦𑌾𑌹𑌿𑌤𑌾 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌦𑍃𑌶𑌾।
𑌤𑌮𑍇𑌵𑌂 𑌕𑌾𑌰𑌂 𑌮𑌹𑌾𑌕𑌾𑌯𑌾 𑌶𑌿𑌮𑌵𑌨𑍍𑌤𑌂 𑌗𑌾𑌰𑌂 𑌗𑌿𑌰𑌿𑌮𑍍।
𑌸𑌕𑌾𑌮𑍇𑌮𑍇𑌵 𑌸𑌾𑌤𑌾𑌮𑍋𑌪𑌾𑌨𑌵𑌪𑍍𑌯𑌾𑌨𑌨𑌾𑌮𑍇𑌤 𑌹𑍃𑌶𑌮𑍍।
𑌜𑍍𑌯𑌾𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌯𑌾𑌮𑍍𑌮𑍈𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑌾𑌨𑌸𑍀𑌵𑌸𑌾।
𑌤𑌤𑌃 𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌵𑌕𑍃𑌤𑌾𑌮𑍇𑌤𑌤𑍍 𑌸𑌂𑌭𑌾𑌵𑌪𑍍𑌤𑍍𑌯𑌜𑌯𑍋𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑍇।
𑌵𑍍𑌯𑌤𑍀𑌯𑌾𑌯 𑌮𑌹𑌾𑌕𑍍𑌨𑌾𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌸𑌸𑌾𑌦𑌶𑌿𑌵𑌾 𑌤𑌦𑌾।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌵𑌸𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌮𑍇𑌨𑌵𑍇 𑌸𑍍𑌨𑌾𑌤𑌂 𑌮𑍍𑌰𑌿𑌯𑍇।
𑌦𑍇𑌵𑍀 𑌭𑌾𑌰𑍍𑌯𑍇𑌵 𑌸𑌂𑌜𑌾𑌤𑌾 𑌸𑍍𑌵𑌹𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌤𑍍𑌵 𑌯𑍋𑌵𑌨𑌿।
𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌨𑍀𑌶 𑌵𑌾𑌮𑌾𑌕𑍍𑌷𑌿𑌂 𑌜𑌗𑌤𑍋𑌰𑌣𑌿𑌮𑍍।
𑌵𑌤𑍍𑌸𑌾𑌹𑍍𑌲𑌾𑌜𑌾 𑌶𑍍𑌰𑍀𑌣𑌯 𑌨𑌾𑌞𑍍𑌚𑌂 𑌦𑍃𑌪𑍍𑌤𑌿𑌂𑌬𑌿𑌮𑌾𑌨𑌨𑌾𑌮𑍍।
𑌸𑌾𑌕𑌵𑌦𑌨𑌾𑌂 𑌮𑍃𑌗𑌾𑌂 𑌗𑌾𑌰𑌿𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑍀𑌂 𑌶𑌾𑌮𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌨𑌿𑌯𑌮𑌂 𑌬𑌬𑍍𑌧𑍇 𑌵𑌨𑌿𑌸𑍍𑌤𑌨𑌃।
𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌤𑌾𑌂 𑌸𑌮𑌾𑌦𑌾𑌯 𑌜𑌗𑌾𑌮 𑌭𑌵𑌨𑌂 𑌮𑍁𑌦𑌾।
𑌤𑌤𑍍𑌰 𑌮𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌷𑍀 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑌮𑍋 𑌵𑌨𑌾𑌕𑌃।
𑌇𑌤𑌿𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑍈 𑌤𑍈𑌦𑍇𑌵𑍀 𑌪𑍍𑌰𑌾𑌵𑌾𑌦 𑌜𑌗𑌦𑌮𑍍𑌬𑌿𑌕𑌾।
𑌶𑍍𑌰𑍁𑌣𑌾𑌤𑌂 𑌵𑌚𑌨𑌂 𑌮𑌾𑌤𑌾𑌵𑌿𑌤𑌰𑍌𑌸𑍍𑌯𑍋 𑌯𑌾𑌵𑌾𑌂𑌮𑌮।
𑌮𑍇𑌨𑌾𑌵 𑌹𑌿𑌮𑌵𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑍇𑌨𑌾𑌦𑍇𑌸𑍍𑌵 𑌸𑌾𑌤𑌾𑌞𑍍𑌜𑌦𑌾।

𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑌾𑌂 𑌦𑌧𑍇 ।
𑌪𑍂𑌰𑍍𑌣𑍇 𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌮𑍇 𑌵𑌰𑍍𑌷𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌆𑌸𑍀𑌤𑍍 𑌤𑌪𑍋𑌰𑌤𑌿𑌃 ।
𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌮𑌪𑌿 𑌸𑌾 𑌕𑌥𑌯𑌤𑍍 𑌸𑍍𑌵𑌮𑌭𑍀𑌪𑍍𑌸𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌮𑍇𑌤𑌿 𑌨𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾 𑌯𑌦𑍁𑌮𑌾𑌖𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 ॥

தேவா திலங்க்ய வசநமஹம் கேஹம் பிதுர்கதா।
அநுபூதஸ்ததஸ்ஸம்யகவமாநஸ் ஸுதுஸ்ஸஹ:।
சோபிவீரேண ஜநக:ஶிக்ஷிதஸ் ஸப்ததந்துநா।
ததாபி ஜநதா ஹேயாம் ஸதா தாக்ஷாயணீமிமாம்।
தத ஹம் நைவ ஶக்தாஸ்மி ஸோடுந்த்ரிபுவநேச்வர।
ததத்ய மே வரம் தேஹி குத்ரசிஜ்ஜநிரஸ்துமே।
இதி தேவ்யார்த்திதோ தேவ: ஸ்மிதபூர்வமபாஷத।
ஆர்யே தாக்ஷாயணீச்சாசேதாஹிதா ஹ்ருதயேத்ருடா।
தவைவம் குரு மத்வாக்யாத்திமவந்தம் குரும் கிரிம்।
ஸ த்வாமேவ ஸுதாமாப்துந் தபஸ்யாந்தநுதே ப்ருஶம்।
த்யாயமாநோங்கிரியுக்மம் தே பித்ருணும் மாநஸீசஸா।
தௌகுருஷ்வ க்ருதார்த்தௌ த்வம் பவாபத்யம் தயோ: ப்ரியே।
வ்யதீயாய மஹாந் கால: ப்ராஸஸாத ஶிவாததா।
தஸ்மிந் ஸரஸிஸம்ப்ராப்தே மாநஸே ஸ்நாதுமத்ரிபே।
தேவீ பாலேவ ஸம்ஜாதா ஸ்வேச்சயைவோத்பலோபரி।
தாந்த்ருஷ்ட்வா ஹிமவாநீஶ வாமார்த்தாம் ஜகதோரணிம்।
சதுர்புஜாந் த்ரிணயநாம் சந்த்ரபிம்பநிபாநநாம்।
ஸுகபர்தாம் ம்ருகாங்கார்த்தவிலஸந்தீம் ஶுசிஸ்மிதாம்।
த்ருஷ்ட்வா ஹ்ருஷ்டமநா ராஜாநிதிம் லப்த்வேவ நிர்த்தந:।
ப்ரணம்ய தாம் ஸமாதாய ஜகாம பவநம் முதா।
தத்ர மேநாஸ்ய மஹிஷீ நிவ்ருத்தம் தபஸோ வநாத்।
இதி ஸ்துவந்தௌ தௌதேவீ ப்ரோவாச ஜகதம்பிகா।
ச்ருணுதம் வசநம் மாதாபிதரௌ ஸ்தோ யுவாம் மம।
மேநாச ஹிமவாந் சோபௌ மேநா தே ஸ்வஸுதாம்ததா।
பர்வதாபத்யம் ப்ராப்தா பார்வதீத்யபிதாம் ததே।
பூர்ணேது பஞ்சமே வர்ஷே தஸ்யா ஆஸீத் தபோரதி:।
மாதாபித்ருப்யாமபி ஸா கதயத் ஸ்வமபீப்ஸிதம்।
மாத்ரோமேதி நிஷித்தா யதுமாக்யா ப்ராணவாத்மிகா॥

"தேவாதிதேவரே! யான் தேவரீர் வசனத்தை மறுத்து (தக்கனுகிய) என் தந்தைவீட்டுக்குச் சென்றவிடத்து அங்கே சிறிதும் சகிக்கவியலாத அவமானமடைந்தேன்; அந்தப் பிதாவும் அவன் செய்த யாகத்தோடு வீரபத்திரால் தண்டிக்கப்பட்டு மாண்டான்; அங்ஙனமாயினும் சமஸ்த ஜனங்களும் எஞ்ஞான்றும் தாக்ஷாயணி என்று என்னை இழிவாகக் கூறுவதை நான் திரிபுவநேசுவரரே! சிறிதும் சகிக்கவல்லேனல்லேன்; ஆகவின், எனக்கு வேறெங்காயினும் தோன்றுமாறு வரமளித்தருளுக என்று தேவியார் பிரார்த்தித்தபோது, சிவபிரான் புன்முறுவலோடு கூறியதாவது:— பூஜிக்கற்பாலளாகிய தாக்ஷாயணீ! உன்மனசில் இங்ஙனம் உறுதியாகிய விருப்பமுளதேல், என்வாக்குப்பிரகாரம் இமயகிரிராஜனைத் தந்தையாக அடைகுதி; அவன் உன்னைப் புதல்வியாய் அடைதற்கு மிகுந்த தவஞ்செய்கின்றான்; அவன் மனைவியாகிய மேனையும் பிதிர்கடன் தீர்க்கும்பொருட்டு உனது இரு தாள்களையும் தியானித்துக் கொண்டிருக்கின்றாள்; எனது அன்புள்ள நாயகி! நீ அவ்விருவர்க்கும் புதல்வியாகி அவர்களைக் கிருதார்த்தர்களாகச் செய்குதி என்றனர்; (அங்ஙனம் செய்குவலெனச் சிவபெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு தேவியார்போய்த்) தம்மை நோக்கித் தவஞ் செய்யும் இமயமலை அரசற்கு அருள் செய்வாராயினர்; மலையரசன் * மானசவாவிக்கு ஸ்நானஞ்செய்யச் சென்றபோது தம் சுவேச்சையினால் நீலோற்பலமலரின்மேல் ஒரு சிறு † குழந்தையாய் விளங்கினர்; சிவபெருமானது இடது பாகத்தினரும், உலககாரணரும், நான்கு புஜம் திரிநேத்திரம் என்பவற்றையுடையவரும், சந்திரவிம்பம்போன்ற திருவதனத்தையுடையரும், அர்த்த சந்திரகலையோடு விளங்குகின்றவரும், சிறந்த ஜடை யலங்கார முடையரும், அழகிய புன்சிரிப்புடையருமாகிய பரமேசுவரியை அவன் தரிசித்து, தரித்திரனுக்கு நிதிவாய்த்தாற்போல ஆனந்த முடையனாய் நமஸ்கரித்து, அக்குழந்தையை எடுத்துக்கொண்டு

---

* ஹிமாசலத்துக்கு வடபுறத்துள்ள தீபெத்திலே நிலமட்டத்திலிருந்து பத்தொன்பதினாயிரம் அடி உயரத்திலே, கைலையை வடக்கினும், குருல மாந்தாதா மலையைத் தெற்கினுங்கொண்டு, ஏறக்குறைய நாற்பத்தாறு மைல் சுற்றளவுகொண்டு வட்டவடிவமுற்றது திவ்யமாகிய இந்த மானசவாவி.

† யோனிவாய்ப்பட்டுப்பிறவாது அம்மையார் இங்ஙனம் விளங்குதல் ஆவிர்ப்பாவம் எனப்படும்.

மகிழ்விேனாடு தனது அரண்மனை சார்ந்தான்; அங்கே இவனது பட்டஸ்திரியாகிய மேனையும் அன்பிேனாடு அர்க்கிய பாத்திர மெடுத்துக்கொண்டு தபோவனத்தினின்று மீண்டு வரும் கணவனை எதிர்கொண்டாள்; (மேனகையோடு இமவான் தேவியாரை ஸ்துதித்தான்); அங்ஙனம் ஸ்துதிக்கும் இருவரையும் ஜகதம்பிகையாகிய தேவியார் நோக்கி என் வசனத்தைக் கேளுங்கள்; நீங்கள் எனக்குத் தாயும் தந்தையுமாகின்றீர்கள் என்றற்றொடக்கத்தனவாகத் திருவாய்மலர்ந்தருள, மேனகையும் ஹிமவானுமாகிய இருவரும் (தேவியாரைத்) தங்கள் புதல்வியாகக்கொண்டார்கள்; பர்வதராஜனுக்குப் புதல்வியானமையாற் பார்ப்பதி என்னும் திருநாமம் தரித்தார்; ஐந்து வயசு நிறைந்தபோது தவத்தில் விருப்பமுற்றுத் தமது கருத்தைத் தாய் தந்தையர்க்குக் கூறியபோது, மாதாவினல் (உ—ஓ பெண்ணே! மா—வேண்டாம் என்று) தடை செய்யப்பட்டமையின், தேவியார்க்குப் பிரணவத்தின் (வியஷ்டிரூபமாய், வர்ணவியத்தியத்தினுல் எய்திய உ—ம்—அ) சொரூபமாகிய * உமை என்னும் திருநாமம் எய்திற்று" என்று சம்பவ காண்டம் சொல்கின்றது.

நேருமவர்க்குணரப்புகிலில்லைநெடுஞ்சடைக்
கடும்புனல்படர்ந்திடம்படுவ்வதொர்நிலையர்
பேருமவர்க்கெனையாயிரமுன்னைப்பிறப்பிறப்
பிலாதவருடற்றடர்த்தபெற்றியாரறிவா
ராரமவர்க்கழல்வாயதொர்நாகமழலைகுறவ்
வெழுலைகொழுமலர்கொள்பொன்னிதழிநல்லலங்க
ருரமவர்க்கிமவான்மகளூர்வதுபோர்விடை
கடிபடுசெடிபொழிற்றருமபுரம்பதியே.

—ஞா, தருமபுரம்.

---

* தேவியார்க்கு இங்ஙனம் உமை என்னும் திருநாமமும் ஐமவதி என்னும் திருநாமமும் எய்திய வரலாற்றை இப்புராணவாயிலாக அறியமாட்டாது, அவ்வுமாசப்தத்துக்குப் பண்டிதர் சிலர் மற்றோர் திரிவுப்பொருள் உரைத்து உலகினரை மயக்குகின்றார்கள்

(கூ) உமாதேவியார் சிவபெருமானுக்குச் சரீரம்.

𑌆𑌕𑌾𑌶𑌶𑌰𑍀𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮।
ஆகாசசரீரம் ப்ரஹ்ம।

"ஆகாயத்தை (உமாதேவியாரை)ச் சரீரமாகவுடையது பிரமம் (சிவபெருமான்)" என்று தைத்திரீய சிக்ஷாவல்லி (கூ. உ) உரைக்க,

𑌯𑌸𑍍𑌯𑌸𑌾 𑌪𑌰𑌮𑌾𑌦𑍇𑌵𑍀 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌾𑌕𑌾𑌶 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾।
யஸ்யஸா பரமாதேவீ சக்திராகாச ஸம்ஞிதா।

"எவருக்கு யாதொரு பரமசத்தியுண்டோ, அந்தச் சத்தியார் ஆகாசம் எனப்படுவர்" என்று கூர்மபுராண உத்தரபாகத்து ௩௧-ம் அத்தியாயம் கூறுகின்றது.

உமையலாதுருவமில்லையுலகலாதுடையதில்லை
நமையெலாமுடையராவர்நன்மையேதீமையில்லை
கமையெலாமுடையராகிக்கழலடிபரவுந்தொண்டர்க்
கமைவிலாவருள்கொடுப்பாரையனையாறனார்க்கே.

—நா, திருவையாறு.

(க0) சிவபெருமான் பசுபதி.

𑌯 𑌈𑌶𑍇𑌽𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌃 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌃।
ய ஈசேஸ்ய த்விபதஃ சதுஷ்பதஃ।

"எவர் இருகாலும் நாற்காலுமுடைய பசுக்களை ஆளுகின்றாரோ" என்று இருக்குவேத (க0. கஉக. ௩) மும்,

𑌅𑌹𑌮𑍇𑌵 𑌪𑌶𑍂𑌨𑌾𑌮𑌧𑌿𑌪𑌤𑌿𑌃॥
அஹமேவ பசூநாமதிபதிஃ।

—*யஜுர்வேதம், கூ. உ. ௩. உ.*

"நானே பசுக்களுக்குப் பதி" என்றும்,

𑌏𑌷𑌾𑌮𑍀𑌶𑍇 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌮𑍁𑌤𑌚𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌮𑍍 ।

ஏஷாமீசே பசுபதி꞉ பசூநாஞ்சதுஷ்பதாமுதசத்விபதாம்।

—யஜுர்வேதம், ௩. ௧. ௪. ௩.

"நாற்காலும் இருகாலுமுடைய பசுக்களைப் பசுபதியானவர் ஆளுகின்றார்" என்றும் யசுர்வேதமும்,

𑌉𑌮𑌾𑌪𑌤𑌯𑍇 𑌪𑌶𑍁𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।

உமாபதயே பசுபதயே நமோநம꞉।


"உமாபதியார்க்கு, பசுபதியார்க்கு நமஸ்காரம்" என்று தைத்திரீய ஆரணியக (௧0. உஉ. ௪0) மும் கூறுகின்றன.

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிகுணனுயர்பசு
பதியதன்மிசைவருபசுபதிபலகலையவைமுறைமுறையுணர்
விதியறிதருநெறியமர்முனிகணனொடுமிகுதவமுயறரு
மதிநிபுணர்கள்வழிபடவளர்மறைவனமமர்தருபரமனே.

—ஞா, திருமறைக்காடு.

---

(௧௧) சிவபெருமான் இடபவாகனர்.



𑌨𑌮𑍋 𑌬𑌭𑍍𑌲𑍁𑌶𑌾𑌯 ।

நமோ பப்லுசாய।

"இஷபாரூடர்பொருட்டு நமஸ்காரம்" என்று யசுர்வேத (௪. ௫. உ. ௧) மும்,

𑌏𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌹𑌾𑌰𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾𑌮 [illegible] ।
[illegible] 𑌶𑌿𑌵𑌃 ।
𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌵𑍃𑌷𑌰𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌥 [illegible] 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
[illegible] 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌾𑌲𑍇 [illegible] 𑌶𑌿𑌵𑌃 ।
[illegible] 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌤𑍍 [illegible] ।

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஏவம் பஹுநாம் ஸம்ஹாரே விஷ்ணூநாம் ப்ரளயோ மஹாந்।
ஸமாயாதி தமுத்வீக்ஷ்ய தர்மோத்யந்தம் பயாந்விதः।
ப்ரணம்ய வ்ருஷபாகாரஸ்துஷ்டாவ பரமேச்வரம்।
ஜயசம்போ மஹாதேவ ரக்ஷமாம் சரணாகதம்।
மஹாஸம்ஹாரகாலோயமாகமிஷ்யதி சீக்ரதः।
முக்த்வா மாம் ஸம்ஹரேசாந ததா ஸர்வம் ஜகத் ப்ரபோ।
இதி ஸ்தோத்ரசதைः ஸ்துத்வா ப்ரார்த்தயாமாஸ சங்கரம்।
ததः ப்ரஸந்நோ பகவாந் தத்வா தஸ்ய வரம் புநः।
வாஹநம் பரிகல்ப் யைநம் பலம் தத்வாஸ்ய தாத்ருசம்।
ப்ரீத்யா பரமயா ஸோஹம் ந்யவஸாமி த்வதாத்மநி।
ஸந்நிதௌ மம ஸர்வத்ர நிவஸத்வம் ஸுபாவந।
பவந்து தர்மத்வத்ராஹம் யஸ்ய பக்தஸ்ய ஹ்ருஷ்டதீः।
யதாநுக்ரஹமிச்சாமி ததா த்வம் வ்ருஷரூபபாக்।
ஸமாகச்ச மஹாஸத்வ மமாஜ்ஞாம் சிரஸாவஹந்।
இத்யாத்யுக்த்வாமஹாதேவோ வாஹநம் தம் விதாய ஸः॥

"இந்தப் பிரகாரம் அநேகம் சங்காரமாகுங்கால், விஷ்ணுவின் பிரளயம் எய்துகின்றது; அதனைத் தருமம் பார்த்துப் பயமுற்று இடபவடிவமெடுத்துக்கொண்டு சிவபெருமானை நமஸ்கரித்து மகிழ்வித்து ஜய சம்போ! மஹாதேவரே! சரணடைந்த என்னைக் காக்க; மகாசங்காரகாலம் விரைந்து வரப்போகின்றது; ஈசானரே! ஜகத்பிரபுவே! என்னைவிடுத்து மற்றெல்லோரையுஞ் சங்காரஞ் செய்யும் என்று நூற்றுக்கணக்காகிய தோத்திரங்களினாற் சிவபெருமானைத் துதித்துப் பிரார்த்தித்தது; அதனாற் சிவபெருமான் மகிழ்ந்து அதற்கு வரம் கொடுத்துப் பலம் கொடுத்து அதனை வாகன

மாக்கி மிகுந்த பிரீதியினாலே, 'தூயோனே, உன்னிடத்து எப்போதும் இருக்கின்றேன்; நீ எனது சந்நிதானத்தில் வசி; தர்மத்துவத்தைக் காக்கவேண்டும் என்னும் உயர்ந்த புத்தி எந்தப் பக்தனுக்கு உளதாக, யான் அவனை எப்போது அநுக்கிரகஞ் செய்யவிரும்புகின்றேனோ, அப்போது நீ இடபவடிவாக வந்து, மகாசத்துவமுடையனே! என் ஆஞ்ஞையைச் சிரசிலே வகி' என்று கூறி அம்மகாதேவர் அதனை வாகனமாகக்கொண்டருளினார்' என்று தக்ஷகாண்டமும்,

ததஃ ப்ரீதோ மஹாதேவஸ்ஸபத்நீகோ வ்ருஷத்வஜஃ।

ததஃ ப்ரீதோ மஹாதேவஸ்ஸபத்நீகோ வ்ருஷத்வஜஃ।

"சபத்திநீகரும் இடபக்கொடியினையுடையவருமாகிய மகாதேவர்" என்று மகாபாரதமும் கூறுகின்றன.

நீறேறியதிருமேனியர்நிலவும்முலகெல்லாம்
பாறேறியபடுவெண்டலைகையிற்பலிவாங்காக்
கூறேறியமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
யேறேறியவிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே.

—ஞா, திருவிடும்பாவனம்.

சடையார்புனலுடையானொருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையானெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே.

—ஞா, திருவீழிமிழலை.

ஆறுசடைக்கணிவரங்கைத்திய
ரழகர்படையுடையரம்பொற்றோண்மே
னீறுதடவந்திடபமேறி
நித்தம்பலிகொள்வர்மொய்த்தபூதங்
கூறுங்குணமுடையர்கோவணத்தர்
கோடாலவேடத்தர்கொள்கைசொல்லி
னீறுங்நடுவுமுதலுமாவா
ரிடைமருதுமேவியிடங்கொண்டாரே.

—நா, திருவிடைமருதூர்.

ஊர்வதோர்விடையொன்றுடையானை
  யொண்ணுதற்றனிக்கண்ணுதலானைக்
காரதார்கறைமாமிடற்றானைக்
  கருதலார்புரமூன்றெரித்தானை
நீரில்வாளைவரால்குதிகொள்ளு
  நிறைபுனற்கழனிச்செல்வநீடூர்
பாருளார்பரவித்தொழநின்ற
  பரமனைப்பணியாவிடலாமே.

—சு, திருநீடூர்.

---

(௧௭) இரண்ணியகருப்பருக்கு மேலாகிய நாராயணர்க்கும் மேலானவர் சிவபிரான்.

𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑌘𑌨𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑌿𑌶𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇।

ஏதஸ்மாஜ்ஜீவகநாத்பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே।

"இந்தச்சீவகனமாகிய இரண்ணியகருப்பரினும் (பிரமாவினும்) பராய், உற்கிருஷ்டராயுள்ள நாராயணரினும் பரமோற்கிருஷ்டராய்ப் புரியின்கண்ணே (சரீரத்தின்கண்ணே) அந்தரியாமியாயிருத்தலிற் புருஷரும் பரப்பிரமமுமாயுள்ளாரை (சிவபெருமானை) உபாசகன் காண்கின்றான்" என்றது பிரசிநோபநிடதம்.

உள்ளமாயுள்ளத்தேநின்றாய்போற்றி
  யுகப்பார்மனத்தென்றுநீங்காய்போற்றி
வள்ளலேபோற்றிமணாளாபோற்றி
  வானவர்கோன்றோணித்தமைந்தாபோற்றி
வெள்ளையேறேறும்விகிர்தாபோற்றி
  மேலோர்க்குமேலோர்க்குமேலாய்போற்றி
தெள்ளுநீர்க்கங்கைச்சடையாய்போற்றி
  திருமூலட்டானனேபோற்றிபோற்றி.

—நா, திருவாரூர்.

---

(௧௩) சிவபெருமான் யாகாதிபதி.



𑌮𑍇𑌧𑌪𑌤𑌿𑌮𑍍।
மேதபதிம்।

—இருக்குவேதம், ௧. ௪௩. ௪.

"(சிவபெருமானை) "யாகபதி" என்றும்,

𑌆𑌵𑍋 𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑌧𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂...𑌅𑌵𑌸𑍇 𑌕𑍃𑌣𑍁𑌧𑍍𑌵𑌮𑍍।
ஆவோ ராஜாநமத்வரஸ்ய ருத்ரம்...அவஸே க்ருணுத்வம்।

—இருக்குவேதம், ௪. ௩. ௧

"யஞ்ஞத்துக்கு ராஜாவாக உங்களைக் காக்கும் பொருட்டு உருத்திரரை நாடுக" என்றும், பஞ்சமஹாயஞ்ஞம், அஷ்டகாசிராத்தம், பார்வணசிராத்தம், சிரவணகர்மம், பிரத்தியவரோகணம், சூலகவம், ஆசுவயுஜீகர்மம் என்னும் ஏழு பாகயஞ்ஞமும், அக்கினிஷ்டோமம், அத்தியக்கினிஷ்டோமம், உத்தி, ஷோடசி, வாஜபேயம், அதிராத்திரம், உப்தோர்யாமம் என்னும் ஏழு சோமயஞ்ஞமும், ஆக்கினேயம், ஆதேயம், தர்சபூர்ண மாசாக்கினிஹோத்திரம், ஆக்கிரயணம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், சௌத்திராமணி என்னும் ஏழு ஹவியஞ்ஞமுமாகிய இருபத்தோருயாகத்துக்கும் தலைவர் சிவபெருமான் என்றுகொண்டன்றே,

𑌤𑍍𑌰𑌿𑌃𑌸𑌪𑍍𑌤 𑌯𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌿 𑌤𑍍𑌵𑍇...𑌨𑌿𑌹𑌿𑌤𑌾।
த்ரிஸ்ஸப்தயத்குஹ்யாநித்வே...நிஹிதா॥

—இருக்குவேதம், ௧. ௭௨. ௬.

"இருபத்தோருயஞ்ஞமும் உம்மிடத்திலே வைக்கப்பட்டுள்ளன" என்றும் இருக்குவேதம் கூறிற்று. மேலும்,

𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌭𑍈𑌷𑌜𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾 𑌵𑍃𑌷𑌭𑌧𑍍𑌵𑌜𑌮𑍍।
𑌨𑌾𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌾𑌤𑍍𑌪𑌰𑍋 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃॥
நாந்யம் பச்யாமி பைஷஜ்ய மந்தரா வ்ருஷபத்வஜம்।
நாச்வமேதாத்பரோயஜ்ஞ: ப்ரியச்சைவ மஹாத்மந:॥

"இடபாரூடராகிய சிவபெருமானையன்றி ஔஷதமாக மற்றொருவரைக் காண்கிலேன்; பரமான்மாவாகிய சிவபெருமானுக்கு அசுவமேதயாகத்தினும் பிரீதியாகிய யாகம் பிறிதொன்றிலது" என்று கர்த்தமர் கூறினர் என இராமாயண உத்தரகாண்டத்து கூ0-ம் அத்தியாயத்திற் காணப்படுதல் காண்க.

கேள்வியர்நாடொறுமோதுநல்வேதத்தர்கேடிலா
வேள்விசெயந்தணர்வேதியர்வீழிமிழலையார்
வாழியர்தோற்றமுங்கேடும்வைப்பாருயிர்கட்கெலா
மாழியர்தம்மடிபோற்றியென்பார்கட்கணியரே.

—ஞா, திருவீழிமிழலை.

எரிபெருக்குவரவ்வெரியீசன
துருவருக்கமதாவதுணர்கிலா
ரரியயற்கரியானையயர்த்துப்போய்
* நரிவிருத்தமதாகுவர்நாடரே.

—நா, ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

ஓமத்துளங்கியினுள்ளுளனெம்மிறை
யீமத்துளங்கியிரதங்கொள்வானுளன்
வேமத்துளங்கிவிளைவுவினைக்கடற்
கோமத்துளங்கிகுரைகடலூனே.

—திருமந்திரம்.

அருப்புமென்முலையினர்தமணிமலர்க்கைப்பிடித்தங்
கொருப்படுமுடையபிள்ளையார்திருவுள்ளந்தன்னில்
விருப்புறுமங்கியாவார்விடையுயர்த்தவரேயென்று
திருப்பெருமணத்தைமேவுஞ்சிந்தையிற்றெளிந்துசெல்வார்.

—பெரியபுராணம்.

---

* நரிக்கூட்டம் எனப்பொருள்படுகின்ற நரிவிருந்தம் என்பது நரிவிருத்தம் எனநின்றது. இவ்வுண்மை உணரமாட்டாது திருநாவுக்கரசுநாயனார் நரிவிருத்தம் என்னும் க்ஷமண்பாட்டைச் சுட்டிப்பாடினர் என்பார் கூற்று முழுமையும் அசம்பாவிதமாம் என்க.

* ஆதிமாமறைவிதியினலாறுசூழ்வேணி
நாதனுரைமுன்னகவேபுரியுநல்வேள்வி
தீதுநீங்கநீர்செய்யவுந்திருக்கழுமலத்து
வேதவேதியரனைவருஞ்செய்யவுமிகுமால்.

—பெரியபுராணம்.

---

(௧௪) துர்ப்பிக்ஷமுதலிய கலிநீங்கும்பொருட்டு வேள்விக்குரிய அக்கினியின் கர்மாங்கமாகிய ஸ்தூலோபாசனையும், பாவமூலமாகிய பாசநீங்குதற் பொருட்டுத் திருச்சிற்றம்பலவரது ஞானத்துக்குரிய சூக்குமோபாசனையும் ஒருங்கு அநுஷ்டிக்கற்பாலன.

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌞𑍍𑌚𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌞𑍍𑌚 𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍋𑌭𑌯𑌂 𑌸𑌹 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

வித்யாஞ்சாவித்யாஞ்ச யஸ்தத்வேதோபயம்ஸஹ।
அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமச்நுதே॥

—சுக்கிலயசுர்வேதத்து ௪0-ம் அத்தியாயத்தைச் சார்ந்த ஈசாவாசியோபநிடதத்து ௧௧-ம் மந்திரம்.

"எவன் ஞானத்தையும், கன்மத்தையும் (எனவே), அவ்விரண்டையும் ஒன்றாய்ச் செய்யவேண்டுமென்று அறிகின்றானோ, அவன் கன்மத்தினுற் சம்சாரத்துக்குரிய கலியைத் தாண்டி, ஞானத்தினுற் சிவத்தை அடைகின்றான்."

---

* புங்கவரெவர்க்குநல்கும்புவிபுகழவிகொள்வானு
மங்கியின்முதலும்வேள்விக்கதிபனுமளிக்கின்றானுஞ்
சங்கான்றானேவேதஞ்சாற்றுமான்மகத்துக்காதி
யிங்கொருதேவுண்டென்னினெழுகெனவுரைத்திமாதோ.

—கந்தபுராணம்.

ஈண்டு வித்தை என்றமையினல் திருச்சிற்றம்பலவாது உபாசனஞானமும், அவித்தை என்றமையினல் அக்கினியின் யாககன்மமும் ஒருங்கு அநுஷ்டிக்கற்பாலன என்று பெறப்பட்டது. அக்கினியுபாசனே ஸ்தூலோபாசனே எனவும், தகராகாய திருச்சிற்றம்பலவாது உபாசனே சூக்குமோபாசனே எனவும் படும்.

பரப்பிரம சிவத்தின் ஸ்தூலாக்கினி உபாசனே.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑍀𑌳𑍇 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌮𑍃𑌤𑍍𑌵𑌿𑌜𑌂। 𑌹𑍋𑌤𑌾𑌰𑌂 𑌰𑌤𑍍𑌨𑌧𑌾𑌤𑌮𑌂।

அக்நிமீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய தேவம்ருத்விஜம்। ஹோதாரம் ரத்நதாதமம்।

"புரோஹிதரும், யாகதேவரும், இருத்துவிக்கும், ஹோதாவும், இரத்தினத்தை மிகுத்துக் கொடுப்பவருமாகிய அக்கினியை ஸ்துதிக்கின்றேன்" என்று இருக்குவேதம் (க. க. க) கூறுகின்றது.



இருக்குவேதத்திலே அக்கினியானவர் தேவர்களுள்ளே சிரேஷ்டர் எனக்கூறப்படுகின்றார்; காஷ்டத்துள்ளே உள்ள இவர் பிதாவும் மாதாவுமாகக் கொள்ளப்படும் இரண்டு அரணிகளேக் கடைதலினல் உதிப்பவர். — இருக்குவேதம், அ. சகூ. கரு.

இவர் அழியாதவர். — .... ரு. ச. உ

இவர் ஹூதபுக் முதலிய பல திருநாமமுடையர்; இவர் கிருஹத்துக்குப் பதி. — .... க. கூ0. சு

கிருஹத்தில் அதிதி. — .... க. ருஅ. கூ

இவர் புரோஹிதர், ஹோதா. .... க. க. ௯

செல்வப்பொருட்குப்பதி.— .... க. எஉ. க

மிகுந்த அறிவிற் சிறந்தவர். .... க. எஉ. க0

எல்லாம் அறிபவர். — ௫. ௧௯. ௧

சரீரத்தைக் காப்பவர். — ௧0. ௭. ௭

வழிபடுவோர்க்கு அன்னத்தோடு செல்வத்தையும் மக்களையும் உதவுபவர். — ௨. ௯. ௫

சத்துருவைச் சம்ஹாரஞ் செய்பவர். — ௧. ௭௭. ௪

இவரிடத்திலே ஓமிக்கப்படுபவைகளைத் தேவர்கள் இவர்வாயிலாகவே உண்கின்றார்கள். — ௨. ௧. ௧௪

இராப்போதிலே அக்கினியானவர் உலகத்தின் சிரசாயுள்ளவர்; பின் உதயத்திலே சூரியனாக உதிப்பவர். — ௧0. ௮௮. ௬

ஆகாயத்திற் சூரியனும், அந்தரிக்ஷத்தில் மின்னும், பூமியில் அக்கினியாயும் உள்ளார். — ௨. ௯. ௫

ஓஷதிகளுக்குக் கர்ப்பமாயுள்ளார். — ௨. ௧. ௧௪

ஓஷதிகளைப் (பருவங்களிலே) பழுக்கச் செய்பவர். — ௧0. ௮௮. ௧0

மேகம்போல ஜரைவருதற்கு முன் காப்பவர். — ௧. ௭௧. ௧0

அக்கினி ஜந்மத்தினால் எல்லாவற்றையும் அறிபவர். — ௫. ௨௬. ௭

சமுத்திரத்திலே செல்லும் நாவாயிற்போல, இடையூறுகளுக்கூடாக எம்மைக்கொண்டு செல்பவர். — ௧. ௯௯. ௧

மோக்ஷம் கொடுப்பவர். — ௧. ௫௧. ௭

இங்ஙனம் இருக்குவேதத்தி
லே அநேக இடங்களில் துதிக்கப்
படுகின்றார்.

அக்கினியானவர் அக்கினிஹோத்திரம் வாயிலாகவும், அக்கி
னிஷ்டோம முதலிய யஜ்ஞவாயிலாகவும் வழிபடப்படுகின்றார்.
அவை வருமாறு:—

அக்கினிஹோத்திரம்.



[illegible]

𑌵𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃। 𑌪𑍍𑌰𑌥𑌮𑌦𑌿𑌨𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌦𑌶𑌾𑌨𑌾𑌂
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌚𑌲𑌦𑍍𑌰𑍂𑌪𑌾𑌣𑌾𑌞𑍍𑌚 𑌮𑌧𑍍𑌯𑍇
𑌯𑍇𑌨 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌣 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌹𑍋𑌮𑌃 𑌕𑍃𑌤𑌃 𑌤𑍇-
𑌨𑍈𑌵 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌣 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃। 𑌪𑍍𑌰𑌥𑌮𑌹𑍋𑌮𑌶𑍍𑌚
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑌿𑌨𑍇 𑌅𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌧𑌾𑌨𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑌿𑌨𑍇 𑌸𑌾𑌯𑌂𑌕𑌾𑌲𑍇
𑌆𑌰𑌮𑍍𑌭𑌣𑍀𑌯𑌃। 𑌤𑌤𑍍𑌰 𑌶𑌤𑌹𑍋𑌮𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾
𑌸𑌾𑌯𑌂𑌕𑌾𑌲𑍇 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾॥

யஜ்ஞவிசேஷ: । தத் விவிதம் । மாஸஸாத்யம் யாவஜ்ஜீவந ஸாத்யஞ்ச । த்விதீயே விசேஷோயம் । ததக்நௌ யாவஜ்ஜீவம் ப்ரத்யஹம் ப்ராதஸ்ஸாயம் ஹவநம் । ததக்நிநா யாககர்துர் தாஹச்ச । இதி ஸ்ம்ருதி: । தத்ர க்ரமோ யதா । ப்ராஹ்மணக்ஷத்ரிய வைச்யாநாம் க்ருததாரபரிக்ரஹாணும் காணத்வாந்தத்வபதிரத்வபங்குத்வாதி தோஷாஹிதாநாம் வர்ணக்ரமேண வஸந்த க்ரீஷ்மசரத்ஸு அக்ந்யாதாநம் விஹிதம் । அக்நயஸ் த்ரய: கார்ஹபத்ய:, தக்ஷிணாக்நி:, ஆஹவநீய: । ஏஷாமாதாநம் நாம தேசவிசேஷே தத்தந்மந்த்ரைஸ் ஸ்தாபநம் । தேஷ்வக்நிஷு ஸாயங்காலே ப்ராத:காலே சாக்நிஹோத்ரஹோம: கர்த்தவ்ய: । அக்நிஹோத்ரம் நாம ஹோமஸ்ய நாமதேயம் । அக்நயே ஹோத்ரம் ஹோமோ யஸ்மிந் கர்மணீதி வ்யதிகரணபகுவ்ரீஹி: । தத்ரத்ரவ்யாணி தச । பய:, ததி, யவாகூ:, க்ருதம், ஓதந:, தண்டுலா:, சோமரச:, மாம்சம், தைலம், மாஷா: । ஸ்ம்ப்ரதிகலியுகே பயஸா தண்டுலைர் யவாக்வா ச ஹோம சிஷ்டாசாரப்ரசித்த: । தத்ர ஏக ருத்விக் நித்யம் ஹோம: யஜமாநேந வாகர்த்தவ்ய: ருத்விஜா வா காரயிதவ்ய: । அமாவாஸ்யாயாந்து ராத்ரௌ யவாகூ த்ரவ்யேண யஜமாநேநைவ கர்த்தவ்ய: । ஸ சாக்நிஹோத்ரஹோம: ஆரம்ப ப்ரப்ருதி யாவஜ்ஜீவநம் கர்த்தவ்ய: । ப்ரதமதிநே பூர்வோக்தாநாம் தசாநாம் த்ரவ்யாணும் மத்யே ஸம்ப்ரதி ப்ரசலத்ரூபாணுஞ்ச மத்யே யேந த்ரவ்யேண ப்ரதமாக்நிஹோத்ர ஹோம: க்ருத: தேநைவ த்ரவ்யேண யாவஜ்ஜீவநம் கர்த்தவ்ய: । ப்ரதமஹோமச்ச யஸ்மிந் திநே அக்ந்யாதாநம் க்ருதம் தஸ்மிந் திநே ஸாயங்காலே ஆரம்பணீய: । தத்ர சதஹோமே ஸூர்யோ தேவதா ஸாயங்கலே அக்நிர் தேவதா ॥

"அக்கினிஹோத்திரம் இருவகைப்படும்; ஒன்று மாசத்திலே செய்து முடிப்பது; மற்றது சீவபரியந்தம்செய்துமுடிப்பது; இரண்டாவதாய்ச் சீவபரியந்தம் செய்யப்படும் விசேஷாக்கினியிலே தினந்தோறும் காலைமாலைகளில் ஹவநஞ் செய்யவேண்டியது, பிரமக்ஷத்திரியவைசியருள்ளே பாணிக்கிரஹணஞ் செய்தவராய்க் குருடு ஒற்றைக்கண் செவிடு முடமுதலிய தோஷமிலராயுள்ளோர் வசந்தகிரீஷ்மசரத்காலங்களிலே அக்கினியாதானஞ் செய்யவேண்டியது; ஆதானமாவது சிறந்த ஸ்தானமொன்றிலே கார்ஹபத்தியம் தக்ஷிணாக்கினி ஆஹவநீயம் என்னும் மூன்று அக்கினிகளையும் அந்தந்த மந்திரங்களாலே ஸ்தாபனஞ் செய்வது; அவறிற் சாயங்காலம் பிராதக்காலங்களில் அக்கினிஹோத்திரஹோமஞ் செயற்பாற்று; இவற்றிற்கு உபயோகப்படும் திரவியங்கள் பத்து. அவையாவன:—பால், தயிர், கோதுமை, நெய், அன்னம், அரிசி, சோமரசம், மாமிசம், தைலம், உழுந்து என்பன; கலியுகத்திலே பால், அரிசி, கோதுமை என்பனவே சிஷ்டர்களாற் கொள்ளப்படுகின்றன. எப்பொழும் இருத்துவிக்கு யஜமானனோடு கூடி ஹோமஞ் செயற்பாலர்; இன்றேல் இருத்துவிக்குமாத்திரம் செய்யலாம்; அமாவாசை இராத்திரியிலே கோதுமைத்திரவியங்கொண்டு யஜமானனாலேயே செயற்பாற்று; இந்த அக்கினிஹோத்திரஹோமம் ஆரம்பித்ததினமுதல் ஜீவபரியந்தஞ் செய்யவேண்டியது; முதற்றினத்திலே பிரதமாக்கினிஹோத்திரஹோமம் பத்துத்திரவியங்களுள்ளேனும் மூன்று திரவியங்களுள்ளேனும் எந்தத் திரவியங்கொண்டு செய்யப்பட்டதோ, அந்தத் திரவியங்கொண்டே சீவபரியந்தம் செய்யவேண்டியது; எந்தத் தினத்திலே அக்கினியாதானஞ்செயப்பெற்றதோ, அத்தினத்துச் சாயங்காலத்திலே முதல்ஹோமமும் ஆரம்பிக்கற்பாலது; சதஹோமத்திலே சூரியன் தேவதை; சாயங்காலத்திலே அக்கினி தேவதை.

தர்சபூர்ணமாசயாகம்.

आधानानन्तरं प्रथमपौर्णमास्यां दर्शपूर्णमासयागारम्भः कर्तव्यः। दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेतेति विधिवाक्यम्। तत्र षड्यागाः। पौर्णमास्यां त्रयः। अमावास्यायां त्रयः। पौर्णमास्यामाग्नेयाग्नीषोमीयोपांशुयाजाख्या यागाः। अमावास्यायामाग्नेयैन्द्रदधिपयो यागत्रयः। तत्रामायां कर्तव्ययागत्रयस्य दर्शमिति नामधेयम्। पौर्णमास्यां कर्तव्ययागत्रयस्य पूर्णमासमिति नामधेयम्। दर्शश्च पूर्णमासश्च दर्शपूर्णमासाविति द्वन्द्वः। पौर्णमासयागस्य [illegible] दर्शपूर्णमासावपि यावज्जीवं कर्तव्यौ। तत्रापि त्रयाणां वर्णानां [illegible] सपत्नीकानामधिकारः। सामान्यतः पर्वण्यारम्भः प्रतिपदि याग इति परिभाषा। तत्राकृतसोमयागस्य यजमानस्य पौर्णमास्यामाग्नेयपुरोडाशयागः। आज्येनोपांशुयागः। अग्नीषोमीयपुरोडाशयागः। कृतसोमयागस्य यजमानस्य तु पौर्णमास्यामाग्नेयपुरोडाशयागः आज्येनोपांशुयाजयागः अग्नीषोमीयपुरोडाशयागः। अमावास्यायामाग्नेयपुरोडाशयागः ऐन्द्रदधियागः ऐन्द्रपयोयाग इति त्रयः। तत्र ऋत्विजश्चत्वारः। अध्वर्युः, ब्र

𑌹𑍍𑌮𑌾, 𑌹𑍋𑌤𑌾, 𑌅𑌗𑍍𑌨𑍀𑌦𑌿𑌤𑌿| 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦 𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑌾 𑌅𑌧𑍍𑌵𑌰𑍍𑌯𑍁𑌃|
𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌃𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌤𑍍𑌰𑌯 𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 | 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦 𑌕𑌰𑍍𑌮-
𑌕𑌰𑍍𑌤𑌾 𑌹𑍋𑌤𑌾 | 𑌅𑌗𑍍𑌨𑍀𑌤𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍋𑌽𑌧𑍍𑌵𑌰𑍍𑌯𑍋𑌰𑍇𑌵𑌾𑌨𑍁-
𑌯𑌾𑌯𑍀 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤 𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑌾 | 𑌪𑍁𑌰𑍋𑌡𑌾𑌶𑍋 𑌵𑍍𑌰𑍀𑌹𑌿𑌤𑌣𑍍𑌡𑍁-
𑌲𑍈𑌰𑍍𑌯𑌵𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑍈𑌰𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 | 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌵𑌦𑍍𑌦𑌰𑍍𑌶-
𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌰𑌮𑍍𑌭𑌃 𑌕𑍃𑌤𑌾𑌧𑌾𑌨𑍇𑌨𑍈𑌵 𑌪𑍂𑌰𑍍𑌣 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂
𑌯𑌾𑌗𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃||

ஆதாநாநந்தரம் ப்ரதமபௌர்ணமாஸ்யாம் தர்சபூர்ணமாஸ யாகாரம்பঃ கர்த்தவ்யঃ । தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்க்ககாமோ யஜேதேதிவிதி வாக்யம் । தத்ர ஷட்யாகாঃ । பௌர்ணமாஸ்யாம் த்ரயঃ । அமாயாம் த்ரயঃ । பௌர்ணமாஸ்யாமாக்நேயாக்நீஷோமீயோபாம்சு யாகாஸ் த்ரயோ யாகாঃ । அமாவஸ்யாயாமாக்நேயைந்த்ரததிபயோ யாகாஸ்த்ரயঃ । தத்ராமாயாம் கர்த்தவ்ய யாகத்ரயஸ்ய தர்சபதம் நாமதேயம் । பௌர்ணமாஸ்யாம் கர்த்தவ்யயாக த்ரயஸ்ய பூர்ணமாஸபதம் நாமதேயம் । தர்சச்ச பூர்ணமாஸச்ச தர்ச பூர்ணமாசாவிதி த்வந்த்வঃ । பௌர்ணமாஸயாகஸ்ய ப்ராதமிகத்வேபி அல்பாச்தாமிதி பாணிநீயாநுசாஸநாநுஸாரேண தர்சசப்தஸ்யால்பாச்கத்வாத் பூர்வநிபாதঃ । தர்சபூர்ணமாஸாவபி யாவஜ்ஜீவம் கார்யௌ । தத்ராபி த்ரயாணும் வர்ணுநாமுபரிலிகிதாந்தத்வாத்யதிகார ப்ரதிபந்தகீபூததோஷஸம்பந்தாபாவவதாம் க்ருதாக்நிதாநாநாம் ஸபத்நீகாநாமதிகாரঃ । ஸாமாந்யதঃ பர்வண்யாரம்பঃ ப்ரதிபதி யாக இதி பரிபாஷா । தத்ராக்ருத ஸோமயாகஸ்ய யஜமாநஸ்ய பௌர்ணமாஸ்யாமாக்நேய புரோடாச யாகঃ ஆஜ்யே நோபாம்சு யாஜயாகঃ । அமாயாந்து ஆக்நேய புரோடாச யாகঃ ஐந்த்ராக்நபுரோடாசயாகঃ । க்ருதஸோமயாகஸ்ய யஜமாநஸ்ய து பௌர்ணமாஸ்யாமாக்நேய புரோடாசயாகঃ ஆஜ்யே நோபாம்சுயாஜயாகঃ அக்நீஷோமீய புரோடாச யாகঃ அமாயாந்து ஆக்நேய புரோடாச யாகঃ ஐந்த்ரபயோயாகঃ ஐந்த்ரததியாகச்சேதி த்ரயঃ । தத்ர ருத்விஜச் சத்வாரঃ । அத்வர்யுঃ, ப்ரஹ்மா, ஹோதா, அக்நீதிதி । யஜுர்வேத கர்மகர்த்தா அத்வர்யுঃ । ருக்யஜுஸ் ஸாமவேத த்ரயகர்மகர்த்தா ப்ரஹ்மா । ருக்வேத கர்மகர்த்தா ஹோதா । அக்நீத்து ப்ராயசோ த்வர்யோ ரேவாநுயாயீ தத்ப்ரே

ரித கர்மகர்த்தா । புரோடாசோ வ்ரீஹி தண்டுலைர்யவதண்டு லைர்வா கர்த்தவ்ய: । அக்நிஹோத்ரவத்யேந த்ரவ்யேணாரம்ப: க்ரு தஸ் தேநைவ த்ரவ்யேண யாவஜ்ஜீவம் யாக: கர்த்தவ்ய:॥

''அக்கினியாதானத்தின் பின்னர் முதற்பௌர்ணிமையிலே தர்சபூர்ணமாசயாகம் ஆரம்பிக்கற்பாற்று; 'சுவர்க்ககாமன் தர்ச பூர்ணமாசவாயிலாக யஜ்ஞஞ் செய்க' என்று விதிக்கப்பட்டிருக் கின்றது; இதிலே ஆறு யாகம் உள்ளன; பௌர்ணிமையிலே ஆக் நேய அக்கினிஷோமீய உபாம்சு என மூன்று யாகமும், அமாவாசையிலே ஆக்நேயபுரோடாசயாகம் ஐந்திரபயோயாகம் ஐந்திரததியாகம் என மூன்று யாகமும் உள்ளன; அமா வாசையிலே செயற்பாலனவாகிய யாகம் மூன்றுக்கும் தர்சம் என்று பெயர்; பௌர்ணமாசியிலே செயற்பாலனவாகிய யாகம் மூன்றுக்குப் பூர்ணமாசம் என்று பெயர்; தர்சமும் பூர்ணமாசமும் இயைந்து தர்சபூர்ணமாசம் என உம்மைத்தொகைப்பாற்பட நின் றது; தர்சபூர்ணமாசம் சீவபரியந்தம் செயற்பாற்று; சோமயா கஞ் செய்யாத யஜமானனுக்குப் பௌர்ணமியில் ஆக்நேயபுரோ டாசயாகமும் ஆஜ்யத்தினலே உபாம்சுயாஜயாகமும், அமாவாசி யிலே ஆக்நேயபுரோடாசயாகமும், ஐந்திராக்கினிபுரோடாசயாக மும், சோமயாகஞ்செய்த யஜமானனுக்குப் பௌர்ணமாசியிலே ஆக்நேயபுரோடாசயாகமும், ஆஜ்யத்திலே உபாம்சுயாஜயாகமும், அக்கினிஷோமீய புரோடாசயாகமும், அமாவாசியிலே ஆக்நேய புரோடாசயாகமும், ஐந்திரபயோயாகமும், ஐந்திரததியாகமும் உள்ளனவாம். அத்துவர்யு, பிரமா, ஹோதா, அக்நீத் என நான்கு இருத்துவிக்குக்கள் உளர்; யசுர்வேதகர்மகர்த்தா அத்வர்யு; இரு க்கு யசுர் சாமவேதகன்மமூன்றுக்கும் கர்த்தா பிரமா; இருக்கு வேதகர்மகர்த்தா ஹோதா; பெரும்பான்மையும் அத்துவர்யுக்குச் சகாயமாய் அவராற் பிரேரிக்கப்பட்ட கர்மத்தைச் செய்பவர் அக் நீத்; புரோடாசம் நெல்லரிசிகொண்டேனும், கோதுமையரிசி கொண்டேனும் செயற்பாற்று; அக்நிஹோத்திரத்திற்போல எந்த த்திரவியங்கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோ, அந்தத் திரவியங் கொண்டே சீவபரியந்தம் யாகஞ் செயப்படல்வேண்டும்.

அக்கினிஷ்டோமம்.

ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்ககாமோ யஜேதேதி வாக்ய விஹித ஜ்யோதிஷ்டோமநாமக யாகவிஶேஷஸ்ய கௌணவிகாரோऽக்நிஷ்டோமோ நாம | தஸ்ய காலோ வஸந்தஃ | தத்ராதிகாரீ அதீதவேதஃ ஆஹிதாக்நிஶ்ச த்ரவ்யம் ஸோமஃ | தேவதா இந்த்ரவாய்வாதயஃ | ருத்விஜஃ ஷோடஶஃ | தேஷாஞ்சத்வாரோ கணாஃ | ஹோத்ருகணஃ, அத்வர்யுகணஃ, ப்ரஹ்மகணஃ, உத்காத்ருகணஃ | ஏகைகஸ்ய கணஸ்ய சத்வாரஶ்சத்வாரஃ | தத்ர ஹோத்ருகணே ஹோதா, ப்ரஶாஸ்தா, அச்சாவாகஃ, க்ராவஸ்துத் | அத்வர்யுகணே அத்வர்யுஃ, ப்ரதிப்ரஸ்தாதா, நேஷ்டா, உந்நேதா | ப்ரஹ்மகணே ப்ரஹ்மா, ப்ராஹ்மணாச்சம்ஸீ, ஆக்நீத்ர, போதா | உத்காத்ருகணே உத்காதா, ப்ரஸ்தோதா, ப்ரதிஹர்தா, ஸுப்ரஹ்மண்யஃ | [illegible] | ப்ரதமதிநே தீக்ஷா தீக்ஷணீயாதி ததங்காநுஷ்டாநம் | தத்ர த்விதீய திவஸே ப்ராயணீயயாகஃ ஸோமக்ரயணம் | ததோ த்விதீய த்ருதீய சதுர்த்ததிவஸேஷு ப்ராதஃகாலே ஸாயங்காலே ச ப்ரவர்க்யோபஸதாக்யயாகாநுஷ்டாநம் | பஞ்சமே திவஸே ப்ரவர்க்யோத்வாஸநமக்நீஷோமீய பஶ்வநுஷ்டாநம் | தத்ர யஸ்ய யஜமாநஸ்ய க்ருஹே பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹோ நாம ஸோமம் கேநாபி வேஷோ நாயீதோऽக்நிஷ்டோமோ வா ந க்ருதஸ்ஸ து ப்ராஹ்மணோ பவதி | தஸ்ய தௌர்ப்ராஹ்மண்ய பரிஹாராயாஶ்விநபஶுஃ கர்தவ்யஃ | யஸ்ய யஜமாநஸ்ய பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹாநாம் ஸோமேந கேநாபி ஸோமபாநம் ந க்ருதம் ஸ்யாத்தஸ்ய ஸோமபாநவிச்சேதோஷ பரிஹாரார்த்தம் ஐந்த்ராக்ந

𑌪𑌶𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 | [illegible] 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 𑌯𑍂𑌪 [illegible] 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂 [illegible] | 𑌏𑌵𑌂 [illegible] 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 | 𑌤𑌤𑍍𑌰 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌨𑌮𑍍 | 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌗𑍍𑌰𑌹𑌾𑌶𑍍𑌚𑌮𑌸𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌲𑍍𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 | 𑌤𑌤𑍍𑌰 𑌗𑍍𑌰𑌹𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌤𑌸𑍍𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible] | [illegible] 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible] | [illegible] | 𑌤𑌤𑍍𑌰 [illegible] 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 | 𑌤𑌤𑍍𑌰 [illegible] 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 | [illegible] | 𑌤𑌤𑍋 𑌮𑌾𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌸𑌵𑌨𑌮𑍍 | 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌦𑌾𑌨𑌮𑍍 | 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌚 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌂 𑌗𑌾𑌵𑌃 | 𑌤𑌤𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑌵𑌨𑌮𑍍 | 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌵𑌨𑌮𑌾𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌸𑌵𑌨𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑌵𑌨𑌾𑌖𑍍𑌯𑌸𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 [illegible] | [illegible] | 𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑌵𑌨 [illegible] | [illegible] | [illegible] | 𑌤𑌤𑍍𑌰 [illegible] | 𑌤𑌸𑍍𑌯 [illegible] ||

ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேதேதி வாக்ய விஹித ஜ்யோதிஷ்டோமநாமக யாகவிசேஷஸ்ய குணவிகாரோக்நிஷ்டோமோ நாம । தஸ்ய காலோவஸந்தஃ । தத்ராதிகாரீ அதீத வேத ஆஹிதாக்நிச்ச । த்ரவ்யம் ஸோமஃ । தேவதா இந்த்ரவாய்

வாதய꞉ । ருத்விஜ꞉ ஷோடச꞉ । தேஷாஞ்ச சத்வரோ கணா꞉ । ஹோத்ருகண꞉, அத்வர்யுகண꞉, ப்ரஹ்மகண꞉, உத்காத்ருகண꞉ । ஏகைகஸ்ய கணஸ்ய சத்வாரச்சத்வார꞉ । தத்ரஹோத்ருகணே ஹோதா, ப்ரசாஸ்தா, அச்சாவாக꞉, க்ராவஸ்தோதா । அத்வர் யுகணே அத்வர்யு꞉, ப்ரதிப்ரஸ்தாதா, நேஷ்டா, உந்நேதா । ப்ரஹ்மகணே ப்ரஹ்மா, ப்ராஹ்மணாச்சம்சி, அக்நீத்ரு, போதா। உத்காத்ருகணே உத்காதா, ப்ரஸ்தோதா, ப்ரதிஹர்த்தா, ஸு ப்ரஹ்மண்ய꞉ । ஸ ச பஞ்சாஹ ஸாத்ய꞉ । ப்ரதமதிநே தீக்ஷா தீக்ஷ ணீயாதி ததங்கா நுஷ்டாநம் । தத்ர த்விதீய திவஸே ப்ராயணீய யாக꞉ ஸோமலதாக்ரயணம் । ததோ த்விதீயத்ருதீய சதுர்த்ததிவ ஸேஷு ப்ராத꞉காலே ஸாயங்காலேச ப்ரவர்க்யோபஸநாமகயா கா நுஷ்டாநம் । சதுர்த்ததிவஸே,ப்ரவர்க்யோத்வாஸநாநந்தர மக்நீ ஷோமீய பச்வநுஷ்டாநம் । தத்ர யஸ்ய யஜமாநஸ்ய க்ருஹே பித் ருபிதாமஹப்ரபிதாமஹாநாம் மத்யே கோபி வேதோ நாதீதோ க்நிஷ்டோமோ வா ந க்ருதஸ்ஸதுர்ப்ராஹ்மணோ பவதி । தஸ்ய தௌர்ப்ராஹ்மண்ய பரிஹாராயாச்விநபசு꞉ கர்த்தவ்ய꞉ । யஸ்ய யஜ மாநஸ்ய பித்ருபிதாமஹ ப்ரபிதாமஹாநாம் மத்யே கோபி ஸோமபாநம் ந க்ருதம் ஸ்யாத் தஸ்ய ஸோமபாநவிச்சேத தோஷ பரிஹாரார்த்த மைந்த்ராக்ந பச்வநுஷ்டாநம் கர்த்தவ்யம் । இத்தம் த்ரயாணாம் பசூநாம் யுகபதாலம்பபக்ஷே ஏகஸ்மிந்நேவ யூபே த்ரயாணாம் பசூநாம் பந்தநம் । இத்தம் பசுத்ரயாநுஷ்டாநஞ் சதுர்த்ததிவஸே தஸ்மிந்நேவ திநே வாத்ருதீயபாகே உத்தாய ப்ரயோகாரம்ப꞉ கார்ய꞉ । தத்ர பாத்ராஸாதநம் । பாத்ராணிச க்ரஹா꞉சமஸா꞉ ஸ்தால்யச்சேதி । தத்ர க்ரஹ பாத்ராணி வித ஸ்தி மாத்ராணி உலூகலாகாராணி । ஊர்த்வபாத்ராணி சமஸபாத் ராணி தாவத் பரிமிதாந்யேவ திர்யகாக்ருதீநி கோணசதுஷ்டய விஶிஷ்டாநி தாரணார்த்த தண்டயுக்தாநி । ஸ்தால்யோ மார்த்திக் ய꞉ । தத ஆரப்ய ஸோமலதா கண்டநேந ஸோமரஸம் நிஷ்காஸ்ய நிஷ்காஸ்ய க்ரஹைச்சமஸைச்ச ஹோம꞉ கர்த்தவ்ய꞉ । தத்ர ஸூர் யோதயா நந்தர மாக்நேய பஶுயாக꞉ கர்த்தவ்ய꞉ ஏவமுக்த்யபர் யாயாந்தே க்ருதே ப்ராத꞉ ஸவநஸமாப்தி꞉ । ததோ மத்யந்திநஸவ நம் । தத்ர தக்ஷிணாதாநம் । தக்ஷிணாச த்வாதஶோத்தரஶதம் காவ꞉ । ததஸ்த்ருதீயஸவநம் । இத்தம் ப்ராத꞉ ஸவந மாத்யந்திந ஸவந த்ருதீய ஸவநரூப ஸவந த்ரயாத்மக꞉ அக்நிஷ்டோம꞉ ப்ர தாந யாக꞉ । இதரேங்கயாகா꞉ । த்ருதீய ஸவந ஸமாப்த் யுத்தா மவ

ப்ருதயாக:। உதகே வருணதேவதாக புரோடாஶ ஹோம:। ததநந்தர மநுபந்த்யா பஶுயாக:। தத்ர கௌ: பஶு:। தஸ்ய கலிநிஷித்தத்வாத்தஸ்யச நித்யத்வாத்தத் ஸ்தாநே ஆமீக்ஷாயாக:।

"ஜ்யோதிஷ்டோமங்கொண்டு சுவர்க்ககாமன் யஜ்ஞம் புரிக, என்பது விதி; இந்த அக்கினிஷ்டோமம் செய்தற்குரிய காலம் வசந்தருது; இதற்கு அதிகாரி வேதம் அறிந்தவனும அக்கினிஹோத்திரஞ் செய்பவனுமாம்; திரவியம் சோமலதை; தேவதைகள் இந்திரன் வாயுமுதலியோர்; இருத்துவிக்குக்கள் பதினறுபேர்; இவர்களுள்ளும் நால்வர் கணங்கள்; இவர் ஹோத்திருகணர், அத்துவர்யுகணர், பிரஹ்மகணர், உத்காத்திருகணர் என்போர்; இந்த ஒவ்வொரு கணத்திலும் நந்நால்வர் உளர்; ஹோத்திருகணத்தில் ஹோதா, பிரஶாஸ்தா, அச்சாவாகர், கிராவஸ்தோதா என நால்வர்; அத்துவர்யு கணத்தில் அத்துவர்யு, பிரதிபிரஸ்தாதா, நேஷ்டா, உந்நேதா என நால்வர்; பிரமகணத்திற் பிரமா, பிராஹ்மணச்சம்சி, அக்நீத்திரு, போதா என நால்வர்; உற்காதிருகணத்தில் உற்காதா, பிரஸ்தோதா, பிரதிகர்த்தா, சுப்பிரஹ்மண்ணிய என நால்வர்."

"இந்த யாகமும் ஐந்து தினத்தில் முற்றற்பாலது; முதலாம் தினத்தில் தீக்ஷைசெயற்பாலதாகிய அங்காநுஷ்டானம்; இரண்டாம் தினத்திலே பிராயணீய யாகத்துக்குரிய சோமலதை பெறுதல்; இரண்டாம் மூன்றும் நான்காம் தினங்களிலே காலையினும் மாலையினும் பிரவர்க்கியத்துக்குரிய உபஸத் என்னும் பெயர்கொண்ட யாகாநுஷ்டானம்; நான்காம் தினத்திலே உத்வாஸநசம்ஸ்காரத்தின் பின்னர் அக்கினிஷோமீய பசுவநுஷ்டானம்; எந்த யஜமானனுடைய கிருஹத்திலே பிதிர்பிதாமகபிரபிதாமகருள்ளே எவனுயினும் வேதம் படித்திராவிட்டால், அக்கினிஷ்டோமஞ் செய்யாதிருந்தால் அவன் துர்ப்பிராஹ்மணனுவான்; இவனுக்குப் பரிகாரமாக அச்வினபசுவநுஷ்டானஞ் செயற்பாற்று; எந்த யஜமானுடைய பிதிர்பிதாமகப் பிரபிதாமகருள்ளே எவன் சோமபானஞ் செய்யவில்லையோ; அவன் சோமபானத்தை விட்ட தோஷபரிகாரத்தின்பொருட்டு ஐந்திரயாகபசுவநுஷ்டானஞ் செயற்பாற்று; இம்மூவகைப் பசுக்களையும் ஒரே யூபத்திலே பந்தனஞ் செய்தல் வேண்டும்; இம்மூவகைப் பசுவநுஷ்டானங்களும் நான்காம் தின

திலேனும், அத்தினத்து மூன்றும் பாதத்திலேனும் எழுந்து பிரயோகாரம்பம் செய்தல்வேண்டும்; ஆண்டுக் கொள்ளக்கிடந்த பாத்திரங்கள் உரல்வடிவினவாய கிரகபாத்திரங்களும், ஊர்த்துவபாத்திரங்களாகிய சமசபாத்திரங்களும், மண்ணாலாய ஸ்தாலிபாத்திரங்களுமாம்; சோமலதைத்துண்டங்கள்கொண்டு பிளிந்த சோமாசம் கிரகபாத்திரங்களிலும் சமசபாத்திரங்களிலும் பூரித்து ஓமஞ் செயற்பாலது, சூரியோதயத்தின்பின்னர் ஆக்கினேய பசுயாகஞ் செயற்பாற்று; இங்ஙனஞ் செய்துமுடிந்தபோது பிராதச்சவனம் சமாப்தியாயிற்று; இதன்பின்னர் மத்தியந்தினசவனத்தில் தக்ஷிணாதானஞ் செய்யவேண்டும்; தக்ஷிணையும் நூற்றுப்பன்னிரு பசுக்களே; இதன்பின்னர் மூன்றாவது சவனம்; இங்ஙனம் காலைச்சவனம், உச்சிச்சவனம், மாலைச்சவனம் என்னும் முப்பிரகாரமாயுள்ள அக்கினிஷ்டோமப் பிரதானயாகம்; மற்றவைகள் அங்கயாகங்கள்; திருதீயசவனம் முடித்தபின்னர் அவபிருதயாகஞ் செயற்பாற்று; ஜலத்திலே வருணதேவனுக்குப் புரோடாச ஹோமஞ் செய்யவேண்டியது; இதன்பின்னர்ப் பசுயாகஞ் செய்யவேண்டியது; இது கலியில் நிஷித்தமாதலினாலும், நியமமாய்ச் செயற்பாலதொன்றாமாதலினாலும், அப்பசுவின் ஸ்தானத்தில் ஆமீக்ஷாயாகஞ் செய்யவேண்டியது."

अग्नौ प्रास्ताहुतिः सम्यगादित्यमुपतिष्ठते।
आदित्याज्जायते वृष्टिर्वृष्टेरन्नं ततः प्रजाः॥

அக்நௌ ப்ராஸ்தாஹுதிஸ் ஸம்யகாதித்யமுபதிஷ்டதே।
ஆதித்யாஜ் ஜாயதே வ்ருஷ்டிர் வ்ருஷ்டேரந்நம் ததஃ ப்ரஜாஃ॥

"தேவர்களைக் குறித்து அக்கினியில் நன்றாகச் செய்யப்படும் ஓமங்கள் சூரியனை அடைய, அவன்வாயிலாக மழை உண்டாக, இதனால் தானியங்கள் விருத்தியாக, இதனால் ஜீவகோடிகள் விருத்தியடைகின்றன" என்றது மநுஸ்மிருதி (ங: எசு)

பரப்பிரமசிவத்தின் சூக்தும தஹரோபாசனை.

सम्पूराकाश मध्ये ध्येयः।

சம்புராகாஶ மத்யே த்யேயஃ

"சிவபெருமான் (திருச்சிற்றம்பலம் எனப்படும் தகரா) காய மத்தியிலே தியானிக்கற்பாலர்" என்று அதர்வசிகோபநிடதம் கூறு மாற்றால், பரப்பிரமசிவனாது சூக்குமோபாவனை பெறப்பட்டது.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே.

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையறீர்வாரே.

—ஞா, கோயில்.

என்னும் திராவிடசுருதிகளால், தில்லைவாழந்தணாது ஸ்தூலா க்கினியுபாசனையாகிய யாகத்தினாற் கலிநீக்கமும், பரப்பிரமசிவத் தின் சூக்குமோபாசனையினாற் பாவநீக்கமும் பெறப்பட்டன. படவே, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருவுளக்கருத்தின்படி கன்மமும் ஞானமும் ஒருங்கு அநுஷ்டிக்கற்பாலன என்று போதிக் கப்பட்டவாறாயிற்று. ஏகான்மவாதகுரவரால் இவ்வுண்மை ஈசா வாசியோபநிடதவுரையில் மாறுபடக் கூறப்பட்டுள்ளது.

(கரு) சிவபெருமானே வேதாகமமுதலிய சமஸ்த சாஸ்திரங்களுக்கும் கர்த்தா.

𑌅𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋 𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌃𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌮𑍇𑌤
𑌦𑍃𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃।

அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஃச்வஸிதமேதத்ருக்
வேதோ யஜுர்வேதஸ்ஸாமவேதஃ।

"இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேத(முதலிய) இந்தப் பரம்பொருளின் சுவாசம்" என்று பிருகதாரணியோபநிடத (ச. ச. க0: சு. ரு. கக) மும்;

[illegible]

ஈசாநஸ் ஸர்வவித்யாநாம்।

"சகல வித்தைகளுக்கும் (கர்த்தா) ஈசானர்" என்று தைத்திரீய ஆரணியக (க0. உக. ௩கூ) மும்,

[illegible]
[illegible]

அஷ்டாதசாநாமேதாஸாம் வித்யாநாம் பிந்நவர்த்மநாம்।
ஆதிகர்த்தா சிவஸ்ஸாக்ஷாச் சூலபாணிரிதி ச்ருதி:॥

"பலமார்க்கமுடைய இந்த (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசிதி புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி, ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தவேதம் என்னும்) பதினெண் வித்தைகளுக்கும் சாக்ஷாத்தாக முதற்கர்த்தாவாயுள்ளார் சூலபாணியாகிய சிவபெருமான் எனச் சுருதி கூறுகின்றது" என்று வாயு சங்கிதையும்,

........[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

........ருக்யஜுர்வேதிநாவுபௌ।
ஸாமவேதீ ததாதர்வவேதி காமிககாரணௌ
விமலோ மகுடச்சைவ வாதுளச் சிந்த்ய யோகஜௌ।
தீப்தஸ் ஸூக்ஷ்மஸ் ததைவாயம் வீரச்ச கிரணோபிச।
அஜிதச்ச ஸஹஸ்ரச்ச அம்ஶுமாந் ஸுப்ரபேதக꞉।
ததா விஜயநிச்வாஸௌ நாம்நா ஸ்வாயம்புவோப்யயம்
அநலோ ரௌரவச் சந்த்ரஜ்ஞாநோ பிம்ப உதீரித꞉!
ப்ரோத்கீதோ லளிதஸ் ஸித்தஸ்ததா ஸந்தாநநாமவாந்।
ஶர்வோத்தரஸ்ததாசாயம் பாரமேச்வர ஈரித꞉!
உபாகம ஸமாக்யோபி ததா ஶிவபுராணக꞉॥

"இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், காமிகம், காரணம், விமலம், மகுடம், வாதுளம், சிந்தியம், யோகஜம், தீப்தம், சூட்சுமம், வீரம், கிரணம், அஜிதம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அநலம், இரௌரவம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம் (என்னும் வேதத்தோடு சேர்ந்த மூலாகமங்களும்) உபாகமங்களும், புராணமுதலியவும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டன" என்று உபதேசகாண்டமும் கூறுகின்றன.

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினன்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே.

— ஞா, திருவிற்கோலம்.

---

(௧௬) வேதத்தினுட்பொருள் சிவபெருமான்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அஜ்ஞாநப்ரபவம் து:கம் ஜ்ஞாநம் தஸ்ய நிவர்த்தகம்।
ஸர்வவேதாந்தவாக்யாநாம் ச்ரவணம் தத்ப்ரவர்த்தகம்।
ச்ரவணம் நாம வாக்யாநாம் வைதிகாநாம் பராத்பரே।
உபக்ரமாதிபிர் லிங்கைச் ஶிவேதாத்பர்யநிர்ணய:॥

"அஞ்ஞானத்தினலாவது துக்கம்; அந்த அஞ்ஞானத்தை ஒழிப்பது ஞானம்; அந்த ஞானத்தை உதிப்பிப்பது சர்வவேதாந்த வாக்கிய சிரவணம்; வேதாந்த வாக்கிய சிரவணமானது உபக்கிரமாதிலிங்கங்களினலே பரத்தின்மேற் பராகிய சிவபெருமானிலே தாத்பரிய நிர்ணயஞ் செய்கின்றது" என்று உத்தரமீமாஞ்சை க-ம் அத்தியாயத்து, க-ம் பாதத்து, ச-ம் சூத்திர சைவபாஷ்யத்தில் உதகரிக்கப்பட்டுள்ளது.

விடையின்மேல்வருவானை வேதத்தின்பொருளானை
யடையிலன்புடையானையாவர்க்குமடியொண்ணு
மடையில்வாளைகள்பாயும்வன்பார்த்தான்பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானைச்சாராதார்சார்பென்னே.

—சு, திருவன்பார்த்தான்பனங்காட்டூர்.

மருவினியமறைப்பொருளைமறைக்காட்டானை
மறப்பிலியையமதியேந்துசடையான்றன்னை
யுருநிலவுமொண்சுடரையும்பரானை
யுரைப்பினியதவத்தானையுலகில்வித்தைக்
கருநிலவுகண்டனைக்காளத்தியைக்
கருதுவார்மனத்தானைக்கல்விதன்னைச்
செருநிலவுபடையானைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே.

—நா, திருமாற்பேறு.

(௧௭) பஞ்சகிருத்தியஞ் செய்பவர் சிவபெருமான்.

ஓம் ப்ரஹ்மவாதிநோ வதந்தி । கிம் காரணம் ப்ரஹ்ம? குத: ஸ்ம ஜாதா:? ஜீவாம: கேந? க்வச ஸம்ப்ரதிஷ்டா:? அதிஷ்டிதா: கேந? ஸுகேதரேஷு வர்த்தாமஹே ப்ரஹ்மவிதோ வ்யவஸ்தாம்।

ஓம் ப்ரஹ்மவாதிநோ வதந்தி । கிம் காரணம் ப்ரஹ்ம? குத: ஸ்ம ஜாதா:? ஜீவாம: கேந? க்வச ஸம்ப்ரதிஷ்டா:? அதிஷ்டிதா: கேந? ஸுகேதரேஷு வர்த்தாமஹே ப்ரஹ்மவிதோ வ்யவஸ்தாம்।

"பிரமவித்துக்களே! பிரபஞ்சத்துக்குக் காரணப்பிரமம் யாது? எங்கிருந்து பிறந்தேம்? (இதனாற் சிருஷ்டிகிருத்தியம் குறிக்கப்பட்டது); எவரால் நிலையுறுகின்றேம்? (இதனால் திதிகிருத்தியம் குறிக்கப்பட்டது); எவரிலே இலயமுறுகின்றேம்? (இதனால் சங்காரகிருத்தியம் குறிக்கப்பட்டது); எவரால் இன்பத்தினும் இதரமாகிய துன்பத்தினும் அதிஷ்டிக்கப்பட்டோம்? (இதனால் திரோபவகிருத்தியம் குறிக்கப்பட்டது); எவரால் (பந்தநிவிர்த்தியாகிய அநுக்கிரக) நிலை (நமக்கு) எய்துகின்றது? (இதனால் அநுக்கிரககிருத்தியம் குறிக்கப்பட்டது) என்று பிரமவாதிகள் கூறுகின்றார்கள்" எனச் சுவேதாசுவதரோபநிடதமும்,

யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம।

யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம।

'எதினின்று இந்தச் செந்துக்களெல்லாம் பிறக்கின்றனவோ, பிறந்தவை எதனால் * நிலையுறுகின்றனவோ, ஒழியுங்காலத்து அவை எதனுட் பிரவேசிக்கின்றனவோ, அதனை அறிதி; அது பிரஹ்மம்" என்று தைத்திரீயோபநிடதமும் கூறுகின்றன. இதனாற் படைத்துக் காத்து அழிப்பது பிரஹ்மம் எனப் பெறப்படுகின்றது.

𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑌾𑌲𑌕𑍋 𑌹𑌾𑌰𑌕𑌸𑍍𑌤𑌥𑌾।

கர்த்தா ஸர்வஸ்ய ஜகதஃ பாலகோ ஹாரகஸ்ததா।

"சமஸ்த உலகத்தைப் படைப்பவரும், காப்பவரும், அழிப்பவரும் (யாவர்? எனின்)" என்றும்,

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌕𑌲𑌹𑌂 𑌤𑌯𑌤𑍋𑌃 𑌕𑍍𑌰𑍁𑌧𑌾।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌸 𑌏𑌵𑍈𑌕𑌶𑍍𑌶𑌮𑍍𑌭𑍁𑌰𑌾𑌕𑌾𑌶𑌮𑌧𑍍𑌯𑌗𑌃।
𑌅𑌯𑌮𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌦𑌾𑌵𑌯𑍋𑌰𑌪𑌿॥

ப்ரஹ்மவிஷ்ணோர்மஹாமோஹாத்கலஹம் தததோஃ க்ருதா।
ஸர்வேச்வரஸ்ஸ ஏவைகச்ஶம்புராகஶமத்யகஃ।
அயமேவ ஜகத்கர்த்தா விஶேஷாதாவயோரபி॥

"மிகுந்த மோகத்தினாலே அகங்கரித்துக் கோபத்தினாலே கலகஞ் செய்தவராகிய பிரமவிஷ்ணுக்களுக்கு மத்தியிலே திரண்ட அக்கினிச்சுவாலைகளாற் சூழப்பெற்று எவர் தோன்றினாரோ, அவர் ஒருவர்தான் தகராகாயமத்தியில் விளங்குஞ் சம்புவாகிய சிவபெருமான்; இவரே உலகங்களுக்கும் விசேஷமாய் (பிரஹ்ம விஷ்ணுக்களாகிய) எங்கள் இருவர்க்கும் கர்த்தா" என்றும்,

---

* திதியைக் குறிக்கும் நிலையில் திரோதானமும், சம்ஹாரத்தைக் குறிக்கும் இறுதியில் அநுக்கிரகமும் அடங்கும் என்க.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌪𑌶𑍂𑌨𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌂𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌕𑌾𑌲𑌤𑌃।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌜𑌨𑌕𑌃𑌶𑌂𑌭𑍁𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃॥

ப்ரஹ்மவிஷ்ணுமுகாந்தேவாந்பஶூந்ஸ்ருஷ்ட்வாமஹேச்வர:।
கல்பயித்வா ஸ்திதிஸ்தேஷாம் ஸம்ஹரிஷ்யதி காலத:।
ஸர்வேஷாம் ஜநகச்ஶம்பு: பரமாத்மேதி விச்ருத:॥

"சிவபெருமான் பிரஹ்ம விஷ்ணுக்கள் முதலிய தேவர்களை யும் மற்றைய பிராணிகளையும் படைத்துக் காப்பாற்றுதற்கு ஏற்பாடுசெய்து, பின்னர் இறுதியில் (உருத்திரமூர்த்தியாய் நின்று) அவர்களைச் சங்கரிக்கின்றார்; அனைத்தையும் பிறப்பிக்கும் பிதாவாவார் அந்தச் சம்புவாகிய பரமான்மா என்று கூறப்படுகின்றது" என்றும்,

𑌯𑌤𑍋 𑌜𑌾𑌤𑌾 𑌇𑌮𑍇 𑌯𑍇𑌨 𑌜𑌾𑌤𑌾 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 𑌜𑌨𑍍𑌤𑌵𑌃।
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌲𑌯𑌂 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌨𑌸𑍍𑌤𑌨𑍁𑌤𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌮𑍍।
𑌅𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌤𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌨𑌮𑌃॥

யதோ ஜாதா இமே யேந ஜாதா ஜீவந்தி ஜந்தவ:।
யஸ்மிந் வ்ரஜந்தி விலயம் யஸ்து நஸ்தநுதே ஸ்ம்ருதிம்।
அநுக்ருஹ்ணாதி தாந்ஸர்வாந்தஸ்மை துப்யமிதம் நம:॥

"எவரினின்று இந்தச் சீவர்கள் உண்டாகின்றனவோ, எவரால் உண்டாகிய சீவர்கள் நிலையுறுகின்றனவோ, எவரிலே அவை இலயமடைகின்றனவோ, எவர் நமக்கு ஞானத்தைப் பாலிக்கின்றாரோ, எவர் அவற்றையெல்லாம் அநுக்கிரகிக்கின்றாரோ, அவ்வியல்பினராகிய உமக்கு (சிவபெருமானுக்கு) நமஸ்காரம்" என்றும் ஸ்காந்தபுராணமும் கூறுகின்றன.

படைப்புந்நிலையிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிறிபூதப்படையானூர்
புடைப்பாளையின்கமுகின்னொடுபுன்னைமலர்நாற்றம்
விடைத்தேவருதென்றன்மிகுவேணுபுரமதுவே.

—ஞா, திருப்பிரமபுரம்.

................விண்முதல்பூதல
மொன்றியவிருசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை.

—ஞா, திருவெழுகூற்றிருக்கை.

அரியாகிக்காப்பானயனாய்ப்படைப்பா
னரனாயழிப்பவனுந்தானே.

—பதினொராந்திருமுறை.

---

(௧௮) போகத்துக்குரிய பொருள்கள் அநித்தியம்.

𑌶𑌤𑌾𑌯𑍁𑌷𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑍃𑌣𑍀𑌷𑍍𑌵 𑌬𑌹𑍂𑌨𑍍
𑌪𑌶𑍂𑌨𑍍𑌹𑌸𑍍𑌤𑌿𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌮𑌶𑍍𑌵𑌾𑌨𑍍।

ஶதாயுஷ: புத்ரபௌத்ராந்வ்ருணீஷ்வ பஹூந்பஶூந்
ஹஸ்தி ஹிரண்யமச்வாந்।

—கடோபநிடதம், ௧. ௨௩

𑌶𑍍𑌵𑍋𑌭𑌾𑌵𑌾 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌦𑌨𑍍𑌤𑌕𑍈𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍
𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌜𑌃 । 𑌅𑌪𑌿𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍀𑌵𑌿𑌤
𑌮𑌲𑍍𑌪𑌮𑍇𑌵......... ॥

ச்வோபாவாமர்த்யஸ்ய யதந்தகைதத் ஸர்வேந்த்ரியா
ணாம் ஜரயந்தி தேஜ:। அபிஸர்வம் ஜீவிதமல்பமேவ... ॥

—கடோபநிடதம், ௧. ௨௬

"நூறு வயசுடைய புத்திரபவுத்திரர்களையும் அநேக பசுக்களை
யும், யானை குதிரை பொன் முதலியவைகளையும் கேட்குதி (என்
று யமன் கூற, அதற்கு நாசிகேதர் என்பார் யமனே!) மனிதனுக்
குரிய இந்தப் போகங்களெல்லாம் நாளைக்கு நிலைக்காதன (அஃ
தாவது அநித்தியங்கள் என்றவாறு); அவை எல்லா இந்திரியங்க
ளுடைய தேஜசை அழிக்கின்றன; ஜீவியம் அனைத்தும் அற்பமே
(என்றார்).

பெண்டிர்மக்கள்பெருந்துணைநன்னிதி
யுண்டின்றேயென்றுகவன்மினேழைகாள்
கண்டுகொண்மினீர்கானூர்முளையினைப்
புண்டரீகப்பொதும்பிலொதுங்கியே.


— நா, திருக்கானூர்.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
றாழாதறஞ்செய்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே.

—சு, திருக்கேதாரம்.

---

(௧௧) எல்லாம் அநித்தியமாயும் தேகம் மிக இழிவுடையதாயும் உள்ளன; ஆகலின், தேகமுள்ளபோதே சிவபெருமானை வழிபட்டுய்தல் வேண்டும்.



[illegible]

𑌸𑌰𑍍𑌯𑌾𑌤𑌿𑌰𑍍𑌯𑌯𑌾𑌤𑌿𑌰𑌨𑌰𑌣𑍍𑌯𑍋𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑌾𑌦𑌯𑌃 | 𑌅𑌥 𑌮𑌰𑍁-
𑌤𑍍𑌤𑌭𑌰𑌤𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋 𑌰𑌾𑌜𑌾𑌨𑌃 | 𑌮𑌿𑌷𑌤𑍋 𑌬𑌨𑍍𑌧𑍁𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯
𑌮𑌹𑌤𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌦𑌮𑍁𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌾
𑌇𑌤𑌿 | 𑌅𑌥 𑌕𑌿𑌮𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌾 𑌪𑌰𑍇𑌽𑌨𑍍𑌯𑍇 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌸𑍁𑌰𑌯𑌕𑍍𑌷
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌭𑍂𑌤𑌗𑌣 𑌪𑌿𑌶𑌾𑌚𑍋𑌰𑌗𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍋𑌧𑌂
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌃 | 𑌅𑌥 𑌕𑌿𑌮𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌶𑍋𑌷𑌣𑌂 𑌮𑌹𑌾-
𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌤𑌨𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌚𑌲𑌨𑌂 𑌵𑍍𑌰-
𑌶𑍍𑌚𑌨𑌂 𑌵𑌾𑌤𑌰𑌜𑍍𑌜𑍂𑌨𑌾𑌂 𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑌨𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌦𑌪𑌸𑌰𑌣𑌂
𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌕𑌾𑌮𑍋𑌪𑌭𑍋-
𑌗𑍈𑌃 | (𑌯𑍈𑌰𑍇𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑌕𑍃𑌦𑌿𑌹𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯-
𑌤 𑌇𑌤𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 | 𑌅𑌨𑍍𑌧𑍋𑌦𑌪𑌾𑌨𑌸𑍍𑌥𑍋 𑌭𑍇𑌕
𑌇𑌵𑌾𑌹𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌭𑌗𑌵𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋 𑌗𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑍋 𑌗𑌤𑌿𑌃)||

—மைத்திராயணுபநிடதம் ௧: ௩, ௪

பகவந்நஸ்தி சர்ம ஸ்நாயுமஜ்ஜமாம்ஸ ஶுக்ர ஶோணித ச்லே
ஷ்மா ச்ருதூஷிகா விண்மூத்ர பித்தகபஸங்காதே துர்கந்தே நிஸ்
ஸாரேஸ்மிந் சரீரே கிம் காமோபபோகைஃ । காம க்ரோத லோப
மோஹ பயவிஷாதேர் ஷ்யேஷ்ட வியோகாநிஷ்ட ஸம்ப்ரயோக
க்ஷுத்பிபாஸா ஜராம்ருத்யு ரோக ஶோகாத்யை ரபிஹதே ஸ்மிந்
சரீரே கிம் காமோபபோகைஃ । ஸர்வஞ் சேதம் க்ஷயிஷ்ணு பச்யா
மோ யதேமே தம்ஶ மஶகாதயஸ்த்ருண வநஸ்பதயோத்பூத ப்ரத்
வம்ஸிநஃ । அதகிமேதைர்வா பரேந்யே மஹாதநுர்தராச்சக்ர
வர்த்திநஃ கேசித் । ஸுத்யும்ந பூரித்யும்நேந்த்ரத்யும்ந குவலயா
ச்வ யௌவநாச்வ வத்திரியச்வாச்வபதிஃ ஶஶபிந்துர் ஹரிச்சந்
த்ரோம்பரீஷ நநக்து ஸர்யாதிர்ய யாத்யநரண்யோக்ஷ ஸேநாத
யஃ । அதமருத்த பரத ப்ரப்ருதயோ ராஜாநஃ । மிஷதோ பந்து வர்
க்கஸ்ய மஹதீம் ச்ரியந் த்யக்த்வா ஸ்மால் லோகாதமும் லோகம் ப்ர
யாதா இதி । அத கிமேதைர்வா பரேந்யே கந்தர்வாஸுரயக்ஷரா
க்ஷஸ பூதகண பிஶாசோரக க்ரஹாதிநாம் நிரோதம் பச்யாமஃ ।
அத கிமேதைர்வாந்யாநாம் ஶோஷணம் மஹார்ணவாநாம் ஶிகரி
ணாம் ப்ரபதநம் த்ருவஸ்ய ப்ரசலநம் வ்ரச்சநம் வாத ரஜ்ஜூநாம்

நிமஜ்ஜநம் ப்ருதிவ்யா: ஸ்தாநாதபஸரணம் ஸுராணு மித்யேதத் விதேஸ்மிந் ஸம்ஸாரே கிம் காமோப போகை: | (யைரேவாஶித ஸ்யாஸக்ருதிஹாவர்த்தநம் த்ருச்யதா இத்யுத்தர்த்து மர்ஹஸி | அந்தோதபாந ஸ்தோபேக இவாஹமஸ்மிந் ஸம்ஸாரே பகவந் த்வம் நோ கதி ஸ்த்வம் நோ கதி:) ||

"பகவானே! என்புகளாலும், தோலினுலும், ஸ்நாயுக்களாலும், மச்சையினுலும், மாமிசத்தினுலும், சுக்கில சோணிதத்தினுலும், சிலேஷ்மத்தினுலும், கண்ணீராலும், பீளையினுலும், மலத்தினுலும், மூத்திரத்தினுலும், பித்தத்தினுலும், கபத்தினுலும் நிறைந்திருக்கின்ற இந்தத் துர்க்கந்தமாகிய பயனில்லாத சரீரத்திலே காம இன்பங்கள்கொண்டு என் செய்வது? காமத்தினுலும், குரோதத்தினுலும், லோபத்தினுலும், மோகத்தினுலும், பயத்தினுலும், துக்கத்தினுலும், பொருமையினுலும், அன்புடையாரைப் பிரிதலினுலும், அன்பில்லாரைக் கூடுதலினுலும், பசியினுலும், தாகத்தினுலும், விருத்தாப்பியத்தினுலும், மாணத்தினுலும், வியாதியினுலும், சோகத்தினுலும் மற்றையவைகளினுலும் தொடக்குண்டிருக்கின்ற இந்தச் சரீரத்திலே காமவின்பங்கள்கொண்டு என் செய்வது? குருட்டிலேயான்கள்போன்றும், கொசுக்கள்போன்றும், புன்மரங்கள்போன்றும், இவையனைத்தும் அழிந்துபோகக் காண்கின்றேமே; இந்த ஈமுதலிய மாத்திரமா! வலிமைபொருந்திய விற்காரர்களும் முற்காலத்திருந்த சுத்தியும்நர், பூரித்தியும்நர், இந்திரத்தியும்நர், குவலயாஸ்வர், யௌவநாஸ்வர், பத்திரியாஸ்வர், அச்வாச்வபதி, ஶஶபிந்து, ஹரிச்சந்திரர், அம்பரீஷர், நநக்து, சர்யாதி, யயாதி, அநரண்ணியர், உக்ஷசேநர்முதலிய சக்கிரவர்த்திகளும், மருத்தர் பாதர்முதலிய அரசர்களும் (இறந்தொழிந்தார்களே; சுத்தியும்நர் முதலாயினேருடைய) பந்துக்கள் இப்போதும் உயிரோடு காணப்படுவாராக, அவ்வரசர்கள் தங்களுடைய மகிமையெல்லாம் விடுத்து, இவ்வுலகம் நீங்கிப் பரலோகமடைந்தார்களே! இவ்வுலகத்து அரசர்கள்மாத்திரமா! கந்தருவர், அசுரர், யக்கர், இராக்ஷதர், பூதர், கணர், பிசாசர், உரகர், கிரகாதியர் ஒழிவையும் காண்கின்றேம்; கந்தருவர் முதலாயினேர் மாத்திரமா! பெரிய சமுத்திரங்கள் வற்றிப்போயின; மலைகள் வீழ்ந்தன; காற்றுத் தொடர்கள் வெட்டுண்டன; பூமி அமிழ்ந்நிற்று; தேவர்கள் தத்தம் உலகம் விட்டுப் பெயர்ந்தார்கள்; இப்படிப்பட்ட சம்சாரத்திலே காம இன்

பங்களால் எய்தும் பயன் என்னை (என்று பிருஹத்ரதர் சாகாயந்நியர்க்கு விஜ்ஞாபனஞ் செய்து நித்தியமாய பரமான்மாவை உணர்த்தவேண்டும் என வேண்டியதாக)" மைத்திராயணோபநிடதம் க: ௩, ச) உரைக்கின்றது.

என்பினுற்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலானுறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாய்தலார்குரம்பையின்மூழ்கிடாதே
யன்பனூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே.

—ஞா, திருவாரூர்.

பிணமுடையுடலுக்காகப்பித்தாய்த்திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டாபோக்கலாம்பொய்யைநீங்க
நிணமுடைநெஞ்சினுள்ளாலினைக்குமாநினைக்கின்றார்க்
குணர்வினேடிருப்பர்போலுமொற்றியூருடையகோவே.

—நா, திருவொற்றியூர்.

[ரை
போத்தையூன்சுவர்புழுப்பொதிந்துளுத்தசும்பொழுகியபொய்க்கூ
யித்தைமெய்யெனக்கருதிநின்றிடர்க்கடற்சுழித்தலைப்படுவேனை
முத்துமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின்முழுச்சோதி
யத்தனுண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

—திருவாசகம்.

நாட்டுக்குநாயகனம்மூர்த்தலைமகன்
காட்டுச்சிவிகையொன்றேறிக்கடைமுறை
நாட்டார்கள்பின்செல்லமுன்னேபறைகொட்ட
நாட்டுக்குநம்பிநடக்கின்றவாறே.

—திருமந்திரம்.

காமூன்றிக்கண்ணிடுங்கிக்கால்குலையமற்றோர்
மாமூன்றிவாய்குதட்டாமுன்னம்—புரமூன்றுந்
தீச்சாத்தாற்செற்றுன்றிருப்பனந்தாட்டாடகைய
வீச்சாத்தான்பாதமேயேத்து.

—பதினொராந்திருமுறை.

நிலத்திடைப்பொறையாயவாவினினீண்டு
சொலத்தகுபெருமைத்தூராவாக்கை
மெய்வளியையொடுபித்தொன்றாக
வைவகைநெடுங்காற்றுங்குடனடிப்ப
நரையெனுநுரையேநாடொறும்வெளுப்பத்
திரையுடைத்தோலேசெழுந்திரையாகக்
கூடியகுருதிநீரினுணிறைந்து
மூடியவிருமலோசையின்முழங்கிச்
சுடுபசிவெகுளிச்சுறவினமெறியக்
குடரெனுமரவக்கூட்டம்வந்தொலிப்ப
ஆன்றடியெலும்பினுட்டிடலடைந்து
தோன்றியபல்பிணிப்பின்னகஞ்சுழலக்
கால்கையினரம்பேகண்டமாக
மேதகுநிணமேமெய்ச்சாலாக
முழக்குடைத்துளையேமுகங்களாக
வழுக்குடைமூக்காறுதம்வந்தொலிப்ப
விப்பரிசியற்றியவுடலிருங்கடலுட்
டுப்புரவென்னுஞ்சுழித்தலைப்பட்டுழி
யாவாவென்றுநின்னருளிணைப்பெற்றவர்
நாவாயாகியநாதநின்பாத
முந்திச்சென்றுமுறைமையின்வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச்செவ்விதினிறுத்தி
யுருகியவார்வப்பாய்விரித்தார்த்துப்
பெருகியநிறையெனுங்கயிற்றிடைப்பிணித்துத்
துன்னியசுற்றத்தொடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப்பொறியினைமுறுக்கிக்
காமப்பாரெனுங்கடுவெளியற்ற
தூமச்சோதிச்சுடர்க்குறநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித்துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவினீள்கரையேற்ற
வாங்கயாத்திரைபோக்குதிபோலு
மோங்குகடலுடுத்தவொற்றியூரோயே.

—பதினொராந்திருமுறை.

(௨௦) விபூதி.



𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌤𑍍𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑌪𑌿𑌲𑌵𑌰𑍍𑌣𑌾 𑌨𑌨𑍍𑌦𑌾 । 𑌤𑌦𑍍𑌗𑍋𑌮𑌯𑍇𑌨 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌜𑌾𑌤𑌾 । 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌾𑌦𑍁𑌦𑌕𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾 𑌭𑌦𑍍𑌰𑌾 । 𑌤𑌦𑍍𑌗𑍋𑌮𑌯𑍇𑌨 𑌭𑌸𑌿𑌤𑌂 𑌜𑌾𑌤𑌮𑍍 । 𑌅𑌘𑍋𑌰𑌾𑌦𑍍𑌵𑌹𑍍𑌨𑌿𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌸𑍁𑌰𑌭𑌿𑌃 । 𑌤𑌦𑍍𑌗𑍋𑌮𑌯𑍇𑌨 𑌭𑌸𑍍𑌮 𑌜𑌾𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌸𑍁𑌶𑍀𑌲𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌗𑍋𑌮𑌯𑍇𑌨 𑌕𑍍𑌷𑌾𑌰𑌂 𑌜𑌾𑌤𑌮𑍍 । 𑌈𑌶𑌾𑌨𑌾𑌦𑌾𑌕𑌾𑌶𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌤𑍀𑌤𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾 𑌸𑍁𑌮𑌨𑌾𑌃 । 𑌤𑌦𑍍𑌗𑍋𑌮𑌯𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌾 𑌜𑌾𑌤𑌾 । 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌭𑌸𑌿𑌤𑌂 𑌭𑌸𑍍𑌮 𑌕𑍍𑌷𑌾𑌰𑌂 𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮𑌨𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 । 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑍍𑌨𑌾𑌮𑌭𑌿𑌰𑍍𑌭𑍃𑌶𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌾𑌦𑍍𑌭𑍂𑌤𑌿𑌃 । 𑌭𑌸𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌾𑌘𑌭𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 । 𑌭𑌾𑌸𑌨𑌾𑌦𑍍𑌭𑌸𑌿𑌤𑌮𑍍 । 𑌕𑍍𑌷𑌾𑌰𑌣𑌾𑌦𑌾𑌪𑌦𑌾𑌂 𑌕𑍍𑌷𑌾𑌰𑌮𑍍 । 𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑍇𑌤𑌪𑌿𑌶𑌾𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌪𑌸𑍍𑌮𑌾𑌰𑌭𑌵𑌭𑍀𑌤𑌿𑌭𑍍𑌯𑍋𑌽𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑌿 ॥

ஸத்யோஜாதாத் ப்ருதிவீ । தஸ்யாঃ ஸ்யாந்நிவிருத்திঃ । தஸ்யாঃ கபிலவர்ணா நந்தா । தத்கோமயேந விபூதிர் ஜாதா । வாமதேவாதுதகம் । தஸ்மாத் ப்ரதிஷ்டா । தஸ்யாঃ க்ருஷ்ணவர்ணா பத்ரா । தத்கோமயோந பஸிதம் ஜாதம் । அகோராத் வஹ்நிঃ । தஸ்மாத் வித்யா । தஸ்யா ரக்தவர்ணா சுரபிঃ । தத்கோமயேந பஸ்ம ஜாதம் । தத்புருஷாத் வாயுঃ । தஸ்மாச் சாந்திঃ । தஸ்யாঃ ஶ்வேதவர்ணா ஸுஶீலா । தஸ்யா கோமயேந க்ஷாரம் ஜாதம் । ஈஶாநாதாகாஶம் । தஸ்மாச்சாந்த்யதீதா । தஸ்யாঃ சித்ரவர்ணா சுமநாঃ । தத்கோமயேந ரக்ஷா ஜாதா । விபூதிர் பஸிதம் பஸ்ம க்ஷாரம் ரக்ஷேதி பஸ்மநோ பவந்தி பஞ்ச நாமாநி । பஞ்சபிர் நாமபிர் ப்ருஶமைஶ்வர்யகாரணாத்பூதிঃ । பஸ்ம ஸர்வாகபக்ஷணாத் । பாஸநாத் பஸிதம் । க்ஷாரணாதாபதாம் க்ஷாரம் । பூத ப்ரேத பிஶாச ப்ரஹ்ம ராக்ஷஸாபஸ்மாரபவபீதிப்யோபிரக்ஷணாத்ரக்ஷேதி॥

—ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து முதலாம் ப்ராஹ்மணம்.

𑌆𑌧𑌾𑌰𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌵𑌧𑍃𑌤𑌃 𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑌯𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌃।
𑌤𑌥𑍈𑌵 𑌨𑌿𑌮𑍍𑌨𑌗𑌸𑍍𑌸𑍋𑌮𑌶𑍍𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑌦𑌾𑌸𑍍𑌪𑌦𑌃।
𑌶𑌿𑌵𑌶𑍍𑌚𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑌤𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌤𑌶𑍍𑌶𑌿𑌵𑌃।
𑌤𑌦𑌿𑌤𑍍𑌥𑌂 𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌾𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌹𑌕𑌿𑌞𑍍𑌚𑌨।
𑌅𑌸𑌕𑍃𑌚𑍍𑌚𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌦𑌗𑍍𑌧𑌂 𑌜𑌗𑌦𑍍𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍍।
𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌭𑌸𑍍𑌮 𑌯𑌤𑍍𑌤𑌤𑌃॥

ஆதாரசக்த்யாவத்ருத꞉ காலாக்நிரயமூர்த்வக꞉।
ததைவநிம்நகஸ் ஸோமஶ்ஶிவஶக்திபதாஸ்பத꞉।
ஶிவச்சோர்த்வமதஶ்ஶக்திரூர்த்வஶக்திரதஶ்ஶிவ꞉।
ததித்தம் ஶிவஶக்திப்யாம் நாவ்யாப்தமிஹகிஞ்சந।
அஸக்ருச்சாக்நிநா தக்தம் ஜகத்பஸ்ம ஸாத்க்ருதம்।
அக்நேர்வீர்யமிதம் ப்ராஹுஸ்தத்வீர்யம் பஸ்ம யத்நத꞉।

—ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இரண்டாம் ப்ராஹ்மணம்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌜𑌲𑌮𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌸𑍍𑌥𑌲𑌮𑌿𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌵𑍍𑌯𑍋𑌮𑍇𑌤𑌿 𑌭𑌸𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹 𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌭𑌸𑍍𑌮।

அக்நிரிதி பஸ்ம வாயுரிதி பஸ்ம ஜலமிதி பஸ்ம ஸ்தலமிதி பஸ்ம வ்யோமேதி பஸ்ம ஸர்வம் ஹவா இதம் பஸ்ம।

—அதர்வஶிரோபநிஷதம்.

𑌵𑌾𑌯𑍁𑌰𑌨𑌿𑌲𑌮𑌮𑍃𑌤𑌮𑌥𑍇𑌦𑌂 𑌭𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍।

வாயுரநிலமம்ருதமதேதம் பஸ்மாந்தம் ஶரீரம்।

—ஈசாவாஸ்யோபநிஷதம், கஎ

𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 𑌨 𑌪𑍍𑌰𑌮𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑍍।

பூத்யை ந ப்ரமதிதவ்யம்।

—தைத்திரீயோபநிஷதம், க. கக. க

𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑍈𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌦𑍇𑌤 𑌶𑌿
𑌰𑍋𑌵𑍍𑌰𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑍁 𑌚𑍀𑌰𑍍𑌣𑌮𑍍।

தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத ஶிரோ வ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம்।

—*முண்டகோபநிடதம்*, ௩. ௨. ௧௦

𑌅𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚
𑌸𑌮𑍍𑌯𑌗𑍃𑌷𑌿𑌸𑌙𑍍𑌘𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑍍।

அத்யாஶ்ரமிப்ய: பரமம் பவித்ரம் ப்ரோவாச ஸம் யக்ருஷிஸங்கஜுஷ்டம்।

—*சுவேதாசுவதரோபநிடதம்*, ௬. ௨௧

𑌅𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌸𑍍𑌥𑌸𑍍𑌸𑌕𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑍁𑌧𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾
𑌸𑍍𑌵𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯।

அத்யாஶ்ரமஸ்தஸ்ஸகலேந்த்ரியாணி நிருத்ய பக்த் யா ஸ்வகுரும் ப்ராணம்ய।

—*கைவல்லியோபநிடதம்.*

𑌵𑍍𑌰𑌤𑌮𑍇𑌤𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌭𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁
𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿।

வ்ரதமேதச்சாம்பவம் ஸர்வேஷுவேதேஷு வேத வாதிபிருக்தம் பவதி।

—*காலாக்கினிருத்ரோபநிடதம்.*

''சத்தியோஜாதத்தினின்று பிருதிவி, இதினின்று நிவிர்த்தி, இதினின்று கபிலவர்ணமாகிய நந்தை, இதின் கோமயத்தினல் விபூதி பிறந்தது; வாமதேவத்தினின்று உதகம், இதினின்று பிரதிஷ்டை, இதினின்று கிருஷ்ணவர்மாகிய பத்திரை, இதின் கோமயத்தினலே பஸிதம் பிறந்தது; அகோரத்தினின்று வன்னி, இதினின்று வித்தை, இதினின்று இரக்தவர்ணமாகிய சுரபி, இதின் கோமயத்தினலே பஸ்மம் பிறந்தது; தற்புருஷத்தினின் று வாயு: இதினின்று சாந்தி, இதினின்று சுவேதவர்ணமாகிய

சுசீலே, இதின் கோமயத்தினுலே க்ஷாரம் பிறந்தது; ஈசானத்தினின்று ஆகாசம், இதினின்று சாந்தியதீதை, இதினின்று சித்ரவர்ணமாகிய சுமனே, இதின் கோமயத்தினுலே இரக்ஷை பிறந்தது; விபூதி, பஸிதம், பஸ்மம், க்ஷாரம், இரக்ஷை எனப் பஸ்மத்துக்கு ஐந்து திருநாமங்கள் எய்திய; ஐசுவரியத்தைக் கொடுக்குங் காரணத்தாற் பூதி எனவும், சமஸ்தபாவங்களேயும் போக்குதலாற் பஸ்மம் எனவும், பிரகாசித்தலாற் பசிதம் எனவும், ஆபத்தைப்போக்குதலால் க்ஷாரம் எனவும், பூதப்பிரேதபிசாசபிரமராக்ஷஸ அபஸ்மாரபவபீதிகளினின்று காத்தலால் இரக்ஷை எனவும் திருநாமங்கள் போந்தன."

"ஆதாரசத்தியினுலே தாங்கப்பட்டது மேலே உள்ள காலாக்கினி; அந்த ஆழத்திலே உள்ள சோமமானது சிவசத்திபதாஸ்பதமாய் உள்ளது; சிவன் மேலும், சத்தி கீழும், சத்தி மேலும் சிவன் கீழுமாக இங்ஙனம் சிவசத்திகளினுலே வியாபிக்கப்படாதது யாதும் இல்லே; அடிக்கடி அக்கினியினுலே தஹிக்கப்படும் ஜகத்தானது பஸ்மமாய்ப்போகின்றது; இதனே அக்கினியின் வீரியம் என்றும், இந்த வீரியத்தைப் பஸ்மம் என்றும் கூறுப" என்று பிருஹஜ்ஜாபாலோபநிடதத்திற் கூறப்படலான், அக்கினி சிவம் என்றும், அதின் வீரியம் சத்தி என்றும் பெறப்படுகின்றது.

'அக்கினி (அகோரவித்திபாகலே) என்பது பஸ்மம், வாயு (தற்புருஷசாந்திகலே) என்பது பஸ்மம், ஜலம் (வாமதேவபிரதிஷ்டாகலே) என்பது பஸ்மம், ஸ்தலம் (சத்தியோஜாதநிவிர்த்திகலே) என்பது பஸ்மம், வியோமம் (ஈசானசாந்தியதீதகலே) என்பது பஸ்மம், இவையனேத்தும் பஸ்மம், என்னும் அதர்வசிரோபநிடத மந்திரத்தினுல், நிவிர்த்திமுதற் சாந்தியதீதை இறுதியாயுள்ளவெல்லாம் சிவசத்திரூப பஸ்மம் என்றும், இது நோக்கியே அகஸ்திய மஹாமுனிவர் 'மந்திரமாவதுநீறு' என்னும் திருப்பாசுரத்தைப் பரையின்வரலாறு என்றருளினர்.

'பஸ்மசப்தத்தை அந்தத்திலே கொண்ட வாயு, அநிலம் (அக்கினி), அமிர்தம் (ஜலம்) என்றற்றொடக்கத்த மந்திரங்கொண்டு சரீரத்தைப் பூசுக' என்று அதர்வசிரோபநிடதத்திலே கூறப்பட்ட ஆறு மந்திரங்களுள் மூன்றை விதந்து ஈசாவாசியோபநிடதத்தினும், 'விபூதி பராமுகஞ் செயற்பாலதொன்றன்று' என்று

தைத்திரீயோபநிடதத்தினும், 'எவர்களாற் சிரோவிரதம் எனப் படும் விபூதிதாரணபாசுபதவிரதம் விதிப்பிரகாரம் அநுஷ்டிக்கப் படுகின்றதோ, அவர்களுக்கே இந்தப் பிரஹ்மோபாசனை உபதே சித்தல்வேண்டும்' என்று முண்டகோபநிடதத்தினும், இருஷிச மூகங்களால் நன்கு அங்கிகரிக்கப்பட்டதாய்ப் பரமாய்ப் பவித்திர மாயுள்ள (பிரஹ்மத்தைச் சுவேதாசுவதரமுனிவர்) அத்தியாசிர மம் எனப்படும் விபூதிதாரணபாசுபதவிரதாநுஷ்டானமுடை யார்க்கு உபதேசித்தார்' என்று சுவேதாசுவதரோபநிடதத்தி னும், அத்தியாசிரமம் எனப்படும் விபூதிதாரணபாசுபதவிரதா நுஷ்டானமுடையனுய்த் தன் குருவை அன்பினோடு வணங்கிச் சகலேந்திரியங்களையும் தடுத்து' என்று கைவல்லியோபநிடதத்தி னும், "வேதமனைத்தினும் வேதவாதிகளினாலே கூறப்பட்டது இந் தச் சாம்பவமாகிய விரதமாம்' என்று காலாக்கினிருத்திரோப நிடதத்தினும், விபூதிதாரணப்பிரகாரம் பஸ்மஜாபாலோபநிடதத் தினும் கூறப்பட்டிருக்கின்றது. உபநிடதங்களில் மாத்திரமா! போதாயன சூத்திரத்தினும், சூத்திரத்தில் மாத்திரமா! பாரத் துவாஜஸ்மிருதி, நாரதிய ஸ்மிருதி, லோகாக்ஷிஸ்மிருதி, கிரியா சாரஸ்மிருதி, ஸ்மிருதிரத்தினுவளி, தர்மசார சுதாநிதி, ஸ்மிருதி பாஸ்காம், ஸ்மிருதி சாரசமுச்சயமுதலிய ஸ்மிருதிகளினும், ஸ்மி ருதிகளில்மாத்திரமா! பாரதம் சிவரஹஸ்யமுதலிய இதிஹாசங் களினும், இதிஹாஸங்களில்மாத்திரமா! சூதஸம்ஹிதை, பராசர புராணம், வாசிஷ்டலைங்கம், கௌர்மம், காரூடம், மானவம், சங்கரசங்கிதை, நாரதியசங்கிதை, சிவதருமசங்கிதை, மானவீய சங்கிதை, வாயவீயசங்கிதை, சவுரசங்கிதை, இலிங்கபுராண முதலிய புராணங்களினும் கூறப்பட்டிருக்கின்றது. புராணங்களில் மாத்திரமா! மகுடம், சுப்பிரபேதம், காலோத்தரம், தியானரத்தி னுவளி, சந்திரசாரம், பாராக்கியம், காரணமுதலிய ஆகமங்களி னும் விபூதிமான்மியம் மிகுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அவற்றை ஈண்டு உதகரிப்பின் விரியுமென்றஞ்சித் தவிர்க்கப்பட்டன.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே.
க

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே.

—ஞா, திருவாலவாய்.

எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட
திருநீறுஞ்சாதனமுங்கண்டாலுள்கி
யுவராதேயவரவரைக்கண்டபோது
வுகந்தடிமைத்திறநினைந்தங்குவந்துநோக்கி
யிவர்தேவரவர்தேவரென்றுசொல்லி
யிரண்டாட்டாதொழிந்தீசன்றிறமேபேணிக்
கவராதேதொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே.

—நா, திருக்கன்றாப்பூர்.

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்
மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே [ப
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

—திருப்பல்லாண்டு.

கங்காளன்பூசுங்கவசத்திருநீற்றை
மங்காமற்பூசிமகிழ்வீரேயாமாயிற்
றங்காவினைகளுஞ்சாருஞ்சிவகதி
சிங்காரமானதிருவடிசேர்வரே.

—திருமந்திரம்.

மாசிலாதமணிதிகழ்மேனிமேற்
பூசுநீறுபோலுள்ளும்புனிதர்க
டேசினாலெத்திசையும்விளக்கினார்
பேசவொண்ணாப்பெருமைபிறங்கினார்.

—பெரியபுராணம்.

(உக) உருத்திராக்ஷம்.



𑌅𑌥 𑌹𑍈𑌨𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌭𑍁𑌸𑍁𑌣𑍍𑌡𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌕𑌥𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌤𑌦𑍍𑌧𑌾𑌰𑌣𑌾𑌤𑍍𑌕𑌿𑌂𑌫𑌲𑌮𑌿𑌤𑌿 । 𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 । 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌵𑌧𑌾𑌯

𑌪𑍁𑌰𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌿𑌤𑌾𑌕𑍍𑌷𑍋𑌽𑌹𑌂𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌜𑌲𑌬𑌿𑌨𑍍𑌦𑌵𑍋 𑌭𑍂𑌮𑍌
𑌪𑌤𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌾 𑌜𑌾𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 ।
𑌲𑌕𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌕𑍋𑌟𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌤𑌤𑍍
𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌧𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌨𑌰𑌃॥

அத ஹைநம் பகவந்தம் காலாக்நிருத்ரம் பூஸுண்ட: பப்ரச்ச கதம் ருத்ராக்ஷோத்பத்தி: । தத்தாரணாத்கிம்பலமிதி । தம் ஹோவாச பகவாந் காலாக்நிருத்ர: । த்ரிபுரவதாய புரோந்மீலிதாக்ஷா ஹந்தேப்யோ ஜலபிந்தவோ பூமௌ பதிதாஸ்தே ருத்ராக்ஷா ஜாதாஸ்ஸர்வாநுக்ரஹார்த்தாய । லக்ஷந்து தர்ஶநாத்புண்யம் கோடிஸ்தத் ஸ்பர்ஶநாத்பவேத் । தத்தத்கோடி ஶதம் புண்யம் லபதே தாரணாந்நர:॥

"பின்னர்க் காலாக்கினி உருத்திரபகவானைப் பூசுண்டர் (நோக்கி) உருத்திராக்ஷத்தின் உற்பத்தி எங்ஙனம் என்றும், அதனைத் தரிப்பதினால் எய்தும் பயன் என்னை என்றும் கேட்டார்; (அதற்கு அவர் முற்காலத்திலே திரிபுரசங்காரஞ் செய்யவேண்டி அத்தேவர்கள்பொருட்டுக் (கருணைமிகுதியால்) நேத்திரங்களை மலர்த்தினேன்; இவற்றினின்று ஜலபிந்துக்கள் பூமியில் வீழ்ந்தன; எவர்களுக்கும் அநுக்கிரகிக்குமாறு அவைகள் உருத்திராக்ஷங்களாயின என்றற்றொடக்கத்தனவாக உருத்திராக்ஷமகிமை முதலியவற்றை விரிவாகக் கூறிவருங்கால், அன்பினோடு தரிக்கப்படும் உருத்திராக்ஷம் பகலிற்செய்த பாவத்தை இராத்திரியில் ஒழிக்கும் என்றும் இராத்திரியிற்செய்த பாவத்தைப் பகலில் ஒழிக்கும் என்றும், உருத்திராக்ஷதரிசனத்தினால் இலக்ஷமடங்குபுண்ணியமும், ஸ்பரிஸத்தினாற் கோடி மடங்கு புண்ணியமும், தரிப்பதினால் நூறுகோடி மடங்கு புண்ணியமும் புருஷன் அடைகின்றான்" என்றும் அருளியதாக உருத்திராக்ஷ ஜாபாலோபநிடதத்தினும்,

𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑌃।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌣𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨𑍈𑌵 𑌜𑌾𑌯𑌤𑍇॥

பஹூநாம் ஜந்மநாமந்தே மஹாதேவ ப்ரஸாதத:।
ருத்ராக்ஷதாரணஶ்ரத்தா ஸ்வபாவேநைவ ஜாயதே॥

"சிவபெருமான் திருவருளால் அநேக சென்மங்களின் இறுதியிலே உருத்திராக்ஷதாரணத்தில் (மனிதனுக்கு) சுவயமாக அன்பு உதிக்கின்றது" என்று பாராசரபுராணத்தினும்,

ருத்ராக்ஷதருஸம்பூதவாதோத்பூத த்ருணாந்யபி।
புண்யலோகம் கமிஷ்யந்தி புநராவ்ருத்தி துர்லபம்॥

ருத்ராக்ஷதரு ஸம்பூதவாதோத்பூத த்ருணாந்யபி।
புண்யலோகம் கமிஷ்யந்தி புநராவ்ருத்தி துர்லபம்॥

"உருத்திராக்ஷமரத்தினின்று உண்டாய வாயுவினால் அடியுண்ட புற்களும் (பிறவியில்) மீண்டு வாராதிருக்கும் நெறியைப் பாலிக்கும் புண்ணியவுலகத்தை அடைகின்றன" என்று காருடபுராணத்தினும்,

ருத்ராக்ஷம் தாரயந்பாபம் குர்வந்நபி ஸுதுஷ்கரம்।
ஸர்வந்தரதி பாப்மாநம் ஜாபாலஶ்ருதிராஹஹி॥

ருத்ராக்ஷம் தாரயந்பாவம் குர்வந்நபி ஸுதுஷ்கரம்।
ஸர்வந்தரதி பாப்மாநம் ஜாபாலஶ்ருதிராஹஹி॥

"மிகக்கொடிய பாவஞ்செய்பவனாயினும் உருத்திராக்ஷம் தரிப்பவன் சகல பாவங்களையும் தாண்டிவிடுகின்றான்" என்று ஜாபாலசுருதியின் உபப்பிருங்கணமாக மானவபுராணத்தினும்,

ஸுராபஶ்ச ஸுராபிஹ்யபக்ஷ்யஸ்ய ச பக்ஷக:।
ம்லேச்சோவாப்யத சண்டாளோ யுக்தோவா ஸர்வபாதகை:।
கண்டே ருத்ராக்ஷமாபத்ய ய: ஶ்வாபி ம்ரியதே யதி।
ஸோபி ருத்ரத்வமாப்நோதி கிம்புநர்மாநுஷாதய:॥

ஸுசிர்வாப்யஸுசிர்வாபிஹ்யபக்ஷ்யஸ்யச பக்ஷக:।
ம்லேச்சோவாப்யத சண்டாளோ யுக்தோவா ஸர்வபாதகை:।
கண்டே ருத்ராக்ஷமாபத்ய ய: ஶ்வாபி ம்ரியதே யதி।
ஸோபி ருத்ரத்வமாப்நோதி கிம்புநர்மாநுஷாதய:॥

"சுத்தனுயேனும் அசுத்தனுயேனும் உண்ணத்தகாதவற்றை உண்டவனுயேனும், மிலேச்சனுயேனும், சண்டாளனுயேனும், சமஸ்த பாவங்களோடியைந்தவனுயேனும் இருப்பினும் அவன் உருத்திராக்ஷதாரணத்தினுல் உருத்திரன் ஆகின்றுன்; கழுத்திலே உருத்திராக்ஷம் கட்டப்பெற்றநாயும் இறக்குங்கால் உருத்திரத்துவத்தை அடைகின்றது; மனிதர்முதலாயினேர் தரிப்பின் (அதன் பயன்பற்றிக்) கூறவேண்டியதென்னே" என்று ஸ்காந்த புராணத்தினும்,

𑌯𑌃 𑌕𑌣𑍍𑌠𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍋 𑌶𑍍𑌵𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌯𑌦𑌿।
𑌸 𑌰𑍁𑌦𑍍𑌰𑌪𑌦𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑌾𑌦𑌯𑌃॥

யஃ கண்டார்ப்பிதருத்ராக்ஷோ ஶ்வாநோபி ம்ரியதே யதி।
ஸ ருத்ரபதமாப்நோதி கிம்புநர் மாநுஷாதயஃ॥

"கழுத்திலே இயைக்கப்பட்ட உருத்திராக்ஷத்தையுடைய நாயும் இறக்குக்கால் உருத்திரபதத்தை அடைகின்றது" என்று காலோத்தராகமத்தினும்,

𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌤𑌾𑌰𑌕𑌂 𑌗𑍁𑌰𑍁𑌲𑌬𑍍𑌧𑌂 𑌕𑌣𑍍𑌠𑍇 𑌬𑌾
𑌹𑍌 𑌶𑌿𑌖𑌾𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌬𑌧𑍍𑌨𑍀𑌤।

ம்ருத்யுதாரகம் குருலப்தம் கண்டே பாஹௌ
ஶிகாயாம் வா பத்நீத।

"குருவினிடத்துப் பெற்ற மிருத்தியுதாரகம் எனப்படும் ஓர் உருத்திராக்ஷத்தைக் கழுத்திலேனும் புயத்திலேனும் சிகையிலேனும் கட்டுக" என்று பிருஹஜ்ஜாபாலோபநிடதத்தினும் கூறப்பட்டுள்ளது.

[illegible]

𑌪𑍀𑌤𑌾 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌹𑌸𑍋𑌤𑍍𑌥𑌾𑌯 𑌸𑌾 𑌪𑍁𑌨𑌃।
𑌹𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌕𑍋𑌪𑌾𑌤𑍍 𑌪𑌪𑍌 𑌰𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌤𑌂 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑍈𑌷𑌾 𑌜𑌗𑌾𑌦 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌦𑌾।
𑌨 𑌸𑌮𑌸𑍍𑌤𑍇 𑌜𑌗𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌮𑌧𑍀𑌶𑍍𑌵𑌰।
𑌯𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 𑌗𑌳𑍇 𑌭𑍂𑌤𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌕𑍃𑌤𑌿𑌨𑍍।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍋𑌪𑍍𑌯𑍇𑌕 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌣𑌸𑍍𑌯𑍇𑌦𑍃𑌶𑌂 𑌫𑌲𑌮𑍍।
𑌆𑌲𑍋𑌚𑍍𑌯 𑌕𑌣𑍍𑌠𑍇 𑌬𑌾𑌹𑍍𑌵𑌂𑌸 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧 𑌶𑌿𑌰𑌸𑍍𑌵𑌪𑌿।
𑌬𑌭𑌾𑌰 𑌕𑌿𑌲 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾॥

தேஷாமவரஜ: கஶ்சிச்சாந்தி ஸஞ்ஜ்ஞோஸ்தி புண்யவாந்।
தூளி க்ரீடாம் விதந்வாந: கிஞ்சித்ருத்ராக்ஷமாப்தவாந்।
தத்பத்வா நிஜகண்டேயம் ஸர்வதா திஷ்டதி வ்ரதிந்।
ஸ்தாப்யைநம் புரதஸ்தஸ்தே பத்ரகாள்யாஸ்ஸஶாந்திகம்।
த்ருஷ்ட்வைநம் ஶாந்திகம் காளீ த்ருதருத்ராக்ஷ பூஷணம்।
பீதா ப்ரணம்ய மநஸா ஸஹஸோத்தாய ஸா புந:।
ஹத்வா புரோஹிதம் கோபாத் பபௌ ரக்தம் த்ராத்மந:।
ஶாந்திகம் தம் ஸமீக்ஷ்யைஷா ஜகாத வசநம் ததா।
ந ஸமஸ்தே ஜகத்யஸ்மிந் ப்ராஹ்மணுநாமதீஶ்வர।
யதஸ்த்வயா களே பூதம் ருத்ராக்ஷம் தார்யதே க்ருதிந்।
ஶாந்திகோப்யேக ருத்ராக்ஷதாரணஸ்யேத்ருஶம் பலம்।
ஆலோச்யகண்டே பாஹ்வம்ஸ மணிபந்த ஶிரஸ்வபி।
பபாரகில ருத்ராக்ஷம் ஸஹஸ்ராதிகஸங்க்யயா॥

(சுகுப்தன் என்னும் ஓர் பிராமணனுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள்): அவர்களுள்ளே கடைப்பிள்ளையாய்ப் புண்ணிய வானுகிய சாந்திகன் என்பான் மண்விளையாட் டயர்ந்துகொண்டி ருக்கையில் உருத்திராக்ஷம் ஒன்றைக் கண்டெடுத்து, அதனை எப் போதும் கழுத்திலே கட்டிக்கொண்டிருந்தான்; பத்திரகாளியின் சந்நிதியிற் (புரோகிதன் பலிகொடுக்கும்பொருட்டு) அச்சாந்திகனை நிற்கவைத்துத் தானு நின்றுன்; பின்னர் அக்காளியம்மையார் உருத்திராக்ஷாபரணத்தைத் தரித்த அச்சாந்திகனைக் கண்டு பயந்து மனசினுல் அவனை வந்தனஞ் செய்து சடுதியில் எழுந்து மிகுந்த கோபங்கொண்டு அப்புரோகிதனைக் கொன்று அத்துராத்துமா

வின் இரத்தத்தைக் குடித்துவிட்டுச் சாந்திகனைப் பார்த்து இங்ஙனம் கூறுகின்றார்; பிராமணர்களிற் சிறந்த மிக்கபுண்ணியசாலியாகிய உத்தமனே! நீ உனது கழுத்தில் மகாபரிசுத்தமாகிய உருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொண்டிருந்தமையால் உனக்கு எதிராவார் ஒருவரும் இல்லை (என்றார்); பிற்பாடு அச்சாந்திகனும் ஒரு உருத்திராக்ஷத்தைக் கட்டினமைக்குப் பிரயோஜனம் இங்ஙனம் இருப்பதை ஆலோசித்துப் பின்னர்க் கழுத்து, கைகள், புயங்கள், மணிக்கட்டுகள் என்னுமிடங்களினெல்லாம் ஆயிரக்கணக்குக்கு அதிகமாகிய உருத்திராக்ஷங்களைத் தரித்தான்" என்றும்,

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚𑌿𑌤𑍍𑌰𑌗𑍁𑌪𑍍𑌤𑍋𑌯𑌂 𑌤𑌸𑍍𑌥𑍇 𑌬𑌦𑍍𑌧𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 𑌪𑍁𑌰𑌃 ।
𑌤𑌮𑌾𑌹 𑌭𑍈𑌰𑌵𑍋 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌚𑌿𑌤𑍍𑌰𑌗𑍁𑌪𑍍𑌤𑌂 𑌸𑍍𑌮𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 ।
𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑌸𑍍𑌯 𑌭𑍂𑌪𑌸𑍍𑌯 𑌸𑍁𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀 ।
𑌸𑌸𑍍𑌨𑍌 𑌗𑍃𑌹𑍇 𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑍇 𑌸𑌾 𑌹𑌾𑌰𑌯𑌷𑍍𑌟𑌿𑌂 𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌮𑍍 ।
𑌨𑌿𑌧𑌾𑌯 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾𑌵𑌲𑍍𑌯𑌾𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑍋𑌤𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ।
𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍋𑌡𑍍𑌡𑍀𑌯𑌤𑌾𑌂 𑌕𑌾𑌕𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌨𑌕𑌮𑌾𑌰𑍍𑌗𑌤𑌃 ।
𑌅𑌪𑍍𑌯𑌾𑌗𑌤𑌸𑍍𑌤𑌦𑌾 𑌛𑌿𑌨𑍍𑌨𑌾 𑌹𑌾𑌰𑌯𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌮𑌨𑍋𑌹𑌰𑌾 ।
𑌤𑌦𑌾 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌮𑍇𑌤𑌸𑍍𑌯 𑌛𑌿𑌨𑍍𑌨𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿 ।
𑌪𑌪𑌾𑌤 𑌕𑌿𑌲 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑌿𑌪𑌾𑌵𑌨𑌮𑍍 ।
𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌂 𑌰𑌕𑍍𑌤𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤𑌕 ।
𑌤𑍇𑌨 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌕𑍈𑌲𑌾𑌸𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑌯𑌮𑌨𑍍𑌤𑌕 ॥

இத்யுக்த்வா சித்ரகுப்தோயந் தஸ்தே பத்தாஞ்ஜலிஃ புரஃ।
தமாஹ பைரவோ வீக்ஷ்ய சித்ரகுப்தம் ஸ்மயந்நிவ।
சக்ரவாகஸ்ய பூபஸ்ய ஸுதா ஸர்வாங்கஸுந்தரீ।
ஸஸ்நௌ க்ருஹே ஸ்வகீயே ஸாஹார யஷ்டிம் மநோஹராம்।
நிதாய மல்லிகாவல்யாம் ருத்ராக்ஷப்ரோதமத்யமாம்।
க்ருஹீத்வோட்டீயதாம் காகஃ கஶ்சித்ககநமார்க்கதஃ।
அப்யாகதஸ்ததா சிந்நா ஹாரயஷ்டிர் மநோஹரா।
ததா தந்மத்ய ருத்ராக்ஷ மேதஸ்ய சிந்நமூர்த்தநி।
பபாதகில புண்யேந கேநாப்யஸ்யாதிபாவநம்।
நம் விஶ்வாபூதாநி ஸத்ருஷ்டோ ம்ருஷ்டயாதிநஃ।

"(சூரியமண்டலத்துள்ளிருந்து உதயாஸ்தமனஞ் செய்விக்கும்பொருட்டுச் சிவபிரான்) பிரவிருத்திக்கின்றனர்; இவர் நீலகண்டமும் செந்நிறமுமுடையர்; (ஆதித்தியரூபராகிய) இவரைக் கோபாலரும், உதகம் எடுக்கும் மடவோரும் கண்டார்கள்; அவரைக் (கோமஹிஷாதி) செந்துக்களும் பார்க்கின்றன; அவ்வியல்பினராகிய அவர் (அகக்கண்ணுக்குப்) புலப்படின், எங்களுக்கு ஆனந்தத்தை விளைவிப்பாராக" என்று தைத்திரீயசங்கிதை (ச. ரு. க. ௩) கூறுகின்றது.

அருக்கன்பாதம்வணங்குவரந்தியி
னருக்கனுவானரனுருவல்லனோ
விருக்குநான்மறையீசனேயேதொழுங்
கருத்தினைநினையார்கன்மனவரே.

—நா, ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

---

* விகசிதமாகிய கண்கள் இரண்டையும் கூறவே, திருநெற்றியில் முகுளித கமலம்போலும் மற்றோர் கண் உண்டென்பது பெறப்பட்டது.

(௩௫) இருளுக்கு (அஃதாவது பிரகிருதிமண்டலத்துக்கு) மேலே சிவபெருமான் ஆதித்தியவண்ணர் எனப்படுதல்.

[illegible]

உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம் த்யாத்வா முநிர்கச்சதி பூத யோநிம் ஸமஸ்த ஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்।

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், முக்கண்ணரும், நீலகண்டரும், பிரசாந்தருமாயினாரை முனியானவன் தியானித்து பூதகாரணரும் சமஸ்த சாட்சியுமாயினாரை இருளுக்குமேற் போயடைகின்றான்" என்றது கைவல்லியோபநிடதசுருதி.

[illegible]

ஆதித்யவர்ணந்தமஸ: பரஸ்தாத்। தமேவ வித்வாநம்ருத இஹ பவதி। நாந்ய: பந்தா வித்யதேயநாய।

"இருளுக்குமேலே ஆதித்தியவண்ணராகிய அவரை (அறிந்து) வித்துவான் ஈண்டுச் (சர்வஞ்ஞதாதி குணங்களையுடையனாய்ச்) சிவனாகின்றான்; (முக்தி) வழிக்கு இந்த வழியன்றி வேறு வழி இல்லை" என்றது தைத்திரீய ஆரணியகம் (௩. க௩. ௪0)

அண்டமா*ரிருளூடுகடந்தும்ப
ருண்டுபோலுமோரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே.

—நா, சித்தத்தொகைத்திருக்குறுந்தொகை.

---

* "வானுழைவாளம்பலத்தரன்" (இருட்கு அப்பாலாகிய வானிடத்துண்டாகிய ஒளியையுடைய திருச்சிற்றம்பலத்தில் வாழும் அரன்) என்று திருக்கோவையாரும் அப்பொருள்படக் கூறிற்று.

(௫௯) சிவபெருமான் பொன்வண்ணர்.

𑌯𑌶𑍍𑌶𑍁𑌕𑍍𑌰 𑌇𑌵 𑌸𑍂𑌰𑍍𑌯𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌮𑌿𑌵 𑌰𑍋𑌚𑌤𑍇।

யஶ்ஶுக்ர இவ ஸூர்யோ ஹிரண்யமிவ ரோசதே।

"எந்த உருத்திரர் சூரியனை ஒத்த ஒளியினராய்ப் பொற்பிரகாசத்தினராயுள்ளார்" என்று இருக்குவேத (௧. ௪௩. ௫) மும்,

𑌨𑌮𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌬𑌾𑌹𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌯
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌾𑌯 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌤𑌯𑍇 ....
𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃।

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே .... நமோநம:।

"பொற்கையினர்க்கு, பொன்வண்ணர்க்கு, பொன்ரூபர்க்கு, பொற்பதிக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!" என்று தைத்திரீய ஆரணியக (௧௦. ௨௨. ௪௦) மும் கூறுகின்றன.

சிவபிரான் திருமேனியைப் பொன்னிறமுடையதென்று ஆரியசுருதிகள் கூற, அவற்றுக்கியைந்து திராவிடசுருதிகளும் அங்ஙனம் பொன்வண்ணர் என்று கூறுதலோடமையாது, செம்பவளவண்ணர், மாணிக்கவண்ணர், தீவண்ணர் என்றற்றொடக்கத்தனவாகவும் அங்கங்கே புகழ்வனவாயின. ஸ்படிகமேனியர், சங்கொத்தமேனியர் என்றற்றொடக்கத்தனவாக அத்திராவிடசுருதிகள் சிற்சில இடங்களிற் புகழ்வது அவர் செம்பவளமேனியிற் படிந்திருக்கும் விபூதியின் வெண்ணிற மிகுதிப்பாடு பற்றியாம்.

பொன்னேர்தருமேனியனேபுரியு
மின்னேர்சடையாய்விரைகாவிரியி
னன்னீர்வயனாகேச்சரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே.

—ஞா, திருநாகேச்சரம்.

மாசிறொண்டர்மலர்கொண்டுவணங்கிட
வாசையாரவருணல்கியசெல்வத்தர்
காய்சினத்தவிடையார்கருகாவூரெம்
மீசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே.

—ஞா, திருக்கருகாவூர்.

வம்பலரும்மலர்க்கோதைபாகம்மகிழ்மைந்தனுஞ்
செம்பவளத்திருமேனிவெண்ணீறணிசெல்வனுங்
கொம்பமரும்மலர்வண்டுகெண்டுந்திருக்கோட்டாற்று
ணம்பனெனப்பணிவார்க்கருள்செய்யெங்கணுதனே.

—ஞா, திருக்கோட்டாறு.

வெற்புறுத்ததிருவடியாற்கூற்றட்டானை
விளக்கினொளிமின்னினொளிமுத்தின்சோதி
யொப்புறுத்ததிருவுருவத்தொருவன்றன்னை
யோதாதேவேதமுணர்ந்தான்றன்னை
யப்புறுத்தகடனஞ்சமுண்டான்றன்னை
யமுதுண்டாருலந்தாலுமுலவாதானை
யப்புறுத்தநீரகத்தேயழலானானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே.

—நா, திருவாரூர்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.

—சு, திருமழபாடி.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

—சு, திருக்கடவூர்மயானம்.

(ஙஎ) சிவபெருமானை அறிதலாற் பாசங்கள் (மலமாயாகன்மங்கள்) நீங்கும்; இதனாற் பிறவி அறும்.



ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை:।

ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாசை:।

"சிவபெருமானை அறிந்து சமஸ்த (மலமாயாகன்ம) பாசங்களினின்று வீடுறுகின்றான்" என்று சுவேதாசுவதரோபநிடத (க. அ; கூ, கங)மும்,

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌰𑌣𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑌣𑌿𑌂।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌨𑌿𑌰𑍍𑌮𑌥𑌨𑌾𑌦𑍇𑌵 𑌪𑌾𑌶𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃॥

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவஞ் சோத்தராரணிம்।
த்யாநநிர்மதநாதேவ பாஶம் தஹதி பண்டித:॥

"(இதயகுகையின்கண்ணே) ஆன்மாவையும் பிரணவத்தையும் முறையே கீழ் அரணியாகவும் மேல் அரணியாகவுங்கொண்டு தியானித்தலாம் கடைதலினுற் பாசத்தைத் தகிக்கின்றுன் அறிஞன்" என்று கைவல்லியோபநிடதமும் கூறுகின்றன.

வீசுமின்புரைகாதன்மேதகு
பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன்பூம்புகலியைப்
பேசுமின்பெரிதின்பமாகவே.

—ஞா, திருப்பிரமபுரம்.

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றுர்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே.

—ஞா, திருக்கடவூர்மயானம்.

ஊனத்திருணீங்கிடவேண்டின்
ஞானப்பொருள்கொண்டடிபேணுந்
தேனைத்தினியானமருஞ்சேர்
வானம்மயிலாடுதுறையே.

—ஞா, திருமயிலாடுதுறை.

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயின்
முந்தியெழுந்தமுழவினேசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணுமலையாரே.

—ஞா, திருவண்ணுமலை.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமு
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினு
னூர்மயானத்துநம்பான்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே.

—ஞா, திருநாலூர்மயானம்.

இரவிநீள்சுடரெழுவதன்முன்ன
மெழுந்துதன்முலைக்கலசங்களேந்தி
சுரபிபால்சொரிந்தாட்டிநின்பாதந்
தொடர்ந்தவார்த்தைதிடம்படக்கேட்டுப்
பரவியுள்கிவன்பாசத்தையறுத்துப்
பரமவந்துநுன்பாதத்தையடைந்தே
னிரவிநித்திலமத்தருசெம்பொ
னளிக்குந்தென்றிருநின்றியூரானே.

—சு, திருநின்றியூர்.

வேந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

—திருவாசகம்.

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்று
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

—திருவாசகம்.

---

(௩௮) சிவபெருமான் மன்மதனைத் தகித்தமை.

𑌭𑌸𑍍𑌮𑍀𑌚𑌕𑌾𑌰 𑌮𑌨𑍍𑌮𑌥𑌮𑍍।
பஸ்மீசகார மந்மதம்।

"(சிவபெருமான்) மன்மதனைச் சாம்பராக்கினார்" என்று சரபோபநிடதமும்,

𑌕𑍍𑌷𑌯𑌕𑍍𑌷𑌣𑍇 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌦𑌗𑍍𑌧𑍋𑌽𑌹𑌂 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌃।
𑌵𑌹𑍍𑌨𑌿𑌜𑍍𑌵𑌾𑌲𑌯𑌾 𑌸𑍍𑌮𑌰𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋 𑌦𑌗𑍍𑌧𑌵𑌾𑌨𑍍।
𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 𑌤𑌰𑍍𑌹𑍇𑌣𑍈𑌵।
𑌸𑌜𑍍𑌜𑌂 𑌕𑍃𑌪𑌾𑌵𑌲𑍋𑌕𑌿𑌤𑌂 𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍।

𑌸𑌂𑌧𑌾𑌯 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌪𑌿|
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂 𑌨𑌾𑌕𑌿𑌨𑍋𑌮𑌾𑌪𑌿𑌨𑌾𑌕𑌿𑌨𑌿|
𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌰𑍍 𑌦𑍁𑌷𑍍𑌟𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌮𑌮𑍇𑌦𑍃𑌶𑌮𑍍|
𑌵𑌾𑌮𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌚 𑌬𑌾𑌹𑍁𑌶𑍍𑌚 𑌭𑌯𑌶𑌂𑌸𑌿 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍍𑌯𑌹𑍋|
𑌕𑌥𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌸𑌂𑌯𑍁𑌗𑍇 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌃|
𑌤𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍁 𑌤𑌥𑌾𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍀𑌵𑌾𑌮𑌿 𑌯𑌦𑌿𑌵𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇|
𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌕𑌰𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍈𑌕𑍍𑌷𑌿𑌷𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍|
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌤𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌾𑌨𑌹𑌮𑍇𑌵𑌹𑌿|
𑌇𑌤𑌿𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑌿 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌨𑌮𑌹𑌾𑌮𑌨𑍁𑌮𑍍|
𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑍋𑌗𑌮𑌾𑌃|
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அதக்ஷணேந நிர்முக்தமோஹஃ பஞ்சஶரஸ்ததா|
புநஶ்சாதாய ஸஶரம் வேபமாநஶ் ஶராஸநம்|
ஶநைர்விலில்யே ஸவிதே ந மேருதருமண்டலே|
ஸஜ்ஜம் க்ருத்வாஸகிதம் தநுஸ்ஸம்மோஹநாஹ்வயம்|
ஸந்தாய தத்ர தம் லக்ஷ்யமலக்ஷ்யம் யோகிநாமபி|
க்ருத்வாபி மஹதீம் சிந்தாம் நாகிநோமாபிநாகிநி|
கிமர்த்தம் ப்ரேஷயாமாஸுர் துஷ்டம் கர்ம மமேத்ருஶம்|
வாமம் சக்ஷுஶ்ச பாஹுஶ்ச பயஶம்ஸி ஸ்புரத்யஹோ|
கதம் பவிஷ்யதி க்ஷேமம் ஸம்யுகே த்ரிபுரத்விஷஃ
தத்திஷ்டது ததாஸர்வம் ஜீவாமி யதிவா ப்ரியே|
நேத்ராநந்தகரம்தேவம் நேத்ராப்யாமைக்ஷிஷி ப்ரபும்
தஸ்மாத்பாக்யவதாம் மத்யே பாக்யவாநஹமேவஹி|
இதிதஸ்மிந் ப்ராஜாபதி ஸம்மோஹநமஹாமநும்|
ததஃ ப்ராஞ்ஜலயஸ்ஸர்வே தேவா விஷ்ணுபுரோகமாஃ|

ஸ்வஸ்திகாமாய காமாய ஸ்வஸ்தீதி மநஸா ஜபந்।
மண்டலீக்ருத கோதண்டம் ந மேருதருஷண்டகம்।
ஸர்வஜ்ஞஸ்ய ததஸ் தஸ்ய ஸர்வேஶஸ்ய தயாநிதேः।
த்ருதீயா தக்ஷிணः கோணாத்கீலோ ஜாதः க்ருஶாநவணுः।
பஸ்மீசகார ஸஹஸா மஹிஷா க்ஷாணுபும்ஜவத்।
மோஹேந ஸாரதிர்நைவ விவேத பதிபஞ்சதாம்॥

"பிரமாதிதேவர்களால் அனுப்பப்பட்டு இரதியோடு கைலாசத்தை அடைந்து மன்மதன் மகாதேவரைக் கண்டவுடனே மயக்கமுற்று வீழ்ந்தான்; பின்னர் அவன் சிறிது நேரத்துள் மயக்கந் தெளிந்தவனாய் நடுக்கத்தோடு வில்லையும் அம்பையும் கையில் எடுத்துப் பக்கத்திலேயுள்ள திவ்யபுன்னைமரவரிசைக்குள்ளே மெதுவாய்க் கரந்துநின்று பயத்தினோடு வில்லிலே நாணேற்றி யோகிகள் குறிப்புக்குமெட்டாதவரிடத்திற் குறிப்பிட்டுச் சம்மோஹனம் என்கின்ற பாணத்தை நாணிலே தொடுத்து இவ்வியல்பினதாகிய துஷ்டகர்மத்தைப் பினாகபாணியாகிய சிவபெருமானிடத்துச் செய்தற்குத் 'தேவர்கள் எதன்பொருட்டுத் தன்னை அனுப்பினார்கள்' என்று மிகுதியும் அபாயத்துக்குக் காரணமாக இடக்கண்ணும் புயமுந் துடிக்கின்றனவே; ஆ! திரிபுரதஹனராகிய சிவனாரோடு செய்யும் யுத்தத்தில் எனக்கு எங்ஙனம் க்ஷேமம் உண்டாகும்; இது நிற்க; யான் பிழைக்கின்றேனோ! இறக்கின்றேனோ! கண்களுக்குப் பரமானந்தம் விளைக்கும் பிரபுவாகிய சிவபிரானைத் தரிசித்தமையாற் பாக்கியவான்களுள்ளே யான் சிறந்த பாக்கியவானாகின்றேன் என்று பலவாறு நினைந்து சம்மோஹனம் என்னும் மஹாமந்திரத்தைச் செபிக்கும்போது விஷ்ணுமுதலிய தேவரெல்லாம் அஞ்சலியஸ்தராய்ச் சுபத்தை எண்ணிய மன்மதனுக்குச் சுவஸ்தி என்று மனசினால் செபித்தார்கள்; அவன் தேவபுன்னைமரவரிசைமறைவினின்று வில்லைவளைத்தான்; சர்வஞ்ஞரும், சர்வேசுரரும், தயாநிதியுமாகிய சிவபிரானாரது மூன்றாவது கண்ணின் கடையினின்று அணுத்தீப்பொறி ஒன்றுளதாய் அவனைக் குங்குலியப்பொடிக்குவியல்போல் விரைந்தெரித்துச் சாம்பராக்கிவிட்டது; அப்போது மதிமயக்கத்தினால் இரதியானவள் தனது கணவன் நாசமுற்றதை அறிந்தாளில்லை" என்று சிவரகசியகண்டமும் கூறுகின்றன.

காமனெரிப்பிழம்பாகநோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருநான்முகன்போல்வரேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே [ய்
யீமவனத்தெரியாட்டுகந்தவெம்பெருமானிதுவென்கொல்சொல்லா
வீமருதண்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே.

—ஞா, திருப்புகலியுந்திருவீழிமிழலையும்.

மகரத்தாடுகோடியோனுடலம்பொடிசெய்தவனுடைய
நிகரொப்பிலாத்தேவிக்கருள்செய்நீலகண்டனூர்
பகரத்தாராவன்னம்பகன்றில்பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னைதாழைப்பொழில்சேர்சண்பைநகாரே.

—ஞா, திருச்சண்பைநகர்.

கழைபடுகாடுதென்றல்குயில்கூவவஞ்சுகணையோனணைந்துபுகலும்
மழைவடிவண்ணனெண்ணிமகவோனைவிட்டமலரானதொட்டமதன [த்
னெழில்பொடிவேந்துவீழ விமையோர்கணங்களெரியென்றிறைஞ்சியகல
தழல்படுநெற்றியொற்றைநயனஞ்சிவந்ததழல்வண்ணனெந்தைசரணே.

—நா, தசபுராணம்.

ஐவணமாம்பகழியுடையடன்மதனன்பொடியாகச்
செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
மைவணவுங்கண்டத்துவளர்சடையெம்மாரமுதை
யெவ்வணநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

—சு, திருவாரூர்.

---

(௩௬) அடியார் விரும்பியதைச் சிவபெருமான் பிரசாதிப்பவர்.

ஸ ஏவ ஭஗வா நீஶஸ ஸர்வாபீஷ்டம் ப்ரதாஸ்யதி।

ஸ ஏவ பகவா நீஶஸ் ஸர்வாபீஷ்டம் ப்ரதாஸ்யதி।

"பகவானாகிய அந்தச் சிவபிரான் வேண்டியவனைத்தையும் கொடுப்பார்" என்று தக்ஷகாண்டமும்,

அதிக் ப்ரதோஷி ஭ஜதாம் நமதாமர்த்திதாத் விபோ।

அதிக் ப்ரதோஷி பஜதாம் நமதாமர்த்திதாத் விபோ।

"பிரபுவே! தேவரீரை வழிபடுபவர்க்கும், வணங்குகின்றவர்களுக்கும் (இவர்கள்) வேண்டுதலுக்கு மேலே கொடுக்கின்றீர்" என்று சம்பவகாண்டமும் கூறுகின்றன.

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

—நா, திருவாலவாய்.

கனத்தகத்துக்கடுஞ்சுடராய்நின்றாய்நீயே
கடல்வரைவானாகாயமானாய்நீயே
தனத்தகத்துத்தலைகலனாக்கொண்டாய்நீயே
சார்ந்தாரைத்தகைந்தாளவல்லாய்நீயே
மனத்திருந்தகருத்தறிந்துமுடிப்பாய்நீயே
மலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
சினத்திருந்ததிருநீலகண்டனீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதி.

—நா, திருவையாறு.

மையனையகண்டத்தாய்மாலுமற்றை
வானவருமறியாதவண்ணச்சூலக்
கையவனேகடியிலங்கைக்கோனையன்று
கால்விரலாற்கதிர்முடியுந்தோளுஞ்செற்ற
மெய்யவனேயடியார்கள்வேண்டிற்றீயும்
விண்ணவனேவிண்ணப்பங்கேட்டுநல்குஞ்
செய்யவனேதிருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே.

—நா, திருச்சோற்றுத்துறை.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கடாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லா
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.
—நா, திருமறைக்காடு.

---

(௬௦) அகஸ்தியமகாமுனிவர்க்குப் பொதியமலை அருளப்பட்டமை.



𑌏𑌵𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑍇𑌵𑍈𑌃 𑌸𑍍𑌮𑌿𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍।
𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑍋𑌦𑍍𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌶𑌦𑍃𑌕𑍍।
𑌚𑌕𑍍𑌰𑍇 𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌶𑍈𑌲𑌮𑌧𑍀𑌶𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌿𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌵𑍇𑌷𑌨𑍍𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌚𑍍𑌛𑌿𑌵𑌃।
𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌯𑌾𑌽𑌸𑍍𑌯 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌸𑌪𑌤𑍍𑌨𑍀𑌕𑍋 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌵𑌿𑌯𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪 𑌮𑌲𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌰𑍁𑌪𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍍।
𑌶𑌿𑌵𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌤𑍁𑌲𑍍𑌯𑍇 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑍇।
𑌮𑌲𑌯𑌂 𑌸𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑌮𑌾𑌭𑍂𑌸𑍍𑌸𑌮𑌾𑌭𑌵𑌤𑍍॥

ஏவம் ஸம்ப்ரார்த்திதோதேவை: ஸ்மிதம் க்ருத்வா ஶிவஸ் ஸ்வயம்।
அகஸ்த்யமாத்மநஸ்துல்யம் ப்ராஹிணோத்ரோஹிணீஶத்ருக்।
சக்ரேதம் தக்ஷிணாஶைலமதீஶஸ் ஸத்தியம் முநிம்।
கல்யாணவேஷந்தத்ரைவ தஸ்மை ஸந்தர்ஶயச்சிவ:।
ஸோப்யாஜ்ஞயாஸ்ய து:கேந ஸபத்நீகோ முநீஶ்வர:।
வியந்மார்க்கேண ஸம்ப்ராப மலயாத்ரே ருபத்யகாம்।
ஶிவபாவநயா துல்யே ஶிவஸ்ய முநிபுங்கவே।
மலயம் ஸமநுப்ராப்தே விஷமாபூஸ் ஸமாபவத்॥

"இங்ஙனம் (விழா திருக்குமாறு அநுக்கிரகிக்கவேண்டுமென்று) தேவர்கள் வேண்ட, சந்திரசேகராாகிய சிவபிரான் புன்சிரிப்போடு தமக்குத் தல்லியராகிய அகஸ்தியமுனிவரை அனுப்பி மகாபுத்திசாலியாகிய அம்முனிவரைத் தென்றிசைக்கு அதிபராக்கித் தமது திருக்கல்யாணக்கோலத்தையும் அவ்விடத்தே பின்னர்க் காட்சிகொடுத்தருளினர்; பின்னர் அம்முனிவரும் சிவபிரான் ஆஞ்ஞையினுல் மிகு மனவருத்தமுற்று மனைவியாரோடு ஆகாயமார்க்கமாகப் பொதியாசலத்தின் அடியை அடைந்தார்; எஞ்ஞான்றுஞ் சிவபாவனை செய்தலினுலே அச்சிவபிரானுக்குச் சமானமாகிய முனிவர் பொதியாசலத்தை அடைந்தவுடனே மேடு பள்ளமாகிய பூமி சமமாய்விட்டது" என்றது சம்பவகாண்டம்.

வந்தொரிந்திரன்வழிபடமகிழ்ந்து
  வானநாடுநீயாள்கெனவருளிச்
சந்திமூன்றிலுந்தாபரநிறுத்திச்
  சகளிசெய்திறைஞ்சகத்தியர்தமக்குச்
சிந்துமாமணியணிதிருப்பொதியிற்
  சேர்வுநல்கியசெல்வங்கண்டடைந்தேன்
செந்தண்மாமலர்த்திருமகண்மருவுஞ்
  செல்வத்தென்றிருநின்றியூரானே.

—சு, திருநின்றியூர்.

---

(௪௧) சிவபெருமான் உபமன்னியுவுக்குப் பால் அருளினமை.




வ்யாக்ரபாதாத்மஜ: பூர்வம் உபமந்யுர் மஹாமதி:|
க்ஷீரம் யயாசே பால்யே஽ஸௌ மாதரம் ஸ்வக்ருஹே ஸ்திதாம்|
ஸா ததௌ க்ருத்ரிமம் க்ஷீரம் பிஷ்டமிஶ்ரஜலேந வை|
தத்பீத்வா விரஸத்வாத்து ப்ராரோதீத் ப்ருஶது:கித:|
நேதம் க்ஷீரம் ஜலம் மாதஸ்தத் க்ஷீராய யந்மஹா:|
ததஸ்ஸா து:க்கது:கேந பாலகம் வீக்ஷ்ய ஸாத்மஜம்|

நாஸ்த்யத்ர க்ருஹேऽஸ்மாகம் க்ஷீரம் ஸ்வாது மயேநாஹரம்।
வஸிஷ்டஸ்தவ வாண்யாத்தா மாதாமஹஶ்ஶங்கரப்ரியः।
ஶிவபூஜாபரோ நித்யம் வேதவேதாங்கபாரகः।
பவாம்ஸ்து பூஜயா ஶம்போः காமதேநும் பயஸ்விநீம்।
வீக்ஷ்ய த்வத்க்ருஹே க்ஷீரம் காமதேநோஸ்ஸமூஹவத்।
பாம்சபௌத்ராஸி பாருகாக்ஷீரம் ப்ரக்ருதயா தத।
ஸ்வப்நஸ்யேவ பராபவாத்யே க்ருதः க்ஷீரேண போஜநம்।
விஶேஷேண தரித்ரஸ்ய தவ க்ஷீரம் குதோ பவேத்।
ததத்ர பூஜா கர்த்தவ்யா த்வயா க்ஷீராப்திநாதஜ।
விஶ்வாதிகஸ்ய ஸததம் யோகிஜ்யேயஸ்ய ஶம்பிநः।
பூஜயா லப்யதே ஸர்வம் வாஞ்சிதம் மாநவைः ப்ரபோः।
இதி மாத்ருவசஶ்ஶ்ருத்வா தயேதி மாநிவோதகः।
கிஞ்சித்பரமயம் மத்வா ரஸஸ்ஸ்யாந்ஸ மாஶோபநம்।
ஸம்ப்ரதிஸம்ப்ரஷித ஸர்வம் மே நாத்ராக்ஷரஸம்பக்ஷணः।
ஜ்யாயஸேக மநஸ்ஸம் ஸம்க்ருதிநிஶ்சிதமாநஸः।
பூஜயாமாஸ தேவேஶம் பாராணம் பாராஷம் ப்ரஸாத்।
ததः ப்ரஸந்நோ பகவாந்தேவோ மஹேவதாக்ருதிः।
தம் த்ருஷ்ட்வா மஹேஶம் ஸகோபாகாஸிதமாநஸः।
க்வம் கச்ச பாரதோ மேऽத்ய யத்ர காத்ராபி ப்ரத்ரஸாத்।
ந ஸ்யாத்தே பவாந்தஸ்ய மாமபூஜாபரதே ந தே।
பூஜாவித்யம் யதிஹவேத்ரஹாதேவஸ்ய ஶம்பிநः।
ஶவேஹம் காமிதி தஸ்ய வாகோப ஶவிதம் மம।
தஸ்ய தத்க்ஷ்ய வித்தஸ்ய ஶைஸ்யம் ஶக்திமீஶ்வரः।
ப்ராதுராஸீத்க்ஷணேநைவ ப்ருஷோபம ஸமோமயா।
தம் த்ருஷ்ட்வா ஸாம்பமீஶாநம் ப்ரணம்ய ஸம்மி தண்டவத்।

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

வ்யாக்ரபாதாத்மஜ: பூர்வமுபமந்யுர் மஹாமதி:।
க்ஷீரம் யயாசே பால்யே சௌ மாதரம் ஸ்வக்ருஹே ஸ்திதாம்
ஸா ததௌ க்ருத்ரிமம் க்ஷீரம் பிஷ்டமிஶ்ரஜலேநவை।
தத்பீத்வா விரஸத்வாச்ச ருரோத ப்ருஶது:கித:।
நேதம் க்ஷீரம் ஜலம் மாதரித்யுக்த்வா பாதயந்முஹு:।
ததஸ்ஸா து:க து:கேந ருதந்தம் வீக்ஷ்ய சாத்மஜம்।
நாஸ்தி புத்ர க்ருஹேஸ்மாகம் க்ஷீரம் ஸ்வாது மநோஹரம்।
வஸிஷ்டஸ்தவபுண்யாத்மா மாதுல: ஶங்கரப்ரிய:।
ஶிவபூஜாரதோநித்யம் வேதவேதாந்தபாரக:।
லப்தவாந் பூஜயா ஶம்போ: காமதேநும் பயஸ்விநீம்।
பீத்வா த்வம் தத்க்ருஹே க்ஷீரம் காமதேநுஸமுத்பவம்।
வாஞ்சஸ்யத்ராபி பாலத்வாத் க்ஷீரம் வ்யர்த்ததயாத்மஜ।
அப்ராஸங்கே விரூபாக்ஷே குத: க்ஷீரேண போஜநம்।
விஶேஷேண தரித்ரஸ்ய தவ க்ஷீரம் குதோ பவேத்।
தத்ர பூஜா கர்த்தவ்யா த்வயா க்ஷீரார்த்திநாத்மஜ।
விஶ்வாதிகஸ்ய ஸததம் யோகித்யேயஸ்ய ஶூலிந:।
பூஜயா லப்யதே ஸர்வம் வாஞ்சிதம் மநுஜை: ப்ரபோ:।



இதி மாத்ருவசஶ் ஶ்ருத்வா ததேதி முநிபோதகஃ।
கிஞ்சித் தூரமயம் கத்வா ரஹஃ ஸ்தாநம் ஸுஶோபநம்।
பூதிபூஷிதஸர்வாங்கோ ருத்ராக்ஷவரபூஷணஃ।
த்யாயந்நேகமநாஶ் ஶம்பும் க்ருதிநிஶ்சிதமாநஸஃ।
பூஜயாமாஸ தேவேஶம் புராணம் புருஷம் ப்ரபும்।
ததஃ ப்ரஸந்நோ பகவாநஸ்மை மகவதாக்ருதிஃ।
தம் த்ருஷ்ட்வா மகவந்தம் ஸகோபாகுலிதமாநஸஃ।
த்வம் கச்ச புரதோ மேத்ய யத்ரகுத்ராபி வ்ருத்ரஹந்।
நஸ்மர்யதே பவாநத்ய மயா பூஜாரதேநவை।
பூஜாவிக்நம் யதிபவேந் மஹாதேவஸ்ய ஶூலிநஃ।
ஶபேஹந்த்வாமிதி ததா சுகோப ஶபிதும் ஸுரம்।
தஸ்ய தத்வீக்ஷ்ய சித்தஸ்ய ஸ்தைர்யம் ஶக்திமபீஶ்வரஃ।
ப்ராதுராஸீத் க்ஷணேநைவ வ்ருஷோபரி ஸஹோமயா।
தம் த்ருஷ்ட்வா ஸாம்பமீஶாநம் ப்ரணம்ய புவி தண்டவத்।
உத்தாய ஸஹஸா பக்த்யா நநர்த்தாநந்தநிர்ப்பரஃ।
மாந்யோஸ்ம்யநுக்ருஹீதோஸ்மிசாஹமத்ய மஹேஶ்வர।
த்வத்தர்ஶநேந தேவேஶ காங்க்ஷிதம் பலிதம் மம।
இதி தஸ்ய வசஶ் ஶ்ருத்வா மஹேஶஸ்தாபஸப்ரியஃ।
க்ஷீரார்த்திநே ததௌ தஸ்மை க்ஷீரஸாகரமீஶ்வரஃ।
ஸர்வவேதாந்தவிஜ்ஞாநம் புராணாநாந் ததைவச।
ஶாஸ்த்ராணமபி ஸர்வேஷாந்தவ தத்வம் ஸ்புரத்வலம்।
அவிநஶ்வரதா பூயாத்தவ தாபஸ புத்ரக।
இதிதத்வா வராநந்யா மீஶ்வரோந்தரதாத்க்ஷணாத்।
லப்த்வா வரம் ததா ஶம்போருபமந்யுஶ்ஶிவப்ரியஃ॥

"மகாபுண்ணியாத்துமாவாகிய வியாக்கிரபாதமுனிவர் சிவ பெருமானைப் பூசித்து அவர் அருளினாலே உபமன்னியு என்னும் நல்லபுதல்வரைப் பெற்றுத் தேவாதி தேவருடைய மகத்தாகிய நடனத்தையும் தரிசனஞ் செய்து, அவர் திருவருளினால் நித்தி யத்துவத்தையுமுடையராயினார்; இந்த வியாக்கிரபாதமுனிவர் குமாரரும், மகாவிவேகியுமாகிய உபமன்னியுமுனிவர் சிறு

வயசிலே தமது கிருகத்திருந்த தாயாரை நோக்கிப் பால் கேட்க, அதற்குத் தாயார் மாவை ஜலத்திற் கரைத்துப் பொய்ப்பாலாய்க் கொடுக்க, அதனைக் குடித்து அதில் உருசியில்லாமையான் மிகவும் துக்கப்பட்டழுது, இது ஜலமன்றிப் பாலன்று என்று சொல்லி, அவ்வம்மையாரை அடிக்கடி வாதைப்படுத்தினர்; அதனல் தாயார் மிகவும் வருத்தமடைந்து விம்மி அழும் தமது பாலனை நோக்கி ஓபாலக! சுவையுள்ள நல்ல பால் நம் கிருகத்தில் இல்லையே; ஆயின் உனது மாமனும், மகாபுண்ணியாத்துமாவும், சிவபெருமானுக்கு நேசரும், நாடோறும் சிவபூசையில் முயன்றவரும், வேதவேதாந்தபாரகருமாகிய வசிஷ்டமாமுனிவர் சிவபூஜாமகிமையால் மிகுதியும் பால்கறக்கும் காமதேனுவையுடையர்; நீ அவர் வீட்டிலே காமதேனுப்பாலைப் பருகிவிட்டு, குழந்தைத்தன்மையால் இங்கும் வீணே பால்கேட்கின்றனை; முக்கண்ணராகிய சிவபெருமான் அருளில்லாவிடிற் பாலோடுகூட ஊண் புசிப்பதெங்ஙனம்? அன்றியும் மகாதரித்திரனாகிய உனக்குப் பால் எங்ஙனம் கிட்டும்; ஆகலின், பாலை விரும்புகின்ற நீ சிவபூசைசெய்யவேண்டும்; ஏனெனின், விசுவாதிகரும், யோகிகளால் எஞ்ஞான்றும் தியானிக்கற்பாலரும், சூலபாணியுமாகிய மகாப்பிரபுவைப் பூசிப்பதினல் மனிதர் சர்வாபீஷ்டங்களையும் பெறுகின்றனர் என்னும் தாயார் வசனத்தைக் கேட்டவுடனே, நன்றென்று கூறி, அவ்விருஷிபாலகர் சிறிதுதூரம் போய் ஓர் நல்ல ஏகாந்தஸ்தானத்தை அடைந்து, தேகம் முழுமையும் விபூதியினல் உத்தூளனஞ் செய்து, சிறந்த உருத்திராக்ஷங்களை ஆபரணமாகப் பூண்டு காரியத்தில் உறுதிகொண்டவராகி, தேவேசரும் ஆதி புருஷருமாகிய சிவபெருமானைத் தியானித்துப் பூசை செய்கையில், சிவபெருமான் அவர் முன்னே இந்திர வடிவத்தோடு பிரசன்னமாக, அவ்விந்திரனை அப்புதல்வர் கண்டு மனத்திற் கோபாவேசங்கொண்டு, இந்திரா! நீ இப்போது என் முன்னிலையை விட்டு எங்காயினும் போய்விடு, சிவபூசையில் முயன்றிருக்கும் இவ்வேளையில் உன்னை நினைக்கவில்லை; சிவபூசைக்கு இடையூறு நேரில் உன்னைச் சபித்துவிடுவேன் என்று அத்தேவேசரைச் சபிப்பவராகக் கோபித்தார்; அப்போது சிவபெருமான் அப்பாலருடைய உறுதியையும் திறமையையும் கண்டு க்ஷணப்போதினுள்ளே உமையம்மையாரோடு இஷபாரூடராய்ப் பிரசன்னராயினர்; அந்தச் சாம்பமூர்த்தியைத் தரிசித்தவுடனே பாலகர் பூமி

யிலே தண்டாகாரமாக வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து ஆனந்தத்தி னாற் பரவசமடைந்து, அன்பினோடு விரைந்து கூத்தாடி சுவாமீ! இப்போது யான் பெருமை அடைந்தவனும் அநுக்கிரகிக்கப்பட்ட வனுமாய்விட்டேன்; சுவாமீ! உம்மைத் தரிசித்தமாத்திரத்திலே என் எண்ணமெல்லாம் கைகூடப்பெற்றேன் என, அதனைக் கேட் டுத் தபத்தினர்க்கு நேசராகிய சிவபிரான் பாலைவிரும்பிய அப் பாலமுனிவர்க்குப் பாற்கடலைக் கொடுத்துவிட்டு, இருஷிபாலக! உனக்குச் சகல வேதவேதாந்தங்களின் ஞானமும் சகலபுராண சாஸ்திரங்களின் தத்துவங்களும் தெளிவாய் விளங்கக்கடவன; மேலும், என்றும் அழிவில்லாமையும் உண்டாகக்கடவது என்று பின்னரும் சில வசனங்கள் அருளிச்செய்து நொடிப்போதிலே அந்தர்த்தானமாயினர்'' என்றது ஸ்காந்தபுராணம்.

இவ்விஷயம் மகாபாரத அநுசாசனிபருவம், வாயுசங்கிதை, இலிங்கபுராணமுதலியவற்றில் விரித்துரைக்கப்படுகின்றது.

காலனைக்காலாற்காய்ந்தகடவுடன்னைக்
காரோணங்கழிப்பாலைமேயான்றன்னை
பாலனுக்குப்பாற்கடலன்றீந்தான்றன்னைப்
பணியுகந்தவடியார்கட்கினியான்றன்னைச்
சேலுகளும்வயலாரூர்மூலட்டானஞ்
சேர்ந்திருந்தபெருமானைப்பவளமின்ற
வாலவனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே.

—நா, திருவாரூரரநெறி.

பாலனுக்காயன்றுபாற்கடலீந்துபணைத்தெழுந்த
வாலினிற்கீழிருந்தாரணமோதியருமுனிக்காய்ச்
சூலமும்பாசமுங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடவூருறையுத்தமனே.

—நா, திருக்கடவூர்வீரட்டம்.

பாலகனார்க்கன்றுபாற்கடலீந்திட்ட
கோலச்சடையற்கேயுந்தீபற
குமரன்றன்றாதைக்கேயுந்தீபற.

— திருவாசகம்.

பாவுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

—திருப்பல்லாண்டு.

(சஉ) சிவபெருமான் தருமிக்குப் பொற்கிழி கொடுத்தமை.



[Grantha script verse]

ஆதிசைவ த்விஜஶ்ரேஷ்டஸ் ஸுதாயோத்வாஹகாங்க்ஷிணே।
பாண்ட்யேஶபாவாநுகுணாம் தத்வார்யாம் ஸதவீஶ்வர:।
ஜித்வா கவீந்ராஜபத்தாம் நீவீம்நிஷ்கஸஹஸ்ரிகாம்।
யயா ப்ரதாபயாமாஸ.................................॥

"(சம்பக) பாண்டியராஜனுடைய கருத்தை யாதென்றுணர்த்தி இயற்றிய (திராவிட) கவியைச் சிவபிரான் சங்கத்திலே கொடுத்து, அச்சங்கப்புலவர்களை செயித்து அரசனாற் கட்டப்பட்ட ஆயிரம் பொன்முடிச்சை விவாகத்தில் விருப்புற்ற ஆதிசைவப் பிராஹ்மண சிரேஷ்டருடைய புதல்வராகிய தருமிக்குக் கொடுத்தார்" என்று அகஸ்தியசங்கிதை கூறுகின்றது.

மின்காட்டுங்கொடிமருங்குலுமையாட்கென்றும்
விருப்பவன்காண்பொருப்புவலிச்சிலைக்கையோன்கா
ணன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறி
நற்கனகக்கிழிதருமிக்கருளினோன்காண்
பொன்காட்டக்கடிக்கொன்றைமருங்கேநின்ற
புனக்காந்தள்கைகாட்டக்கண்டுவண்டு
தென்காட்டுஞ்செழும்புறவிற்றிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே.

—நா, திருப்புத்தூர்.

(௪௫) சிவபெருமான் பாணபத்திரர்க்குப் (பலகை) அருளினமை.

𑌭𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌵𑌰𑍍𑌷𑌧𑌾𑌰𑌾𑌰𑍍𑌤𑍍𑌤 𑌆𑌸𑌿𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌰𑌪𑌂𑌕𑌿𑌲𑍇।
𑌗𑌾𑌤𑍁𑌮𑍁𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌕𑌰𑍋𑌤𑍍 𑌪𑌂𑌕𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍𑌤𑌦𑌾।
𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌙𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌵𑍈𑌕𑌲𑍍𑌯𑍇 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌯𑌂 𑌦𑍃𑌢𑌮𑍍।
𑌜𑌗𑍌 𑌭𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃।
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌮𑌧𑌿𑌕𑌂 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑌂 𑌭𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌃।
𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌪𑌰𑌶𑍍𑌶𑌮𑍍𑌭𑍁𑌸𑍍𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍇𑌶𑍍𑌵𑌰 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌪𑌂𑌕𑌾𑌸𑍀𑌨𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑌃𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌕𑍇।
𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌾𑌮𑌾𑌸 𑌫𑌲𑌕𑌾𑌂 𑌹𑍇𑌮𑌰𑌤𑍍𑌨𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌇𑌦𑌂 𑌕𑍁𑌤𑌸𑍍𑌸𑌮𑌾𑌯𑌾𑌤𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌸𑍍𑌮𑌿𑌤𑌮𑌾𑌨𑌸𑌃।
𑌰𑌤𑍍𑌨𑌪𑍍𑌰𑌭𑌾𑌰𑌾𑌜𑌿𑌤𑌂𑌤𑌤𑍍𑌪𑍀𑌠𑌮𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌤 𑌪𑍇𑌶𑌲𑌮𑍍।
𑌗𑌾𑌨𑌂 𑌭𑌦𑍍𑌰𑍇 𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌾𑌥 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌗𑌨𑍍𑌤𑍁𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑍇।
𑌭𑌦𑍍𑌰𑌃 𑌪𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌫𑌲𑌕𑌾𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑌾𑌮𑍍।
𑌗𑍇𑌹𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌬𑌨𑍍𑌧𑍁𑌭𑍍𑌯 𑌆𑌚𑌖𑍍𑌯𑍌 𑌤𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍॥


பத்ரோபி வர்ஷதாரார்த்த ஆஸிக்த்வா தத்ரபங்கிலே।
காதுமுத்யோகமகரோத் பங்காக்ராந்தோபவத்ததா।
சமுத்பங்கேபி வைகல்யே தந்த்ரியா தீநாமயந்த்ருடம்।
ஜகௌ பத்ரஸ்துமதுரம் பக்திபாவஸமந்விதஃ।
த்ருஷ்ட்வாகாயந்த மதிகம் பத்ரம் தம் பக்தவத்ஸலஃ।
அநுக்ரஹபரஶ்ஶம்புஸ்ஸுந்தரேஶ்வர ஈஶ்வரஃ।
பங்காஸீநஸ்ய பக்தஸ்ய பத்ரஸ்யாதஃப்ரதேஶகே।
ஸ்தாபயாமாஸ பலகாம் ஹேமரத்நவிசித்ரிதாம்।
இதம் குதஸ்ஸமாயாதமிதி விஸ்மிதமாநஸஃ।
ரத்நப்ரபாராஜிதந்தத்பீடமத்யாஸ்த பேஶலம்।
காநம் பத்ரே ஸமாப்யாத தஸ்மிந் கந்தும் ஸமுத்யதே।
பத்ரஃ பரமதர்மாத்மா பலகாம் பரிக்ருஹ்யதாம்।
கேஹம் கத்வாசபந்துப்ய ஆசக்யௌ தமுந்தகம்॥

"பாணபத்திரர் மழைவர்ஷத்தினால் நனைந்து வருந்தி அந்தச் சேற்றிலிருந்து கானஞ் செய்தார்; அப்போது சேற்றிலே புதைந்துகொண்டு (விரல்) நரம்புகள் மிறைத்த விடத்தும் திடமாக மாதுரியமாய்ப் பக்தியோடு பாடினர்; மிகுதியும் இசைபாடும் பாணபத்திரரைப் பார்த்துப் பக்தவற்சலராய் அநுக்கிரகபரராய்ச் சம்புவாயுள்ள சுந்தரேசுவரர் எனப்படும் சிவபெருமான் சேற்றில் இருப்பவராகிய அன்பராம் பாணபத்திரர்க்குக் கீழ்ப் பிரதேசத்திலே பொன்னாற்செய்து விசித்திர இரத்தினங்களால் நிருமிக்கப்பட்ட பலகையை இட்டார்; இது எங்ஙனமிருந்து எய்திற்றோ என்று மனசில் ஆச்சரியமுற்று இரத்தினப்பிரபையினால் விளங்கும் அழகிய பீடமத்தியில் இருந்து கானத்தைப் பாணபத்திரர் முடித்துக்கொண்டு தமது கிரகத்துக்குப் போகமுயன்றபோது பரமதர்மாத்துமாவாகிய அந்தப்பாணபத்திரர் அப்பலகையை எடுத்துக்கொண்டு தமது கிரகத்தை அடைந்து தமது பந்துக்களுக்கு அச்சமாசாரத்தைக் கூறினர்" என்று அகஸ்தியசங்கிதை கூறுகின்றது.

> நாணமுடைவேதியனுநாரணனுநண்ணவொணாத்
> தாணுவெனையாளுடையான்றன்னடியார்க்கன்புடைமை
> பாணனிசைபத்திமையாற்பாடுதலும்பரிந்தளித்தான்
> கோணவிளம்பிறைச்சென்னிக்கோளிலியெம்பெருமானே.

—ஞா, திருக்கோளிலி.

(சச) அர்ச்சுனனைக் கொல்ல வந்த பன்றியை வேடவடிவம் பூண்ட சிவபிரான் கொன்று அவனுக்குப் பாசுபதம் கொடுத்தமை.



> ஏதஸ்மிந் தேஶே ஸர்வேஷு த்வீபேஷு ஶைலாத்ஸு।
> பிநாகபாணிர்பகவாந் ஸர்வபாபஹரோ ஹர:।
> கைராதம் வேஷமாஸ்தாய காநநே ஸம்ஸ்திதோ।
> விஹ்ராஜமாநோ விஜயோ ஹிமவத்பர்வதே வஸந்।
> ஶ்ரீமத்பாஶுபதாய ஶராஸ்த்ரம் ஶிவோ வரம்।

நிஷ்வாத ஶஹாவெமொ உஹமெநா மெஉஹவாநிவ|
தெஉவ்யா ஸமெஹாஶயா ஶ்ரீஶோநஸோநவ்ரதமெவமயா|
நாநாவெமயமெர ஹர்ய்மெஷ ஹர்கமெதர நாமதஸ்தா|
கிராதவெமஸம்வ்ணஃ ஷ்ஹிம்ராவிஸஹஸ்ரமஃ|
கமொஹத தஉா ராஜஸ்நெஉமொஉதீவ ஹரத|
க்ஷணெந தத்நம் ஸவர்கம் நிஸ்ஸவஶஹவ தஉா|
நாஉஃ ப்ரஸ்ரவணா நாஞு வக்ஷிணாஞாவ்யாவாரஶக|
ஸஸந்கஷர்ஶோ மஶ்ய வாஸர்ஸ்யாக்ஷிஷ கஶர்ணஃ|
ஶருகஞாஶ உமெநாஃ வாத ஂ உஉமர்ஹாதஉமர்நழ்|
வாராஹம் ரருவஶோஷ்யாய தக்ஷ்யஜஸ்வாஜ்ர்நழ்|
ஹஞாம் வரஶஉாஷ்டாத்ரா தஶாவாவாZயு ஷாஶூநஃ|
மாஞ்ஜீவம் யநாராஉாய மராம்ஸ்தாமீவிமெஷாவஶோநு|
ஸஜ்யம் யநாவர்ரம் க்ருகா ஜ்யரமெவாமெஷண நிநாஉயநு|
யநாம் வ்ராஸர்யமெஸ ஹஞாஶநாமஸஶிஹாமதழ்|
தஸ்யாகு கூம் வஶவர்மெஶவாஹம் மெநதாஉ்யஶஸாஉநழ்|
உ்ருஷ்டாதம் வ்ரஹரிஷ்யஞம் ஷாஶூநம் உ்ரஶயநிநழ்|
கிராதரவெ ஸஹவா வராயாஶோஸ மம்கரஃ|
ஶமெயஷ வ்ராகமிர்தஃ வஶவர்திம்உ நீருஸஶவ்ரஹஃ|
கநாஉ்ரத்வ தஶாக்யம் வ்ரஜஹாரZய ஷாஶூநஃ|
கிராதஸ்த ஸஶஜஸிமெஞகமெக்ஷ்ய ஶஹாஉ்யதிஃ|
வ்ரஶமெஶாம மநிமெவ்ரவ்யம் மாரஶநிமிமெவாவஶழ்|
மெதள ஶ மெக்ள ஸாயமெகள தாஹ்யம் ஸஶஞத்ர நிமெவததாஃ|
ஶருகஸ்ய மாமெத்ர விஸ்மெணர் மெமெஉஸம்ஹநமெந தஉா|
யமாமமெநவிர்நிமெவர்ரமெஷா வஜ்ரமெஸ்ய வவவர்மெத|
தயாதமெயாஸநிவாதஸ்ரமெயாரஹவத்தஉா|

[illegible]
[illegible]....................................।

[illegible]।
[illegible] 𑌸𑌾𑌯𑌕𑌾𑌨𑌶𑌨𑍀𑌰𑌿𑌵।
[illegible] 𑌸𑌾𑌯𑌕𑌾𑌨𑍍।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌕𑌿𑌰𑌾𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌤𑌦𑌾।
𑌰𑍋𑌷𑌮𑌾𑌹𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌤𑌾𑌡𑌯𑌾𑌮𑌾𑌸 𑌚𑍇𑌷𑍁𑌭𑌿𑌃।
𑌤𑌤𑍋 𑌹𑍃𑌷𑍍𑌟𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌸𑌾𑌯𑌕𑌾𑌨𑍍।
[illegible] 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹 [illegible]𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌹।
𑌪𑍍𑌰𑌹𑌰𑌸𑍍𑌵 𑌶𑌰𑌾𑌨𑍇𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌚𑌾𑌨𑍍𑌮𑌰𑍍𑌮𑌭𑍇𑌦𑌿𑌨𑌃।
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌬𑌾𑌣𑌵𑌰𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌮𑍁𑌮𑍋𑌚 𑌸𑌹𑌸𑌾𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌃।
𑌤𑌤𑌸𑍍𑌤𑍌 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌰𑌬𑍍𑌧𑍌 𑌗𑌰𑍍𑌜𑌮𑌾𑌨𑍌 𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌃।
𑌶𑌰𑍈𑌰𑌾𑌶𑍀𑌵𑌿𑌷𑌾𑌕𑌾𑌰𑍈𑌸𑍍𑌤𑌤𑌕𑍍𑌷𑌾𑌤𑍇 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍।
𑌤𑌤𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌶𑍍𑌶𑌰𑌵𑌰𑍍𑌷𑌂 𑌕𑌿𑌰𑌾𑌤𑍇 𑌸𑌮𑌵𑌾𑌸𑍃𑌜𑌤𑍍।
𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌶𑌂𑌕𑌰𑌃।
𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂 𑌶𑌰𑌵𑌰𑍍𑌷𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌪𑌿𑌨𑌾𑌕𑌧𑍃𑌕𑍍।
𑌅𑌕𑍍𑌷𑌤𑍇𑌨 𑌶𑌰𑍀𑌰𑍇𑌣 𑌤𑌸𑍍𑌥𑍌 𑌗𑌿𑌰𑌿𑌰𑌿𑌵𑌾𑌚𑌲𑌃।
𑌸 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌬𑌾𑌣𑌵𑌰𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌮𑍋𑌘𑍀𑌭𑍂𑌤𑌂 𑌧𑌨𑌂𑌜𑌯𑌃।
𑌪𑌰𑌮𑌂 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌂 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌸𑌾𑌧𑍁𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌤𑌿 𑌚𑌾𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌅𑌹𑍋𑌽𑌯𑌂 𑌸𑍁𑌕𑍁𑌮𑌾𑌰𑌾𑌙𑍍𑌗𑍋 𑌹𑌿𑌮𑌵𑌚𑍍𑌛𑌿𑌖𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃।
𑌗𑌾𑌣𑍍𑌡𑍀𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌚𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑍍𑌯𑌵𑌿𑌹𑍍𑌵𑌲𑌃। [𑌸𑍁𑌰𑌃।
𑌕𑍋𑌽𑌯𑌂 𑌦𑍇𑌵𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌯𑌕𑍍𑌷𑌃 𑌸𑍁𑌰𑍋𑌽
𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿 𑌗𑌿𑌰𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌗𑌮𑌃।
𑌨𑌹𑌿 𑌮𑌦𑍍𑌬𑌾𑌣𑌜𑌾𑌲𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃।
𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌸𑌹𑌿𑌤𑍁𑌂 𑌵𑍇𑌗𑌮𑍃𑌤𑍇 𑌦𑍇𑌵𑌂 𑌪𑌿𑌨𑌾𑌕𑌿𑌨𑌮𑍍।

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கதேஷு தேஷு ஸர்வேஷு தபஸ்விஷு மஹாத்மஸு।
பிநாகபாணிர் பகவாந் ஸர்வபாபஹரோ ஹர:।
கைராதம் வேஶமாஸ்தாய காஞ்சநத்ருமஸந்நிபம்।
விப்ராஜமாநோ விபுலோகிரிர்மேருரிவாபர:।
ஸ்ரீமத்தநுருபாதாய ஶராந் சாஶீவிஶோபமாந்।
நிஷ்பபாத மஹாவேகோ தஹநோ தேஹவாநிவ।
தேவ்யா ஸஹோமயா ஸ்ரீமாந் ஸமாநவ்ரதவேஶயா।
நாநாவேஶதரைர்ஹ்ருஷ்டைர்பூதைரநுகதஸ்ததா।
கிராதவேஶஸம்சந்ந: ஸ்த்ரீபிஶ்சாபி ஸஹஸ்ரஶ:।

அஶோபத ததா ராஜந்ஸதேஶோதீவ பாரத।
க்ஷணேந தத்வநம் ஸர்வம் நிஶ்ஶப்தமபவத்ததா।
நாத꞉ ப்ரஸ்ரவணாநாஞ்ச பக்ஷிணாஞ்சாப்யுபாரமத்।
ஸஸந்நிகர்ஷ மர்கத்ய பார்த்தஸ்யாக்லிஷ்டகர்மண꞉।
மூகம் நாம தநோ꞉ புத்ரம் ததர்ஶாத்புததர்ஶநம்।
வாராஹம் ரூப மாஸ்தாய தர்க்கயந்த மிவார்ஜுநம்।
ஹந்தும் பரமதுஷ்டாத்மா தமுவாசாத பால்குந꞉।
காண்டீவம் தநு ராதாய ஶராந்சாஶீவிஷோபமாந்।
ஸஜ்யம் தநுர்வரம் க்ருத்வா ஜ்யாகோஷேணநிநாதயந்।
யந்மாம் ப்ரார்த்தயஸேஹந்து மநாகஸமிஹாகதம்।
தஸ்மாத் த்வாம் பூர்வமேவாஹம் நேதாத்யயமஸாதநம்।
த்ருஷ்ட்வாதம் ப்ரஹரிஷ்யந்தம் பால்குநம் த்ருடதந்விநம்।
கிராதரூபீஸஹஸா வாரயாமாஸ ஶங்கர꞉।
மயைஷ ப்ரார்த்தித꞉ பூர்வ மிந்த்ரநீலஸமப்ரப꞉।
அநாத்ருத்யச தத்வாக்யம் ப்ரஜஹாராத பால்குந꞉।
கிராதஶ்ச ஸமந்தஸ்மிந்நேகலக்ஷ்யே மஹாத்யுதி꞉।
ப்ரமுமோசாஶநிப்ரேக்யம் ஶரமக்நி ஶிகோபமம்।
தௌமுக்தௌ ஸாயகௌ தாப்யாம் ஸமம் தத்ரநிபேதது꞉।
மூகஸ்ய காத்ரே விஸ்தீர்ணே ஶைலஸம்ஹநநே ததா।
யதாஶநேர் விநிர்கோஷோ வஜ்ரஸ்யேவசபர்வதே।
ததாதயோஸ் ஸந்நிபாதஶ்ஶரயோரபவத்ததா।
ஸவித்தோபஹுபிர்பாணைர்தீப்தாஸ்யைஃ பந்நகைரிவ।
மமார ...   .   ।
அவலிப்தோஸி மந்தாத்மந்நமே ஜீவந்விமோக்ஷ்யஸே।
ஸ்திரோபவஸ்வ மோக்ஷ்யாமி ஸாயகாநஶநீரிவ।
கடஸ்வபரயா ஶக்த்யா முஞ்சத்வமபி சாயகாந்।
தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா கிராதஸ்யார்ஜுநஸ்ததா।
ரோஷமாஹாரயாமாஸ தாடயாமாஸ சேஷுபி꞉।
ததோ ஹ்ருஷ்டேந மநஸா ப்ரதிஜக்ராஹ ஸாயகாந்।
பூயோபூய இதி ப்ராஹ மந்தமந்தேத்யுவாசஹ।
ப்ரஹரஸ்வ ஶராநேதாந்நாராசாந்மர்மபேதிந꞉।
இத்யுக்தோபாணவர்ஷம் ஸமுமோச ஸஹஸார்ஜுந꞉।
ததஸ்தோ தத்ரஸம்ரப்தோ கர்ஜமாநௌ முஹுர்முஹு꞉।
ஶரைராஶீவிஷாகாரைஸ்ததக்ஷாதே பரஸ்பரம்।

ததோர்ஜுநஶ்ஶரவர்ஷம் கிராதே ஸமவாஸ்ருஜத்।
தத்ப்ரஸந்நேந மநஸா ப்ரதிஜக்ராஹ ஶங்கரஃ।
முஹூர்த்தம் ஶரவர்ஷம் தத்ப்ரதிக்ருஹ்ய பிநாகத்ருக்।
அக்ஷதேந ஶரீரேண தஸ்தௌ கிரிரிவாசலஃ।
ஸத்ருஷ்ட்வா பாணவர்ஷந்து மோகீபூதம் தநஞ்ஜயஃ।
பரமம் விஸ்மயம் சக்ரே ஸாதுஸாத்விதி சாப்ரவீத்।
அஹோயம் ஸுகுமாராங்கோ ஹிமவச்சிகராஶ்ரயஃ।
காண்டீவமுக்தாந் நாராசாந் ப்ரதிக்ருஹ்ணத்யவிஹ்வலஃ।
கோயம் தேவோ பவேத் ஸாக்ஷாத்ருத்ரோ யக்ஷஃ ஸுரோஸுரஃ।
வித்யதே கிரிஶ்ரேஷ்டே த்ரிதஶாநாம் ஸமாகமஃ।
நஹி மத்பாணஜாலாநாமுத்ஸ்ருஷ்டாநாம் ஸஹஸ்ரஶஃ।
ஶக்தோந்யஸ்ஸஹிதும் வேகம்ருதே தேவம் பிநாகிநம்।
தேவோ வா யதிவா யக்ஷோ ருத்ராதந்யோ வ்யவஸ்திதஃ।
அஹமேநம் ஶரைஸ்தீக்ஷ்ணைர்நயாமி யமஸாதநம்।
ததோ ஹ்ருஷ்டமநா ஜிஷ்ணுர் நாராசாந்மர்மபேதிநஃ।
வ்யஸ்ருஜச்ச ததா ராஜந் மயூகாநிவ பாஸ்கரஃ।
தாந் ப்ரஸந்நேந மநஸா பகவாந் லோகபாவநஃ।
ஶூலபாணிஃ ப்ரத்யக்ருஹ்ணச்சிலாவர்ஷமிவாசலஃ।
க்ஷணேந க்ஷீணபாணோத ஸம்வ்ருத்தஃ பால்குநஸ்ததா।
பீஶ்சைநமாவிஶத் தீவ்ரா தம் த்ருஷ்ட்வா ஶரஸங்க்ஷயம்।
சிந்தயாமாஸ ஜிஷ்ணுஶ்ச பகவந்தம் ஹுதாஶநம்।
புரஸ்தாதக்ஷயௌ தத்தௌ தூணௌ யேநாஸ்ய காண்டவே।
கிந்நு மோக்ஷ்யாமி தநுஷா யந்மே பாணாஃ க்ஷயம் கதாஃ।
அயஞ்ச புருஷஃ கோபி பாணாந்க்ரஸதி ஸர்வஶஃ।
ஹத்வா சைநம் தநுஷ்கோட்யா ஶூலாக்ரேணேவ குஞ்ஜரம்।
நயாமி தண்டதாரஸ்ய யமஸ்ய ஸதநம் ப்ரதி।
ப்ராஹ்ருஹ்யாத தநுஷ்கோட்யா ஜ்யாபாஶேநாவக்ருஷ்ய ச।
முஷ்டிபிஶ்சாபி ஹதவாந் வஜ்ரகல்பைர் மஹாத்யுதிஃ।
ஸம்ப்ரயுத்தோ தநுஷ்கோட்யா கௌந்தேயஃ பரவீரஹா।
ததப்யஸ்ய தநுர் திவ்யம் ஜக்ராஹ கிரிகோசரஃ।
ததோர்ஜுநோ க்ரஸ்ததநுஃ கட்கபாணிரதிஷ்டத।
யுத்தஸ்யாந்தமபீப்ஸந் வை வேகேநாபிஜகாம தம்।

தஸ்ய மூர்த்நி ஶிதம் கட்க மஸக்தம் பர்வதேஷ்வபி।
மமோச புஜவீர்யேண விக்ரம்ய குருநந்தநः।
தஸ்ய மூர்த்தாநமாஸாத்ய பபாலாஸிவரோஹிஸः।
ததோ வ்ருக்ஷைஶ்ஶிலாபிஶ்ச யோதயாமாஸ பால்குநः।
ததா வ்ருக்ஷாந்மஹாகாயः ப்ரத்யக்ருஹ்ணாததோஶிலாः।
கிராதரூபீ பகவாந் ததः பார்த்தோ மஹாபலः।
முஷ்டிபிர்வஜ்ரஸங்காஶைர் தூம்முத்பாதயந்முகே।
ப்ரஜஹார துராதர்ஷே கிராத ஸமரூபிணி।
ததஶ்ஶக்ராஶநிஸமைர் முஷ்டிபிர்ப்ருஶதாருணைः।
கிராதரூபி பகவாநர்த்தயாமாஸபாண்டவம்।
ததஶ்சட சடாஶப்தः ஸுகோரஸ்ஸமபத்யத।
பாண்டவஸ்யச முஷ்டிநாம் கிராதஸ்யச யுத்யதः।
ஸுமுகூர்த்தந்து தத் யுத்தமபவல்லோமஹர்ஷணம்।
புஜ ப்ரஹார ஸம்யுக்தம் வ்ருத்ரவாஸவயோரிவ।
ஜகாநாத ததோ ஜிஷ்ணுः கிராதமுரஸாபலம்।
பாண்டவஞ்ச விசேஷ்டதந்தம் கிராதோப்யஹநத்பலீ।
தயோர்புஜ விநிஷ்பேஷாத் ஸங்கர்ஷேணோரஸஸ்ததா।
ஸமஜாயத காத்ரேஷு பாவகோங்காரதூமவாந்।
தத ஏநம் மஹாதேவः பீட்யகாத்ரைஸ்ஸுபீடிதம்।
தேஜஸா வ்யக்ரமத்ரோஷாச் சேதஸ்தஸ்யவிமோஹயந்।
ததோநிபீடிதைர்காத்ரை; பிண்டீக்ருத இவாபபௌ।
பால்குநோ காத்ரஸம்ருத்தோ தேவதேவேந பாரத।
நிருச்வாஸோ பவச்சைவ ஸந்நிருத்தோ மஹாத்மநா।
பபாதபூம்யாம்நிஶ்சேஷ்டோ கதஸத்வ இவாபவத்।
ஸமுஹூர்த்தம் ததா பூத்வா ஸசேதாः புநருத்திதः।
ருதிரேணாப்லுதாங்கஸ்து பாண்டவோ ப்ருஶதுःகிதः।
ஶரண்யம் ஶரணம் கத்வா பகவந்தம் பிநாகிநம்।
ம்ருந்மயஸ்தண்டிலம் க்ருத்வா மால்யேந பூஜயத்பவம்।
தச்சமால்யம் ததாபார்த்தः கிராதஶிரஸிஸ்திதம்।
அபஶ்யத்பாண்டவஶ்ரேஷ்டோ ஹர்ஷேண ப்ரக்ருதிம் கதः।
பபாதபாதயோஸ்தஸ்ய ததः ப்ரீதோபவத்பவः।
உவாச சைநம் வசஸா மேககம்பீர நிர்ஹ்ராः।
ஜாதவிஸ்மயமாலோக்யதபः க்ஷீணாங்கஸம்ஹதிம்।
போபோ பால்குந துஷ்டோஸ்மி கர்மணா ப்ரதிமேநதே।
ஶௌர்யேணாநேந த்ருத்யாச க்ஷத்ரியோ நாஸ்திதே ஸமः।

பகவந்ததாஸி சேந்மஹ்யம் காமம் ப்ரீத்யா வ்ருஷத்வஜ|
காமயேதிவ்யமஸ்த்ரம் தத்கோரம் பாஶுபதம் ப்ரபோ|
யத்துப்ரஹ்மஶிரோ நாம ரௌத்ரம் பீமபராக்ரமம்|
யுகாந்தே தாருணே ப்ராப்தே க்ருத்ஸ்நம் ஸம்ஹரதே ஜகத்|
ததாமி தே ஸ்த்ரம் தயிதமஹம் பாஶுபதம் விபோ|
ஸமர்த்தோ தாரணே மோக்ஷ ஸம்ஹாரே சாஸி பாண்டவ|
தச்ச்ருத்வா த்வரிதஃ பார்த்தஃ ஶுசிர் பூத்வா ஸமாஹிதஃ|
உபஸம்கம்ய விஶ்வேஶமதீஷ்வேத்யத ஸோப்ரவீத்|
ததஸ்த்வத்யாடயாமாஸ ஸாஹஸ்ய நிவர்த்தநம்|
ததஸ்த்ரம் பாண்டவஶ்ரேஷ்டம் மூர்த்திமந்தமிவாந்தகம்|
உபதஸ்தே ச தத் பார்த்த யதாத்ர்யக்ஷமுமாபதிம்|
ப்ரதிஜக்ராஹ தச்சாபி ப்ரீதிமார்ஜுநஸ்ததா||

—மகாபாரதம்.

"(அருச்சுனன் தபசின் பெருமை உணர்த்தவந்த) மகாத்துமாக்களாகிய இருஷிகளெல்லாம் போனபிற்பாடு, பிநாகபாணியும் பகவானும் பாவமனைத்தையும் ஒழிப்பவருமாகிய ஹரன் எனப் பெயரிய சிவபிரான் பொன்தருவைநிகர்ப்ப வேடர் வேடம் பூண்டு, மற்ருேர் பெரிய மேருகிரிபோல விளங்கி, வில்லையும் விஷமுடைச் சர்ப்பங்கள்போலும் பாணங்களையுங்கொண்டு அக்கினிதேகம்போலத் தோற்ற மகாவேகத்தோடு (இமாசலத்திற்கு) வந்தார்; ஸ்ரீமானுகிய சிவபிரான் தம்மைப்போலக் கிராதவேடம் பூண்ட அம்மையாரோடும், நாநாவேஷம் பூண்ட மகிழ்வுடைய பூதங்களோடும், கிராதவேடம் பூண்ட ஆயிரக்கணக்காகிய பெண்களோடும் வந்தார்; அப்போது அந்த ஸ்தானமானது மிக்க பிரகாசமுடையதாயிற்று; க்ஷணப்போதிலே அவ்வனமுழுதும் நிச்சப்தமாயிருந்தது; நீரோட்டங்களுடையவும், பக்ஷிகளுடையவும் தொனிகள் உடனே ஓய்ந்துபோய்விட்டன; அவர் குற்றமில்லாத செய்கையினையுடைய அர்ச்சுனர்க்குச் சமீபத்தில்வந்து, அற்புதரூபத்தையுடையனுகிய மூகன் எனப்பெயரிய தனுவின் புதல்வன் பன்றிரூபத்தையெடுத்து அர்ச்சுனனைக் கொல்ல நினைந்து வருதலைக் கண்டார்; தன்னைக் கொல்ல நாடிவரும் சத்துருவைப் கண்டபோது அர்ச்சுனன் காண்டீவத்தையும் சர்ப்பவிஷம்போலும் பாணங்களையுமெடுத்து நாணோசையினுல் ஆகாயத்தை நிறைத்துவிட்டுப் பன்றியைநோக்கி நான் ஈண்டுவந்து உனக்குத் தீங்கு யாதுஞ்செய்திலேன்;

நீ என்னைக் கொல்ல நினைக்கின்றமையால் உன்னை நான் யமலோ கத்துக்கு அனுப்புவேன் என்று சொல்ல, பன்றியைக் கொல்ல நினைத்துநிற்கும் அந்தத் திருடமாகிய வில்லையுடைய அர்ச்சுனனை நோக்கி வேடரூபியாகிய சிவபிரான் நில்! நானே இந்திரநீலத்தை நிகர்த்த ஒளியினையுடைய இந்தப் பன்றியை இலக்காக்கினேன் என, அவ்வார்த்தையை அர்ச்சுனன் பொருட்படுத்தாது பன்றியை எய்தான்; அந்த இலட்சியத்திலே (பன்றியிலே) பேரொளியினராகிய கிராதவேடங்கொண்ட சிவபிரானும் சமமாக அக்கினிசிகையை நிகர்த்த பாணத்தைப் பிரயோகித்தார்; வஜ்ரமலைபோலும் காடின்னியமுடைய அகன்ற மூகன் சரீரத்தில் ஒரே போதிலே இரு பாணங்களும் ஊடுருவிய; இந்திரனுடைய இடியும் முழக்கமும் மலையில் வீழ்ந்தாற்போல, அவ்விருவர் பாணங்களும் மிகுந்த சப்தத்தோடு பன்றியின்மீது வீழ்ந்தன; சர்ப்பங்களை நிகர்த்த எண்ணிலாப் பாணங்களை உண்டாக்கும் இரு பாணங்களினால் அடியுண்ட மூகன் என்பான் தன் உயிர் நீங்கப்பெற்றான்; அர்ச்சுனன் (பன்றிமீது முதற்கண்ணே நான் பாணம் எய்தேன் என்று கூற, சிவபிரான் யாம் முதற்கண்ணே எய்தேம் என்று கூற, அது காரணமாக இருவர்க்கும் நேர்ந்த யுத்தம் வருமாறு):—மூட! நீ குற்றமுடையை, உன்னை உயிரோடு போகவிடேன்; (அர்ச்சுனு) நில்; இடியேற்றைநிகர்த்த பாணங்களை விடுகின்றேன்; நீயும் முயன்று மிகுந்த வலிமையோடு என்மேல் உன் பாணங்களைச் செலுத்து என்று கிராதர் கூறிய வார்த்தையைக் கேட்டு அர்ச்சுனன் கோபங்கொண்டு, பாணங்களை அவர்மேற் செலுத்தினன்; துஷ்டனே! துஷ்டனே!! என்று மேன்மேலுங் கூறி, மர்மத்தை ஊடுருவத் தக்க நாராசபாணங்களைச் செலுத்துவாயாக என்று கூறிக்கொண்டு, மகிழ்வினோடு அர்ச்சுனன் செலுத்திய பாணங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டார், கிராதராகிய சிவபிரான் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அர்ச்சுனன் பாணமழையை அவர்மீது சொரிந்தான்; பின் அவர்கள் இருவரும் அடிக்கடி கர்ச்சித்து யுத்தஞ் செய்யத்தொடங்கி, சர்ப்பவிஷத்தை நிகர்த்த பாணங்களை ஒருவர்க்கொருவர் செலுத்தத் தொடங்கினர்; அர்ச்சுனன் கிராதர் மீது பாணமழையைச் சொரிந்தான்; மகிழ்வினோடு சங்கரர் பொறுத்துக்கொண்டார்; பினகவில்லையுடையராகிய சிவபிரான் க்ஷணப்போது பாணவர்ஷங்களைத் தாங்கிப் பருவதம் போலக் காயமுறுமலும் அசையாமலும் நின்றார்; தன் பாணவர்ஷமெல்லாம் பயனற்றுப்போனமையைக் கண்ட அர்ச்சுனன் மிகுந்த ஆச்சரியமுற்றுச்

சொல்கின்றான்; நன்று! நன்று!! இந்த இமாசலத்தின்மேல் வசிக்கும் மிருதுவாகிய சரீரத்தையுடைய இந்த வேடன் காண்டீவத்தினின்று செலுத்தப்படும் பாணங்களை அசையாது பொறுத்துக்கொண்டிருக்கின்றான்; இவன் யாரோ? உருத்திரரோ? வேறு கடவுளோ? யக்ஷனோ? அசுரனோ? இந்த இமாசலத்திலே தேவர்கள் சிலபோது இறங்குவதுமுண்டு; பிநாகபாணியாகிய உருத்திரரேயன்றிக் காண்டீவத்தினின்று நான் செலுத்திய ஆயிரக்கணக்காகிய பாணங்களின் வேகத்தை எவர் சகிப்பார்! உருத்திரரொழிந்து இவன் கடவுளாயிருப்பினும், யக்ஷனாயிருப்பினும், நான் அவனை என் பாணங்களால் யமலோகத்துக்கு அனுப்பிவிடுவேன் என்று இங்ஙனம் அர்ச்சுனன் மகிழ்வினோடு நினைந்து சூரியப்பிரகாசத்தை நிகர்த்த நூற்றுக்கணக்காகிய பாணங்களைச் செலுத்தத் தொடங்கினான்; உலகத்தைப் பிரகாசிப்பிக்கின்றவரும், சூலபாணியுமாகிய கிராதர் அந்தப் பாணவர்ஷத்தைக் கன்மழையைத் தாங்கும் மலைபோலக் களிப்பினோடு பொறுத்தார்; உடனே அர்ச்சுனன் பாணமெல்லாம் ஒழிந்துபோயின; இவ்விஷயத்தைக் கண்டு அர்ச்சுனன் மிகுதியும் பயந்தான்; காண்டீவத்தைத் தகிக்கும்போது தனக்கு இரண்டு அழியாத பாணங்களைக் கொடுத்த அக்கினிதேவனை நினைந்தான்; என்னுடைய பாணங்களெல்லாம் ஒழிந்துபோயிற்றே என்று நினைத்தான்; என் வில்லிலிருந்து யான் எதை இப்போது செலுத்துவேன்; என் பாணங்களையெல்லாம் விழுங்கும் இவன் யார்? ஈட்டிகளால் யானைகள் கொல்லப்படுமாறுபோல என் வில் நுனியால் தண்டம் தாங்கும் யமனுடைய உலகத்துக்கு அனுப்பிவிடுவேன் என்று நினைந்து அர்ச்சுனன் வில்லை எடுத்து தன் வில் நாணினாற் கிராதரை இழுத்து இடியேறுபோலச் சில குட்டுகள் கொடுத்தான்; குந்திகுமாரனும் சத்துருசங்காரஞ் செய்பவனுமாகிய அர்ச்சுனன் வில்நுனிகொண்டு யுத்தஞ் செய்யத் தொடங்கினான்; கிராதவேடம்பூண்ட சிவபிரான் அவன் கைகளினின்று அந்தத் திவ்ய வில்லைப் பிடுங்கிவிட்டார்; வில்லும் பிடுங்குண்டுபோனமை கண்டு அர்ச்சுனன் தன் வாளை எடுத்து யுத்தத்தை முடிக்க விரும்பிச் சத்துருவுக்குக் கிட்டவந்தான்; பின்னர் அர்ச்சுனன் தன் கையின் முழுப்பலத்தோடும் வைரமலைகளாலும் தாங்குதற்கரிய அந்தக் கூரிய வாள்கொண்டு கிராதருடைய சிரசிலே தாக்கினான்; வாட்களுள்ளே சிறந்த இந்த வாள் கிராதர் முடியிற் பட்டவுடனே பொடிபட்டுப்போயிற்று; பின்னர் அர்ச்சுனன் கற்களும்

மரங்களுங்கொண்டு யுத்தஞ் செய்யத் தொடங்கினன்; கிராதவே டம் பூண்டகடவுள் மிகப் பொறுமையோடு மரவர்ஷத்தையும் கல் வர்ஷத்தையும் தாங்கினர்; அர்ச்சுனன் கோபத்தினல் வாயினின்று புகையெழக் கிராதவேடம்பூண்ட சிவபிரானைத் தன் கைமுஷ்டிகளி னல் இடியேறுபோலக் குத்தினன்; கிராதவேடம் பூண்டகடவுள் அர்ச்சுனர்க்கும் இந்திரனுடைய இடியேறு நிகர்த்த குத்துக்கள் கொடுத்தார்; அப்போது அர்ச்சுனனுக்கும் கிராதர்க்கும் இடையே நிகழ்ந்த யுத்தம் காரணமாக ஆங்குப் பயமுறத்தக்க சடசட சப் தங்கள் உண்டாயின; விருத்திரனுக்கும் இந்திரனுக்கும் முன்னளை யில் நேர்ந்த யுத்தம்போற் பயமுறத்தக்க யுத்தம் இவ்விருவர்க்கும் க்ஷணப்போது நிலேத்தது; கிராதரை அர்ச்சுனன் பிடித்துக்கட்டித் தன் நெஞ்சிேைடு அணைத்து நெருக்கினன்; ஆனல் மிக்கபலமுடைய கிராதர் புத்தியில்லாத அர்ச்சுனனைப் பலத்தோடு நெருக்கினர்; அவ்விருவருடைய புயங்களும் நெஞ்சுகளும் நெருக்கமுற்றமை காரணமாக அவர்கள் சரீரங்களில் நெருப்பிலிடப்பட்ட கரிபோலப் புகையுண்டாயிற்று; சிவபெருமான் பாண்டவகுமாரனுகிய அர்ச்சு னனை அடித்துத் தம் முழுபலத்தோடு கோபங்கொண்டு தாக்குங் கால் அவனுக்கு அறிவு இழந்துபோயிற்று; பின்னர் அர்ச்சுனன் தேவாதிதேவரால் நெருக்குண்டு அங்கங்கள் நசிந்து ஒடிந்தமை யால் அசைதற்குத்தானும் சக்தியின்றி மாமிசபிண்டம்போற் கிட ந்தான்; சிவபெருமானல் அடிபட்டமையால் அவன் மூர்ச்சையி ன்றி அசைதற்குச் சக்தியின்றிப் பூமியிலே வீழ்ந்து செத்தவ னைப்போலாயினன்; உடனே அறிவுபெற்றுச் சரீரமெல்லாம் இரத் தமோட எழுந்திருந்து துக்கம் மீதூரப்பெற்றுக் கிருபாநிதியாகிய தேவாதிதேவர் சந்நிதியிலே அக்கடவுள்வடிவை மண்ணினலமை த்து அதனை மாலைகளால் அலங்கரித்து வணங்கினன்; சிவபிரானு கிய மண்வடிவுக்கு அவன் இட்ட மாலையானது கிராதருடைய முடியை அலங்கரிக்கக் கண்டு பாண்டவகுமாரரிற் சிரேஷ்டனுகிய அர்ச்சுனன் சந்தோஷம் மீதூரப்பெற்றுத் தனது சுபாவத்தன்மை எய்தப்பெற்று அச்சிவபிரான் திருவடியிலே தண்டாகாரமாக வீழ்ந் தான்; சிவபிரானும் அவன்மீது மகிழ்வுற்று அர்ச்சுனன்கொண்ட ஆச்சரியத்தையும் தவத்தினல் அவன் சரீரம் இளைத்துப்போன மையையும் கண்டு இடியேறு போன்ற உரத்த சப்தத்தினற் சொல் கின்றார்; அர்ச்சுன! உனது நிகரில்லாச் செய்கைக்காக நாம் உன் மீது மகிழ்ச்சிகொண்டேம்; வலிமையினும் பொறுமையினும் உன

க்கு ஒப்பாகிய க்ஷத்திரியன் மற்றொருவன் இலன் என்றார்; (அர்ச்சுனன் சிவபிரானைநோக்கி) இடபக்கொடியுடைய சுவாமீ (நீவிர் திருவாய்மலர்ந்தருளியவாறு) எனக்கு விரும்பியதை அருளுவீராயின், பயங்கரப்படத்தக்க பராக்கிரமமுடைத்தாய், யுகாந்தத்திலே உலகம் அனைத்தையும் சங்கரிப்பதாயுள்ள பிரஹ்மசிரசு எனப்படும் அந்தக் கோரமாகிய திவ்ய பாசுபதாஸ்திரத்தை அருளுமாறு வேண்டுகின்றேன் என்று பிரார்த்திக்க, சிவபிரான் விரும்பற்பால தாம் அந்தப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுக்கின்றேம் நீ அதனைப் பிடிக்கவும் விடுக்கவும் ஒடுக்கவும் சமர்த்தனுதல் வேண்டும் என, அதனைக் கேட்ட அர்ச்சுனன் உடனே சுசியுடையனுய்ச் சிவபிரானை அடைந்து அதனை உபதேசிக்குமாறு கேட்டான்; அப்போது அவர் யமனை நிகர்த்த வடிவினையுடைய பாண்டவ சிரேஷ்டனுகிய அர்ச்சுனர்க்கு அவ்வஸ்திரத்தை விடுக்கவும் ஒடுக்கவும் தக்க இரகசியத்தை உபதேசித்தார்."

ஏவார்சிலையெயினன்னுருவாகியெழில்விசயற்
கோவாதவின்னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகிற்
சாவாதவர்பிறவாதவர்தவமேமிகவுடையார்
மூவாதபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே.

—ஞா, திருமுதுகுன்றம்.

ஆணியல்புகாணவனவாணவிபல்பேணியெதிர்பாணமழைசேர்
தூணியறநாணியறவேணுசிலைபேணியறநாணிவிசயன்
பாணியமர்பூணவருண்மாணுபிரமாணியிடமேணிமுறையிற்
பாணியுலகாளமிகவாணின்மலிதோணிநிகர்தோணிபுரமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

வேடனாய்விசயன்றன்வியப்பைக்காண்பான்
விற்பிடித்துக்கொம்புடையவேனத்தின்பின்
கூடினாருமையவளுங்கோலங்கொள்ளக்
கோலப்பகழியுடன்கோத்துக்கோரப்பூச
லாடினார்பெருங்கூத்துக்காளிகாண
வருமறையோடாறங்கமாய்ந்துகொண்டு
பாடினார்நால்வேதம்பாசூர்மேய
பாஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே.

—ஞா, திருப்பாசூர்.

பாடகஞ்சேர்மெல்லடிநற்பாவையாளு
நீயும்போய்ப்பார்த்தனதுபலத்தைகாண்பான்
வேடனாய்வில்வாங்கியெய்தநாளோ
விண்ணவர்க்குங்கண்ணவனாய்நின்றநாளோ
மாடமொடுமாளிகைகண்மல்குதில்லை
மணிதிகழுமம்பலத்தேமன்னிக்கூத்தை
யாடுவான்புகுவதற்குமுன்னோபின்னோ
வணியாரூர்கோயிலாக்கொண்டநாளே.

—நா, திருவாரூர்

துன்னுவார்சடைத்தூமதியானைத்
துயக்கறுவகைதோன்றுவிப்பானைப்
பன்னுநான்மறைபாடவல்லானைப்
பார்த்தனுக்கருள்செய்தபிரானை
யென்னையின்னருளெய்துவிப்பானை
யேதிலார்தமக்கேதிலன்றன்னைப்
புன்னைமாதவிபோதலர்நீடூர்ப்
புனிதனைப்பணியாவிடலாமே.

—சு, திருநீடூர்.

(சரு) கைலாஸம் தூக்கமுயன்ற இராவணன் சிவனார் பாதாங்குஷ்டத்தினால் நசிந்து பின்னர்ச் சாமகானம்பாடி வாளும் ஆயுளும்பெற்றமை.



பௌலஸ்த்ய: ஸர்வ[illegible] நந:।
[illegible] மதிஸ்திரா [illegible]।
தஸ்மிம் ஶைலேந்த்ர[illegible] கரோதி தபோவநே।
கேந ப்ரபாவேண ஸர்வோ நித்யம் க்ரீடதி ராஜவத்।
விஜ்ஞாதவ்யம் ந ஜாநீதே ஸஹஸா ந [illegible]।
[illegible]

ததோ யயௌ ரோஷதஶ்ஶீக்ரம் ஸ ஸைந்ய: ஸமராங்கணம்|
வாயுநா த்வரிதஶ்சைவ மஹா தேவஸ்ய கிங்கரா:|
பூர்வம் யாவத் தீவ்ராபி ததாஶ்லிஷ்ய ஸமேஹஸ்தரம்|
ததா ரஸா ஸஹாதேவோ தேவா நாம் ப்ரவரோத்தம:|
வாதாம் ஸம்ஹேந தம் ஶைலம் வீக்ஷ்ய பாதஸமீபயா|
வீக்ஷிதாஸ்தா ததஸ்ஸ்ய ஶைலஸம்ஸாரவஸமாஸுரா:|
விஷ்ணுதாஸ்ஸ்தவம்ஸ்த்ர ஸம்விதாஸ்தஸ்ய ரக்ஷஸ:|
ரக்ஷஸா தேந ராஷாது ஸுராநாம் வீக்ஷநாத்தயா|
ஊர்த்வகோ விராவஸ்ஸஹஸா தேந்த்ரோக்யம் பேநகம்விதம்|
ஶேஷிநோ வஜ்ரநிஷ்பேஷம் தஸ்யாரோத்யப்ரமக்ஷயே|
தஸ்மாத் தூர்ணம் ஸுரவரிதா தேவா இந்த்ர புரோகமா:|
ஸமுத்ராஶ்சாபி ஸம்க்ஷுப்தாஶ்சரிதாஶ்சாபி பர்வதா:|
யக்ஷா வித்யாதரா ஸித்தா: கிம்நரீஶ்சாப்ஸரோவரா:|
தோஷயஸ்ய மஹாதேவம் நீலகண்டம் ஸுரோத்தமம்|
த்வத்தே ஶரணம் நாந்யம் பஶ்யாமோத்ய தயாநிதே|
ஸ்துதிபி: ப்ரணதைர் ஸங்கா ததைவ ஶரணம் வ்ரஜ|
க்ருபார்த்ரஸ்ஸங்கல்பஸ்ஸுஷ்டு: ப்ரஸாதம் தே விதாஸ்யதி|
ஸுரஸங்கஸ்ததா ஸோதேந்த்ர ஸுஷேண வ்ருஷபத்வஜம்|
ஸாம்பிவீர்யை: ஸ்தோத்ரை: ப்ரணம்ய ஸ தயாநிதி:|
ஸம்வத்ஸர ஸஹஸ்ர ஸங்கம் ரக்ஷிதா ரக்ஷோபாபதம்|
தத: ஸ்ரீதேந மஹாதேவ: ஶைலாத்ரே விஷ்ணுதா ப்ரபு:|
ஊர்த்வக்காயஸ்ய ஸுராஞ்ச ப்ராஹவாக்யம் தயாநிதி:|
ஸ்ரீதோஷிதவீரஸ்ய ஶௌண்டீர்யாத்த்வ தயாநிதே|
ஶைலாக்ராண்யேந யோத்யக்ஷ ஸபாரவ: ஸுராஸுரா:|
யஸ்மாத் கோத்யயஶ்சேதத்ராவிதம் பயமாகதம்|

தஸ்மாத்த்வம் ராவணோ நாம நாம்நா ராஜந்பவிஷ்யஸி|
தேவதா மாநுஷா யக்ஷா யே சாந்யே ஜகதீதலே|
ஏவம் த்வாமபிதாஸ்யந்தி ராவணம் லோகராவணம்|
கச்ச பௌலஸ்த்ய விஸ்ரப்தம் பதா யேந த்வமிச்சஸி|
ஈஶ்வரேணாப்யநுஜ்ஞாதோ ராக்ஷஸாதிப மத்யதாம்|
ஸ ஏவமுக்தஸ்து லங்கேஶஶ்ஶம்புநா ஸ்வயமப்ரவீத்|
ப்ரீதோ யதி மஹாதேவ வரம் மே தேஹி யாசத:|
அவத்யத்வம் மயா ப்ராப்தம் தேவகந்தர்வதாநவை:|
ராக்ஷஸைர் குஹ்யகைர் நாகைர் யே சாந்யே பலவத்தரா:|
மாநுஷாந்ந கணே தேவ ஸ்வல்பாஸ்தே மம ஸம்மதா:|
தீர்கமாயுஶ்ச மே ப்ராப்தம் ப்ரஹ்மணஸ்த்ரிபுராந்தக|
வாஞ்சிதம் சாயுஷ: ஶேஷம் ஶஸ்த்ரம் த்வம் ச ப்ரயச்ச மே|
ஏவமுக்தஸ்ததஸ்தேந ராவணேந ஸ ஶங்கர:|
ததௌ கட்கம் மஹாதீப்தம் சந்த்ரஹாஸமிதி ஶ்ருதம்|
ஆயுஷஶ்சாவஶேஷம் ச ததௌ பூதபதிஸ்ததா||

பர்வதந்து ஸமாஸாத்ய வாக்யமாஹ தஶாநந:।
புஷ்பகஸ்ய கதிஶ்சிந்நா யத்க்ருதே மம கச்சத:|
தமிமம் சைலமுந்மூலம் கரோமி தவகோபதே।
கேநப்ரபாவேண பவோநித்யம் க்ரீடதி ராஜவத்|
விஜ்ஞாதவ்யம் நஜாநீதே பயஸ்தாநமுபஸ்திதம்|
ஏவமுக்த்வா ததோராம புஜாந்விக்ஷிப்ய பர்வதே|
தோலயாமாஸதம் ஶீக்ரம் ஸ சைலஸ் ஸமகம்பத|
சாலநாத்பர்வதஸ்யைவ கணா தேவஸ்யகம்பிதா:|
சசாலபார்வதீசாபிததாஶ்லிஷ்டாமஹேஶ்வரம்।
ததோராமமஹாதேவோ தேவாநாம் ப்ரவரோஹர:।
பாதாங்குஷ்டேந தம் சைலம் பீடயாமாஸலீலயா।
பீடிதாஸ்து ததஸ்தஸ்ய சைலஸ்தம்போபமா புஜா:|

விஸ்மிதாஸ்சாபவந்தத்ர ஸசிவாஸ்தஸ்ய ரக்ஷஸ:।
ரக்ஷஸா தேந ரோஷாச்ச புஜாநாம் பீடநாத்ததா।
முக்தோவிராவஸ்ஸஹஸா த்ரைலோக்யம் யேநகம்பிதம்।
மேநிரே வஜ்ரநிஷ்பேஷம் தஸ்யாமாத்யாயுகக்ஷயே।
ததாவர்த்ம ஸஞ்சலிதா தேவா இந்த்ரபுரோகமா:।
ஸமுத்ராஸ்சாபி ஸம்க்ஷுப்தாஸ்சலிதாஸ்சாபி பர்வதா:।
யக்ஷாவித்யாதராஸ்ஸித்தா: கிமேததிதிசாப்ருவந்।
தோஷயஸ்வ மஹாதேவம் நீலகண்டமுமாபதிம்।
தம்ருதே ஶரணம் நாந்யம் பஶ்யாமோத்ர தஶாநந।
ஸ்துதிபி: ப்ரணதோ பூத்வா தமேவ ஶரணம் வ்ரஜ।
க்ருபாலுஶ்ஶங்கரஸ்துஷ்ட: ப்ரஸாதந்தே விதாஸ்யதி।
ஏவமுக்தஸ்ததாமாத்யைஸ்துஷ்டாவ வ்ருஷபத்வஜம்।
ஸாமபிர்விவிதை: ஸ்தோத்ரை: ப்ரணம்ய ஸதஶாநந:।
ஸம்வத்ஸரஸஹஸ்ரந்து ருததோ ரக்ஷஸோகதம்।
தத: ப்ரீதோ மஹாதேவ: ஶைலாக்ரே விஷ்டிதம் ப்ரபு:।
முக்த்வாசாஸ்ய புஜாந்ராம ப்ராஹவாக்யம் தஶாநநம்।
ப்ரீதோஸ்மி தவவீரஸ்ய ஶௌடீர்யாச்சதஶாநந।
ஶைலாக்ராந்தேந யோமுக்தஸ்த்வயாராவ:ஸுதாருண:।
யஸ்மால்லோகத்ரயஞ்சைதத்ராவிதம்பயமாகதம்।
தஸ்மாத் த்வம் ராவணோநாம நாம்நாராஜந்பவிஷ்யஸி।
தேவதா மாநுஷா யக்ஷாயேசாந்யே ஜகதீதலே।
ஏவம் த்வாமபிதாஸ்யந்திராவணம் லோகராவணம்।
கச்சபௌலஸ்த்ய விஸ்ரப்தம் பதாயேநத்வமிச்சஸி
மயா சைவாப்யநுஜ்ஞாதோ ராக்ஷஸாதிபகம்யதாம்।
ஏவமுக்தஸ்து லங்கேஶஶ்ஶம்புநா ஸ்வயமப்ரவீத்।
ப்ரீதோயதிமஹாதேவ வரம் மே தேஹி யாசத:।
அவத்யத்வம் மயாப்ராப்தம் தேவகந்தர்வதாநவை:।
ராக்ஷஸைர்குஹ்யகைர்நாகைர்யேசாந்யே பலவத்தரா:।
மாநுஷாந்ந கணேதேவ ஸ்வல்பாஸ்தேமமஸம்மதா:।
தீர்க்கமாயுஸ்ச மே ப்ராப்தம் ப்ரஹ்மணஸ்த்ரிபுராந்தக।
வாஞ்சிதம் சாயுஷஶ்ஶேஷம் ஶஸ்த்ரம் த்வஞ்சப்ரயச்சமே।
ஏவ முக்தஸ்ததஸ்தேநராவணேந ஸஶங்கர:।
ததௌ கட்கம் மஹாதீப்தம் சந்த்ரஹாஸமிதிஶ்ருதம்।
ஆயுஷஶ்சாவஶேஷஞ்சததௌபூதபதிஸ்ததா॥

"(அந்த இராவணன் குபேரனை செயித்து, குமாரப்பெருமான் அவதரித்ததாயும், மகிமை வாய்ந்ததாயுமுள்ள சரவணப்பொய் கையை அடைந்தான்; பின்னர் இராவணன் பொன்வடிவுற்றதும் மகிமைவாய்ந்ததுமாகிய சரவணப்பொய்கையைப் பார்த்தான்; ஒளிக்கூட்டங்களினாலே சூழப்பட்டதாயும் துவிதியசூரியனை நிகர்த்ததாயுமுள்ள பருவதத்தில் ஏறி, இரம்மியமாகிய வேறுசில வனங்களைப் பார்க்குமாறு போய் அவன் அங்கே தடைப்படுத்தப்பட்டு நிற்கும் புஷ்பவிமானத்தைக் கண்டு, சுவேச்சையாகச் செல்லும் இந்தப் புஷ்பகவிமானம் தடைப்பட்டமைக்குக் காரணம் யாது? யாதுபற்றிச் சென்றிலது என்று அமாத்தியர்களோடு சேர்ந்து இராவணன் ஆலோசித்தான்; எக்காரணம்பற்றித் தனது புஷ்பகம் சுவேச்சையாகச் செல்லவில்லை என நினைந்து மலையின்மேலிருப்போர் எவரேனும் இச்செய்கை செய்திருக்கலாம் என்றான்; அதற்குப் புத்திமானாகிய மாரீசன் கூறியதாவது:—அரசனே! இந்தப் புஷ்பகம் செல்லாமைக்கு இது காரணமன்று; இந்தப் புஷ்பகம் குபேரனுக்கன்றி மற்றொருவர்க்கில்லை; ஆகலின், குபேரனலன்றி மற்றொருவரால் றடைப்படுத்தப்படவில்லை; இவ்வார்த்தை நிகழ்தற்கு மத்தியிலே வக்கிரதந்தரும் கரியபிங்கலவர்ணரும், வாமனரும், விகடரும், முண்டிதரும் குறுகிய புஜத்தோடியைந்தவரும், வன்மையுடையரும், சிவபெருமானுடைய அணுக்கத் தொண்டருமாகிய நந்திதேவர் சமீபத்தில் வந்து அச்சமின்றி இவ்வார்த்தையை இராவணனுக்குச் சொல்கின்றார்; சங்கரர் மலையின்மீது விளையாடுகின்றார்; திரும்பிவிடு; மலையானது கருடப்பக்ஷிகளுக்கும், பாம்புகளுக்கும், யக்ஷர்களுக்கும், தேவர்களுக்கும், கந்தருவர்களுக்கும், இராக்ஷசர்களுக்கும், பூதர்கள் முதலிய அனைவர்க்கும் எட்டாது அமைந்துளது என்றார்; இவ்வார்த்தையைக் கேட்டு இராவணன் கோபத்தினாலே அசையும் குண்டலமுடையனாய் ரோஷத்தினாலே தாம்பிரம்போலும். சிவந்தகண்ணுடையனாய்ப் புஷ்பகத்தினின்று இறங்கி, சங்கரர் யாவர்! என்று கூறிப் பர்வதத்தின் அடியிலே வந்தான்; அவன் சிவபிரானுக்குச் சமீபத்திலே நிற்கும் நந்திதேவரைப் பார்த்தான்; ஒளியுடைச் சூலம் பிடித்துத் துவிதியசங்கரரை நிகர்த்திருக்கும் அந்நந்திதேவரைப் பார்த்தான்; வானரமுகமுடையராகவிருக்கும் அவரைப் பார்த்து நிந்தித்து நீருண்டமேகம்போலச் சிரித்தான்; துவிதியசங்கரர்க்கு ஒப்பாகிய சரீரத்தையுடைய நந்திபெருமான் கோபமுற்றுச் சமீ

பத்திலே நிற்கும் இராவணனைப் பார்த்து இங்ஙனம் கூறுவாரா யினர்; இராவணா! யாது காரணம்பற்றி என்னை வானரரூபி என்று நிந்தித்தனை? இடியேறு நிகர்ப்பச் சிரித்தனை? அங்ஙனம் நிந்தித் தமையின், எனது வீரியத்தோடு கூடியதாயும், எனது ரூபத்துக் குச் சமானமாயுமுள்ள தேஜஸையுடையனவாயுமுள்ள வானரங்கள் உன் குலத்தை நாசமாக்குமாறு பிறக்கும்; நகங்களையும் பற்களையு மே ஆயுதமாகவுடையவைகளாய், குரூரமனசுடையனவாய், வேக முடையனவாய் விடாது யுத்தஞ் செய்புமியற்கையுடையனவாய், மிகுபலமுடையனவாய், மலைபோல் வனவாய்ப் பரந்தனவாயுமுள்ள வாநரங்கள் மந்திரிமார் புதல்வர்களோடு உனது மிகுந்த கர்வத்தை யும், பலவிதமான கொழுப்பையும் ஒழித்துவிடுவார்கள்; ஆயின், இராக்ஷதனே! இப்போது நான் உன்னைக் கொல்லும் வன்மை யுடையேன்; ஆயின் கொல்லுதல் கூடாது; உன் செய்கைகளால் நீயே முன்னர்க் கொலையுண்டனை; மகானாகிய நந்திதேவர் இங்ஙு னம் அருளியபோது, தேவதுந்துபிகள் முழங்கின; ஆகாயத்தி னின்று புஷ்பவிருஷ்டியும் வீழ்ந்தது; மகாபலசாலியாகிய இராவ ணன் நந்திபெருமானுடைய வாக்கியத்தைக் கவனிக்காது மலையை அடைந்து இங்ஙனம் கூறுவானாயினன்):—

போய்க்கொண்டிருந்த எனது புஷ்பகத்தின் செல்கை எந்த மலையிற் றடைப்படுத்தப்பட்டதோ. பசுபதியே! உனது இந்த மலையை அடியோடு பெயர்த்துவிடுகின்றேன்; சிவபிரான் யாது பிரபாவத்தினால் இவ்விடத்தில் அரசனைப்போல விளையாடிக் கொண்டிருக்கின்றார்; இப்போது எய்தும் பயத்தை யாதென் றுணர்ந்திலர்; தெரியச்செய்கின்றேன் என்று இங்ஙனம் சொல் லிக்கொண்டு புயங்களை மலையிலே கொடுத்து அம்மலையை உடனே அளந்தான்; அப்பருவதம் நடுங்கிற்று; பருவதம் அசைந்தமை யாலே தேவகணங்கள் அசைந்தன; பார்ப்பதியாரும் அசைந் தார்; அப்போது அவர் மகேசுவரரை ஆசிரயித்துக்கொண்டனர்; பின்னர்த் தேவர்களுள்ளே தலைமைபடைத்தோரும், மகாதேவரு மாகிய சிவபெருமான் லீலார்த்தமாகத் தமது பாதாங்குஷ்டத்தி னாலே அம்மலையை அழுத்தினர்; அவனது மலைக்கொப்பாகிய புஜங்கள் அழுந்தின; அவ்விடத்திலே அவனுடைய மந்திரிமார் கள் ஆச்சரியமுற்றனர்; இராக்ஷதன் கோபத்தினாலும், புயங்கள் அழுத்தப்பட்டமையினாலும் உடனே அழுதான்; அழுகையினா

லே திரிலோகமும் நடுங்கிற்று; அவனுடைய மந்திரிமார் யுகமுடி வின்பொருட்டு உண்டாகிய இடியேற்று முழக்கமோ என நினைத் தார்கள்; அக்காலையில் மார்க்கத்திலே செல்லும் இந்திராதி தேவர்களோடு சமுத்திரங்கள் கலங்கின; மலைகளும் அசைந்தன; யக்ஷர், வித்தியாதரர், சித்தர் என்பேர் இஃதென்னை! என்று கூறினர்; இராவணனே! வணக்கமுடையனுய்த் தோத்திரங்களினுலே நீலகண்டரும் மகாதேவருமாகிய உமாபதியார்க்குச் சந்தோஷம் உண்டாமாறு செய்; அவரைவிடுத்துப் புகலிடம் பிறிதொன்று காண்கிலம்; அவரையே சரணடை; இங்ஙனம் அமாத்தியர் கூறியபோது, இராவணன் வணங்கிப் பல்வகைச் சாமவேத ஸ்தோத்திரங்களினுலே விடைக்கொடியாரை ஸ்துதித்தான்; அழுது கொண்டிருக்கும் இராக்ஷசனுக்கு இங்ஙனம் ஆயிரம் வருஷஞ் சென்றது; பின்னர் மலைச்சிகரத்தில் எழுந்தருளியிருக்கும் மகா தேவராகிய சிவபிரான் பிரீதியுற்று இவனுடைய புஜங்களை விடுவித்து இராவணனுக்குத் திருவாய்மலர்ந்தருளுவாராயினர்; இராவணு! வீரனுகிய உனது பராக்கிரமத்தையுற்றுப் பிரீதியுற்றேம்; மலையினுலே தாக்கப்பட்டபோது பயங்கரப்படத்தக்க உனது சப்தம் கேட்டது; எக்காரணத்தினுல் மூவுலகமும் சப்தத்தினுற் பயமுற்றனவோ, அக்காரணத்தால் அரசனே! நீ இராவணன் என்னும் பெயரோடு இருப்பாய்; தேவர்களும், மனிதர்களும், யக்ஷர்களும், பூமியிலுள்ள மற்றையோரும் உலகத்தைப் பயமுறுத்தினேன் (என்னும் பொருள்பட) இராவணன் என வழங்குவார்கள்; இராவணனே! விசுவாசத்தோடு நீவிரும்பும் மார்க்கத்தினுற் போவாயாக; என்னுல் இவ்வாறு ஆஞ்ஞாபிக்கப்பட்டது; இராக்ஷசாதிபனே! போவாயாக; இங்ஙனம் சிவபிரான் கூறியபோது இலங்கேசன் சொல்வானுயினன்; மகாதேவரே! பிரீதியுடையீரேல் யாசிக்கும் எனக்கு ஓர் வரம் கொடுத்தருள்க; திரிபுரதகனரே! பிரமாவிடத்திருந்து தேவர்களாலும் கந்தருவர்களாலும், தானவர்களாலும், இராக்ஷதர்களாலும், குஹ்யர்களாலும், நாகர்களாலும் கொல்லப்படாமையைப் பெற்றுக்கொண்டேன்; மனிதனிலும் அதிகபலமுள்ளவர்களை நான் பொருட்படுத்தேன்; அவர்கள் தேவர்களுக்குள்ளே அற்பர்கள் என்பது எனது கொள்கை; பிரமாவிடத்திருந்து நீடிய ஆயுளும் பெற்றுக்கொண்டேன்; எனக்கு விருப்பமுடைய ஆயுளின் எஞ்சிய பாகத்தையும் ஆயுதத்தையும்,

கொடுத்தருள்க; இங்ஙனம் இராவணன் சிவபெருமானை வேண்டினன்; பூதநாயகராகிய சிவபெருமான் சந்திரஹாசம் எனப் பெயரிய மகாப்பிரகாசத்தையுடைய வாளையுங் கொடுத்து எஞ்சிய பாகமாகிய ஆயுளையும் கொடுத்தார்" என்று இராமாயணம் கூறுகின்றது.

கருப்பமிகுழுடலடர்த்துக்காலூன்றிக்கைமறித்துக்கயிலையென்னும்
பொருப்பெடுக்கலுறுமரக்கன்பொன்முடிதோணெரித்தவிரற்புனிதர் [கோயி
றருப்பமிகுசலந்தரன்றனுடறடிந்தசக்கரத்தைவேண்டியீண்டு
விருப்பொடுமால்வழிபாடுசெய்யவிழிவிமானஞ்சேர்மிழலையாமே.

—ஞா, திருவீழிமிழலை.

இமையவரஞ்சியோடவெதிர்வாரவர்தம்மையின்றி
யமைதருவல்லரக்கன்னடர்த்தும்மலையன்றெடுப்பக்
குமையதுசெய்துபாடக்கொற்றவாளொடுநாள்கொடுத்திட்
டுமையொடிருந்தபிரான்பிரமாபுரமுன்னுமினே.

—ஞா, திருப்பிரமபுரம்.

கடுகியதேர்செலாதுகயிலாயமீதுகருதேலுன்வீரமொழிநீ [யா
முடுகுவதன்றுதன்மமெனநின்றுபாகன்மொழிவானைநன்றுமுனி
விடுவிடுவென்றுசென்றுவிறைவுற்றரக்கன்வரையுற்றெடுக்கமுடி [தோ
ணெடுநெடுவிற்றுவீழவிரலுற்றபாதநினைவுற்றதென்றன்மனமே.

—நா, தசபுராணம்.

அறிவினன்மிக்கவறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்
துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

—சு, திருப்புன்கூர்.

(சகூ) விஷ்ணு ஆயிரம் கமலங்களாற் சிவபெருமானைப் பூசித்துப் சக்கரம் பெற்றமை.

யோ வாமபாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ்தஸ்மை
ததௌ சக்ரமதீவ ஹ்ருஷ்ட: । தஸ்மை ருத்ராய
நமோஸ்து ।

யோ வாமபாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ் தஸ்மை த
தௌ சக்ரமதீவ ஹ்ருஷ்ட: । தஸ்மை ருத்ராய நமோ
ஸ்து ।

"எவர் வலது பாதத்திலே பூசிக்கப்பட்ட விஷ்ணுவின் நேத்திரத்தையுடையராய், (அதனால்) மிகமகிழ்வுற்று அந்த விஷ்ணுவுக்குச் சக்கரத்தைக் கொடுத்தாரோ, அவ்வியல்பினராகிய சிவபெருமானுக்கு நமஸ்காரம் உளதாகுக" என்று சரபோபநிஷத்திலும்,

ஶக்ராத்யா ஸுராஸ்ஸர்வே ஸம்ப்ராப்தே மஹதா ததா: ।
விஷ்ணும் ஶரணமேத்யைதே தேவதா வ்ருஜிநார்தவ: ।
ஸ ச தேவஸ்ஸமாக்ருஷ்ட்யாராத்ய த்ர்யம்பகம் ப்ரபும் ।
ஸுதர்ஶநேந ஶ்ரேஷ்டேந ரக்ஷணே விநியோஜித: ।
துஷ்டாநாம் ஶிக்ஷணே ஶிஷ்டரக்ஷணே ச விஶேஷத: ।
ஸத்வம் ஶாயிதே வா நாதே நாயா ஸர்வாயுதேஷு ।
இதி ஶ்ருத்வா ஹரிஸ்தேஷாம் வச: ப்ராஹ வயோக்ஷ்ய தாந் ।
ஶ்ரேயாம்ஸி ந ஹ்யஸ்த்வா ஸர்வா க்ருபயைவ ந: ।
சக்ரம் தயீசி வஜ்ராஸ்திக்ஷ்ணம் தாரம் பஹுவ்ரதம் ।
தர்மசாரோ ஹயஶ்ருஷ்டேந நிர்மிதம் ।
ஜயம் யாரவ்யாக்தம் யத்தத்ஸம் ஸர்வயந்த்ரவாநு ॥
விஷ்ணுஸ்தத்ஸ்தாயம்ஜ்வநாந: காம்ஷிராஸாத்ய வரம் ஹிதம் ।

𑌲𑌬𑍍𑌧𑍁𑌕𑌾𑌮𑍋𑌰𑍍𑌚𑌯𑌾𑌮𑌾𑌸 𑌕𑌮𑌲𑍈𑌰𑌨𑍍𑌵𑌹𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍।
யோ தக்ஷயஜ்ஞே ஸுரஸங்காந் விஜித்ய விஷ்ணும்பபந்தோ ரகபாஶேந வீரஸ்தஸ்மை ருத்ராய நமோ ஸ்து।

“எந்த வீரர் தக்ஷயாகத்திலே தேவகூட்டங்களை செயித்து விஷ்ணுவை நாகபாசத்தினால் கட்டினாரோ, அந்த *உருத்திரர்க்கு நமஸ்காரம்” என்று சரபோபநிடதமும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

* இதனால் உருத்திராகிய சிவபெருமானுக்கும் தக்ஷயஞ்ஞத்தை அழித்த அவர் குமாரர் எனப்படும் வீரபத்திரர்க்கும் பேதமில்லை என்றாயிற்று.

𑌚𑌿𑌚𑍍𑌛𑍇𑌦 𑌤𑌸𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌂 𑌦𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌅𑌜𑌂 𑌶𑌿𑌰𑌶𑍍𑌚 𑌦𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌕𑌬𑌨𑍍𑌧𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌾𑌪𑌿𑌨𑌃।
𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌯𑍋𑌜𑌯𑌾𑌮𑌾𑌸 𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌕𑌃।
𑌤𑌤𑍋 𑌦𑌕𑍍𑌷𑌃 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌪𑌾𑌦𑌿𑌵 𑌭𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃।
𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌵𑍀𑌰𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌪𑌾𑌪𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌕𑌮𑍍॥

இதி கௌர்யா வசஶ்ஶ்ருத்வா புநர்தக்ஷப்ரஜாபதி:।
தத்பார்யாத்வஞ்ச நைவ ஸ்யாத்யாகம் த்ரஷ்டுமிஹார்ஹஸி।
ந ஜாமாதா தவபதிர் நபுத்ரீத்வஞ்சஸத்யத:।
தஸ்மாத் தவபதேர்யாகே ந தாஸ்யாமி ஹவிர்வரம்।
இதிதஸ்ய வசஶ் ஶ்ருத்வா தஸ்தே கௌரீ க்ருதாந்விதா।
ததா ஸர்வேபி தத்ரத்யா பிப்யுர்தேவீம் ஸமீக்ஷ்ய தே।
தண்டேந தாடயத் விஷ்ணோருரோமத்யேதிவீர்யவாந்।
ததாரீம் கௌஸ்துபம் ரத்நம் பத்மாச ததுரோகதா।
பிந்நா பபாத ஶதஶோ பூமிப்ருஷ்டே த்விஜோத்தமா:।
பதித்வா தரஸா விஷ்ணுர் முமோஹ கதவிக்ரம:।
விதாதாரம் ததோ மூர்த்நி முஷ்டிநா குட்டயத்விபு:।
பபாத ஸோபி மோஹேந யாவத்தூர்ணம் ப்ரஜாபதி:।
காயத்ரீமபி ஸாவித்ரீம் ப்ரஹ்மாணீமபி நிர்கதாம்।
சிஹ்நநாஸா குசாம்ஶ்சக்ரே கரவாளேந வீரப:।
ததஸ்து சந்த்ரம் தாவந்தம் பாதேந தாட்ய ஸத்வவாந்।
கபோலே தாடயாமாஸ ஸூர்யஸ்யாத்புதவிக்ரம:।
பக்நா தந்தாஸ்ததா தஸ்ய நிபேது: ப்ருதிவீதலே।
பகஸ்யோத்பாடயாமாஸ லோசநே த்வே துராத்மந:।
இந்த்ரம் கோகிலரூபேண நிர்யாந்தமபி ஸோச்சிநத்।
அக்நேர் ஹஸ்தாஞ்ச ரஸநாம் ஹவிர்போக்தாகண்டயத்।
ம்ருகரூபேண தாவந்தம் யஜ்ஞம் யாகக்ருஹாந்தரே।
நிருத்யபுரதோ கத்வா சிச்சேதாஸ்த்ரேண மந்யுநா।
வீரபத்ரஸ் ஸமுத்ப்லுத்ய கட்கமாதாய வேகத:।
சிச்சேத தஸ்யமூர்த்தாநம் தக்ஷஸ்யாஸ்ய துராத்மந:।
அஜம் ஶிரஶ்ச தக்ஷஸ்ய கபந்தே தஸ்ய பாபிந:।
ப்ராணேந யோஜயாமாஸ ஶிவாஜ்ஞா பரிபாலக:।
ததோ தக்ஷ: ஸமுத்தாய ஸ்வாபாதிவ பயாந்வித:।
ப்ரணம்ய வீரபத்ரந்தம் ஸ்மரந்பாபமபி ஸ்வகம்॥

"(நான் உனக்கு யாது அபராதஞ் செய்தேன் சொல்க என்று உமையம்மையார் கேட்க) இவ்வசனத்தைக் கேட்டுத் தக்ஷ பிரஜாபதி அவனுடைய (சிவனுடைய) மனைவியாதலின், நீ என் யாகத்தைம் பார்த்தற்கு அருகமுடையை அல்லை; உன் நாயகன் என் மருகனுமன்று; நீ என் புத்திரியுமன்று; உன் நாயகனுக்குச் சிரேஷ்டமாகிய அவிசைக் கொடுப்பேனல்லேன்; ஆகலின், நீ பேசாது போய்விடு என்று சொல்லிய வார்த்தையைக் கேட்டு அம்மையார் கோபங்கொண்டபோது அங்குள்ளாரனைவரும் தேவி யாரைப்பார்த்துப் பயமடைந்தார்கள்" என்றும்,

"வீரபத்திரர் விஷ்ணுவினுடைய உரத்துமத்தியிலே தண்டத்தினாற் புடைக்க, அவர் நெஞ்சிலுள்ள கௌஸ்பாத்தின மும் பதுமமும் நூறுபிரகாரமாக உடைந்து பூமியில் வீழ்ந் தன; விஷ்ணுவும் உடனே வீழ்ந்து பலமிழந்து மூர்ச்சித்தார்; பிரமாவின் சிரசிலே வீரபத்திரர் முஷ்டியினாற் குட்டினார்; புறப்பட்டுப் போகவந்த காயத்திரி, சாவித்திரி, சரசுவதி என்போருடைய மூக்கையும் குசங்களையும் கைவாளினால் வெட்டினர்; ஓடத் தொடங்கிய சந்திரனைப் பாதத்தினாலே தேய்த்துவிட்டார்; சூரியனுடைய கபோலத்திலே அடிக்கப் பூமியிலே அவன் பற்கள் உதிர்ந்து வீழ்ந்தன; பகன் என்பானுடைய இரு நேத்திரங்களையும் பிடுங்கிவிட்டார்; குயில்வடிவங்கொண்டு பறந்த இந்திரனை வெட்டி விட்டார்; அவிசுண்ணும் அக்கினிதேவனுடைய கையையும் நாக்கையும் கொய்துவிட்டார்; மான் உருவங்கொண்டு ஓடிய *யஞ்ஞ தெய்வத்தை யாகசாலையினின்று புறத்தே போகவொட்டாது தடுத்து அஸ்திரத்தினால் (அவன் தலையை) அறுத்துவிட்டார்; துஷ்டனாகிய தக்கனுடைய தலையைத் தமது வாள்கொண்டு பாய்ந்து வெட்டிவிட்டார்; (பின்னர்ச்) சிவாஞ்ஞையினாலே வீரபத்திரர் பாவியாகிய அந்தத் தக்கனுடைய கபந்தத்திலே ஆட்டுத்தலையைப் பொருத்தி அவனை உயிர்ப்பித்துவிட்டார்; தக்கன் சொப்பனத்தினின்றெழுந்தாற்போலப் பயத்தினோடு எழுந்து நின்றான்" என்றும் ஸ்காந்தபுராணமும்,

---

* திருவாசகத்துத் திருவுந்தியார் கO-ம் திருப்பாட்டிற் கண்ட வியாத்திரன் யஞ்ஞதெய்வமாகிய எச்சனே.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தாவை ருத்ரமஜாநந்த்யோ யாதாதத்யேந தேவதா꞉|
நாகல்பயந்த தேவஸ்ய ஸ்தாணோர்பாகம் நராதிப|
தத꞉ க்ருத்தோ மஹாதேவஸ்ததுபாதாய கார்முகம்|
ஆஜகாமாத தத்ரைவ யத்ரதேவாஸ் ஸமீஜிரே|
த்ரியம்பகஸ்ஸவிதுர்பாஹூ பகஸ்ய நயநே ததா|
பூஷ்ணஶ்ச தஶநாந் க்ருத்தோ தநுஷ்கோட்யா வ்யஶாதயத்||

"வாஸ்தவத்திலே தேவர்கள் உருத்திரரை அறியாது ஸ்தாணுவாகிய சிவபிரானுக்குரிய அவிப்பாகத்தைக் கொடுத்தாரில்லை; அதனால் *மகாதேவர் கோபங்கொண்டு வில்லை எடுத்துக்கொண்டு தேவர்கள் யாகஞ் செய்யும் இடத்துக்குப் போக, தேவர்களெல்லாம் ஓடத்தொடங்க அவர் சாவித்திரியின் புயங்களை வெட்டியும் பகன் கண்களைப் பிடுங்கியும் விட்டார்" என்று மகாபாரதமும்,

[illegible]
[illegible]
[illegible]

பூஷா ப்ராஶ்ய ததோருணத் தஸ்மாத் பூஷா ப்ரபிஷ்டபாகோந்தகோ ஹி தம் தேவா அப்ருவந் | தேவா வை யஜ்ஞாத்ருத்ரமந்தராயந் த்ஸயஜ்ஞ மவித்யத்||

"அவர்கள் பூஷன் உண்ணுமாறு அதனை (அவிப்பாகத்தை) கொடுத்தார்கள்; (வீரபத்திரவடிவமாய் வந்த) உருத்திரர் அவன் பற்

* ஈண்டு மகாதேவர் என்றது வீரபத்திரரின் மேற்று.

களை உடைத்தார்; (தக்ஷன்முதலிய) தேவர்கள் சிவபிரானை யஞ்ஞத்தினின்று விலக்க, (வீரபத்திரவடிவமுற்ற) சிவபிரான் (தக்ஷனுடைய) யஞ்ஞத்தை அழித்தார்" என்று யசுர்வேத தைத்திரீயசங்கிதையும்,

𑌤𑌦𑍍𑌭𑌗𑌾𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌤𑌃 𑌆𑌸𑍀𑌨𑌾𑌯 𑌪𑌰𑍍𑌯𑌾𑌜𑌹𑍍𑌰𑍁𑌃।
𑌤𑌦𑍍𑌭𑌗𑍋 𑌵𑍀𑌕𑍍𑌷𑌾𑌞𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 𑌨𑌿𑌰𑍍𑌦𑌦𑌾𑌹।

தத்பகாய தக்ஷிணுதः ஆஸீநாய பர்யாஜஹ்ருः । தத்பகோவீக்ஷாஞ்சக்ரே தஸ்யாக்ஷிணீ நிர்ததாஹ।

"வலப்பக்கத்தில் இருக்கும் பகனுக்கு அதனைக் கொடுத்தார்கள்; அவன் அதனைப் பார்த்தான்: அவர் அவன் கண்களைத் தகித்தார்" என்று சதபதப்பிராஹ்மணமும் கூறுகின்றன.

𑌧𑌾𑌤𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋𑌽𑌰𑍍𑌯𑌮𑌾𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌸𑍂𑌰𑍍𑌯𑌏𑌵𑌚।
𑌭𑌗𑍋𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍂𑌷𑌾𑌚 𑌸𑌵𑌿𑌤𑌾𑌦𑌶𑌮𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌃।
𑌏𑌕𑌾𑌦𑌶𑌸𑍍𑌤𑌥𑌾𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇॥

தாதா மித்ரோர்யமா ருத்ரோ வருணஸ்ஸூர்ய எவச।
பகோ விவஸ்வாந் பூஷாசஸவிதா தஸம: ஸ்ம்ருத:।
ஏகாதஸஸ்ததாத்வஷ்டா விஷ்ணுர்த்வாதஸ உச்யதே॥

"தாதா, மித்திரன், அரியமா, உருத்திரன், வருணன், சூரியன், பகன், விவஸ்வான், பூஷன், சவிதா, துவஷ்டா, விஷ்ணு என்போர் பன்னிரு ஆதித்தியர்" என்று விஷ்ணுபுராணத்து இரண்டாம் அம்சத்து கம–ம் அத்தியாயத்தினுற்பெறப்படுதலின், பகன் பூஷன் என்போரும் பன்னிரு ஆதித்தியருட்பட்டவராம் என்பது பெறப்பட்டு, பூஷன் பற்கள் தகர்க்கப்பட்டன எனவே, சூரியன் பற்கள் தகர்க்கப்பட்டன என்று பொருள்கொள்ளப்பட்டது.

மலைமகட்கினையிகழ்வதுசெய்தமதியறுசிறுமனவனதுயர்
தலையினொடழலுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர்களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதில்புடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே.

—ஞா, திருவீழிமிழலை.

தக்கன்றனசிரமொன்றினையரிவித்தவன்றனக்கு
மிக்கவ்வரமருள்செய்தவெம்விண்ணோர்பெருமானூர்
பக்கம்பலமயிலாடிடமேகம்முழவதிர
மிக்கம்மதுவண்டார்பொழில் வேணுபுரமதுவே.

—ஞா, வேணுபுரம்.

தக்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி, மிக்கவிதாதாவினொடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில், கொக்கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்குவைகொள்சோலை முக்கனியின்சாறொழுகிச்சேறுலராநீள்வயல்சூழ்முதுகுன்றமே.

—ஞா, திருமுதுகுன்றம்.

எச்சனிணைத்தலைகொண்டார்பகன்கண்கொண்டா
ரிரவிகளிலொருவன்பல்லிறுத்துக்கொண்டார்
மெச்சன்வியாத்திரன்றலையும்வேறாக்கொண்டார்
விறலங்கிகரங்கொண்டார்வேள்விகாத்து
வுச்சநமன்றாளறுத்தார்சந்திரனையுதைத்தா
ருணர்விலாத்தக்கன்றன்வேள்வியெல்லா
மச்சமெழவழித்துக்கொண்டருளுஞ்செய்தா
ரடியேனையாட்கொண்டவமலர்தாமே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

பெற்றிமையொன்றறியாததக்கனதுவேள்விப்
பெருந்தேவர்சிரந்தோள்பற்கரங்கண்பீடழியச்
செற்றுமதிக்கலைசிதைய்த்திருவிரலாற்றேய்வித்
தருள்பெருகுசிவபெருமான்சேர்தருமூர்வினவிற்
றெற்றுகொடிமுல்லையொடுமெல்லிகைசெண்பகமுந்
திரைபொருதுவருபுனல்சேரரிசிலின்றென்கரைமேற்
கற்றினநன்கரும்பின்முளைகறிகற்கக்கறவை
கமழ்கழுநீர்கவர்கழனிக்கலயநல்லூர்காணே.

—சு, திருக்கலயநல்லூர்.

அரிபிரமன்றக்கனருக்கனுடனே
வருமதிவாலைவன்னிநல்லிந்திரன்
சிரமுகநாசிசிறந்தகைதோள்தா
னரனருளின்றியழிந்தநல்லோரே.

—திருமந்திரம்.

(கூச) சூரனைச் சுப்பிரமணியர் கொன்றமை.

𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌾𑌦𑍍𑌯 𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌯𑌾𑌦𑍃𑌶𑌂 𑌰𑍂𑌪𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍।
𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑍁𑌂 𑌤𑌾𑌦𑍃𑌶𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑌶𑍍𑌚𑍇𑌦𑍍𑌰𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍।
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌤𑌾𑌦𑍃𑌶𑍀𑌂 𑌰𑌮𑍍𑌯𑌾𑌂 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌵𑌰𑌃।
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

காச்யபாத்ய மயா ப்ராப்தம் யாத்ருசம் ரூபமத்புதம்।
க்ரஹீதும் தாத்ருசம் ரூபம் ஸமர்த்தஃ சேத்ரமாம்யஹம்।
இத்யுக்தாம் தாத்ருசீம் ரம்யாம் காச்யபோ யோகிநாம் வரஃ।

க்ருஹீத்வா காமரூபம் தாம் ரமயாமாஸ மண்டபே।
கஸ்மிஞ்சித்விஜநே ரம்யே பூயோ பூயஃ ஸ்மரார்த்திதஃ।
ஜாதஸ்ததாநீம் சூராக்யோ தைத்யாநாமக்ரணீர் மஹாந்।
யாமிந்யாஃ ப்ரதமே யாமே (தைதேயாநாஞ்ச வாஹிநீ।)

"காசியபரே! இப்போது யான் கொள்ளும் அற்புத வடிவத்தை ஒத்த உருவத்தைக் கொள்வதற்குச் சமர்த்தரேயாமாயின் உம்முடன் சேர்வேன் என, யோகிகளிற் சிறந்த காசியபர் அவ்வாறு விரும்பிய உருவத்தைக்கொண்டு அழகிய வடிவுற்ற அவளோடு இரம்மியமாகி நிர்மாநுஷ்யமாய அம்மண்டபத்திலே கேவலம் காமாதுரராய்ப் பன்முறை கலந்தார்; அப்போது அவ்விரவின் முதற்சாமத்தில் அசுரர்களுக்கெல்லாம் தலைமையான மகா பெருமை பொருந்திய சூரன் எனப் பெயரிய புதல்வன் பிறந்தான்" என்றும்,

𑌯𑌦𑌿 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍋 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌮𑌯𑌾।
𑌅𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌤𑌾𑌮𑍍।
𑌆𑌜𑍍𑌞𑌾𑌚𑌕𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾𑌸𑍍𑌮𑌾𑌕𑌮𑌵𑌿𑌨𑌶𑍍𑌵𑌰𑌤𑌾𑌮𑌪𑌿।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾 𑌮𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌤𑌃।
𑌪𑌲𑌾𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍁𑌧𑍃𑌤𑌾𑌂 𑌤𑌦𑌾 𑌤𑌾𑌦𑍃𑌶𑌮𑌾𑌯𑍁𑌧𑌮𑍍।
[illegible]।
[illegible]।
[illegible]।
𑌅𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌤𑌾𑌮𑍍।
[illegible]॥

யதி ப்ரஸந்நோ பகவந் த்வத்பக்த்யாநுஷ்டிதம் மயா।
அஷ்டோத்தர ஸஹஸ்ராண்ட மண்டாநாம் ஸார்வபௌமதாம்।
ஆஜ்ஞாசக்ரம் ததாஸ்மாகமவிநச்வரதாமபி।
விஷ்ண்வாதி தேவதாஸ்ஸர்வா யதாமத்ஸந்நிதாநதஃ।
பலாயிஷ்யந்தி ஸுத்ருதாம் தத தாத்ருச மாயுதம்।

தேஷு ஸர்வேஷு கமநாகமநஞ்ச ப்ரபச்சநஃ।
ததஸ்து சூரபத்மம் தம் ப்ரேக்ஷ்ய ஸர்வேஸ்வரோ வசஃ।
ப்ரோவாச க்ருபயா யுக்தோ யதுக்தம் தத் ததாஸ்த்விதி।
அஷ்டோத்தர ஸஹஸ்ராணுமண்டாநாம் ஸார்வபௌமதாம்।
அஷ்டாதிகசதேஷ்வேவ யுகேஷ்வஸ்து தவாநக॥

"(சூரன் சொல்கின்றான்) பகவானே! யான் பக்தியோடு ஆராதித்தமைக்காகத் தேவரீர் பிரசன்னமானமை மெய்யாயின் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் யான் பரிபாலனஞ் செய்தற்குரிய ஏகசக்கிராதிபத்தியத்தையும் ஆஞ்ஞாசக்கரத்தையும், என்றும் எங்களுக்கு அழிவில்லாமையையும், விஷ்ணுமுதலிய தேவரெல்லாம் என் முன்னிலையில் எய்தும்போது மிகுதியும் பயந்து ஓட்டமெடுக்கச் செய்யவல்ல ஆயுதங்களையும் எனக்குக் கொடுத்து, அவ்வெல்லா அண்டங்களினும் யான் போய்வரத்தக்க வன்மையையும் அருளல்வேண்டும் என, சிவபெருமான் அவனை நோக்கி மிகுந்த கருணைகொண்டு நீ கேட்டவையெல்லாம் அங்ஙனமே ஆகுக, ஆயின், பாவமற்ற சூரனே! உனக்கு ஆயிரத்தெட்டு அண்டங்களின் ஆதிபத்தியமானது நூற்றெட்டு யுகங்காறுந்தான் இருக்கக்கடவது என்றருளினர்" என்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌪𑌨𑌰𑍍𑌨𑍂𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌪𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍈𑌤𑍍𑌯𑌵𑌰𑌃 𑌶𑍂𑌰𑌃 𑌪𑍍𑌰𑍀𑌣𑌨𑍀𑌯𑍋 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 ॥

தச்ச்ருத்வா து ததோ தேவா விஷ்ணுலோகம் மருத்வதா।
ஆஜக்முஸ்தரஸா ருக்ண ப்ருசமேதத் பயாந்விதாஃ।
த்ருஷ்ட்வாச விஷ்ணும் ப்ரோசுஸ்தே ஜநார்த்தந மரிந்தமம்।
ரக்ஷணீயாஸ்த்வயா தேவா தைத்யேப்யோ பீதமாநஸாஃ।
இத்யுக்த்வா ப்ரச்ரயா நம்ராந் தேவாந் ப்ரோவாச மாதவஃ।
அஹோ தேவா வ்ருதா கிம்வா யதந்தே மூடபுத்தயஃ।
தக்ஷாத்வரே மஹாதேவம் ராஜாநஞ் சாத்வரஸ்யதே।
ஹித்வா யூயம் மயா ஸார்த்தம் ஹவிர்பாஜஃ ஸ்திதாஃ கலு।
ததாநீமேவ தஸ்யாப்தம் பலமஸ்மாபிரத்ரச।
போக்தவ்யம் புநரங்யச்ச தத்பாபஸ்ய பலம் த்ருவம்।
தஸ்மாத் தைத்யவரஃ ஸூரஃ ப்ரீணநீயோ யதாததா॥

"அது கேட்டுத் தேவர்கள் இந்திரனேடுகூட, பயந்தவர்களும் மிகவும் நோயுற்றவர்களுமாய் வேகமாய் விஷ்ணுலோகத்தை அடைந்து சத்துருக்களைச் சங்கரிக்கும் விஷ்ணுவை நோக்கி இங்ஙனம் கூறுவாராயினர், சுவாமீ! அசுரர்க்குப் பயந்து நடுக்கமுற்றிருக்கும் தேவர்களைத் தேவரீர் இரக்ஷித்தருளல்வேண்டும் என உரைத்து வணக்கத்தோடு நின்ற தேவர்களை நோக்கி விஷ்ணு கூறுகின்றார், மூடபுத்தியுடைய தேவர்களே! என் வீணாக வாதைப்படுகின்றீர்கள், முன்னே தக்கன் வேள்வியில் அத்துவ ராஜராகிய மகாதேவரை நீக்கிவிட்டு எம்மோடு அவிபெற்றுக் கொண்டீர்களன்றோ, அதற்குற்ற பயனை யாம் அப்போது அடைந்துவிட்டோமாயினும், இங்கும் பின்னர் அப்பாவப்பயனைத் துய்க்கவேண்டியது நிச்சயமே; ஆகலின், அசுரோத்தமனாகிய சூரன் அவ்வப்பிரகாரம் பிரியப்படுத்தற்பாலன் என்றார்" என்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌮𑌰𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌃।
𑌆𑌨𑍇𑌤𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌬𑌹𑌵𑍋 𑌮𑍀𑌨𑌾 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌞𑍍𑌜𑌸𑌾।
𑌇𑌤𑍍𑌯𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍𑌤𑌦𑌾 𑌦𑍇𑌵𑌾 𑌭𑍃𑌶𑌂 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌮𑌾𑌨𑌸𑌾𑌃।
𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌥 𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌸𑌮𑍍𑌭𑍂𑌯𑌾𑌬𑍍𑌧𑌿𑌂 𑌗𑌤𑌾𑌃 𑌖𑌲𑍁।
𑌦𑌕𑍍𑌷𑌾𑌧𑍍𑌵𑌰𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑌯𑌂 𑌗𑌤𑌾𑌃॥

தேவா தேவேந்த்ர முக்யாச்ச ருஷயச்ச தபோதநா:।
சூரம் ஸிம்ஹாநம் தத்வத் தாரகஞ்ச திநேதிநே।
தத்புத்ராந் மந்த்ரிணச்சாபி த்ருஷ்ட்வா தைச்சோதிதா: க்ரியா:।
க்ருத்வா தஸ்துர் மஹாபீதா கருடம் பந்நகா இவ।
கதாசிமாாநிந்த்ரபூர்வாந் ப்ரேக்ஷ்யாஸுரோத்தம:।
ஆநேதவ்யாச்ச பஹவோ மீநா யுஷ்மாபிரஞ்ஜஸா।
இத்யப்ரவீத் ததா தேவா ப்ருசம் து:கிதமாநஸா:।
ஓமித்யுக்த்வாத ஸர்வேபி ஸம்பூயாப்திம் கதா: கலு।
தக்ஷாத்வரக்ருதம் தோஷம் ஸ்ம்ருத்வா ஸ்ம்ருத்வா பயம் கதா:॥

"சூரன் சிங்கன் தாரகன் என்போரையும் இவர்கள் புதல்வர்களையும் மந்திரிகளையும் கண்டு அவர்களால் ஏவப்பட்ட ஊழியங்கள் செய்துகொண்டு கருடனுக்கெதிர்ப்பட்ட சர்ப்பங்கள்போல, தேவர்கள் அஞ்சி நடுங்கி ஒடுங்கி வந்தார்கள், இங்ஙனமிருக்கையில் ஓர்நாட் சூரன் இந்திராதிதேவர்களைப் பார்த்து, தேவர்களே! நீங்கள் விரைந்து மிகுதியான மீன்களைப் பிடித்துவரல்வேண்டும் என்று கூற, அப்போது தேவர்கள் மனசில் மிகுதியும் வியாகுலமுற்று அங்ஙனமாகுக என்று உரைத்து எல்லோரும் கூடிக் கடற்கரை அடைந்து தக்கனுடைய யாககாலத்திலே தாங்கள் செய்த சிவத்துரோகத்தை மனசிலே நினைந்து நினைந்து மிகுதியும் பயந்தார்கள் (நாடோறும் மீன்களைப் பிடித்து வருந்தினார்கள்)" என்றும்,

[illegible]।
[illegible] 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃।
[illegible] 𑌶𑍀𑌘𑍍𑌰𑍇𑌣 𑌤𑌦𑌾 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 [illegible]।
[illegible] 𑌬𑌾𑌣𑌾𑌨𑌿 𑌵𑌵𑌰𑍍𑌷 [illegible] 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃।

தூணீரஞ்சாச்சிநச்சீக்ரம் கஜமைராவதந் ததா।
நிசிதேநாஸ்த்ர ஜாலேந சகார ருதிராப்லுதம்।
ஜயந்தஸ்து பபாதாயம் மூர்ச்சிதோ நிதராம் ததா।
ஐராவதஸ்து ஸபதி பாநுகோபரதம் பலீ।
திர்யக்தந்த ப்ரஹாரேண தாடயாமாஸ வேகதஃ।
ஸாரதிஞ்ச ததா ஹத்வா பாநுகோபம் புஜாந்தரே।
ஆஸ்பாலயச்ச தந்தாப்யாம் கண்டபாஷாண நிஷ்டுரே।
ததாகத வசாதஸ்ய பக்ஷௌ தந்தௌ த்விஜோத்தமாஃ।
ஹஸ்தஞ்ச பாநுகோபஃ குபிதோ தாடயத் ப்ருஶம்।
ததா தாடநதோ த்ருண ஸம்மூர்ச்சிதைராவதம் கஜோத்தமஃ।
கோபாத் ஹஸ்தேந வஜ்ரேண தஸ்ய தேஹம் ததாட ப்ருஶம்।
ப்ரவிஶ்ய த்ரிதஶஸைந்யம் ஸோ ஹ்யந்யாந் தேவாம்ஶ்ச ஶேஷிதாந்।
பத்வா தேவாந் ஸநாக்ஷாதி ஜயந்தஞ்ச விமோஹிதம்।
வஜ்ரம் ஸஹஸ்ராக்ஷஸ்ய க்ருஹீத்வாஶு ததாஸுரஃ।
ஶூரஸ்ய நிகடம் ப்ராப பாநுகோபஸ் ஸஹாஸுரைஃ।
வ்ருத்தாந்தஞ்ச நிவேத்யாஸ்மை ஸ்வயந்தஸ்தௌ॥

புநச்ச பாநுகோபஸ்ய ரதஞ் சாச்வாந் பஹூநபி।
மாரயாமாஸ முக்த்வாயம் ஸஹஸ்ராணி ஸஹஸ்ரசஃ।
பாநுகோபஸ்து சீக்ரேண ததாருஹ்ய மஹாரதம்।
அந்யாந்யாதாய பாணாநி வவர்ஷாங்கேஸ்ய பூரிசஃ।
தூணீரஞ்சாச்சிநச்சீக்ரம் கஜமைராவதந் ததா।
நிசிதேநாஸ்த்ர ஜாலேந சகார ருதிராப்லுதம்।
ஜயந்தஸ்து பபாதாயம் மூர்ச்சிதோ நிதராம் ததா।
ஐராவதஸ்து ஸபதி பாநுகோபரதம் பலீ।
திர்யக்தந்த ப்ரஹாரேண தாடயாமாஸ வேகதஃ।
ஸாரதிஞ்ச ததா ஹத்வா பாநுகோபம் புஜாந்தரே।
ஆஸ்பாலயச்ச தந்தாப்யாம் கண்டபாஷாண நிஷ்டுரே।
ததாகத வசாதஸ்ய பக்ஷௌ தந்தௌ த்விஜோத்தமாஃ।

பக்நம் தந்தம் பாநுகோபஃ கபோலே தாடயத் ப்ருசம்।
ததாதாடநமாத்ரேண மூர்ச்சாமாப கஜோத்தமஃ।
கோலாஹலமகுர்வந்தே தைதேயாஸ்து ததோப்ருசம்।
ப்ரவிச்ய பத்தநம் பூயோ தக்த்வா தேவாந்ச சேஷிதாந்।
பத்வா தேவாங்கநாச்சாபி ஜயந்தஞ்ச விமோஹிதம்।
பூர்வம் பத்தாந் ஸுராந்சாபி க்ருஹீத்வாசு ததாஸுரஃ।
சூரஸ்ய நிகடம் ப்ராப பாநுகோபஸ்ஸஹாஸுரைஃ।
வ்ருத்தாந்தம் தஸ்யநிகிலமப்ரவீத் ஸயதாக்ரமம்॥

"பின்னர்ப் பானுகோபன் வேகமாய்ப் பிறிதோர் மகா இரதத்தில் ஏறிக்கொண்டு, அவன் (ஜயந்தன்) மீது வேறு அநேக பாணங்களை மிகுதியாக வருஷித்து அவன் அம்பாத்தூணியை விரைவில் வெட்டி, ஐராவதம் என்னும் யானையையும் அங்ஙனம் கூரிய பல பாணங்களால் இரத்தஞ் சொரியச் செலுத்தினான்; அப்போது ஜயந்தன் மூர்ச்சித்து வீழ்ந்தான்; உடனே மகாவலிமையுடைய ஐராவதமானது பாநுகோபன் இரதத்தைக் கொம்புகளாற் குறுக்காக வேகமாய் இடித்துடைத்துச் சாரதியையும் கொன்று, பானுகோபனையும் கொம்புகளாலே திரண்ட கல் நிகர்த்த அவனது வலிய மார்பின்மீது முட்டிற்று; அப்போது முட்டின வலிமையினால் அதன் இரண்டு கொம்புகளும் முரிந்துபோயின; அப்போது பாநுகோபன் கொம்பொடிந்த யானையின் கன்னத்தில் நோவெய்துமாறு அடிக்க, அடிபட்டமாத்திரத்தில் அவ்வியானை மூர்ச்சையடைந்தது; பின்னர்த் தேவர்களெல்லாம் மிகுதியும் அட்டகாசம் பண்ணினார்கள், அவ்வேளையிற் பானுகோபன் அசுரர்களோடு (சுவர்க்க) நகரத்துட் புகுந்து அதற்குத் தீமூட்டி, மிகுதியாயிருந்த தேவர்கள் தேவஸ்திரீகள் ஜயந்தன் என்னுமிவர்களையெல்லாம் கட்டி, முன் கட்டப்பட்டிருந்த தேவர்களையும் கைக்கொண்டு விரைவிலே சூரனிடம் வந்து சகல விருத்தாந்தங்களையும் அவனுக்குக் கூறினான் (இங்ஙனம் நூற்றெட்டு யுகங்காறும் ஜயந்தன்முதலிய தேவரெல்லாம் நீங்காச்சிறையிலே கிடந்து மீன் சுமந்து வருந்திவந்தார்கள்)" என்றும்.

[illegible]।
[illegible]।
[illegible]।

𑌵𑍍𑌯𑌾𑌲𑍋𑌕𑌯𑌦𑌮𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌂 𑌷𑌡𑍍𑌭𑌿𑌰𑌾𑌨𑌨𑍈𑌃।
𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌨𑌯𑌨𑍈𑌃 𑌷𑌡𑍍𑌭𑌿𑌰𑍍𑌲𑌲𑌾𑌟𑍈𑌰𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌸𑌃।
𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌤𑍍𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌭𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌮𑍍।
𑌷𑍋𑌢𑌾𑌤𑍇𑌨 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍॥

ப்ரார்த்திதஃ ப்ரபுரத்யர்த்தம் திவிஷத்பிர் தயாநிதிஃ।
பபூவவதநைஃ ஷட்பிரலங்க்ருததநுஸ் ததா।
ஆஸீநாமாஸநே ஸார்த்தமம்பிகாமம்பிகாபதிஃ।
வ்யலோகயதமேயாத்மா ஸாகாங்க்ஷம் ஷட்பிராநநைஃ।
தத் க்ஷணாந்நயநைஃ ஷட்பிர்லலாடைரூர்த்வரேதஸஃ।
நிரகாத் கோடிசூர்யாபம் தேஜஃ காலாக்நிஸந்நிபம்।
ஷோடா தேந ஜகத் ஸர்வம் வ்யாப்தம் ஸர்வம்சராசரம்॥

“இங்ஙனம் தேவர்கள் அன்பினோடு துதிக்குங்கால் தயாநிதியாகிய பிரபுவானவர் (சிவபிரான்) ஆறு திருமுகங்களாற் பிரகாசிக்கும் திருமேனிகொண்டருளினார்; அளவிடப்படாத சொரூபத்தையுடைய அம்பிகாபதியானவர் தம்மோடு திவ்யாசனத்தில் வீற்றிருந்தருளிய அம்மையாரை ஆறு திருமுகங்களாலும் அன்பினோடு நேசமாய் நோக்கினர்; அந்த க்ஷணத்திலே ஊர்த்துவவீரியமுடைய தேவாதிதேவரிடத்திருந்து, ஆறு நேத்திரங்களானும் கோடிசூரியப்பிரகாசமுடையதும் மகாப்பிரளயகாலாக்கினியை நிகர்த்ததுமாகிய தேஜசானது வெளிப்பட்டது; ஆறு உருவினதாகிய அத்தேஜசானது அண்டபிண்டசராசராதி சகலப்பிரபஞ்சத்தினும் வியாபித்தது” என்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தயாநிதிரதோ பூயஸ் தேஜஸ்ஸஸ்மார சேதஸா।
தத்தேஜஃ ஸ்ம்ருதிமாத்ரேண பித்ரோஃ ப்ராபாந்திகம் க்ஷணாத்।
ஸூக்ஷ்மீபூதம் புநஃ ஷோடா ஸ்திதம் சாந்தம் ததம்ஜஸா।
ததோ தேவஃ க்ருபாமூர்த்திரமராநவலோக்யச।
வஹ்நிவாயூ ஸமாஹூய வசநஞ்சேதமப்ரவீத்।
யுவாமிதம் மஹத்வஹ்நே வாயோ ஷோடா ஸ்திதம் புநஃ।
ஆமரீமாபகாமாஸு ஸம்ப்ராபயத மாசிரம்।
அந்தே சரவணஸ்யைததாஜ்ஞயா மம லேககைஃ॥

"தயாநிதியாகிய சிவபிரான் அத்தேஜஸை மனத்திலே நினைந்தார்; நினைத்தமாத்திரத்தில் அத்தேஜசானது தாய்தந்தையரிடத்து நொடிப்போதில் வந்தது; ஆறு உருவங்கொண்ட அத்தேஜசானது உடனே சிறிதாயும் முற்றுஞ் சாந்தமுமாகிச் சிவபிரானுடைய சந்நிதானத்தில் நிற்குங்கால், கிருபாமூர்த்தியாகிய தேவர் தேவர்களை நோக்கி, (அவருள்) அக்கினியையும் வாயுவையும் அழைத்துச் சொல்கின்றார்; அக்கினிவாயுக்களே! நம்முன்னர் ஆறு வடிவமாய் வந்துநிற்கின்ற பெருமைபொருந்திய இந்தத் தேஜசை நீவிர் மற்றத்தேவர்களோடு கொண்டு சென்று தேவகங்கைக்குச் சமீபத்தினதாகிய சரவணவாவியில் நமது ஆஞ்ஞாப்பிரகாரம் விரைந்து சேர்ப்பித்துவிடுங்கள் என்றருளினர்" என்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌷𑌡𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑍁𑌜𑌂 𑌦𑍍𑌵𑌿𑌪𑌾𑌦𑌂 𑌸𑍁𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍।
𑌵𑌪𑍁𑌃 𑌪𑍁𑌪𑍋𑌷 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌮𑌂𑌗𑌳𑌾𑌯𑍁𑌷𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍍।
𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 𑌸𑍁𑌕𑍁𑌮𑌾𑌰𑌾𑌣𑌾𑌂𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌭𑍂𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍॥

பாவகঃ பாரமைஶந்தச்சீதளந்தேஜஸா ஜ்வலத்।
ஸமுஹ்ய ஷட்விதம் மூர்த்நா கியத்தூரம் ஶ்ரமம் கதঃ।
பவமாநோபி சாங்யோநம் ஶ்ரமம் ப்ராப்ய புநঃ புநঃ।
கதம் கதஞ்சித் கங்காயா அந்தே சாவணஸ்யச।
யத்நேந மஹதா தாப்யாம் நிக்ஷிப்தம் தத்ரதச்சிவம்।
பத்மஷண்டே பத்மநிபம் பபத்ம காந்தார ஸௌரபம்।
தேந பீதஜலாகங்கா தேஜஸா தநுதாம் கதா।
மத்யே சரதடாகஸ்ய பத்மமத்யம் நிநாய ஸா।
ஸஹஸ்ரஸூர்ய ப்ரதிமம் தத்ர தச்சாம்பவம் மஹঃ।
ஷட்வக்த்ரம் த்வாதசபுஜம் த்விபாதம் ஸுமநோஹரம்।
வபுঃ புபோஷ ஜகதாம் மங்களாயுஷ்ய வர்த்தநம்।
குமாரஸ் ஸுகுமாராணாந்நிதர்ஶநமபூத்க்ஷணாத்॥

"ஒளியினால் ஜ்வாலிப்பதும் மிகக் குளிர்ச்சிகொண்டதுமாகிய சிவபெருமானுடைய அத்தேஜசின் ஆறு உருவங்களையும் அக்கினிதேவன் தலையிற்றாங்கிச் சிறிதுதூரஞ் சென்று களைப்படைந்துவிட, வாயுதேவன் மாற்றுதலாக அதனைச் சுமந்தும், இங்ஙனம் ஒருவர்க்கொருவர் மீட்டும் மீட்டும் மாறிச் சுமந்தும் மிகுந்த பிரயத்தினத்தோடு வருத்தமுற்றுக் கங்கைக்குச் சமீபத்துள்ள சரவணவாவியின் தாமரைச் சமூகத்திலே மங்களகரமாயதும், தாமரை மலர்க்குச் சமானமாயதும், தாமரைமலர்களின் வாசனையைக் கொண்டதுமாகிய அத்தேஜசை வைத்தார்கள்; அத்தேஜசினால் நீர் உறிஞ்சப்பட்டுச் சிறுகிப்போய கங்கையானது சரவணவாவியின் நடுவிலுள்ள தாமரைமலரின் மத்தியிலே அத்தேஜசை ஒதுக்கிவிட்டது; அங்கே ஆயிரம் சூரியவிம்பங்களை நிகர்த்த சிவபெருமானுடைய அத்தேஜசானது ஆறு திருமுகங்களையும் பன்னிரண்டு புயங்களையும் இரண்டு பாதங்களையுங்கொண்டு சமஸ்த ஜகத்துக்கும் சுபத்தையும் ஆயுசையும் விருத்திசெய்தருளும் ஓர் சுந்தரத் திருமேனியுடையதாய், ஓர் க்ஷணத்திலே சிறந்த அழகுகளுக்கெல்லாம் ஓர் நிதர்சனம் பெற்ற ஓர் குழந்தையாயிற்று" என்றும்,

𑌰𑌕𑍍𑌷 𑌰𑌕𑍍𑌷 𑌕𑍃𑌪𑌾𑌮𑍍𑌬𑍋𑌧𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌭𑌯𑌪𑍍𑌰𑌦 ।
𑌮𑌾𑌰𑌯𑌾𑌶𑍁 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌭𑌯𑌦𑌾𑌯𑌿𑌨𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌘𑍋𑌰𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑌂 𑌭𑌰𑍍𑌤𑍍𑌸𑌯𑌨𑍍𑌤𑌂 𑌜𑌗𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌲𑌪𑌮𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑍇 𑌦𑍁𑌦𑍍𑌰𑍁𑌵𑍁𑌶𑍍𑌚 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ।
𑌮𑌯𑍂𑌰𑌰𑍂𑌪𑍋 𑌮𑌘𑌵𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌤𑌸𑌾𑌵𑌪𑌿 ।
𑌤𑌦𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌚𑌃 𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌦𑍇𑌵𑍇𑌶𑌃 𑌕𑍃𑌪𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍁𑌲𑌾𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌸𑌂𑌹𑌾𑌰𑌹𑌾𑌰𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌸𑍁𑌰𑌂 𑌶𑍀𑌘𑍍𑌰𑌾𑌤𑌾𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑌿 𑌮𑍁𑌮𑍋𑌚𑌤𑌾𑌮𑍍 ॥

ரக்ஷரக்ஷ க்ருபாம்போதே பக்தாநாமபயப்ரத।
மாரயாஸு₂ துராத்மாநம் தேவாநாம் பயதாயிநம்।
மஹாகோரம் மஹாபாபம் பர்த்ஸயந்தம் ஜகத்த்ரயம்।
இத்தம் ப்ரலபமாநாஸ்தே துத்ருவுச்ச ஸமந்ததஃ।
மயூரரூபோ மகவாநப்ரார்த்தயதஸாவபி।
ததேஷாந்து வசஸ் ஸ்ருண்வந்தேவேஸஃ க்ருபயாந்விதஃ।
அவேக்ஷ்ய ஸக்திமதுலாம் ஸத்ருஸம்ஹாரஹாரிணீம்।
த்விதா பித்வாஸு₂ரம் ஸீக்ராதாகச்சேதி முமோசதாம்॥

"கருணைக்கடலே! அடியார்க்கு அபயமளிப்பவரே! தேவர்களுக்குப் பயமளிப்பவனும் மகாகொடியனும் மகாபாதகனும் மூவுலகத்தையும் நடுங்கச் செய்பவனுமாகிய இந்தத் துராத்துமாவைச் (சூரனைக்) கொன்று எங்களை இரக்ஷித்தருள்க என்று பிரார்த்தித்து நாற்புறத்திலும் ஓடினார்கள்; மயில்ரூபங்கொண்ட இந்திரனும் அங்ஙனம் வேண்டினன்; பின் அவர்கள் வேண்டுகோளைக் கேட்டுச் சுப்பிரமணியப்பெருமான் கிருபைகூர்ந்து சத்துருசங்காரஞ் செய்யும் ஒப்பிலாவேலாயுதத்தை நோக்கி, (வேலாயுதமே!) இவ்வசுரனை விரைந்து பிளந்தெறிந்துவிட்டு இங்கு வருக என்று ஆஞ்ஞாபித்து அதனைப் பிரயோகித்தார்" என்றும்,

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] [ஸ
[illegible]
[illegible]

தஹந்தி ஸகலாந்லோகாந்முக்த்வா கைலாஸபர்வதம்।
ஶோஷயித்வா ததாம்போதிநாகத்யாமும் த்விதாகரோத்।
ததஸ்து தாநவঃ பாபஸ்த்யக்தசூதஸ்வரூபவாந்।
ஸ்வஸ்வரூபம் க்ருஹீத்வாயம் கட்கமாதாயசாகதঃ।
தமேநமஸுரம் கோரம் வக்ஷோ பித்வா த்விஜோத்தமாঃ।
விநிர்க்கத்ய புநঃ ஶக்திர்பாஸயந்தி வியத்ஸ்தலம்।
ஸ்தூயமாநா ஸுரைஸ்ஸர்வைர் வ்யோமகங்காம்பவி க்ஷணாத்।
ஸ்நாத்வா தேவாதிதேவஸ்ய கரமாப மஹீஸுராঃ॥

"கைலாசகிரியொழிந்த மற்றெல்லாவுலகங்களையும் தகித்துக் கடல்களை வற்றச்செய்துகொண்டு (அம்மாவரவடிவங்கொண்ட) அசுரனை இரண்டாய்க் கிழித்துவிட்டது; பின் பாதகனாகிய அவ்வசுரன் மாமரவுருவை விடுத்துத் தன் சுவரூபத்தை அடைந்து வாளை எடுத்துக்கொண்டு வேகமாய் ஓடிவரப் பின்னும் அவ்வேலாயுதமானது கொடூரமாகிய அச்சூரனது மார்பைப் பிளந்து, மீண்டு ஆகாயத்தைப் பிரகாசிப்பித்துச் சகல தேவர்களாலும் துதிக்கப் பெற்று, ஓர் க்ஷணப்போதினுள் ஆகாயகங்கையிலே ஸ்நானஞ் செய்து அத்தேவாதிதேவராகிய குமாரசுவாமிக்கடவுளின் திருக்கரத்துக்கு வந்துவிட்டது" என்றும் ஸ்காந்தபுராணம் கூறுகின்றது.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றறுத்தமைந்தன்றாதைதன்
மீயச்சூரேதொழுதுவினையைவீட்டுமே.

—ஞா, திருமீயச்சூர்.

---

(௬௫) * வைசுவாநரவுபாசனையிற் பரப்பிரம சிவனுர்க்கு ஆகாயவியாபகம் உபசங்கரிக்கப்பட்டாற் போல அவரது மகா வீரியச்செய்கைகளும் உபசங்கரிக்கற்பாலன.

ப்ரஹ்மஜ்யேஷ்டா வீர்யா ஸம்ப்ருதாநி ப்ரஹ்மாக்ரே ஜ்யேஷ்டம் திவமாததாந । ப்ரஹ்மபூதாநாம் ப்ரதமோ ஜஜ்ஞே தேநார்ஹதி ப்ரஹ்மணா ஸ்பர்த்திதும் கஃ॥

ப்ரஹ்ம ஜ்யேஷ்டா வீர்யா ஸம்ப்ருதாநி ப்ரஹ்மாக்ரே ஜ்யேஷ்டம் திவமாததாந । ப்ரஹ்மபூதாநாம் ப்ரதமோ ஜஜ்ஞே தேநார்ஹதி ப்ரஹ்மணு ஸ்பர்த்திதும் கஃ॥

"பிரஹ்மமானது வீரியமாய வலிய செய்கைகளைச் செய்தது; தொடக்கத்திலே ஜ்யேஷ்டமாகிய பிரஹ்மம் ஆகாயத்தை ஊடுருவிற்று; பிரஹ்மம் பூதங்களுக்கு முன்னே இருந்தது; அந்தப் பிரஹ்மத்தோடு எதிர்க்கவல்லார் யார்" என்று தைத்திரீயப்பிராஹ்மணம் கூறுகின்றது. இவ்வாய்மை பிரஹ்மசூத்திர சைவபாஷ்யத்துச் "சம்பிருத்தியதிகாரணத்" (௩. ௩. உ௩) திற் காணப்படுகின்றது.

வக்ஷாத பராத காஶ்யாம் கைலாஸவதிரீஶ்வராஃ।
ப்ரதிஜ்ஞேஷ்வர்யாத த்ருஷ்டம் வவேத வாரிநாத்ரிஷு।
தேஷாம் த்ரிஜாநீஸ யுதாமி ஸவதாம் மகே।
தேஷாம் காரணாஞ்ஜம் ப்ரஹ்மநாவேஶ்வர।
தயாவி வாயிகாரோநாஸ்ரதே ந தே ஸா நவஸ்ஃ।
அஹங்காரஸ்யாவிஷ்டம் கஷாஹ்வ தீஶ்வர।
இதஃ பரம் ப்ரவக்ஷ்யாமி யஸ்ய கஸ்யாவி வேதஸோ।
தேஷாம் ஶாஸ்த்ராணி ஸம்ஸாரவ்ருத்திஷண்கேவ ந ஸஞ்ஜய।
ப்ரஸன்னோ ஸவ ஸர்வேஷாம் ஶர்வாணீஜ்யோ ஜகத்ப்ரோ।

* அ௯-ம் விஷயத்தை நோக்குக.

𑌨𑌾𑌮𑌾𑌨𑌿𑌮𑌾𑌨𑌿 𑌤𑍇 𑌸𑌨𑍍𑌤𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑌂𑌦𑌨𑌪𑌾𑌦𑌨𑌃।
𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌿𑌶𑍍𑌚 𑌕𑍂𑌰𑍍𑌮𑍋𑌽𑌸𑌿 𑌸𑌮𑌲𑌂𑌕𑍃𑌤𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌕𑍍𑌰𑍋𑌡𑌶𑍃𑌙𑍍𑌗𑌧𑌰𑍋 𑌨𑌾𑌰𑌸𑌿𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌮𑌾𑌮𑍍𑌬𑌰𑍋𑌽𑌪𑌿 𑌚।
𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍋𑌽𑌸𑌿 𑌦𑌣𑍍𑌡𑍀𑌚 𑌭𑌵𑌭𑍂𑌤𑌪𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾।
𑌏𑌭𑌿𑌰𑍍𑌨𑌾𑌮𑌭𑌿𑌰𑍀𑌶 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌯𑍇 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌰𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃।
𑌤𑍇𑌷𑌾𑌮𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌦𑍋 𑌭𑍂𑌯𑍋 𑌭𑌵 𑌮𑌯𑍍𑌯𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾।
𑌇𑌤𑌿 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌰𑌂 𑌶𑌮𑍍𑌭𑍁𑌰𑍁𑌮𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍॥

ஏகதாச புராகாச்யாம் கமலாபதிரீச்வரம்।
ப்ரீதிஞ் சக்ரேர்ச்சயாத்யர்த்தம் வவ்ரேவரமநுத்தமம்।
மதீயாங்யங்கஜாநீச த்ருதாநி பவதாங்ககே।
மமாஹங்கார சாந்த்யர்த்தம் ப்ரஹ்மாதீநாமபீச்வர।
ததாபிசாதிகாரோத்தமதேந மம மாநஸம்।
அஹங்காரஸ்மயாவிஷ்டம் கதாசித்பவதீச்வர।
இத: பரம் ப்ரஸந்நோஸி யஸ்யகஸ்யாபி சேத் ப்ரபோ।
மமாங்காஸ்தீநி ஸம்பாவ்ய பூஷணத்வேந ஸந்ததம்।
ப்ரஸந்நோ பவ ஸர்வேஷாம் கர்வசாந்த்யை ஜகத்குரோ।
நாமாநிமாநி தே ஸந்து விஷ்ணுகந்தநபாதந:।
மத்ஸ்யாக்ஷிப்ருச்ச கூர்மாஸ்தி ஸமலங்க்ருதவிக்ரஹ:।
க்ரோடச்ருங்கதரோநாரஸிஹ்மசர்மாம்பரோபிச।
த்ரிவிக்ரமாஸ்தி தண்டீச பவபூதபதேதுநா।
ஏபிர் நாமபிரீசத்வாம் யேஸ்துவந்தி நரோத்தமா:।
தேஷாமிஷ்டப்ரதோ பூயோபவ மய்யநுகம்பயா।
இதி தத்வா வரம் சம்புருமயாந்தர்ஹிதோபவத்॥

"கமலாபதியாகிய விஷ்ணுவானவர் ஓர் காலத்திலே காசியிற் சிறந்த பூசை செய்து சிவபெருமானை மகிழ்வித்து உத்தமமாகிய வரமொன்று கேட்டார்; அஃதாவது அடியேனுடையவும் பிரமாமுதலிய தேவர்களுடையவும் அகங்காரத்தை அடக்குமாறு தேவரீர் திருமேனியில் எனது தேகசம்பந்தமுற்றவைகள் தரிக்கப்பட்டன; அங்ஙனமாயினும், அதிகாரமதத்தினல் என் மனசு

சிலபோது அகங்காரமும் கர்வமுமடைகின்றது; ஆகலின், பிரபுவே! நீவிர் எனக்குமுன்னே பிரசன்னராயினும் எஞ்ஞான்றும் அடியேன் தேகத்துள்ள என்புமுதலியவற்றை யாவர்கர்வமும் அடங்குமாறு திருமேனியில் ஆபரணமாய்ப் பூண்டு பிரசன்னராதல்வேண்டும்; மேலும், விஷ்ணுவின் சிரசை வீழ்த்தினவரென்றும், அவர் மீன்கண்ணை ஆபரணமாகக்கொண்டவரென்றும், ஆமையோட்டினால் அலங்காரமுற்ற திருமேனியுடையவரென்றும் பன்றியின் சிங்கப்பற்களைத் தரிப்பவரென்றும், நரசிங்கத்தோலை ஆடையாகக்கொண்டவரென்றும், திரிவிக்கிரமர் கங்காளத்தைத் தண்டமாகக்கொண்டவரென்றும் திருநாமங்கள் இப்போது எய்தவேண்டும். அஃதன்றி, எவர் இத்திருநாமங்களால் தேவரீரைத் துதிக்கின்றாரோ அவர்க்கெல்லாம் தேவரீர் அடியேன்மேற்கொண்ட கருணையினால் வேண்டிய வேண்டியாங்கு அருள்பாலித்தல் வேண்டும் என்று பிரார்த்திக்க, அதற்குச் சிவபிரான் அவ்வாறுருக என்று அவர்க்கு வரங்கொடுத்துவிட்டு உமையம்மையாரோடு அந்தர்த்தானமாயினர்" என்று உபதேசகாண்டமும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

புரா ஸம்ரக்ஷிதாः ஸ்வாமிந் வயம் ஹி த்ரைபுராத் பயாத்।
காலகூடாநலப்லுஷ்டாந் கண்டேகாள ததாசுராந்।
பீத்வாதஞ்சாப்யரக்ஷஸ்த்வம் தாத்ருசः க்வகதோதுநா।
கஜாந்தகாசுரௌ ஹத்வா பாலயாமாஸ வை சுராந்।
மத்ஸ்யகூர்மவராஹாந்ச நாரசிஹ்மத்ரிவிக்ரமௌ।
ஹத்வா நேத்ரேச மீநஸ்ய கமடஸ்யாஸ்திகர்கசம்।
வராஹஸ்யச தம்ஷ்ட்ராம்ச ந்ருசிஹ்மஸ்ய த்வசம் ததா।
த்ரிவிக்ரமஸ்ய ப்ருஷ்டாஸ்தி க்ருஹீத்வைவ புரா வயம்।
பாலிதாः பரமேசாந த்வயாஸர்வேச்வராமராः।
பண்டாசுரம் ஜலந்த்ரஞ்ச பஞ்சமேட்ரம் மஹாசுரம்।
ஹத்வா பூர்வம் மஹாதேவ த்வயா சம்ரக்ஷிதாः சுராः।
ஏவமாதி பயாத் ஸ்வாமிந் தைத்யவர்க்கசமுத்பவாத்।
உத்திருத்ய தேவாந் தேவேச ரக்ஷிதகில ப்ரபோ॥

"சுவாமீ! தேவரீர் முன்னுளேயிலே திரிபுரத்தசுரர்களால் விளைந்த பயத்தினின்று காத்தருளவில்லையா; காளகண்டரே! மேலும் அவ்வாறு ஆலகாலவிஷாக்கினியினுற் றகிக்கப்பட்ட தேவர்களைத் தேவரீர் விஷத்தைப் புசித்துக் காத்தருளினீரன்றோ; அவ்வியல்பினராகிய நீவிர் எங்குற்றீர்; கயாசுரன் அந்தகாசுரன் என்போரைச் சங்கரித்துத் தேவர்களைக் காக்கவில்லையா? அஃதன்றி நாராயணருடைய மச்ச கூர்ம வராக நரசிஹ்ம திரிவிக்கிரம அவதாரங்களிலெல்லாம் (முறையே) அவற்றின் கண்ணையும், ஓட்டையும், சிங்கப்பற்களையும், நரசிஹ்மத்தோலையும், முதுகென்பையும் பிடுங்கிக் கொன்று (தேவர்களை) காப்பாற்றினீரே; பின்னும் பண்டாசுரன், ஜலந்தராசூரன், பஞ்சமேஷ்டிமஹாவசுரன் என்போரையும் ஹதஞ்செய்து மகாதேவரே! தேவரீர் அவர்களைக் காத்தருளினீரே; அதுபோல, எங்களையும் (ஜயந்தன் முதலாயினோரையும்) காத்தருள்க" என்று மகேந்திரகாண்டமும் சொல்கின்றன.

உருவாமுலகுக்கொருவனுகிய
பெரியோய்வடிவின்பிறிதிங்கின்மையி
னெப்பொருளாயினுமிங்குளதாமெனி
னப்பொருளுனக்கேயவயமாதலின்
முன்னியமூவெயின்முழங்கெரியூட்டித்
தொன்னிர்வையகந்துயர்கெடச்சூழ்ந்ததும்

வேள்விமூர்த்திதன்றலையினைவிடுத்தது
நீள்விசும்பாளிதன்றோளினைநெரித்தது
மோங்கியமறையோற்கொருமுகமொழித்ததும்
பூங்கணைவேளைப்பொடிபடவிழித்ததுந்
திறல்கெடவரக்கனைத்திருவிரலுறுத்ததுங்
குறைபடக்கூற்றினைக்குறிப்பினிலடர்த்தது
மென்றிவைமுதலாவாள்வினையெல்லா
நின்றுழிச்செறிந்தநின்செயலாதலி
னுலவாத்தொல்புகழொற்றியூர
பகர்வோர்நினக்குவேறின்மைகண்டவர்
நிகழ்ச்சியினிகழினல்லது
புகழ்ச்சியிற்படுப்பரோபொருளுணர்ந்தோரே.

திருத்தங்குமார்பிற்றிருமால்வரைபோ
லெருத்தத்திலங்கியவெண்கோட்டுப்—பருத்த
குறுத்தாணெடுமூக்கிற்குன்றிக்கணீல
நிறத்தாற்பொலிந்துநிலமே—முறத்தாழ்ந்து
பன்றித்திருவுருவாய்க்காணுதபாதங்க
ணின்றவாநின்றநிலைபோற்றி—யன்றியும்
புண்டரிகத்துள்ளிருந்தபுத்தேள்கழுகுருவா
யண்டரண்டமூடுருவவாங்கோடிப்—பண்டொருநாள்
காணுனிழியக்கனகமுடிகவித்துக்
கோணுதுநின்றகுறிபோற்றி—நாணும்
பேணிக்காலங்கள்பிரியாமைப்பூசித்த
மாணிக்காவன்றுமதிற்கடவூர்க்—காண
வரத்திற்பெரியவலிதொலைத்தகால
னுரத்திலுதைத்தவுதைபோற்றி—காத்தாமே
வெற்பன்மடப்பாவைகொங்கைமேற்குங்குமத்தின்
கற்பழியும்வண்ணங்கசிவிப்பான்—பொற்புடைய
வாமன்மகனும்மலர்க்கணையொன்றேட்டியவக்
காமனழகழித்தகண்போற்றி—தூமப்
படமெடுத்தவாளரவம்பார்த்தாடப்பற்றி
விடமெடுத்தவேகத்தான்மிக்குச்—சடல
முடங்கவலிக்குமுயலகன்றன்மொய்ம்பை
யடங்கமிதித்தவடிபோற்றி—நடுங்கத்
திருமான்முதலாயதேவாசுரர்கள்

கருமால்கடனுகம்பற்றிக்—குருமாற
நீலமுண்டநீண்முகில்போனெஞ்சழலவந்தெழுந்த
வாலமுண்டகண்டமதுபோற்றி—சாலமண்டிப்
போருகந்தவானவர்கள்புக்கொடுங்கமிக்கடர்க்குந்
தாரகன்றன்மார்பிற்றனிச்சூலம்—வீரங்
கொடுத்தெறியுமாகாளிகோபந்தவிர
வெடுத்தநடத்தியல்புபோற்றி—தடுத்து
வரையெடுத்தவாளரக்கன்வாயாறுதிர
நிரையெடுத்துநெக்குடலமிற்றுப்—புரையெடுத்த
பத்தனையபொன்முடியுந்தோளிருபதுந்நெரிய
மெத்தனவேவைத்தவிரல்போற்றி—யத்தகத்த
வானவர்கடாங்கூடிமந்திரித்தமந்திரத்தை
மேனவிலவோடிவிதிர்விதிர்த்துத்—தானவருக்
கொட்டிக்குறளாயுரைத்தவயன்சிரத்தை
வெட்டிச்சிரித்தவிறல்போற்றி—மட்டித்து
வாலுகத்தானல்லிலிங்கமாவகுத்துமற்றதன்மேற்
பாலுக்குப்பக்கண்டுபதைத்தோடி—மேலுகைத்தங்
கோட்டியவன்றாதையிருதாளெறிந்துயிரை
வீட்டியசண்டிக்குவேறுக—நாட்டின்கட்
பொற்கோயிலுள்ளிருத்திப்பூமாலைபோனகமு
நற்கோலமீந்தநலம்போற்றி—நிற்க
வலந்தருமாணுன்முகனும்வானவருங்கூடி
யலந்தருமால்கொள்ளவடர்க்குஞ்—சலந்தரனைச்
சக்கரத்தாலீர்ந்தரிதன்றாமரைக்கண்சாத்துதலு
மிக்கவஃதீந்தவிறல்போற்றி—யக்கணமே
நக்கிருந்தநாமகளைமூக்கரிந்துநால்வேதந்
தொக்கிருந்தவண்ணந்துதிசெய்ய—மிக்கிருந்த
வரகைத்தலத்தேயணிமானையாங்கணிந்த
செங்கைத்திருத்ததிறல்போற்றி—திங்களைத்
தேய்த்ததுவேசெம்பொற்செழுஞ்சடைமேற்சேர்வித்து
வாய்த்திமையோர்தம்மையெல்லாம்வான்சிறையிற்—பாய்த்
பிரமன்குறையிரப்பப்பின்னுமவர்க்கு [திப்
வான்மன்றளித்தவலிபோற்றி—புரமெரித்த
வன்றுய்ந்தமூவர்க்கமர்ந்துவரமளித்துப்
நின்றுய்ந்தவண்ணநிகழ்வித்து—நன்று

ங்டைகாவன்மிக்கவருள்கொடுத்துக்கோயிற்
கடைகாவல்கொண்டவாபோற்றி—விடைகாவற்
ருனவர்கட்காற்றுதுதன்னடைந்தநன்மைவிறல்
வானவர்கள்வேண்டமயிலூருங்—கோனவனைச்
சேனுபதியாகச்செம்பொன்முடிகவித்து
வானுளவைத்தவாம்போற்றி—மேனு
ளதிர்த்தெழுந்தவந்தகனையண்டாண்டமுய்யக்
கொதித்தெழுந்தசூலத்தாற்கோத்துத்—துதித்தங்
கவனிருக்கும்வண்ணமருள்கொடுத்தங்கேழேழ்
பவமறுத்தபாவனைகள்போற்றி—கவைமுகத்த
பொற்பாகரைப்பிளந்துகூறிரண்டாப்போகட்டு
மெற்பாசரைப்போகமேல்விலகி—நிற்பால
மும்மதத்துவெண்கோட்டுக்கார்நிறத்துப்பைந்தறுகண்
வெம்மதத்தவேகத்தான்மிக்கோடி—விம்மி
யடர்த்திரைத்துப்பாயுமடுகளிற்றைப்போக
வெடுத்துரித்துப்போர்த்தவிறைபோற்றி-தொடுத்தமைத்த
நாண்மாலைகொண்டணிந்நால்வர்க்கன்றுனிழற்கீழ்
வாண்மாலையாகும்வகையருளித்—தோண்மாலை
விட்டிலங்கத்தக்கிணமேநோக்கிவியந்தகுண
மெட்டிலங்கவைத்தவிறைபோற்றி—யொட்டி
விசையன்விசையளப்பான்வேடுருவமாகி
யசையவுடற்றியநின்று—வசையினுற்
பேசுபதப்பானபிழைபொறுத்துமற்றவற்குப்
பாசுபதமீந்தபதம்போற்றி—நேசத்தால்
வாயினீர்கொண்டுமகுடத்துமிந்திறைச்சி
யாயசிர்ப்போனகமாவங்கமைத்துத்—தூயசீர்க்
கண்ணிடந்தகண்ணப்பர்தம்மைமிகக்காதலித்து
விண்ணுலகமீந்தவிறல்போற்றி—மண்ணின்மேற்
காளத்திபோற்றிகயிலைமலைபோற்றியென
நீளத்தினுனினைந்துநிற்பார்க—டாளத்தோ
டெத்திசையும்பன்முரசமார்த்திமையோர்போற்றிசைப்ப
வத்தனடிசேர்வார்களாங்கு.

—பதினொராந்திருமுறை.

---

(௯௬) கேட்டல் சிந்தித்தலாதிய இன்றியமையாதன.



𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌶𑍍𑌰𑌵𑌣𑍇𑌨 𑌮𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍇𑌦𑌂
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑌿𑌤𑌂।

தர்ஶநேந ஶ்ரவணேந மத்யா விஜ்ஞாநேநேதம் ஸர்வம் விதிதம்।

"(பரமான்வைக்) காண்டலாற் கேட்டலால் உணர்தலால் அறிதலால் ஈதெல்லாம் அறியப்பட்டாயின" என்று பிருகதாரணியோபநிடதமும்,

𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌸𑌤𑌤𑌂 𑌶𑌂𑌭𑍁𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌶𑍍𑌚𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌸𑌤𑌤𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍈𑌰𑌿𑌤𑌿 𑌶𑌙𑍍𑌕𑌰𑌃॥

ஶ்ரோதவ்யஸ்ஸததம் ஶம்புர்மந்தவ்யஶ்சோபபத்திபிঃ।
ஜ்ஞாத்வாச ஸததம் த்யேயோ வேதாந்தைரிதி ஶங்கரঃ॥

"சம்புவானவர் எஞ்ஞான்றும் கேட்கற்பாலர், பொருந்துமாற்றுற் சிந்திக்கற்பாலர்; *வேதாந்தங்களால் எஞ்ஞான்றும் அறிந்து சங்கரர் தியானிக்கற்பாலர்" என்று உபதேசகாண்டமும்,

𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌶𑍍𑌚𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃।
𑌮𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌸𑌤𑌤𑌂 𑌧𑍍𑌯𑍇𑌯 𑌏𑌤𑍇 𑌦𑌰𑍍𑌶𑌨𑌹𑍇𑌤𑌵𑌃॥

ஶ்ரோதவ்யঃ ஶ்ருதிவாக்யேப்யோ மந்தவ்யஶ்சோபபத்திபிঃ।
மத்வாச ஸததம் த்யேய ஏதே தர்ஶநஹேதவঃ॥

"சுருதிவாக்கியங்களினுற் சிரவணஞ் செயற்பாற்று; பொருந்துமாற்றுன் மனனஞ் செயற்பாற்று; சிந்தித்தபின்னர் இடையீடின்றித் தியானிக்கற்பாற்று; இவை (பிரம) சாக்ஷாத்காரத்துக்கு ஏதுக்கள்" என்று அபியுக்தசூக்தியும் கூறுகின்றன.

---

* ஈண்டு வேதாந்தங்கள் என்றவை பிரஹ்மசூத்திர சைவபாஷ்யத்துக்கு ஆதாரமாகிய பரோபநிடதங்களேயன்றி, மாயாவாதோபநிடதங்களன்று.

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனுப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

—ஞா, திருப்பிரமபுரம்.

பன்னிலூறும்பழத்தினுமின்சுவை
யென்னிலூறியெனக்கேகளிதரு
*முன்னிலுன்னுமுன்னுவிடில்விட்டிடு
மென்னுளீசனிருந்தவியற்கையே.

—நா, திருக்குறுந்தொகை.

உன்னிலுன்னியுனுவிடிற்பெயர்குவ
மென்னுமதுவேநின்னியல்பெனின்னே.

—இருபாவிருபது.

𑌮𑌨𑌸𑍈𑌵𑍇𑌦𑌮𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍।

மநசைவேதமாப்தவ்யம்।

—கடோபநிடதம், ௪. ௧௧

---

(௬௭) சிவபிரான் அருளுந் திருவருளினால், அவர் அறியற்பாலர்.

𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾
𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 । 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁-
𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁-
𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍॥

நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா ந பஹு-
நாஸ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்॥

—கடோபநிடதம், ௨. ௨௨.

---

* உன்னில் என்றது கேட்டல் சிந்தித்தல் தெளிதற்கண்ணதாய முயற்சியின் மேற்று.

"இந்தப் பரமான்மாவானவர் திறமையினாலும், புத்தியினாலும், மிகுகேள்வியினாலும் அடையற்பாலரன்று; இந்தப் பரமான்மாவானவர் எவனை விரும்புகின்றாரோ, அவனால் அடையப்படுகின்றார்; அவனுக்கு இந்தப் பரமான்மாவானவர் தமது சொரூபத்தை விளக்குகின்றார்"

𑌨𑌾𑌵𑌿𑌰𑌤𑍋 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃।

𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍॥

நாவிரதோ துஸ்சரிதாந்நாஸாந்தோ நாஸமாஹிதঃ।

நாஸாந்தமாநஸோவாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத்॥

—கடோபநிடதம், ௨, ௨௩.

"தீயொழுக்கத்தினின்று நீங்காதவனும், சாந்தியில்லாதவனும், நிலையில்லாதவனும், மனப்பொறுமையில்லாதவனும் இந்தப் பரமான்மாவை அருண்ஞானத்தினால் அடையமாட்டான்"

𑌮𑌨𑌸𑍈𑌵𑍇𑌦𑌮𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍।

மநஸைவேதமாப்தவ்யம்।

—கடோபநிடதம், ௪. ௧௧

"இந்தப் பரப்பிரமசிவம் அருண்ஞானத்தினால் அறியற்பாற்று"

𑌨 𑌸𑌂𑌦𑍃𑌶𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌰𑍂𑌪𑌮𑌸𑍍𑌯 𑌨 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾

𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌨𑍈𑌨𑌮𑍍। 𑌹𑍃𑌦𑌾 𑌮𑌨𑍀𑌷𑍀 𑌮𑌨𑌸𑌾𑌭𑌿

𑌕𑍍𑌲𑍢𑌪𑍍𑌤𑍋 𑌯 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌮𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿॥

நஸந்த்ருஸே திஷ்டதி ரூபமஸ்ய நசக்ஷுஷா பஸ்யதி கஸ்சநைநம் । ஹ்ருதா மநீஷீ மநஸாபிக்லுப்தோ ய ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி॥

—கடோபநிடதம், ௬, ௯

"இந்தப் பரமான்மாவாகிய சிவனாது ரூபம் நன்றாகத் தெரியுமாறு நிலைப்பதில்லை; எவனும் இந்தப் பரமான்வைப் புறக்கண்ணினாற் காண்கின்றானில்லை; (ஞான இச்சாக் கிரியாசொரூப) அருண் ஞானத்தினால் அறியப்படுகின்றார்; எவர்கள் இந்தப் பரமான்மாவை அறிகின்றார்களோ, அவர்கள் சிவமாகின்றார்கள்."

உயிராவணமிருந்துற்றுநோக்கி
யுள்ளக்கிழியினுருவெழுதி
யுயிராவணஞ்செய்திட்டுன்கைத்தந்தா
லுணரப்படுவாரோடொட்டிவாழ்தி
யயிராவணமேறாதானேறேறி
யமரர்நாடாளாதேயாரூராண்ட
வயிராவணமேயென்னம்மானேநின்
னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே.

—நா, திருவாரூர்.

அருட்கண்ணிலாதார்க்கரும்பொருடோன்றா
வருட்கண்ணுளோர்க்கெதிர்தோன்றுமரனே
யிருட்கண்ணினோர்க்கங்கிரவியுந்தோன்றாத்
தெருட்கண்ணினோர்க்கெங்குஞ்சிவொளியாமே.

—திருமந்திரம்.

அருளேயுலகெலாமாள்விப்பதீச
னருளேபிறப்பறுப்பதானா—லருளாலே
மெய்ப்பொருளைநோக்கும்விதியுடையேனெஞ்ஞான்று
மெப்பொருளுமாவதெனக்கு.

—பதினொராந்திருமுறை.

(௬அ) சரியை.



அகஸ்தியர் இராஜகுமாரரை நோக்கிக் கூறுமாறு:—

ஶிவவுஜாம் யதி க்ருதம் ஸவதி ஸஙஸவாவஹஃ।
ஶாவவொகெஷா ஸவெஹ-ஸ நவெஶ்வயு-ஸு ஸவிஷுதி।
ஶிவவுஜாம் விநாவெநவ ஸஷதிஷெ-ஷி நாவிஹ॥

ஶிவபுண்யம் யதி க்ருதம் பவத்பிஸ் ஸர்வபாபஹம்।
ஶாபமோக்ஷா பவேந்நூநமைஶ்வர்யஞ்ச பவிஷ்யதி।
ஶிவபுண்யம் விநாநைவ ஸத்கதிர் தேஹிநாமிஹ॥

"நீவிர் சமஸ்தபாவங்களையும் தொலைக்கும் சிவபுண்ணியஞ் செய்வீர்களாயின், உங்களுக்குச் சாபமும் தீர்ந்து சமஸ்த செல்வமும் எய்தும் என்பது நிச்சயம்; ஆன்மாக்கள் நற்கதி அடைதற்குச் சிவபுண்ணியமன்றி வேறுவழியில்லை" என்றது உபதேச காண்டம்.

இந்தச் சிவபுண்ணியம் நால்வகைப்படும்:—அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். இவற்றுள்ளே சரியை வருமாறு:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சர்யாது ப்ராதருத்தாய சௌசாசமநபூர்வகம்।
ஸ்நாத்வா விபூதிருத்ராக்ஷம் த்ருத்வா தேவாந்ருஷீநபி।
ஸந்தர்ப்ய புஷ்பாண்யாராமாத் ஸமாநீயாதிநிர்மலா:।
அபிஷேசஜலம் தத்வதநுலேபநபூர்வகம்।
ஆநீய தத்தத் க்ருத்யாநி நிவ்ருத்யச யதாக்ரமாத்।
தீபைர் தேவாலயம் ஸர்வமலங்குர்யாத்விசக்ஷண:।
ஶிவபக்தவசஶ் ஶ்ருண்வந் ஶிவஸேவாபராயண:।
ஆசரேதேவமநிஶம் சர்யாம் பாபப்ரணாஶிநீம்॥

—உபதேசகாண்டம்.

"காலையில் எழுந்து சௌசம் ஆசமனம் என்பவற்றைச் செய்து, ஸ்நானம் செய்து, விபூதி உருத்திராக்ஷம் தரித்து, தேவ ருஷி பிதிர்தர்ப்பணமுடித்து மகாபரிசுத்தனாகிப் (போய்த்) திரு நந்தனவனத்தினின்று புஷ்பங்களையும், அங்ஙனம் அபிஷேகஜலத்தையும், சந்தனம் கஸ்தூரிமுதலிய லேபனவஸ்துக்களையும் கொணர்ந்து, முறைப்படி செயற்பாலனவாகிய அவ்வக்கிருத்தியங்களை முடித்து, பின்னர்ச் சிவாலயமெங்கும் தீபங்களேற்றிச் சிவனடியார் சொற்படி ஒழுகி, சிவபிரானை வழிபடுதலில் முயன்றவனுய்ச் சகலபாவங்களையும் ஒழிக்கும் சரியையை எஞ்ஞான்றும் ஆசரிக்க" என்றும்,

𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌯𑍂𑌯𑌮𑌮𑍃𑌤𑍇𑌶𑌂 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌮𑍍।
𑌸𑌦𑌾 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 𑌕𑍃𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑍀𑌣𑌯𑌧𑍍𑌵𑌮𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌾𑌃।
𑌏𑌕𑌾𑌤𑍍𑌰 𑌶𑌮𑍍𑌭𑍁𑌸𑌵𑌿𑌧𑌂 𑌸𑌮𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑍍𑌯 𑌵𑌿𑌲𑍇𑌪𑌯।
𑌅𑌭𑌿𑌷𑍇𑌕𑌜𑌲𑌂 𑌚𑌾𑌨𑍍𑌯𑌾 𑌶𑌮𑍍𑌭𑍋𑌰𑌾𑌨𑌯𑌤𑍁 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃॥

சத்வாரஃ புருஷா யூயமம்ருதேஶம் பராத்பரம்।
ஸதா ப்ரதக்ஷிணீ க்ருத்ய ப்ரீணயத்வமதந்த்ரிதாஃ।
ஏகாத்ரஶம்பு ஸவிதம் ஸம்மார்ஜய விலேபய।
அபிஷேகஜலம் சாந்யா ஶம்போராநயது ப்ரபோஃ॥

—உபதேசகாண்டம்.

"நீவிர் நால்வரும் பராற்பராகிய அமிர்தேசுவரரைச் சோம்பலின்றிப் பிரதக்ஷிணஞ் செய்து அவரைப் பிரீதி செய்வீராக; இப்பெண்களில் ஒருத்தி சிவசந்நிதானத்திலே திருவலகிட்டுத் திருமெழுக்குச் சாத்துக" என்றும் கூறப்படலாற் சிவாலயநிர்மாணம், சுவாமிக்குத் திருவாபரணம் கொடுத்தல், திருவலகிடுதல், திருமெழுக்குச்சாத்தல், திருவிளக்கேற்றல், புஷ்பங்கொணர்தல், திருவமுது சமர்ப்பித்தல், பிரதக்ஷிணஞ் செய்தல், நமஸ்கரித்தல் என்பன சரியாபாதத்தில் அடங்கும்.

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 [illegible] 𑌸𑌹 𑌶𑌮𑍍𑌭𑍁𑌨𑌾।
[illegible] 𑌗𑍌𑌰𑌵𑌂 𑌯𑌥𑌾।
𑌤𑌥𑌾 [illegible]।

ப்ரதக்ஷிணஞ்ச ஸர்வத்ர வ்யாபித்வம் ஸஹ ஶம்புநா।
ஸரித் ஸமுத்ரஸம்யோகாஜ்ஜலம் ஸமரஸம் யதா।
ததாத்மஶிவயோர்யோகோ நமஸ்கார: ப்ரகீர்த்யதே॥

"சிவபிரானோடு யாண்டும் வியாபித்திருத்தலே பிரதக்ஷிணம் எனப்படும்; எங்ஙனம் நதியானது சமுத்திரத்தோடு கூடித் (தன்) நீரைச் சமரசமாக அடைந்ததோ, அங்ஙனம் ஆன்மா சிவத்தோடு சேர்ந்து சாமியாசத்தை அடைந்திருத்தலே நமஸ்காரம் எனப் படும்" என்றது காலோத்தரம்.

𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌰𑍍𑌮𑌹𑍇𑌶𑌸𑍍𑌯 𑌆𑌲𑌯𑍇𑌷𑍁 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃।
𑌶𑌨𑍈𑌸𑍍𑌸𑌮𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾 𑌮𑍃𑌦𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑌾॥

க்ரியாமூர்த்தேர் மஹேஶஸ்ய ஆலயேஷு ஸமாஹித:।
ஶநைஸ்ஸம்மார்ஜநம் குர்யாந் மார்ஜந்யா ம்ருதுஸூக்ஷ்மயா॥

"கிரியாமூர்த்தியாகிய சிவபிரானது ஆலயங்களிலே சென்று சூக்குமமாய் மிருதுவாயுள்ள திருவலகினாலே மெதுவாகப் பெருக்குக" என்றது சிவஞானபோதசங்கிரகம்.

𑌉𑌪𑌰𑍍𑌯𑌧𑌶𑍍𑌚 𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 𑌜𑌨𑍍𑌤𑍁𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍।
𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍂𑌤𑍇𑌨 𑌤𑍋𑌯𑍇𑌨 𑌯𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍁𑌪𑌲𑍇𑌪𑌨𑌮𑍍॥

உபர்யதஶ்ச ஸந்த்யஜ்ய ப்ரத்யக்ரம் ஜந்துவர்ஜிதம்।
வஸ்த்ரபூதேந தோயேந ய: குர்யாதுபலேபநம்॥

"(சாணத்தின்) மேல் கீழ் தள்ளிப் புதிதாயுள்ளதும், செந்துக்களில்லாததுமாயுள்ள சாணத்தைத் தூயவஸ்திர (சாணி) ஜலத்தினால் திருமெழுக்குச் சாத்தல்வேண்டும்" என்றும்,

𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑌾𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑍈𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌃 𑌸𑌮𑌾𑌦𑌾𑌯 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌤𑍁।
𑌮𑌾𑌲𑌾𑌂 𑌗𑍍𑌰𑌥𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌯𑍋 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌨𑍇।
𑌯𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑌾𑌯 𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌰𑌾𑌮𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌧𑌿𑌮𑍍।
𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌗𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑌾𑌸𑌮𑌾𑌰𑍍𑌗𑌕𑌮𑍍॥

ஆத்மாராமோத்பவை: புஷ்பைஸ் ஸமாதாய ஶிவஸ்யது।
மாலாம் க்ரதயித்வாது யோதத்யாத்பரமேஷ்டிநே।
ய: குர்யாத்து மஹேஶாய புஷ்பாராமக்ரியாவிதிம்।
ஸ்தோத்ரகாநாதிகம் ஸர்வம் ய: குர்யாத் தாஸமார்க்ககம்॥

"தனது தோட்டத்துள்ளே புஷ்பித்த புஷ்பங்கள்கொண்டு சிவபெருமானுக்காக மாலை கட்டி அவருக்கு எவன் கொடுக்கின்றானோ, எவன் விதிப்பிரகாரம் புஷ்பத்தோட்டத்தைச் சிவபெருமான்பொருட்டு அமைக்கின்றானோ, ஸ்தோத்திரம் கானம் முதலியவற்றை எவன் செய்கின்றானோ, அவன் தாசமார்க்கத்துக்குரியன்" என்றும் சிவாகமம் கூறுகின்றது.

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
வுலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே.

—நா, திருக்குறுக்கைவீரட்டம்.

ஆராய்ந்தடித்தொண்டராணிப்பொனாரூரகத்தடக்கிப்
பாரூர்பரிப்பத்தம்பங்குனியுத்திரம்பாற்படுத்தா
னாரூர்நறுமலர்நாதனடித்தொண்டனம்பிநந்தி
நீராற்றிருவிளக்கிட்டமைநீணாடறியுமன்றே.

—நா, திருவாரூர்.

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவத்த
கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றுங்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே.

—நா, திருக்குறுக்கைவீரட்டம்.

சொற்றரும்மறைபாடினர்சுடர்விடுஞ்சடைமுடியினர்
கற்றருவ்வடங்கையினர்*காவிரித்துறைகாட்டினர்
மற்றருந்திரடோளினர்மாசில்வெண்பொடிப்பூசினர்
விற்றரும்மணிமிடற்றினர்மேயதுவிளநகரதே.

—ஞா, திருவிளநகர்.

---

*திருவிளநகரின்கண்ணே எழுந்தருளிய சிவபெருமான்பொருட்டுப் புஷ்பக்கூடை தாங்கிக் காவேரியாற்றில் வந்த அருள்வித்தர் என்னும் பிராஹ்மணர் வெள்ளத்தினால் அடியுண்டு செல்லுங்கால், அவர் திருப்பூங்கூடையை விடாது சிவபெருமானைத் தியானிக்க, அப்போது சிவபிரான் அவர் அன்புக்கிரங்கி அப்பிராஹ்மணர்க்குத் துறைகாட்டிக் கரையேற்றி ஞானோபதேசஞ் செய்தார். இவ்வுண்மையைத் துறைகாட்டினர் என்று திராவிடசுருதி சூசித்தது.

தொண்டர்தண்கயமூழ்கித்துணையலுஞ்சாந்தமும்புகையுங்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறி*முருகன்செய்கோலங்
கண்டுகண்டுகண்குளிரக்களிபரந்தொளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே.

—ஞா, திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்.

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தர்க்குப்பத்தராகி
யரும்பொடுமலர்கள்கொண்டங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியினுலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே.

—நா, திருக்கடவூர்வீரட்டம்.

தாரமாகியபொன்னித்தண்டுறையாடிவிழுத்து
நீரினின்றடிபோற்றிநின்மலாகொள்ளெனவாங்கே
†யாரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளு
மீரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே.

—சு, திருவானைக்கா.

ஆக்கையாற்பயனென்—னரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்
வாக்கையாற்பயனென்.

கால்களாற்பயனென்—கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென்.

கைகாள்கூப்பித்தொழீர்—கடி
மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர்.

—நா, திருவங்கமாலை.

---

* இத்திராவிடசுருதியில் முருகநாயனார் திருத்தொண்டு சிறப்பிக்கப்பட்டது. † உறையூர்ச் சோழமகாராஜா பதக்கந் தரித்துக்கொண்டு காவேரியில் ஸ்நானஞ் செய்யும்போது அப்பதக்கம் நீரிலே நழுவிவிட, அதனைச் சிவபெருமானே கொண்டருள்க என்று பிரார்த்திக்க, அது திருமஞ்சனக்குடத்தில் அகப்பட்டு அபிஷேகஞ் செய்யுங்காற் சிவலிங்கப்பெருமான் மீது விழ, அதனைத் தரித்தருளி அரசர்க்கு அருள்புரிந்தாரென்றமை இத்திராவிடசுருதியிற் குறிக்கப்பட்டது.

𑌶𑌿𑌵𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌶𑍍𑌶𑌂𑌭𑍁𑌶𑍍𑌶𑌂𑌕𑌰𑌶𑍍𑌚𑌂𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌃।
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂𑌜𑌯𑍋 𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌕𑍍𑌷𑍋 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑍋 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌭𑌵𑍋 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍋 𑌹𑌰𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌉𑌮𑌾𑌪𑌤𑌿𑌃।
𑌏𑌵𑌮𑌾𑌦𑍀𑌨𑌿 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑍁𑌮𑌾𑌪𑌤𑍇𑌃।
𑌤𑍇𑌷𑍁 𑌚𑍈𑌕𑌮𑌨𑍇𑌕𑌂 𑌵𑌾 𑌯𑍋 𑌜𑌪𑌤𑍍𑌯𑌨𑌿𑌶𑌂 𑌨𑌰𑌃।
𑌸 𑌏𑌵 𑌧𑌨𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌂𑌦𑍍𑌯𑌶𑍍𑌚 𑌸𑌕𑌲𑍈𑌸𑍍𑌸𑍁𑌰𑍈𑌃।
𑌸 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌨𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑍈𑌲𑌾𑌸𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌭𑍂𑌸𑍁𑌰𑌾𑌃।
𑌉𑌷𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌰 𑌚𑌿𑌰𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌰𑌮𑍍।
𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑍋 𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌯𑍇 𑌶𑌿𑌵𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇।
𑌶𑌿𑌵𑌲𑍋𑌕𑌂 𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌶𑌿𑌵𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।
𑌯𑌾𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌨𑍈𑌵𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍।

ஶிவஃ பஶுபதிஶ்ஶம்புஶ் ஶங்கரஶ் சந்த்ரஶேகர:।
ம்ருத்யுஞ்ஜயோ விரூபாக்ஷோ நீலகண்டோ மஹேஶ்வர:।
பவோ பர்கோ மஹாதேவோ ஹரோ ருத்ர உமாபதி:।
ஏவமாதீநி நாமாநி ஸந்தி திவ்யாந்யுமாபதே:।
தேஷு சைகமநேகம்வா யோ ஜபத்யநிஶம் நர:।
ஸ ஏவதந்ய: புண்யாத்மா வந்த்யஶ்ச ஸகலைஸ் ஸுரை:।
ஸ போகாந் விபுலாந் புக்த்வா கைலாசம் ப்ராப்ய பூஸுரா:।
உஷித்வாத்ர சிரம் காலம் சாயுஜ்யம் ப்ரஹ்மண: பரம்।
ஆப்நோதி ஸத்யமேதத்வோ வர்ணிதம் ப்ராஹ்மணோத்தமா:।
ஜ்ஞாத்வா யே ஶிவநாமாநி பவித்ராண்யுச்சரந்தி தே।
ஶிவலோகம் ஸமாஸாத்ய ஶிவசாயுஜ்யமுத்தமம்।
யாந்தீத்யேதத் த்விஜஶ்ரேஷ்டா நைவாஶ்சர்யமிதம் த்ருவம்॥

—உபதேசகாண்டம்.

‘‘சிவன், பசுபதி, சம்பு, சங்கரன், சந்திரசேகரன், மிருத்தியுஞ்ஜயன், விரூபாக்ஷன், நீலகண்டன், மஹேசுவரன், பவன், பர்க்கன், மகாதேவன், அரன், உருத்திரன், உமாபதிமுதலிய இந்தத் திவ்யநாமங்கள் சிவபெருமானுக்குள்ளன; இவற்றுள் ஒரு

திருநாமத்தையேனும் அநேக திருநாமங்களையேனும் எவன் எப்போதுஞ் செபிக்கின்றானோ, அவன் தன்னியனும் புண்ணியான்மாவும் சமஸ்ததேவர்களாலும் வந்திக்கற்பாலனுமாகி, சமஸ்தபோகங்களையும் துய்த்து இறுதியிற் கைலாசத்தை அடைந்து அங்கே சிலகாலமிருந்து, பின்னர்ப் பரப்பிரஹ்ம சாயுச்சியத்தை அடைகின்றான் என்பதை முனிவர்களே! உங்களுக்கு உண்மையாய்ச் சொல்கின்றேன்; சிவபெருமானது திருநாமங்கள் மகாபரிசுத்தமுடையன என்றறிந்து எவர்கள் உச்சரிக்கின்றார்களோ, அவர்கள் சிவலோகத்தை அடைந்து உத்தமமாகிய சிவசாயுச்சியத்தை அடைகின்றார்கள் என்பதில் ஆச்சரியமில்லை என்பது நிச்சயமே" என்றும்,

𑌜𑌪𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌸𑌨𑍍𑌤𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌚 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌭𑍈𑌰𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌵𑍀𑌰𑌭𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 ।
𑌮𑌹𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌨𑌨𑍍𑌦𑍀𑌶𑌸𑍍𑌯 𑌗𑌣𑌾𑌗𑍍𑌰𑌣𑍇𑌃 ।
𑌮𑌹𑌾𑌕𑌾𑌲𑌾𑌦𑌿 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌤𑌦𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑍁𑌧𑌸𑍍𑌯 𑌚 ।
𑌵𑍃𑌷𑌭𑌸𑍍𑌯 𑌚 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 ।
𑌜𑌪𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌮𑌹𑌾𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌪𑌿 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஜபந்தி யே மஹாதேவ்யா திவ்யநாமாநி ஸந்ததம்।
விக்நேஶ்வரஸ்ய நாமாநி ஸ்கந்தஸ்ய ச மஹாத்மந:।
பைரவஸ்யச நாமாநி வீரபத்ரஸ்ய தாந்யபி।
மஹாஶாஸ்துஶ்ச நாமாநி நந்தீஶஸ்ய கணாக்ரணே:।
மஹாகாளாதி நாமாநி ததைவாஸ்த்ராயுதஸ்யச।
வ்ருஷபஸ்யச நாமாநி பக்தாநாம் ஶங்கரஸ்யச।
ஜபந்தியே மஹாபக்த்யா விப்ரத்யபி நிரந்தரம்।

நதாந் ப்ரத்யதிகாரோநஃ பாபஸ்ப்ருஷ்டி விவர்ஜிதாந்।
த்ருஷ்ட்வா தாந் தூரதோ பீத்யா கச்சாமி ஶிவவல்லபாந்।
தஸ்மாத் த்வமபி தாந் புண்யாந் த்ருஷ்ட்டமாத்ரேண தூரதஃ।
ப்ரணம்யகச்சபீத்யாஶு ப்ரமாதி பவமாபுநஃ॥

—உபதேசகாண்டம்.

"(காலனே! கேள்) உமை, விநாயகர், மகாத்துமாவாகிய ஸ்கந்தர், பைரவர், வீரபத்திரர், மகாசாஸ்தா, கணுதிபராகிய நந்திகேசுவரர், மகாகாளர்முதலாயினோர், அஸ்திராயுதர், இடபராஜர், சிவபக்தர்கள் என்னும் இவர்கள் திருநாமங்களை எந்தப் பெரியோர் எப்போதும் செபிக்கின்றார்களோ, இன்றேல் இடையீடின்றித் தங்களுக்குப் பெயராகவைத்துக்கொள்ளுகின்றார்களோ பாவத்தொடக்கில்லாத அவ்வியல்பினரிடத்து நமது அதிகாரம் செல்லாது; அந்தச் சிவநேசர்களைக் கண்டவுடனே நாம் மிகுதியும் பயந்து தூரத்தில் ஓடிவிடுகின்றேம்; ஆகலின், நீயும் அங்ஙனமே அப்புண்ணியர்களைக் கண்டமாத்திரத்தில் மிகுந்த பயத்தோடு நமஸ்கரித்துவிட்டு விரைந்து தூரத்தில் ஓடிப்போ; இனிப்பின்னரும் இவ்விஷயத்திலே தவறிப்போகாதே என்றார் (மகாகாளர்)" என்றும் உபதேசகாண்டம் கூறுகின்றது.

விளக்கிருந்த இடம் விளக்கு என்னும் பெயராற் கூறப்பட்டாற்போல, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்களும் சிவனார் திருநாமங்களாகக் கொள்ளப்படுகின்றன. அஃதன்றி,

𑌏𑌤𑌾𑌨𑍍𑌷𑌡𑌪𑌿𑌶𑌂𑌭𑍍𑌵𑌾𑌦𑍀𑌞𑍍𑌶𑌿𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌾 𑌨𑍍𑌯𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌗𑌮𑌾𑌨𑌪𑌿 𑌶𑌾𑌙𑍍𑌕𑌰𑌾𑌨𑍍।
𑌤𑌥𑌾 𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌕𑌾𑌨𑍍𑌪𑌰𑌾𑌨𑍍॥

ஏதாந் ஷடபி ஶம்ப்வாதீஞ்சிவஸ்தாநாந்யபி த்விஜாஃ।
வேதாந்விபூதி ருத்ராக்ஷமாகமாநபி ஶாங்கராந்।
ததா ஶிவபுராணாநி ஶிவஸம்பந்தகாந் பராந்॥

"சிவஸ்தலங்கள், வேதங்கள், விபூதி, உருத்திராக்ஷம், ஆகமங்கள், சிவபுராணங்கள் என்னும் சிவசம்பந்தமாகிய ஆறையும்,

சிவசம்பந்தமாயுள்ள பிறவற்றையும் (தூஷியாது பூஷித்தல் சிவ புண்ணியமாம்)" என்றும் ஸ்காந்தபுராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

ஆஹதாக்யஸ்ய நாதஸ்ய லயஃ ஸ்தோத்ரம் ஸமீரிதம்।

ஆஹதாக்யஸ்ய நாதஸ்ய லயஃ ஸ்தோத்ரம் ஸமீரிதம்।

"ஆஹதம் எனப்படும் நாதத்தின் லயமானது ஸ்தோத்திரம் எனப்படும்" என்றது காலோத்தராகமம்.

ஒருவன் தனது உற்ற பந்துவின் சாவை முற்றவுணர்ந்தானாயினும், அவன் இறந்தவனையுற்று உரையாடியபோது துன்பமீதூரப்பெற்று அழுதலைக் காண்கின்றோம்; அதுபோலச் சிவபெருமானைப் புகழ்ந்த ஸ்துதிகளை ஒருவன் அறிந்துளனாயினும், அப்பெருமானையுற்று அவன் ஸ்தோத்திரஞ் செய்யும்போதுதான் மயிர்சிலிர்த்துக்கண்ணீர்வார்ந்து அவனுக்கு அன்புமீதூரப்பெறும். ஆகலின், சிவநாமோச்சாரணஞ் செய்யும்போதேனும், ஸ்தோத்திரஞ் செய்யும்போதேனும், ஸ்தோத்திரங்கள் சிவநாமங்கள் என்பவற்றைச் சொல்லிப் பாடி ஆடும்போதேனும் மனசு புலன்களிற் செல்லாது ஒருநெறிப்பட்டுச் சிவபக்தியிலே முதிர்ந்து முறுகி ஓங்கிநிற்குங்கால் அவன் உள்ளத்திலே இன்பம் ஜனிக்கும்; சிவநாமஞ் சொல்லுதல், ஸ்தோத்திரம் பாடல், பாடியாடுதல் என்பனவும் சரியாபாதத்தில் அடங்கும்.

விண்ணியல்விமானம்விரும்பியபெருமான்வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை, நண்ணியநூலன்ஞானசம்பந்தனவின்றவிவ்வாய் மொழிநலமிகுபத்தும், பண்ணியல்பாகப்பத்திமையாலேபாடியு மாடியும்பயிலவல்லோர்கள், விண்ணவர்விமானங்கொடுவரவேறி வியனுலகாண்டுவீற்றிருப்பவர்தாமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

இளகக்கமலத்தீன்களியங்குங்கழிசூழக்
களகப்புரிசைக்கவினார்சாருங்கலிக்காழி
யளகத்திருநன்னுதலிபங்காவரனேயென்
றுளகப்பாடுமடியார்க்குறுநோயடையாவே.

—ஞா, திருப்பிரமபுரம்.

நீதிபேணுவீர், ஆதியன்னியூர்ச்
சோதிநாமமே, யோதியும்மினே.

—ஞா, திருவன்னியூர்.

விளக்கினார்பெற்றவின்பமெழுக்கினாற்பதிற்றியாகுந்
துளக்கினன்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ஞ்ஞெறிஞானமாகு
மளப்பிலகீதஞ்சொன்னார்க்கடிகடாமருளுமாறே.

—நா. தனித்திருநேரிசை.

ஐயனேயரனேயென்றரற்றினா
லுய்யலாமுலகத்தவர்பேணுவர்
செய்யபாதமிரண்டுநினையவே
வையமாளவும்வைப்பர்மாற்பேறரே.

—ஞா, திருமாற்பேறு.

மாறுதவெங்கூற்றைமாற்றிமலைமகளை
வேறாகநில்லாதவேடமேகாட்டினா
னாறுதீயாடியமாத்தூரம்மானைக்
கூறுதநாவெல்லாங்கூறுதநாக்களே.

—ஞா, திருவாமாத்தூர்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே.

—ஞா, திருப்பழனம்.

தண்டிகுண்டோதரன்பிங்கிருடி
சார்ந்தபுகழ்நந்திசங்குகன்னன்
பண்டையுலகம்படைத்தான்றானும்
பாரையளந்தான்பல்லாண்டிசைப்பத்
திண்டிவயிற்றுச்சிறுகட்பூதஞ்
சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூர்கண்டியூரென்பீராகிற்
கடுகநும்வல்வினையைக்கழற்றலாமே.

—ஞா, பலவகைத்திருத்தாண்டகம்.

அந்தணரின்மேம்பட்டவப்பூதியடிகளார்
தந்தனயருடன்சாலைகூவல்குளந்தருதண்ணீர்ப்
பந்தர்பலவாண்டவரசெனும்பெயராற்பண்ணினமை
வந்தணைந்தவாகிசர்கேட்டவர்தம்மனைநண்ண.

—பெரியபுராணம்.

நம்மையுடையவர்கழற்கீழ்நயந்ததிருத்தொண்டாலே
யிம்மையிலும்பிழைப்பதெனவென்போல்வாருந்தெளியச்
செம்மைபுரிதிருநாவுக்கரசர்திருப்பெயரேழுத
வெம்மைமொழியான்கேட்கவிளம்பினீரெனவிளம்பி.

—பெரியபுராணம்.

நெருக்கியம்முடிநின்றிசைவானவ
ரிருக்கொடும்பணிந்தேத்தவிருந்தவன்
றிருக்கொடுமுடியென்றலுந்தீவினைக்
கருக்கெடும்மிதுகைகண்டயோகமே.

—நா, திருப்பாண்டிக்கொடுமுடி.

நிராமயபராபரபுராதனபராவுசிவராகவருளென்
றிராவுமெதிராயதுபராநினைபுராணனமாதிபதியா
மராமிசையிராதெழிறராயபராயணவராகவுருவா
தராயனைவிராயெரிபாராய்மிகுதராய்மொழிவிராயபதியே.

—ஞா, திருப்பிரமபுரம்.

வாராண்டகொங்கையர்சேர்மனையிற்சேரோ
மாதேவாமாதேவாவென்றுவாழ்த்தி
நீராண்டபுரோதாயமாடப்பெற்றோ
நீறணியுங்கோலமேநிகழப்பெற்றோங்
காராண்டமழைபோலக்கண்ணீர்சோரக்
கன்மனமேநன்மனமாய்க்கரையப்பெற்றோம்
பாராண்டுபகடேறித்திரிவார்சொல்லும்
பணிகேட்கக்கடவோமோபற்றற்றோமே.

—நா, மறுமாற்றத்திருத்தாண்டகம்.

மனத்தகத்தான் றலைமேலான்வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியேபாடுந்தொண்ட
ரினத்தகத்தானிமையவர் தஞ்சிரத்தின்மேலா
னேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொன்
புனத்தகத்தான றுங்கொன்றைப்போதினுள்ளான்
பொருப்பிடையானெருப்பிடையான்காற்றினுள்ளான்
கனத்தகத்தான்கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவனென்கண்ணுளானே.

—நா, திருக்காளத்தி.

ஓசையொலியெலாமானாய்நீயே
யுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே
வாசமலரெலாமானாய்நீயே
மலையான்மருகனாய்நின்றாய்நீயே
பேசப்பெரிதுமினியாய்நீயே
பிரானாபடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ.

— நா, திருவையாறு.

(௩௧) கிரியை.



.... 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑌾।
𑌪𑌞𑍍𑌚𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯𑌾𑌗𑍍𑌰𑍇 𑌸𑌾𑌙𑍍𑌗𑌂 𑌯𑌜𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂।
𑌶𑌿𑌵𑌞𑍍𑌚 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌪𑌯𑍇𑌤𑍍।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑌪𑍍𑌯𑍇𑌵𑌮𑌖𑌿𑌲𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌚 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂॥

..........................க்ரியாது ஸமநந்தரா।
பஞ்ச ஶுத்திம் விதாயாக்ரே சாங்கர் யஜந பூர்வகம்।
ஶிவஞ்ச பூஜயேத் பஶ்சாதக்நிகார்யம் ஸமாபயேத்।
க்ரியாமப்யேவமகிலாம் நிவ்ருத்யச யதாக்ரமம்॥

—உபதேசகாண்டம்.

"(பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்க சுத்தி என்னும்) பஞ்சசுத்தி செய்து, அந்தரியாகமியற்றி, பின்னர்ப் புறத்திலும் சிவபிரானைப் பூசித்து அக்கினிகாரியமுதலியவற்றையும் முறைப்படி செய்து முடித்தல் கிரியாபாதமாம்"

𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌚𑌾𑌦𑌿 𑌜𑌪𑌹𑍋𑌮𑌪𑌰𑌾𑌯𑌣𑌃।

புத்ரமார்க்கம் ஶிவார்ச்சாதி ஜபஹோமபராயணஃ।

"சிவபெருமானுக்கு மலர்கள்கொண்டும், மாலைகள் கொண்டும் அணிந்து பூசித்தலும், ஜபம், ஹோமமுதலியன செய்தலும் புத்திரமார்க்கமாகிய கிரியாபாதத்தின் மேலன.

𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌗𑌰𑌤𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋 𑌯𑌾𑌗𑍋 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌃।
𑌆𑌵𑌶𑍍𑌯𑌕𑍋 𑌬𑌹𑌿𑌰𑍍𑌯𑌾𑌗𑍋 𑌧𑌰𑍍𑌮𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇।
𑌬𑌾𑌹𑍍𑌯𑌪𑍂𑌜𑍋𑌪𑌕𑌰𑌣𑌂 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑌿𑌤𑌮𑍍।
𑌤𑌥𑍈𑌵 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑍍𑌮𑌣𑌿।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌚 𑌪𑍂𑌜𑍇𑌯𑌂 𑌮𑌾𑌨𑌸𑍀 𑌫𑌲𑌦𑌾𑌮𑌤𑌾।
𑌨𑌕𑌾𑌲𑌨𑌿𑌯𑌮𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌨𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌲𑌸𑍍𑌯𑌵𑌾।
𑌸𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌤𑍈𑌕𑌾𑌗𑍍𑌰𑌤𑌾𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌜𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌏𑌵𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌮𑍍𑌬𑌿𑌕𑌯𑌾 𑌶𑌿𑌵𑌂।
𑌬𑌹𑌵𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌭𑌵𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌤𑍍॥

அந்தர்யாகரதைர்வாபி கார்யோ யாகோ மஹத்தரஃ।
ஆவஶ்யகோ பஹிர்யாகோ தர்மகாமார்த்த முக்தயே।
பாஹ்யபூஜோபகரணம் யதாதேவஸ்ய ஸாதிதம்।
ததைவ மநஸா ஸர்வம் கல்ப்யமாந்தரகர்மணி।
ஸர்வஸ்யாபிச பூஜேயம் மாநஸிபலதாமதா।
நகாலநியமஸ்தத்ர நதேஶஸ்ய ஸ்தலஸ்யவா।
ஸ்வசித்தைகாக்ரதாயத்ர தத்ராந்தர்யஜநம் பவேத்।
ஏவமாராத்ய தேவேஶம் ஸ்வாந்தரேம்பிகயா ஶிவம்।
பஹவஸ்ஸித்திமாஸாத்ய விமுக்தா பவபந்தநாத்॥

"அந்தரியாகத்தில் விருப்பமுள்ளோராலும் மிக மகத்தாகிய புறப்பூசை செய்யற்பாற்று; புறப்பூசையானது ஆவசியகம் தருமார்த்தகாமமோக்ஷத்தின்பொருட்டுச் செய்யப்படல்வேண்டும்; சிவபெருமான்பொருட்டுப் புறப்பூசைக்கு வேண்டற்பாலனவாகிய உபகாரணங்கள் தேடிக்கொண்டமைபோல, அந்தரியாகபூசையிலும் மனசினாலே எல்லாம் தேடற்பாலனவாம்; எப்பூசைகளினும் இந்த அந்தரியாகபூசை மிகுந்த பலத்தைக் கொடுப்பதாகும்; இதற்குக் காலம் நியமம் தேசம் ஸ்தலம் இல்லை; சித்தம் ஒரே நிலையாய் எங்கே நேர்கின்றதோ அங்கே மானசிகபூசை செய்யலாம்; இங்ஙனம் அம்பிகையோடு கூடிய மகாதேவரை மானசிகமாய்ப் பூசித்து அநேகர் சித்திகளை அடைந்து பிறவிப்பாசத்தினின்று நீங்கினர்" என்றது உபதேசகாண்டம்.

கஹஸிவ்ஷி தம் ஜநெ நுரு-உ்ஙம் வஜொ உநீஷயா

ஹுணஷி ஜிஹ்வயா ஸஸழ்।

அந்தரிச்சுந்தி தம் ஜநே ருத்ரம் பரோ மநீஷயா க்ருப்ணந்தி ஜிஹ்வயா ஸஸம்।

"சனங்களிடத்து அந்தரியாமியாயிருக்கும் சர்வோத்கிருஷ்டராகிய சிவபெருமானை எவர் (இதயத்தின்கண்ணே) அருட்சத்தியோடுகூடத் தியானிக்கின்றாரோ, அவர் அன்னத்தை நாவினாற் கிரகிக்கின்றார்" என்றது இருக்குவேதம் (அ. சுக. ௩)

கஹஸிவ்ஷியெரு-உ்ஙம் ஸகாவஂஷ்யஂ உநீஷயா।

ஹுணஷிஜிஹ்வயாதெஹி ரஸவுணஂஷ்யுதொகஂஷ்।

கஹனெஷ்ஷியெரு-உ்ஙம் ஹவாநீஸஹி தஂஶிவழ்।

வஂரீஷஒவ ஹுணஷி ஜிஹ்வயாதெநஸஂஶயஃ॥

அந்தரிச்சந்தியேருத்ரம் ஸதாவந்த்யம் மநீஷயா।

க்ருஹ்ணந்தி ஜிஹ்வயா தேஹி ரஸபூர்ணம்ருதோதகம்।

அந்தர்நேச்சந்தியேருத்ரம் பவாநீஸஹிதம் ஶிவம்।

புரீஷமேவக்ருஹ்ணந்தி ஜிஹ்வயா தேநஸம்ஶய:॥

"எவர் அருட்சத்தியாரோடு கூட வந்திக்கற்பாலராகிய சிவ பிரானை எக்காலமும் தியானிக்கின்றாரோ, அவர் இரசநிறைந்த அமிர்தோதகத்தை நாவினாலே கிரகிக்கின்றார்; எவர் பவாநியாம் சத்தியாரோடு கூட அச்சிவபிரானைத் தியானிக்கவில்லையோ, அவர் மலத்தையே நாவினாற் கிரகிக்கின்றார், சந்தேகமில்லை" என்றது பராசரபுராணம்.

> 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇 𑌶𑍈𑌵𑌂 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍𑌤𑌂 𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌮𑍍।
> 𑌤𑌮𑌾𑌲𑌯𑌸𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍।
> 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌗𑌃 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌤𑍍𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇॥

> ஸ்வதேஹநிர்மலே சைவம் பாவயேத்தம் ஶிவாலயம்।
> தமாலயஸ்தமாத்மாநம் ஶிவரூபம் விசிந்தயேத்।
> அந்தர்யாகஃ ப்ரகர்த்தவ்யஸ்தஸ்மிந்நாத்மநி நிர்மலே॥

"தனது தேகம் நிர்மலமாயபோது, அதனைச் சிவாலயமாகப் பாவித்து, அவ்வாலயத்துள்ளே உள்ள ஆன்மாவைச் சிவரூபமாய்க் கொண்டு, (அச்சிவபெருமானை உயிராய்க்கொண்ட உடலாகிய) அந்த நிர்மல ஆன்மாவிலே அந்தரியாகஞ் செயற்பாற்று" என்றது வாதுளாகமம்.

> உள்ளம்பெருங்கோயிலூ னுடம்பாலயம்
> வள்ளற்பிரானார்க்குவாய்கோபுரவாசற்
> றெள்ளத்தெளிந்தார்க்குச்சீவன்சிவலிங்கங்
> கள்ளப்புலனைந்துங்காளாமணிவிளக்கே.
>
> —திருமந்திரம்.

லம் என்னும் பிருதிவிபீஜத்தை உச்சரித்து அசாதாரண பிருதிவியிலேநின்று கந்தம், புஷ்பம், தூபம், வஸ்திரம், உபவீதம், அன்னம், அபூபம், தாம்பூலமுதலிய அநேகவஸ்துக்களையும், வம் என்னும் அப்புபீஜத்தை உச்சரித்து அசாதாரண அப்புதத்து வத்தினின்று ஜலம் பால் தயிர் நெய் தேன் கருப்பஞ்சாறுமுதலிய நெகிழ்ச்சியான வஸ்துக்களையும், ரம் என்னும் அக்கினிபீஜத்தை உச்சரித்து அசாதாரண அக்கினிதத்துவத்தினின்று தீபம் இரத் தினாபரணம் கண்ணாடிமுதலிய ஒளியுடைய வஸ்துக்களையும், யம் என்னும் வாயுபீஜத்தை உச்சரித்து அசாதாரண வாயுதத்துவத்

தினின்று ஆலவட்டம், விசிறி, சாமரமுதலிய சலனவஸ்துக்களை யும், ஹம் என்னும் ஆகாயபீஜத்தை உச்சரித்து அசாதாரண வாகாய தத்துவத்தினின்று கண்டாநதம் வீணாநாதமுதலிய நாத வஸ்துக்களையுங்கொண்டு ஆன்மலிங்கத்திலே சிவபெருமானை எக் காலமும் பூசிக்க.

மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி
யுறவாதிதனையுணருமொளிவிளக்குச்சுடரேற்றி
யிறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி
யறவாணர்க்கன்பென்னுமமுதமைத்தர்ச்சனைசெய்வார்.

—பெரியபுராணம்.

𑌤𑌵𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌮𑌰𑍁𑌤𑍋 𑌮𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌜𑌨𑌿𑌮
𑌚𑌾𑌰𑍁𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑍍।

தவஶ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ரயத்தே ஜநிம
சாருசித்ரம்।

“தேவர்கள் (பொருளும் அருளுமாம்) செல்வத்தை அடை யுமாறு, சிவபிரானாது விசித்திரரூபமாகிய மகாலிங்கமூர்த் தியை அபிஷேகாதி பூசைசெய்தார்” என்றது இருக்குவேதம் (ரு.௫.௫)

𑌰𑍌𑌦𑍍𑌰𑌂 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌮𑌹𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍂𑌕𑍍𑌤𑌂 𑌶𑌿𑌲𑌾𑌮𑌯𑌂।
𑌚𑌾𑌰𑍁𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌲𑌬𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂॥

ரௌத்ரம் லிங்கம் மஹாவிஷ்ணுர் பக்த்யா ஸூத்தம் ஶிலாமயம்।
சாருசித்ரம் ஸமப்யர்ச்ய லப்தவாந் பரமம் பதம்॥

“மகாவிஷ்ணுவானவர் தூய்தாயும், சிலாமயமாயும், விசித் திரமாயுமுள்ள மகாலிங்கத்தைப் பக்தியினால் அர்ச்சித்துப் பரம பதத்தை அடைந்தார்” என்னும் உபப்பிருங்கணத்தினால், மேலே இருக்குவேதத்திற் கண்ட ஜநிம என்னும் பதம் சிவலிங்கத்தின் மேற்றும் என்பது வெளிப்படை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

புரா நாஹோ ந ராத்ரிஶ்ச ந ஸந்நாஸம்ஶ்ச கேவல:।
ஶிவஸ்தமஸி ஸம்ஹாரகாலே மஹதிசாவஸத்।
ஏகோமாஸாக்ஷிணீ தஸ்ய சதுஷ்ஷஷ்டி கலாந்விதா।
ஹ்ருத் பத்மநிலயே ஶம்பும் பூஜயித்வாவசத் த்விஜா:॥

"முன்னோர்காற் பகலுமின்றிச் சத்தும் அசத்துமின்றிக் கேவலம் சிவபெருமான் மகாசங்காரகாலத்தில் உளராயினரோ, அப்போது *உமையம்மையார் ஒருவரே அதற்குச் சாக்ஷியாய் அறுபத்திநான்கு கலைகளோடு கூடி இதயகமலத்திலே சிவபிரானைப் பூசித்தார்" என்று உபதேசகாண்டத்திற் கூறப்பட்டுள்ளது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---

* இங்ஙனம் உமையம்மையார் பூசித்தார் என்னும் சிவராத்திரிவிஷயம் சுவேதாசுவதரோபநிடதத்து, ௪. ௧௮-ம் மந்திரத்தை மூலமாகக்கொண்டது; இதனை இப்புஸ்தகத்து ௧௨-ம் பக்கத்திற் பார்க்க.

ததா விஷ்ணுரமேயாத்மா ஶங்கரப்ரியகிங்கர:।
காஶீம் ப்ராப்யாவிமுக்தாக்யாம் நைகவர்ஷாயுதந்தத:।
குர்வந்தபோ மஹத்கோரம் லிங்கமூர்த்திம் ஸதாஶிவம்।
பக்த்யா ஸம்பூஜ்ய தேவேஶாத் ப்ராப்தவாந் வரமுத்தமம்।
ப்ரஸந்நாத் பார்வதீஶாநாத் வைஷ்ணவம் பதமுத்தமம்।
ஸர்வரக்ஷாதிகாரித்வே சாபிஷிக்தோ யதாவிதி।
ஶங்கம் சக்ரம் கதா கட்கஶார்ங்காத்யாந்யாயுதாந்யபி।
மஹாலக்ஷ்மீபதித்வஞ்ச பீதமம்பரமத்புதம்।
ரதம் பத்ரரதாதீஶம் ததௌ சர்வம் ஸதாஶிவ:।
ஜகத்ரக்ஷேதிசாஜ்ஞப்தே தேவதேவேந ஶூலிநா।
ததாதிச ததா விஷ்ணுஶ்ஶிவலோகத: ஸ்திதே।
லோகே ஸ்திதோ ரரக்ஷாஸௌ ஜகத்த்ரயமதந்த்ரித:॥

—உபதேசகாண்டம்.

"பின்னர் அப்போது அளவிடப்படாத மகிமையுடையரும், சிவபிரானுக்குப் பிரியமாகிய தொண்டு செய்பவருமாகிய விஷ்ணுவானவர் அவிமுக்தம் எனப்படும் காசிப்பதியை அடைந்து, அங்கே அநேக பதிஞயிரம் வருஷமளவும் மகாகோரமாகிய தவஞ் செய்து சதாசிவலிங்கமூர்த்தியை அன்பினோடு பூசித்து, பிரத்தியக்ஷராய் எய்திய உமாசமேதராகிய சிவபெருமானிடத்திருந்து உத்தமமாகிய விஷ்ணுபதவியை அடைந்து சகல உலகங்களையும் இரக்ஷித்தற்குரிய அதிகாரத்தினிற்குமாறு முறைப்படி பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டார்; சங்கு *சக்கரம் கதை கத்தி சார்ங்க முதலிய ஆயுதங்கள், மகாலக்குமிக்கு நாயகராயிருக்குந்தன்மை, அற்புதமாகிய பீதாம்பரம், கருடனாகிய இரதம் என்னும் இவையனைத்தையும் சதாசிவப்பெருமான் கொடுத்தார்; பின் விஷ்ணுவே! இனி உலகத்தைக் காப்பீராக என்று தேவதேவேசராகிய சூலாயுதப்பெருமானால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு அக்காலமுதல் விஷ்ணுவானவர் ஸ்ரீகண்டநாயனாரது உலகத்துக்குக் கீழுள்ள உலகத்திலிருந்து திரிலோகங்களையும் சோர்வின்றிக் காத்துவருகின்றார்."

* சிவபெருமான் முதற்கண்ணே கொடுத்த சக்கரமானது ததீசி முனிவரோடு செய்த யுத்தத்தில் மழுங்கிப்போனமையால், விஷ்ணு பின்னர்ச் சிவபெருமானிடத்தினின்று சக்கரம் பெறுமாறு நாடோறும் ஆயிரம் தாமரைப் புஷ்பங்களாற் பூசித்துவந்தமையை சசு—ம் இலக்க விஷயத்திற் காண்க.

வாமனரூபங்கொண்ட விஷ்ணுவின் கங்காளம் வைரவராற் பிடுங்கித் தரிக்கப்பட்டமை ௹க-ம் இலக்கவிஷயத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் தண்டிக்கப்பட்டபோது,

𑌉𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌸𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌯𑌥𑌾𑌪𑍁𑌰𑌮𑍍।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌪𑌾𑌤𑌸𑍍𑌸𑌮𑍍𑌪𑍂𑌜𑍍𑌯 𑌜𑌗𑌾𑌮 𑌚 𑌯𑌥𑌾𑌗𑌤𑌮𑍍॥

உபேந்த்ரோபி மஹாதேவம் ஸமாராத்ய யதா புரம்।
ஶாந்தாபாதஸ் ஸமபூஜ்ஜகாமச யதாகதம்॥

"விஷ்ணுவானவர் சிவபிரானைப் பின்னரும் பூசித்துப் பாவம் தொலையப்பெற்று, வந்தமைபோற் போய்ச் சேர்ந்தார்" என்றது ஸ்காந்தபுராணம்.

நித்தநியமத்தொழிலனாகிநெடுமால்குறளனாகிமிகவுஞ்
சித்தமதொருக்கிவழிபாடுசெயநின்றசிவலோகனிடமாங்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுலமஞ்ஞைநடமாடலதுகண்
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே.

—ஞா, திருமாணிகுழி.

𑌸𑍇𑌤𑍁𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌸𑌮𑍍।
𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌾𑌮𑌾𑌸 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌥𑌂 𑌪𑍂𑌜𑌯𑌾𑌮𑌾𑌸 𑌰𑌾𑌘𑌵𑌃॥

ஸேதுமத்யே மஹாதேவமீஶாநம் க்ருத்திவாஸஸம்।
ஸ்தாபயாமாஸ லிங்கஸ்தம் பூஜயாமாஸ ராகவ:॥

—கூர்மபுராணம்.

"இராமர் சேதுமத்தியிலே இலிங்கத்திலேயுள்ள மகாதேவரும் ஈசானரும் புலித்தோலாடையினருமாயுள்ளாரை ஸ்தாபனஞ் செய்து பூசித்தார்" என்றது கூர்மபுராணம்.

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
வேவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சுர
மேவியசிந்தையினர்கட்கும்மேல்வினைவீடுமே.

—ஞா, திருவிராமேச்சுரம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

காஞ்சீஸ்தாநமநுப்ராப்ய ப்ரஹ்மா ஸம்பூஜ்ய ஶூலிநம்।
ஶைலேலிங்கேபிஷிச்யேஶம் வரம் ப்ராப ஸுதுர்லபம்।
அதிகாரஞ்ச வை ஸ்ருஷ்டேரபிஷேகபுரஸ்ஸரம்।
ஸரஸ்வதிபதித்வஞ்ச லேபே ஹம்ஸஞ்ச வாஹநம்।
சத்ரம் சந்த்ரஸமம் ஶுப்ரம் சாமர த்வயமேவச।
விஷ்ணுலோகாததோபாகே தேவர்ஷி கணபூஜிதஃ।
உவாஸ லோகம் யமபந் மஹதா வைபவேநவை।
ப்ரஹ்மலோகஸ்ஸ விக்யாதோ நாம்நா தஸ்யைவ ஸுவ்ரதாஃ।
இதி லேபே வரம் ஶம்போர் ப்ரஹ்மாலிங்கார்ச்சநா பலாத்॥

—ஸ்காந்தபுராணம்.

பிரமா காஞ்சிபுரத்துக்குப்போய் அங்கே சூலபாணியாகிய சிவபெருமானைச் சைலலிங்கத்திலே பூஜித்துக் கிடைத்தற்கரிய வரமாகிய சிருஷ்டியதிகாரத்தையும் பட்டாபிஷேகவாயிலாகப் பெற்று, சரசுவதிக்கு நாயகராயிருக்குந்தன்மை, அன்னவாகனம், சந்திரமண்டலநிகர்த்த குடை, இரு வெண்சாமரம் என்பவற்றையும் அடைந்து, விஷ்ணுலோகத்துக்குக் கீழ்ப்புறத்திலே தேவரிஷிகணங்களால் வழிபடப்பெற்றோராய் மிகுந்த வைபவத்தோடுள்ளார்; அப்பிரமா எந்த உலகத்தில் வசிக்கின்றாரோ, அது அவர் பெயரைக்கொண்டு பிரமலோகம் எனப்படுகின்றது; பிரமா சிவலிங்கத்தைப் பூசித்த வலிமையினாற் சிவபெருமானிடத்தினின்று இவ்வியல்பினதாய வரத்தைப் பெற்றார்" என்றது ஸ்காந்த புராணம்.

பிரமா ஓர்கால் வைரவரால் தமது ஐந்து தலைகளுள் ஒன்று கிள்ளுண்டபோது மற்றைத் தலைகளும் ஒழிந்துபோம் என்னும் அச்சத்தினால், சீகாழிக்குவந்து, சூரியபுஷ்கரணி தீர்த்தத்தினும் பிரமகுண்டத்தினும் ஸ்நானஞ் செய்து, பரிசாரகர்வேண்டுமென்று சூரியபுஷ்கரணியின் மண்ணை நானூறு பிண்டமாகப்பிடித்து பிரம சொரூபமாகத் தியானித்து ஸ்நானஞ் செய்ய, அந்நானூறு பிண்டமும் நானூறு பிராமணராக எழுந்திருந்து நமஸ்கரிக்க, இவர்களைப் பரிசாரகர்களாகக்கொண்டு சிவலிங்கார்ச்சனைசெய்து, சிவபெருமான் சாந்நித்தியாக எழுந்தருளப்பெற்றுத் தாம் செய்த அபராதத்தைப் பொறுத்தருள்க என்று பிரார்த்தித்து, அந்தச் சீகாழியானது பிரமபுரம் என்னும் தமது பெயரால் வழங்கவேண்டுமென்றும் சிவபெருமானிடத்து வரமும்பெற்றுக்கொண்டார்.

சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவரணமதின்முப்
புரமெரியவிரவுவகைசரவிசைகொள்கரமுடையபரமனிடமாம்
வரமருளவரன்முறையினிரைநிறைகொள்வருசுருதிசிரவுரையினாற்
பிரமனுயரரனெழில்கொள்சரணவிணைபரவவளர்பிரமபுரமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

𑌐𑌰𑌾𑌵𑌤𑌾𑌖𑍍𑌯𑍋 𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑍂𑌰𑍍𑌛𑍍𑌛𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃।
𑌗𑌤𑍍𑌵𑌾 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌨𑌾𑌭𑌿𑌖𑍍𑌯𑍇 𑌪𑍁𑌰𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌸𑍁𑌶𑍋𑌭𑌨𑍇।
𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌦𑌨𑍍𑌤𑍌 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑌨𑍋𑌹𑌰𑍌॥

ஐராவதாக்யோ நாகேந்த்ரோ ஹித்வா மூர்ச்சாம் த்விஜோத்தமா:।
கத்வா ஶ்வேதவநாபிக்யே புரே புண்யே ஸுஶோபநே।
பூஜயித்வா மஹாதேவம் தந்தௌ லப்த்வா மநோஹரௌ॥

:"(பானுகோபனைத் தாக்கிக் கொம்புகள் முறியப்பெற்று அவனால் அடியுண்ட) ஐராவதயானை மூர்ச்சை தெளிந்தெழுந்து புண்ணியமும் சோபனமுமுடைய சுவேதாரணியம் என்னும் திருவெண்காட்டுக்குப்போய்ச் சிவபெருமானைப் பூசைசெய்து மனோஹரமாகிய இரு கொம்புகளையும் பெற்றுக்கொண்டது" என்றது ஸ்காந்தபுராணம்.

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானு
மக்கரைமேலசைத்தானுமடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடேம்வினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே.

—ஞா, திருவெண்காடு.

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினிலுறுபிணிகெடவெண்ணின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே.

—ஞா, திருக்கானப்பேர்.

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
*வாலியார்வழிபடப்பொருந்தினார் திருந்துமாங்கனிகளுந்தி
யாலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளைநினையவல்வினைகள்வீடே.

—ஞா, திருவடகுரங்காடுதுறை.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே.

வாசநலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானாரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்குவேளூரே.

—ஞா, திருப்புள்ளிருக்குவேளூர்.

மறையினார்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னு
நிறையினார்†நீலநக்கனெடுமாநகரென்றுதொண்ட
ரறையுமூர்சாத்தமங்கையயவந்திமேலாய்ந்தபத்து
முறைமையாலேத்தவல்லாரிமையோரிலுமுந்துவரே.

—ஞா, திருச்சாத்தமங்கை.

---

* வாலி, சடாயுமுதலாயினோரும் சிவபெருமானைப் பூசித்துள்ளார்

† திருநீலநக்கநாயனார் பூசித்தமை குறிக்கப்பட்டது.

நீடுபூசனை நிரம்பியுமன்பினுனிரம்பார்
மாடுசூழ்புடைவலங்கொண்டுவணங்கிமுன்வழுத்தித்
தேடுமாமறைப்பொருளினைத்தெளிவுறநோக்கி
நாடுமஞ்செழுத்துணர்வுறவிருந்துமுன்னவின்முர்.

—பெரியபுராணம்.

அகத்தடிமைசெய்யுமந்தணன்று
னரிசிற்புனல்கொண்டுவேந்தாட்டுகின்றன்
மிகத்தளர்வெய்திக்குடத்தையுநம்முடி
மேல்விழுத்திட்டுநேடுங்குதலும்
வகுத்தவனுக்குநித்தற்படியும்
வருமென்றொருகாசினைநின்றநன்றிப்
*புகழ்த்துணைகைப்புகச்செய்துகந்தீர்
பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

—சு, அரிசிற்கரைப்புத்தூர்.

நீற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
வாற்றுநீர்பூரித்தாட்டு†மந்தணனைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்றுதருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே.

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
யழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்த‡தன்றாதைதாளைப்பெருங்கோடமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே.

கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்¶சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமேநீள்விசும்பாளவைத்தா
ரெல்லியாங்கெரியையேந்தியெழிறிகழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே.

---

* புகழ்த்துணைநாயனார் பூசித்தமை சூசிக்கப்பட்டது. † மார்க்கண்டேயர் பூசித்தமை கூறப்பட்டது. ‡ சண்டேசுரநாயனார் பூசித்தமை உரைக்கப்பட்டது ¶ சாக்கியநாயனார் பூசித்தமை கூறப்பட்டது.

*காப்பதோர்வில்லுமம்புங்கையதோரிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ்செருப்புத்தோட்டுத்தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங்கண்கள்செய்யகுருதிநீரோழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக்கோண்டார்குறுக்கைவீரட்டனாரே.

—நா, திருக்குறுக்கைவீரட்டம்.

𑌶𑌿𑌵 𑌏𑌵 𑌪𑌤𑌿𑌶𑍍𑌶𑌂𑌭𑍁𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌵𑌯𑌮𑍇𑌵 𑌹𑌿।
𑌭𑍂𑌮𑍍𑌯𑌾𑌂 𑌲𑌿𑌂𑌗𑌾𑌨𑌿 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌶𑌂𑌕𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌃।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍋𑌗𑌮𑍋𑌕𑍍𑌷𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌦𑌦𑌾𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿॥

ஶிவஏவபதிஶ்ஶம்பு: பஶவோ வயமேவஹி।
பூம்யாம் லிங்காநி தேவஸ்ய ஶங்கரஸ்யாஸ்மதாதிபி:
ப்ரதிஷ்டாப்யைவ விதிநா பூஜிதாநி நிதர்ஶநம்।
ஸர்வபோகமோக்ஷஞ்ச ப்ரததாத்யாஶ்ரிதஸ்யஹி॥

—தக்ஷகாண்டம்.

"சிவபெருமானாகிய சம்புவே பதி; (பிரமவிஷ்ணுக்களாகிய) யாமெல்லாம் பசுக்களே; அஃதன்றி, பூமியிலே சிவபெருமானுடைய லிங்கங்கள் விதிப்படி எங்களாற் பிரதிஷ்டைசெய்து பூசிக்கப்பட்டு வருதலே அதற்குச் சான்றும்; †அவர் தம்மைச் சார்ந்தவற்குப் போகமோக்ஷத்தைக் கொடுக்கின்றார்."

𑌉𑌤𑍍𑌤𑌾𑌨𑌪𑌾𑌦𑌸𑌂𑌭𑍂𑌤𑍋 𑌧𑍍𑌰𑍁𑌵𑍋 𑌨𑌾𑌮 𑌨𑍃𑌪𑌾𑌤𑍍𑌮𑌜𑌃।
𑌗𑍍𑌰𑌹𑌾𑌶𑍍𑌚 𑌨𑌵𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌤𑌾𑌰𑌕𑌾𑌃।
𑌮𑍇𑌷𑌾𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌶𑌯𑍋 𑌯𑍋𑌗𑌾 𑌵𑌿𑌷𑍍𑌕𑌂𑌭𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃।
𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌚 𑌸𑌪𑍍𑌤𑌾𑌪𑌿 𑌶𑌕𑍁𑌨𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿।

---

*கண்ணப்பநாயனார் பூசித்தமை விளக்கப்பட்டது. †விஷ்ணு சிவபெருமானைப் பரமபதி என்றுகொண்டு பூசித்த ஸ்தலங்கள் பல நிலவுலகிலுண்மையானும், அங்ஙனம் சிவபெருமான் விஷ்ணுவைப் பூசித்த ஸ்தலம் யாண்டும் இல்லாமையானும் சிவபெருமானே பசுபதியாவா; ஏனைத்தேவர்கள் பசுக்களாவார்.

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌾𑌶𑍍𑌚 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌗𑌰𑍁𑌡𑍋𑌰𑌗𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃।
𑌯𑌕𑍍𑌷𑌾𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌗𑍁𑌹𑍍𑌯𑌕𑌾𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌕𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑌯𑌃।
𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌶𑍍𑌚 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌃।
𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑍋 𑌵𑍃𑌕𑍍𑌷𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌃।
𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾 𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌯𑍇𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌜𑍀𑌵𑌜𑌨𑍍𑌤𑌵𑌃।
𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌶𑍍𑌚 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌗𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑌿𑌤𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑌾 𑌨𑌾𑌰𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑌰𑍍𑌷𑌯𑌃।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑌿 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌾𑌵𑌰𑌣𑍈𑌸𑍍𑌸𑌹।
𑌅𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍।
𑌸𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌪𑌦𑌞𑍍𑌚 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌮𑌵𑌾𑌪𑍍𑌯 𑌚।
𑌦𑍁𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌯 𑌪𑌰𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌮𑌾𑌪𑌿𑌰𑍇।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌦𑍇𑌵𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑌾𑌮𑌯𑍇𑌰𑌿𑌤𑌾𑌃॥

உத்தாநபாதஸம்பூதோ த்ருவோ நாம ந்ருபாத்மஜ:।
க்ரஹாஸ்ச நவஸூர்யாத்யாஸ்ஸப்தவிம்ஸதி தாரகா:।
மேஷாத்யா ராஸயோ யோகாவிஷ்கம்பாத்யாஸ்ச பூஸுரா:।
கரணநிச ஸப்தாபி ஸகுநாதி ஸ்திராண்யபி।
வித்யாதராஸ்ச கந்தர்வா கருடோரகராக்ஷஸா:।
யக்ஷாஸ்ஸித்தா குஹ்யகாஸ்ச ததா கிம்புருஷாதய:।
கிந்நராஸ்ச பிஸாசாஸ்ச தைத்யா: ப்ரஹ்லாதபூர்வகா:।
மநுஷ்யா: பஸவஸ்சைவ பக்ஷிணோவ்ருக்ஷ பூர்வகா:।
ஸ்தாவரா ஜங்கமாஸ்சாந்யே யேசாந்யே ஜீவஜந்தவ:।
பர்வதாஸ்ச ஸமுத்ராஸ்ச கங்காத்யாஸ் ஸரிதஸ்ததா।
ப்ரஹ்மர்ஷயோ வஸிஷ்டாத்யா நாரதாத்யாஸ்ஸுரர்ஷய:।
ப்ரஹ்மாண்டாநிச ஸர்வாணி ஸர்வைராவரணைஸ்ஸஹ।
அப்யர்ச்ய தேவதேவேஸம் லிங்கமூர்த்திம் ஸநாதநம்।
ஸ்வஸ்வம் பதஞ்ச ஸம்ப்ராப்ய ஸ்வஸ்வாபீஷ்ட மவாப்யச।
துரிதாநிச நிர்த்தூய பராம் நிர்வ்ருதிமாபிரே।
ப்ரத்யேகம் தேவமாராத்ய ப்ராப்தாபீஷ்டாமயேரிதா:॥

"உத்தானபாதரின் புத்திரனாகிய துருவன் என்னும் அரச குமாரனும், சூரியன்முதலிய ஒன்பது கிரகங்களும், இருபத்தேழு நக்ஷத்திரங்களும், மேஷமுதலிய இராசிகளும், விருஷபமுதலிய யோகங்களும், சகுனமுதலிய ஏழு ஸ்திரங்களும், வித்தியாதரர்களும், கந்தருவர்களும், கருடர்களும், உரகர்களும், இராக்ஷசசர்களும், யக்ஷர்களும், சித்தர்களும், குஹ்யர்களும், கிம்புருடர்களும், கின்னரர்களும், பிசாசர்களும், பிரகலாதன்முதலிய அசுரர்களும், மனிதர்களும், பசுக்களும், பறவைகளும், விருக்ஷமுதலிய ஸ்தாவரஜங்கமங்களும் மற்றைய ஜீவசெந்துக்களும் மலைகளும் கடல்களும் கங்கைமுதலிய நதிகளும், வசிஷ்டர்முதலிய பிரமவிருஷிகளும், நாரதர்முதலிய தேவரிஷிகளும், ஆவரணங்களோடு கூடிய எல்லாப் பிரமாண்டங்களும், எக்காலமும் அழிவில்லாத சிவலிங்கப்பெருமானைப் பூசித்துத் தத்தம் பதவிகளையும் தத்தமக்கு வேண்டியவற்றையும் அடைந்து சமஸ்த பாவங்களுமொழித்துப் பரமசுகத்தை அடைந்திருக்கின்றன" என்று உபதேசகாண்டம் கூறுகின்றது.

திருவிடைமருதூரிலே உமையம்மை முதலாயினோர் வழிபட்டமை பின்வரும் பட்டினத்துப்பிள்ளையார் திருவாக்கினால் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.


கொண்டலினிருண்டகண்டத்தெண்டோட்
செவ்வானுருவிற்பையரவார்த்த
சிறுபிறைகிடந்தநெறிதருபுன்சடை
மூவாமுதல்வமுக்கட்செல்வ
தேவதேவதிருவிடைமருத
மாசறுசிறப்பின்வானவராடும்
பூசத்தீர்த்தம்புரக்கும்பொன்னி
யயிராவணத்துறையாடுமப்ப

கைலாயவாணகௌரிநாயக
நின்னைவணங்கிப்பொன்னடிபுகழ்ந்து
பெரும்பதம்பிழையாவரம்பலபெற்றோ
ரிமையாநெடுங்கணுமையாணங்கையு
மழைக்கட்டடத்துப்புழைக்கைப்பிள்ளையு
மமரர்த்தாங்குங்குமரவேளுஞ்
சுரிசங்கேந்தியதிருநெடுமாலும்
வான்முறைபடைத்தநான்முகத்தொருவனுந்
தாரகற்செற்றவீரக்கன்னியும்
பூவின்கிழத்தியுநாவின்மடந்தையும்
பீடுயர்தோற்றத்துக்கோடியுருத்திரரு
மானப்பெருந்திறல்வானோர்தலைவனுஞ்
செயிர்தீர்நாற்கோட்டயிராவதமும்
வாம்பரியருக்கர்தாம்பன்னிருவருஞ்
சந்திரனொருவனுஞ்செந்தீக்கடவுளு
நிருதியுஞ்சமனுஞ்சுருதிகணான்கும்
வருணனும்வாயுவுமிருநிதிக்கிழவனு
மெட்டுநாகமுமட்டவசுக்களு
மூன்றுகோடியான்றமுனிவரும்
வசிட்டனுங்கபிலனுமகத்தியன்றானுந்
தும்புருநாரதரென்றிருதிறத்தரும்
வித்தகப்பாடன்முத்திறத்தடியருந்
திருந்தியவன்பிற்பெருந்துறைப்பிள்ளையு
மத்தகுசெல்வத்தவமதித்தருளிய
சித்தமார்சிவவாக்கியதேவரும்
வெள்ளைநீறுமெய்யிற்கண்டு
கள்ளன்கையிற்கட்டவிழ்ப்பித்து
மோடும்பன்னரியூளைகேட்டரனைப்
பாடினவென்றுபடாம்பலவளித்துங்

குவளைப்புனலிற்றவளையாற்ற
வீசன்றன்னையேத்தினவென்று
காசும்பொன்னுங்கலந்துதூவியும்
வழிபடுமொருவன்மஞ்சனத்தியற்றிய
செழுவிதையெள்ளைத்தின்னக்கண்டு
பிடித்தலுமவனிப்பிறப்புக்கென்ன
விடித்துக்கொண்டவனெச்சிலைநுகர்ந்து
மருதவட்டத்தொருதனிக்கிடந்த
தலையைக்கண்டுதலையுறவணங்கி
யும்மைப்போலவெம்மித்தலையுங்
கிடக்கவேண்டுமென்றடுத்தடுத்திரந்துங்
கோயின்முற்றத்துமீமிசைக்கிடப்ப
வாய்த்ததென்றுநாய்க்கட்டமெடுத்துங்
காம்பவிழ்த்துதிர்ந்தகனியுருக்கண்டு
வேம்புகட்கெல்லாம்விதானமமைத்தும்
விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று
புரிகுழற்றேவியைப்பரிவுடன்கொடுத்த
பெரியவன்பின்வரகுணதேவரு
மினையதன்மையரெண்ணிறந்தோரே
யனையவர்நிற்கயானுமொருவன்
பத்தியென்பதோர்பாடுமின்றிச்
சுத்தனுயினுந்தோன்றுக்கடையேனின்னை
யிறைஞ்சிலனுயினுமேத்திலனுயினும்
வருந்திலனுயினும்வாழ்த்திலனுயினுங்
கருதியிருப்பன்கண்டாய்பெரும
நின்னுலகனைத்துநன்மைதீமை
யானவைநின்செயலாதலி
னேனயன்மையுநலமில்வழிக்கே.

—பதினோராந்திருமுறை.

கிரியைப்பற்றிய திராவிடசுருதிகள்.



நறைமலிதருமளறொடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமும்வழிபடுமடியவர்
குறைவிலபதமணைதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகடலைவரே.

—ஞா, திருச்சிவபுரம்.

தொண்டனேன்பட்டதென்னேதூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி
யிண்டைகொண்டேறநூக்கியீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே.

—நா, தனித்திருநேரிசை.

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலு
மேவமானசெய்துசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே.

—ஞா, திருப்பிரமபுரம்.

உருவரைநின்றநாளிலுயிர்கொள்ளுங்கூற்றநனியஞ்சுமாதலுறநீர்
மருமலர்தூவியென்றும்வழிபாடுசெய்ம்மினழிபாடிலாதகடலி
னருவரைசூழிலங்கையரையன்றன்வீரமழியத்தடக்கைமுடிக [வே.
டிருவிரல்வைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழ

—ஞா, திருநாரையூர்

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தர்க்குப்பத்தராகி
யரும்பொடுமலர்கள்கொண்டாங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியினாலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே.

—நா, திருக்கடவூர்வீரட்டம்.

பிறப்போடிறப்பென்றுமில்லாதான்காண்
பெண்ணுருவோடாணுருவுமாயினான்காண்
மறப்படுமென்சிந்தைமருணீக்கினான்காண்
வானவருமறியாதநெறிதந்தான்கா
ணறப்படுபூமலர்தூபந்தீபநல்ல
நறுஞ்சாந்தங்கொண்டேத்திநாளும்வானோர்
சிறப்போடுபூசிக்குந்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே.

—நா, திருவாரூர்.

சகமலாதடிமையில்லைத்தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்ட
ரகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே.

—நா, திருவையாறு.

சுரும்பார்விண்டமலரவைதூவித்தூங்குகண்ணீ
ரரும்பாநிற்குமனத்தடியாரோடுமன்புசெய்வன்
விரும்பேனுன்னையல்லாலொருதெய்வமென்மனத்தாற்
கரும்பாருங்கழனிக்கழிப்பாலைமேயானே.

—சு, திருக்கழிப்பாலை.

நறுமாமலர்கொய்துநீரின்மூழ்கி
நாடோறுநின்கழலேயேத்திவாழ்த்தித்
துறவாததுன்பந்துறந்தேன்றன்னைச்
சூழுலகிலூழ்வினைவந்துற்றாலென்னே
யுறவாகிவானவர்கண்முற்றும்வேண்ட
வொலிதிரைநீர்க்கடனஞ்சுண்டுய்யக்கொண்ட
வறவாவடியேனையஞ்சேலென்னு
யாவடுதண்டுறையுறையுமமாரேறே.

—நா, திருவாவடுதுறை.

முட்டாமேநாடோறுநீர்மூழ்கிப்பூப்பறித்துமூன்றுபோதுங்
கட்டார்ந்தவிண்டைகொண்டடிச்சேர்த்துமந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொட்டாட்டுப்பாட்டாகிநின்றானைக்குழகனைக்கொகுடிக்கோயி
லெட்டானமூர்த்தியைநினைந்தபோதவர்நமக்கினியவாறே.

—சு, திருக்கருப்பறியலூர்.

---

(௧௦௦) சிவலிங்கபூசை.

𑌤𑌵 𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌮𑌰𑍁𑌤𑍋 𑌮𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌯𑌤𑍍𑌤𑍇
𑌜𑌨𑌿𑌮 𑌚𑌾𑌰𑍁 𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑍍।

தவ ஶ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தே ஜநிம சாரு சித்ரம்।

"தேவர்கள் (பொருளும் அருளுமாம்) செல்வத்தை அடையுமாறு (சிவபெருமானுடைய) விசித்திரரூபமாகிய மகாலிங்கமூர்த்தியை அபிஷேகாதி பூசைசெய்தார்" என்று இருக்குவேதம் (ரு. ௫. ௫) கூறுகின்றது.

இதனல் யாவரும் சிவபெருமானைப் பூசித்தல்வேண்டும் என்று பெறப்படுகின்றது.

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்
றீவண்ணர் திறமொருகாற்பேசாராகி
லொருகாலுந்திருக்கோயில்சூழாராகி
லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி
லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி
லளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே.

—நா, தனித்திருத்தாண்டகம்.

யாவர்க்குமாமிறைவற்கொருபச்சிலை
யாவர்க்குமாம்பசுவுக்கொருவாயுறை
யாவர்க்குமாமுண்ணும்போதொருகைப்பிடி
யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே.

—திருமந்திரம்.

(௧௦௧) பஞ்சகவ்வியம்.

𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌮𑍀𑌶𑌸𑍍𑌯 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍।

𑌅𑌲𑍍𑌪𑌾𑌦𑌲𑍍𑌪𑌤𑌰𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌗𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 𑌚 𑌪𑌞𑍍𑌚𑌵𑌾॥

க்ஷீராபிஷேகமீஶஸ்ய வதந்தி முநயஃ ப்ரியம்।
அல்பாதல்பதரம் வாபி கவ்யாங்யபி ச பஞ்சவா॥

சிவபெருமானுக்குச் சிறிதிற் சிறிதேனும் பால் அபிஷேகஞ் செய்தல் மிகவும் பிரியமுள்ளது என்றும், அங்ஙனம் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் ஐந்தின் சேர்க்கையாகிய பஞ்சகவ்வியமும் பிரியமாம் என்றும் முனிவர் கூறுகின்றனர்" என்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது.

வேலைசேர்நஞ்சமிடற்றான்கண்டாய்
விண்டடவுபூங்கயிலைவெற்பன்கண்டா
யாலைசேர்வேள்வியழித்தான்கண்டா
யமரர்கடாமேத்துமண்ணல்கண்டாய்
பானெய்சேரானஞ்சுமாடிகண்டாய்
பருப்பதத்தான்கண்டாய்பாவைமேவி
மாலையோர்கூறுடையமைந்தன்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே.

—நா, திருமறைக்காடு.

---

(௧௦௨) அஷ்டபுஷ்பம்.

𑌦𑍍𑌰𑍋𑌣𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌥𑌾 𑌚𑍈𑌵 𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌂 𑌶𑌙𑍍𑌖𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑍍।

𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌪𑌲𑌾𑌶 𑌧𑌤𑍍𑌤𑍂𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑍍।

𑌶𑌮𑍀𑌚𑍈𑌵 𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑍇𑌪𑍍𑌯𑌷𑍍𑌟𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌸𑌮𑌾𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍॥

த்ரோணபுஷ்பம் ததா சைவ மந்தாரம் ஶங்கபுஷ்பகம்।
ஶ்வேதம் பலாஶ துத்தூரம் வ்யாக்யாதம் வ்யாக்ரபுஷ்பகம்।
ஶமீசைவது மத்யாஹ்நேப்யஷ்டபுஷ்பம் ஸமாயோஜயேத்॥

"பெரியதும்பை, மந்தாரம், சங்குபுஷ்பம், வெள்ளைப்பாதிரி, வழுதுணை, பொன்னூமத்தை, புலிநகக்கொன்றை, வன்னி என்னும் அஷ்டபுஷ்பங்கள்கொண்டு (சிவபெருமானுக்கு) மத்தியானத்திலே அர்ச்சிக்க" என்றும்,

𑌅𑌰𑍍𑌕𑌪𑍁𑌷𑍍𑌪𑌞𑍍𑌚 𑌬𑌿𑌲𑍍𑌵𑌞𑍍𑌚𑌾𑌪𑌾𑌮𑌾𑌰𑍍𑌗𑌕 𑌕𑌰𑌵𑍀𑌰𑌕𑌮𑍍।
𑌪𑌂𑌕𑌜𑌂 𑌨𑌾𑌗𑌨𑌂𑌦𑍀𑌚 𑌨𑌂𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌞𑍍𑌚 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾।
𑌅𑌷𑍍𑌟𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌤𑍍𑌸 𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌸𑍁 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌂।
𑌅𑌪𑌰𑌾𑌹𑍍𑌨𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌹𑍍𑌰𑍀𑌬𑍇𑌰𑌮𑍂𑌲𑌂 𑌚𑌂𑌪𑌕𑌂 𑌤𑌥𑌾।
𑌬𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌲𑍍𑌲𑍀 𑌚 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾𑌦𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌚।
𑌜𑌾𑌤𑍀 𑌚 𑌶𑌾𑌂𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌾𑌯𑍇 𑌚𑍈𑌵𑌾𑌰𑍍𑌧𑌯𑌾𑌮𑌕𑍇॥

அர்க்கபுஷ்பஞ்ச பில்வஞ்சாபாமார்க்க கரவீரகம்।
பங்கஜம் நாகநந்தீச நந்த்யாவர்த்தஞ்ச மல்லிகா।
அஷ்டபுஷ்பம் ததா வத்ஸ ப்ராதஸ் ஸந்த்யாஸு புஷ்பகம்।
அபராஹ்நார்ச்சநா புஷ்பம் பூமூலம் சம்பகம் ததா।
பகுளம் க்ருஷ்ணவல்லீச மல்லிகாத்வயமேவச।
ஜாதீச சாந்தஸம்யுக்தம் ஸாயே சைவார்த்தயாமகே॥

"வெள்ளெருக்கு, வில்வமுதலிய எட்டும் பிராதஸ்சந்தியா காலங்களுக்குரிய புஷ்பங்கள் என்றும், (வெட்டி) வேர் சம்பக முதலிய எட்டும் சாயங்கால அர்த்தயாமங்களுக்குரிய புஷ்பங்கள்" என்றும் காரணாகமம் கூறுகின்றது.

வண்டணைகொன்றைவன்னியுமத்தமருவியகூவிளமெருக்கொடுமிக்க, கொண்டணிசடையர்விடையினர்பூதங்கொடுகொட்டிகுடமுழாக்கூடியுமுழவப், பண்டிகழ்வாகப்பாடியொர்வேதம்பயில்வர்முன்பாய்புனற்கங்கையைச்சடைமேல், வெண்பிறைசூடியுமையவளோடும்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே.

—ஞா, திருப்பிரமபுரம்.

எட்டோண்மலர்கொண்டவன்சேவடி
மட்டலரிடுவார்வினைமாயுமாற்
கட்டித்தேன்கலந்தன்னகெடிலவீ
ரட்டனாடிசேருமவருக்கே.

—நா, திருவதிகைவீரட்டானம்.

கட்டறுத்துக்கடிதெழுதூதுவர்
பொட்டதூக்கிப்புறப்படாமுன்னமே
யட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகியிணையடியேத்துமே.

—நா, திருவாட்போக்கி.

கட்டராய்நின்றுநீங்கள்காலத்தைக்கழிக்கவேண்டா
வெட்டவாங்கைகள்வீசியெல்விநின்றுடுவாணே
யட்டகாமலர்கள்கொண்டேயானஞ்சுமாட்டவாடிச்
சிட்டராயருள்கள்செய்வார்திருச்சோற்றுத்துறையனூரே.

—நா, திருச்சோற்றுத்துறை.

---

(௧௦௩) உற்சவம்.



अथ वक्ष्ये विशेषेण कृत्तिकादीपलक्षणम्।

அத வக்ஷ்யே விஶேஷேண க்ருத்திகாதீபலக்ஷணம்।

"பின்னர் விசேஷமாகக் கார்த்திகைத் தீபோற்சவலக்ஷணத்தைக் கூறுகின்றேன்" என்று தொடங்கிக் கூறி,

उत्सवं कारयेत्तत्र यथा वित्तानुसारतः।

உத்ஸவம் காரயேத் தத்ர யதா வித்தாநுஸாரதः।

"பொருட்குதிக்கியைந்தவாறு உற்சவம் செய்க" என்று கார்த்திகை உற்சவத்தையும்,

अथातस्संप्रवक्ष्यामि धनुर्मासार्चनं शुभम्।

அதாதஸ் ஸம்ப்ரவக்ஷ்யாமி தநுர்மாஸார்ச்சநம் ஶுபம்।

"இன்பமாகிய மார்கழிமாசப்பூசையைச் சொல்கின்றேன்" என்றும,

अतःपरं प्रवक्ष्यामि शार्द्राव्रतलक्षणम्।

அதःபரம் ப்ரவக்ஷ்யாமி சார்த்ராவ்ரதலக்ஷணம்।

"அதன் பின்னர்த் திருவாதிரைப் பூஜாலக்ஷணத்தைக் கூறுகின்றேன்" என்றும் தொடங்கி,

[illegible]

ஹோமாந்தே ஸ்நபநம் குர்யாந் ந்ருத்தமூர்த்திம் ஸம்பூஜயேத்।

"ஓமஞ் செய்துமுடிந்தபோது ஸ்நபனஞ் செய்க, பின்னர் நிருத்தமூர்த்தியைப் பூசிக்க" என்று திருவாதிரை உற்சவபூசையையும், இவையொழிந்த ஏனைய உற்சவங்களையும் விரித்துக் கூறுகின்றது காரணாகமம்.


> வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
> றுளக்கில்கபாலீச்சரத்தான்றொல்கார்த்திகைநாட்
> டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
> விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய்.

> ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
> கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
> கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
> னாதிரைநாள்காணாதேபோதியோபூம்பாவாய்.

—ஞா, திருமயிலாப்பூர்.

---

(௧௦௪) சிவபெருமான் ஞானத்தினால் ஆன்மாவில் அறியப்படுகின்றார்.



[illegible]

திலேஷு தைலம் ததிநீவ ஸர்பிராபஸ் ஸ்ரோதஃ ஸ்வரணீஷு சாக்நிஃ। ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதேஸௌ ஸத்யேநைநம் தபஸா யோநுபச்யதி॥

"எள்ளில் எண்ணெய் போன்றும், தயிரில் நெய் போன்றும், (வறந்த) நதியில் ஜலம்போன்றும், அரணியில் அக்கினிபோன்றும் (யாண்டும் வியாபித்துள்ள) இந்தப் பரமான்மா (சிவபெருமான்) ஆன்மாவில் அறியப்படுகின்றார்; சத்தியமும் தபசும் (ஞானமும்) கொண்டு இவன் அவரைக் காண்கின்றான்" என்று சுவேதாசுவதர (க. கடு) மும்,

𑌤𑌿𑌲𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌯𑌥𑌾 𑌤𑍈𑌲𑌂 𑌦𑌧𑍍𑌨𑌿 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌥𑌾𑌪𑌃 𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌾 𑌯𑌥𑌾𑌰𑌣𑍍𑌯𑌾𑌂 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ।
𑌏𑌵𑌮𑍇𑌵 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

திலேஷுவா யதா தைலம் தத்நிவா ஸர்ப்பிரர்ப்பிதம்।
யதாபஸ் ஸ்ரோதஸி வ்யாப்தா யதாரண்யாம் ஹுதாஶந:।
ஏவமேவமஹாத்மாநமாத்மந்யாத்மவிலக்ஷணம்॥

"திலத்தில் எண்ணெய் போன்றும், தயிரில் அமைந்த நெய் போன்றும், (வறந்த) நதியில் வியாபித்த ஜலம் போன்றும், அரணியில் அக்கினிபோன்றும் (பிரபஞ்சமெங்கும் பரமான்மா வியாபித்துள்ளார்); இங்ஙனம் ஆன்மாவிலே ஆன்மாவுக்கு வேறாகிய பரமான்மாவை (ஒருவன்) சத்தியமும் ஞானமுங்கொண்டு எப்போதும் இயைந்துநின்று காண்கின்றான்" என்று வாயுசங்கிதையும்,

𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌷𑍁 𑌗𑌨𑍍𑌧𑌵𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌤𑌿𑌲𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌚 𑌤𑍈𑌲𑌵𑌤𑍍 ।
𑌘𑌣𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌧𑍍𑌵𑌨𑌿𑌵𑌦𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌤𑍍 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

புஷ்பேஷு கந்தவஜ் ஜ்ஞேயஸ்திலேஷ்வபிச தைலவத்।
கண்டாயாம் த்வநிவத் த்வக்நௌ ப்ரபாவத் பரமேஶ்வர:।
ஸர்வத்ர ஸர்வதா தேவஸ் ஸர்வேஷ்வபிச ஸம்ஸ்தித:॥

"மலரில் மணம் போன்றும், எள்ளில் எண்ணெய் போன்றும், மணியில் நாதம் போன்றும், அக்கினியிற் பிரகாசம் போன்றும் எவ்விடங்களினும் எக்காலங்களினும் எப்பொருள்களினும் வியாபித்துள்ளார் சிவபெருமான்" என்று தக்ஷகாண்டமும்,

[illegible]

[illegible]


ஸர்பிஃ க்ஷீரே யதா வ்யாப்தம் திலதைலமிவ ஸ்திதஃ।
அநலஸ்ச யதா காஷ்டே ததாஸர்வகதஸ்ஸிவஃ॥

"நெய் பாலில் எங்ஙனம் வியாபித்துளதோ, அக்கினி காஷ்டத்தில் எங்ஙனம் வியாபித்துளதோ, அங்ஙனம் திலதைலம் போலச் சர்வவியாபகராகிய சிவபெருமான் நிலையுற்ருர்" என்று சிவஞானசங்கிரகமும் கூறுகின்றன.

> விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
> மறையநின்றுளன்மாமணிச்சோதியா
> னுறவுகோனட்டுணர்வுகயிற்றினுன்
> முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.
>
> —நா, தனித்திருக்குறுந்தொகை.

---

(௧௦௫) யோகம்.



[illegible]

ஸமே ஶுசௌ ஶர்க்கரா வஹ்நிவாலுகா விவர்ஜிதே ஶப்தஜலாஶ்ரயாதிபிஃ । மநோநுகூலே நது சக்ஷுபீடநே குஹாநிவாதாஶ்ரயணே ப்ரயோஜயேத்॥

"சுசியாயும், பருக்கைக்கற்கள், தீ, புழுதி இல்லாததாயும், சப்தங்களினுலும் ஜலத்தினுலும் கொம்பர்களாலும் இனிமை வாய்ந்ததாயும், கண்ணுக்குத் துன்பம் விளைக்காததாயும், மனசுக்கு இனிமை பயப்பதாயுமுள்ள சமமாகிய காற்றுள்ள குகையிலே இருந்து ஒருவன் யோகாப்பியாசஞ் செய்க" என்று சுவேதாசுவதரோபநிடத (௨. ௧௦) மும்,

𑌶𑍂𑌨𑍍𑌯𑌾𑌗𑌾𑌰𑍇 𑌮𑌠𑍇 𑌰𑌮𑍍𑌯𑍇 𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌤𑌨𑍇 𑌶𑍁𑌭𑍇।
𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑍇 𑌵𑌾 𑌗𑍃𑌹𑍇 𑌘𑍋𑌰𑌵𑌨𑍇𑌪𑌿𑌵𑌾।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌚𑌿𑌰𑍁𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌶𑌿𑌵𑌮𑍍।
𑌯𑍋𑌗𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌯𑍋𑌗𑌂 𑌯𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 𑌮𑌾𑌨𑌵𑌃॥

ஶூந்யாகாரே மடே ரம்யே தேவதாயதநே ஶுபே।
நதீதீரே விவிக்தே வா க்ருஹே கோரவநேபிவா।
ஸ்நாத்வா ஶுசிருபஸ்ப்ருஶ்ய ப்ராணம்ய ஶிரஸா ஶிவம்।
யோகாசார்யம் நமஸ்க்ருத்ய யோகம் யுஞ்ஜீத மாநவ:॥

"ஜனமில்லா வீட்டிலாவது, இரம்மியமாகிய மடத்திலாவது, இன்பமாகிய ஆலயத்திலாவது, நதிதீரத்திலாவது, தனி இடத்திலாவது, வீட்டிலாவது, கோரமாகிய காட்டிலாவது (யோகஞ்செய்தற்கு முயன்று யோகாப்பியாசி) ஸ்நானஞ் செய்து சுசியுடையனாய் ஆசமனஞ் செய்து சிவபெருமானை வணங்கி, தனது யோகாசாரியரை நமஸ்கரித்து யோகத்திற் றலைப்படுக" என்று சர்வஞ்ஞானோத்தராகமமும் கூறுகின்றன.

(𑌅𑌥𑌵𑌾) 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍।
𑌗𑍁𑌰𑍂𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑌮𑍍।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌗𑌾𑌰𑍍𑌗𑌿 𑌦𑌹𑌰𑌾𑌬𑍍𑌜𑌕𑌮𑌧𑍍𑌯𑌮𑍇।
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌸𑌂𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌰𑍁॥

(அதவா) பரமாத்மாநம்பரமாநந்தவிக்ரஹம்।
குருபதேஶாத் விஜ்ஞேயம் புருஷம் க்ருஷ்ணபிங்களம்।
ப்ரஹ்ம ப்ரஹ்மபுரே கார்க்கி தஹராப்ஜகமத்யமே।
அப்யாஸாத் ஸம்ப்ரபஶ்யந்தி ஸந்தஸ் த்வஞ்ச ததா குரு।

"குருவுபதேசம்வாயிலாகப் பரமானந்தவிக்கிரகரும், புருஷரும், கிருஷ்ணபிங்களருமாகிய பரப்பிரஹ்மசிவபிரானுரைத் தியானுப்பியாசத்தினாலே, கார்க்கியே! பெரியோர் பிரஹ்மபுரத்துத் தகரபுண்டரீகாம்பரமத்தியிலே காண்கின்றனர்; நீயும் அங்ஙனஞ் செய்" என்று (யோகயாஞ்ஞவற்கிய) ஸ்மிருதியும்,

[illegible]

விவிக்த தேஶேது ஸுகாஸநஸ்தஶ்ஶுசிஸ்ஸமக்ரீவ ஶிரஶ் ஶரீர:| அத்யாஶ்ரமஸ்தஸ் ஸகலேந்த்ரியாணி நிருத்ய பக்த்யா ஸ்வகுரும் ப்ரணம்ய| ஹ்ருத்புண்டரீகம் விரஜம் விஶுத்தம் விசிந்த்ய மத்யே விஶதம் விஶோகம்| அநந்த மவ்யக்த மசிந்த்ய ரூபம் ஶிவம் ப்ரஶாந்தமம்ருதம் ப்ரஹ்மயோநிம்| ததாதி மத்யாந்த விஹீநமேகம் விபும் சிதாநந்தமரூபமத்புதம்| உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம்| த்யாத்வா முநிர் கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்||

"தனியிடத்திலே சுகாசனத்திருந்து, சுத்தனுகி நேரிய கழுத்துத் தலை சரீரமுடையனுய், (விதிப்படி விபூதிதாரணஞ் செய்தலாகிய) வைதிகபாசுபத விரதமுடையனுய், இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி, அன்பினேடு தன் குருவை வணங்கி, இதய கமலத்தைத் தூகளற்றதாய்ச் சுத்தமாகக் கருதி, அதனடுவே தெளிவுடையராய், சோகமிலராய், அனந்தராய், வெளிப்படாதவராய், நினைத்தற்கரியராய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமகாரணராய், முதனடுவீறிலராய், ஏகராய், வியாபியாய், சிதானந்தரூபியாய், நிஷ்களராய், அற்புதராய், உமாசகாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசன்னராயுள்ளாரைத் தியானித்து, முனியானவன் பூதகாரணராய், சமஸ்தசாக்ஷியாயிருப்பவரை இருளுக்குமேலே போயடைகின்முன்" என்று கைவல்லியோபநிடதமும் உரைக்கின்றன. இதனுற் [தகரபுண்டரீகத்தின்பாலதாகிய] [பிரமாண்டமாகிய சரீரத்திலே உள்ள] தகராகாயத்திலே சிவோபாசனை செய்யுமாறு கூறப்பட்டது. இங்ஙனம் அவர் சரீரத்து இருதயபுண்டரீகவாகாயத்துளராயினும்,

𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑌚𑍍𑌚।

வ்யோமவச்ச।

"அவர் ஆகாயமும் போல்வர்" என்று வேதாந்தசூத்திரம் (க. உ. எ) கூறிய பிரகாரம்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌮𑌮𑍍𑌬𑌰𑌾𑌨𑍍𑌤𑌧𑍃𑌤𑍇𑌃।

அக்ஷரமமபராந்தத்ருதேஃ।

"அக்ஷராகிய சிவபெருமான் (பிருதிவிமுதல் திருச்சிற்றம்பல) ஆகாயம் இறுதியாகிய அனைத்தையும் தாங்குதலால்" என்று வேதாந்தசூத்திரம் (க.௩.௯) கூறுதலானும், அங்ஙனம் பிருதிவி, சலில, வாயு, அந்தரிக்ஷலோக, கந்தருவலோக, ஆதித்தியலோக, சந்திரலோக, நக்ஷத்திரலோக, தேவலோக, இந்திரலோக, பிரஜாபதிலோகமாகிய லோகங்களெல்லாம் கோவைபட்டுப் (பராசத்தியாகிய) ஆகாயத்திலே நிலைக்க, ஆகாயம் அக்ஷரப்பிரஹ்மமாகிய சிவபிரானைப்பற்றி நின்றது என்று சிவார்க்கமணிதீபிகையினும், பிரகிருதிமாயை, அசுத்தமாயை, சுத்தமாயை என்பவற்றின் விகாரமாய மலினப்பிரபஞ்சம், மிசிரப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் முத்திறப்பிரபஞ்சாதீதமாயுள்ளது (பரமாகாயபராசத்தியினின்று வேறுறாத) பரமானந்தமயமாகிய சிவபெருமானுடைய ஸ்தானம் என்று இரத்தினத்திரயபரீக்ஷையினும் காணப்படலானும், திருச்சிற்றம்பலவரது ஸ்தானம் அண்டத்தில் நிற்குமாறும் அறியப்படுகின்றது.

𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋
𑌪𑌶𑌮𑌃 𑌶𑌿𑌵𑍋𑌽𑌦𑍍𑌵𑍈𑌤 𑌏𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌵𑌿
𑌶𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦।

அமாத்ரஸ் சதுர்த்தோவ்யவஹார்யஃ ப்ரபஞ்சோ
பஶமஶ் ஶிவோத்வைத ஏவமோங்கார ஆத்மைவஸம்வி
ஶத்யாத்மநாத்மாநம் ய ஏவம் வேத ய ஏவம் வேத।

"அளவில்லாதவராய், வியவகரித்தற்கியலாதவராய், பிரபஞ்சோபசமராய், பரமான்மாவாய் இங்ஙனம் ஓங்காரராய்த் துரிய

மூர்த்தியாயிருக்கின்ற சிவபிரான் அத்துவைதராய் (இரண்டாவதற்றவராய்) இருக்கின்றார் என்று எவன் இங்ஙனம் அறிகின்றானோ, எவன் இங்ஙனம் அறிகின்றானோ, அவன் பரமான்மாவின் அருளினாற் பரமான்மாவை அடைகின்றான்" என்று மாண்டூக்கியோபநிடதம் கூறுகின்றது. இந்தத் துரியசிவனார்க்கு ஸ்தானம் துவாதசாந்தமாகும். அது

> 𑌅𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌨𑌾𑌭𑍌, 𑌉𑌕𑌾𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂
> 𑌹𑍃𑌦𑌯𑍇, 𑌮𑌕𑌾𑌰𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇, 𑌓𑌂𑌕𑌾𑌰𑌂
> 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯।

> அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ, உகாரம் விஷ்ணும்
> ஹ்ருதயே, மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே, ஓங்காரம்
> ஸர்வேஸ்வரம் த்வாதஶாந்தே ஸம்பூஜ்ய।

"அகாரவாச்சியராகிய பிரமாவை நாபியினும், உகாரவாச்சியராகிய விஷ்ணுவை இதயத்தினும், மகாரவாச்சியராகிய உருத்திரைப் புருவமத்தியினும், ஓங்காரவாச்சியராகிய சர்வேசுரசிவபெருமானைத் (தலை உச்சியின்பாலதாகிய) துவாதசாந்தத்தினும் பூஜித்து" என்று உத்தரதாபினியுபநிடதம் கூறுமாற்றால் அறியப்படும். நீலகண்டசிவாசாரியரும் இந்தத் துவாதசாந்தத்திலே நிறுத்திச் சிவபாவனை கூறினாரென்பது.

> 𑌅𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌾𑌨𑍍𑌤 𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌦𑍍𑌵𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
> 𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑍋 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌦𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌭𑍋𑌃।
> 𑌹𑍃𑌤𑍍𑌯𑌕𑌾𑌰𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 𑌹𑌕𑌾𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃।
> 𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑌦𑍍𑌵𑍈𑌤𑌂 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌶𑍍𑌰𑌮𑌃॥

அநுத்தரவிஸர்க்காந்த ஶிவஶக்தித்வயாத்மந:।
பராமர்ஶோ நிர்க்குணத்வாதஹமித்யுச்யதே விபோ:।
ஹ்ருத்யகாரோ த்வாதஶாந்தே ஹகாரஸ்தநிதம் விது:।
அஹமாத்மகமத்வைதம் யத்ப்ரகாஶாத்மவிஶ்ரம:॥

"நிரதிசயமாய், முடிவிலதாய், சிவசக்திதுவயமாய், வியாபக மாயுள்ள பரமான்மாவானது பரிச்சேதமாக ஹேயகுணமிலதா யிருத்தல்பற்றி * அஹம் என்று கூறப்படும்; இதயத்தில் அகார மாய், துவாதசாந்தத்திலே ஹகாரமாய் இருக்கின்றது; ஆகலின், பெரியோர் பிரகாசமாகிய ஆன்மாவிலே முற்றும் அத்வைத அஹ மாக இதனைப் (பிரபஞ்சத்தை) அறிகின்றார்" என்று (ச. ச. ௧௬—ல்) உதகரித்த ஆப்தவசனத்தினால் அறியற்பாற்று. இந்தத் துவாத சாந்தமானது பிருதிவிமுதற் சிவதத்துவம் இறுதியாகிய முப்பத் தாறையும் அடக்கிய அத்துவாவின் முடிவிலே உள்ள சிவபிரானா ருடைய ஸ்தானமாம். அது

[Grantha script line]

அத்வாதீதம் துரீயாக்யம் நிர்வாணம் பரமம் பதம்।

"அத்துவாதீதமாய்த் துரியம் எனப் பெயர் படைத்ததாயுள் ளது முக்திக்குரிய சிவபிரானாரது ஸ்தானமாம்" என்று உபப்பிருங் கணம் கூறுமாற்றால் அறிக. அறியவே, மாண்டூக்கியோபநிடதத் திற் கூறப்பட்ட ஓங்காரராகிய சிவபிரான் துவாதசாந்தத்தினர் என்றும், முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்தவரென்றும், இவரே அண்டத்தில் வைத்துச் சிவோஹம்பாவனை செய்தற்குரியராய் நின்றார் என்றும் அறியப்படுகின்றது.

[Grantha script lines]

யஸ்து ஸர்வாணி பூதாந்யாத்மந்யேவாநுபஶ்யதி।
ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ நவிஜுகுப்ஸதே॥

—ஈசாவாசியோபநிடதம், ௬.

"சேதனாசேதனப் பிரபஞ்சங்களும் பரமான்மாவாகிய சிவபெ ருமானிடத்திலே இருப்பதாகக் காண்கின்றானோ, சமஸ்த சேதனா சேதனப் பிரபஞ்சங்களினும் அப்பரமான்மாவாகிய சிவபெருமான் உளராகக் காண்கின்றானோ, அதனால் அவன் இகழ்ச்சி அடைவா னல்லன்" என்று சுருதியும்,

---

* அஹம் என்றது சத்தியோடிசைந்த சிவபிரான்மேற்று.

𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌞𑍍𑌚 𑌮𑌯𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌂।

யோமாம் ஸர்வகதம் பஶ்யேத் ஸர்வஞ்ச மயி ஸம்ஸ்திதம்।

"எவன் எங்கும் என்னை உளதாகப் பார்க்கின்றானோ, எவன் என்னிலே (சிவபிரானிலே) எல்லாம் இருக்கக் காண்கின்றானோ, அவனது ஆன்மாவிலே எஞ்ஞான்றும் உளனாயிருக்கின்றேன்" என்று சிவாகமமும் அண்டத்தில் வைத்துச் (சிவோஹம்) பாவனை செய்யுமாறு கூறுகின்றன.

𑌅𑌹𑌂 𑌮𑌨𑍁𑌰𑌭𑌵𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌕𑌕𑍍𑌷𑍀𑌵𑌾𑌨𑍍𑌨𑍃𑌷𑌿𑌰𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃। 𑌅𑌹𑌂 𑌕𑍁𑌤𑍍𑌸𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌯𑌂 𑌨𑍍𑌯𑍃𑌞𑍍𑌜𑍇𑌹𑌂 𑌕𑌵𑌿𑌰𑍁𑌶𑌨𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌾 𑌮𑌾। 𑌅𑌹𑌂 𑌭𑍂𑌮𑌿𑌮𑌦𑌦𑌾𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌯𑌾𑌹𑌂 𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 𑌦𑌾𑌶𑍁𑌷𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌯। 𑌅𑌹𑌮𑌪𑍋 𑌅𑌨𑌯𑌂 𑌵𑌾𑌵𑌶𑌾𑌨𑌾 𑌮𑌮 𑌦𑍇𑌵𑌾𑌸𑍋 𑌅𑌨𑍁𑌕𑍇𑌤𑌮𑌾𑌯𑌨𑍍। 𑌅𑌹𑌂 𑌪𑍁𑌰𑍋 𑌮𑌨𑍍𑌦𑌸𑌾𑌨𑍋 𑌵𑍍𑌯𑍈𑌰𑌂 𑌨𑌵𑌸𑌾𑌕𑌂 𑌨𑌵𑌤𑍀𑌶𑍍𑌶𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌯। 𑌶𑌤𑌤𑌮𑌂 𑌵𑍇𑌶𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌾𑌤𑌾𑌦𑌿𑌵𑍋 𑌦𑌾𑌸𑌮𑌤𑌿𑌥𑌿𑌗𑍍𑌵𑌂 𑌯𑌦𑌾𑌵𑌂॥

அஹம் மநுரபவம் ஸூர்யஶ்சாஹம் கக்ஷீவாந்ருஷிரஸ்மி விப்ர:। அஹம் குத்ஸமார்ஜுநேயந்ருஞ்ஜேஹம் கவிருஶநா பஶ்யதா மா। அஹம் பூமிமததாமார்யாயாஹம் வ்ருஷ்டிம் தாஶுஷே மர்த்யாய। அஹமபோ அநயம் வாவஶாநா மம தேவாஸோ அநுகேதமாயந்। அஹம் புரோ மந்தஸாநோ வ்யைரம் நவஸாகம் நவதீஶ்ஶம்பரஸ்ய। ஶததமம் வேஶ்யம் ஸர்வதா தாதிவோ தாஸமதிதிக்வம் யதாவம்॥

"நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன், நான் கக்ஷீவான் என்னும் இருஷியாயினேன், விப்பிரனாகின்றேன், அர்ஜுனி குமாரனாகிய குற்சருக்கு அருள்பாலிக்கின்றேன், மேதாவியாகிய உசனராயுள்ளேன், என்னைப் பாருங்கள்; நான் ஆரியர்க்குப் பூமியைக் கொடுத்தவனாகின்றேன், நான் அவிகொடுக்கும் யஜமான் பொருட்டு மழையைப் பாலிப்பவனாகின்றேன், நான் ஒலிக்கும் ஜலத்தைச் செல்லுமாறு வழிகாட்டுபவனாகின்றேன்; அக்கினிமுதலிய தேவர்கள் என் கருத்தின் பிரகாரம் ஒழுகுபவராகின்றார்கள்; நான் சோமரசபானத்தினால் மகிழ்வுற்றுச் சம்பராசுரனுடைய

தொண்ணூற்றொன்பது புரங்களையும் ஒருங்கே அழித்தேன், மேலும், சர்வதாதா என்னும் வேள்வியிலே அதிதிக்குவர் என்னும் திவோதாசமுனிவரைக் காக்குங்கால், நூறுவது வீட்டை அழித்தேனுயினேன்" என்று இருக்குவேதத்து ச. உகூ. க, உ, ௩-ம் மந்திரங்களில் உபாசகனுகிய இந்திரனேனும், வாமதேவமுனிவரேனும், (மற்ற உபாசகர் எவரேனும்) பரப்பிரமசிவனுரோடு அபேதமுறநின்று சிவபாவனை செய்யுமாறு கூறப்படுகின்றது. இந்த இருக்குவேத மந்திரங்களை அநுசரித்து,

𑌋𑌷𑌿𑌰𑍍𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍇𑌦𑍇𑌽𑌹𑌂 𑌮𑌨𑍁𑌰𑌭𑌵𑌂 𑌸𑍂𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 । 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦𑌾𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌮𑌿 𑌸 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌭𑌵𑌤𑌿।

ருஷிர்வாமதேவஃ ப்ரதிபேதேஹம் மநுரபவம் ஸூர்யஶ்சேதி । ய ஏவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மி ஸ இதம் ஸர்வம் பவதி।

𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌰𑍇𑌵𑌂 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 ।

யோந்யாம் தேவதாமுபாஸ்தேந்யோ ஸாவந்யோ வந்யோஹமஸ்மீதி நஸவேதயதா பஶுரேவம்ஸ தேவாநாம்।

"நான் மனுவாயினேன், சூரியனுமாயினேன் என்றும், நான் பிரமமாகின்றேன் என்று எவன் அறிகின்றுனே, அவன் இவையெல்லாம் ஆகின்றுன் என்றும் வாமதேவருஷி கூறினுர்; இந்தத் தேவதை வேறு, நான் வேறு என்று எவன் மற்றோர் தேவதையைப் பாவனை செய்யுங்கால், அவன் அந்தத் தேவதையை அறிவானல்லன்; அதுபற்றி அவன் தேவர்களுக்குப் பசுப்போலாகின்றுன்;" ஆகலின், எவன் நான் பிரஹ்மம் என்று (அபேதபாவனை) பண்ணுகின்றுனே, அவன் ஈதெல்லாம் (உலகெல்லாம்) ஆகின்

ருன் என்று பிருகதாரணியோபநிடதம் கூறுமாற்றால், பிரமத்தோடு ஆன்மா அபேதபாவனை புரிதல்வேண்டும் என்றும், துவித பாவனை கூடாதென்றும் கூறியவாறாயிற்று.

நிரஞ்ஜநः பரமம் ஸாம்யமுபைதி।

நிரம்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி।

"(அபேதபாவனைப்பற்றி) மலமிலனாய் ஆன்மா பரமான்மாவோடு சிவபிரானது (குணங்களையுடையனாய்ப்) பரமசாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடதமும்,

அநுக்ருதேஸ்தஸ்ய ச।

அநுக்ருதேஸ் தஸ்யச।

"அவனுக்குச் சாமியம் உண்மையானும்" என்று வேதாந்த சூத்திரமும் (க. ௩. உக.) கூறலானும், பிரஹ்மோசகர்கள் பரப்பிரமசிவனாரோடுற்ற ஐக்கியபாவனையினால் அந்தப் பரப்பிரஹ்மசிவத்தின் சர்வஞ்ஞத்துவம், அநாதிபோதரூபத்துவம், சுவதந்திரத்துவம், சர்வசக்திதுவம், அலுப்தசக்திதுவம், அனந்தசக்திதுவம் என்னும் அசாதாரண அறு குணங்களை அடைகின்றான் என்று வேதாந்தசூத்திரசைவபாஷ்ய (௩. உ. உச) த்திற் கூறப்படுகின்றது. இங்ஙனம் சிவனாரது குணங்களை அடைதலால் உபாசகன் சிவமாகின்றான்.

வானைக்கடந்தண்டத்தப்பான்மதிப்பனமந்திரிப்பா
ரூனைக்கழித்துய்யக்கொண்டருள்செய்வனவுத்தமர்க்கு
ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனநங்கையஞ்ச
வானையுரித்தனகாண்கவையாறனடித்தலமே.

—நா, திருவையாறு.

மலையானைமாமேருமன்னினானை
வளர்புன்சடையானைவானோர்தங்க
டலையானை*யென்றலையினுச்சியேன்றுந்
தாபித்திருந்தானைத்தானேயெங்குந்
துலையாகவொருவரையுமில்லாதானைத்
தோன்றாதார்மதின்மூன்றுந்துவளவெய்த
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

—நா, திருவாலவாய்.

* "என்றலையினுச்சியென்றுந் தாபித்திருந்தானை" என்றமையாற் பிரமரந்திரத்தினின்று மேலோங்கிய துவாதசாந்தத்திற் சிவபிரான் உளர் என்று சூசிக்கப்பட்டது.

வழித்தலைப்படுவான்முயல்கின்றேனுன்னைப்போலென்னைப் பாவிக்கமாட்டேன், சுழித்தலைப்பட்டநீரதுபோலச்சுழல்கின் றேன்சுழல்கின்றதென்னுள்ளம், கழித்தலைப்பட்டநாயதுபோல வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை, யொழித்துநீயருளாயின செய்யாயொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

சேப்பார்முலைபங்கன்றென்னன்பெருந்துறையான்
றப்பாமேதாளடைந்தார்நெஞ்சுருக்குந்தன்மையினு
னப்பாண்டிநாட்டைச்சிவலோகமாக்குவித்த
வப்பார்சடையப்பனுனந்தவார்கழலே
யோப்பாகவோப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய்.

—திருவாசகம்.

பரமோயோகபர்யந்தோ தர்மஶ் ஶ்ருதிஶிரோகத꞉।

பரமோ யோகபர்யந்தோ தர்மஸ் ஸ்ருதி ஸிரோகதஃ।

"பரதருமமனது (பரப்பிரகிருதிப்பாற்பட்ட வைதிகபாசு பத) யோகபரியந்தமே வேதசிரசிலே அமைந்தது" என்று உபப்பிருங்கணம் கூறலானும், (சிவதத்துவத்தின்பாற்பட) கன்ம யாக, தபயாக, செபயாகங்களின் மேற்பட்ட ஞானதியான மானது பரப்பிரகிருதிப்பாற்படத் திருச்சிற்றம்பலசதாசிவநிருத் தப்பிரஹ்மசொரூபத்தை நேரே அடைதற்கு ஏதுவாயுள்ள தென்று வேதாந்தசூத்திரசைவபாஷ்யத்து அக்கினிஹோத்தி ராதிகரணத்தில் நீலகண்டசிவாசாரியர் கூறியிருத்தலானும், உபா சிப்பவருக்கு எய்தும் பயன் ஜகத்வியாபாராதிகரணத்திற் கூறிய வாறு மகாசிவலோகத்துச் சிவசாரூப்பியநிலையேயாம் என்றும் கடைப்பிடிக்க.

வேதம்பசுவதன்பான்மெய்யாகமநால்வ
ரோதுந்தமிழதனினுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யினுறுசுவையாநீள்வெண்ணெய்மெய்கண்டான்
செய்ததமிழ்நூலின்றிறம்.

என்று மேலோர் கூறியிருத்தலால், திராவிடவேதநெய் யின் சுவையாய்ப் போந்தது திராவிடசித்தாந்தசாஸ்திரப்பொரு ளோ என்பதை ஆராய்குதும்.

மேப்பால்வெண்ணீறணிந்தமேனியானை
வெண்பளிங்கினுட்பதித்தசோதியானை
யொப்பானையொப்பிலாவொருவன்றன்னை
யுத்தமனைநித்திலத்தையுலகமெல்லாம்
வைப்பானைக்களைவானைவருவிப்பானை
வல்வினையேன்மனத்தகத்தேமன்னினானை
யப்பாலைக்கப்பாலைக்கப்பாலானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே.

—நா, திருத்தாண்டகம்.

அப்பாலைக்கப்பாலைக்கப்பாலானை என்றமையால் மலினப்பிரபஞ்சம், மிசிரப்பிரபஞ்சம், சுத்தப்பிரபஞ்சம் என்னும் முத்திறப் பிரபஞ்சம் பெறப்பட்டு, அவற்றில் ஆன்மதத்துவவித்தியாதத்துவ சிவதத்துவங்கள் அடங்கிநின்றவாறு அறியப்படும். படவே, இத்தத்வப்பிரபஞ்சமனைத்தையும் சிவபிரான் உள்ளும் புறம்பும் அணுப்புகைக்க இடமின்றி ஒழிவற நிறைந்துநின்றமையால், இஃதனைத்தையும் ஊடுருவ அறிவைச் செலுத்தி, அஃதனைத்தையும் வியாபித்த அருளை தாரகமாக (அருளை கண்ணாகச்) சிவோஹம் பாவனையினால் ஆன்மா சென்று அச்சிவத்தைத் தலைப்படும். அது பற்றி, ஆன்மாவுக்கு வியாபக அறிவு இன்றியமையாததாயிற்று. அங்ஙனஞ் சென்று சிவத்தின் மிக ஓங்கிய வியாபகத்துள் தான் என்றொருமுதல் காணப்படுமாறின்றி அடங்கி ஆன்மா வியாப்பியமாய் நிற்குங்கால், (௧0-ஞ் சூத்திரங் கூறியவாறு மலமாயாகன்மங்கள் நீங்குதலால்) ஐம்புலன்கள் செயிக்கப்பட்டொழியும்.

முப்பதுமாறும்படிமுத்தியேணியா
யொப்பிலாவானந்தத்துள்ளொளிபுக்குச்
செப்பவரியசிவங்கண்டுதான்றெளிந்
தப்பரிசாகவமர்ந்திருந்தாரே.

—திருமந்திரம்.

நாணனுமன்புமுன்புகளிர்வரையேறத்தாமும்
பேணுதத்துவங்களென்னும்பெருகுசோபானமேறி
யாணையாஞ்சிவத்தைச்சாரவணைபவர்போலவையர்
நீணிலைமலையையேறிநேர்படச்செல்லும்போது.

—பெரியபுராணம்.

தானத்தைச்செய்துவாழ்வான்சலத்துளேயழுந்துகின்றீர்
வானத்தைவணங்கவேண்டில்வம்மின்கள்வல்லீராகின்
ஞானத்தைவிளக்கையேற்றிநாடியுள்விரவவல்லா
ரூனத்தைபொழிப்பர்போலுமொற்றியூருடையகோவே.

—நா, திருவொற்றியூர்.

மெய்யுளேவிளக்கையேற்றிவேண்டளவுயரத்தூண்டி
யுய்வதோருபாயம்பற்றியுகக்கின்றேனுகவாவண்ண
மைவரையகத்தேவைத்திரவர்களேவலியர்சாலச்
செய்வதொன்றறியமாட்டேன்றிருப்புகலூரனீரே.

—நா, திருப்புகலூர்.

அருளெங்குமானவளவையறியா
ரருளானுகரமுதானதுந்தேரா
ரருளாங்கருமத்ததிருக்கமுன்னு
ரருளெங்குங்கண்ணனதாரறிவாரே.

—திருமந்திரம்.

கருடனுருவங்கருதுமளவிற்
பருவிடந்தீர்ந்துபயங்கெடுமோபோற்
குருவினுருவங்குறித்தவப்போதே
திரிமலந்தீர்ந்துசிவனவனுமே.

—திருமந்திரம்.

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகயிலாயம்.

வழித்தலைப்படுவான்முயல்கின்றே
னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்துநீயருளாயினசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையை
பாங்கென்னவைத்துகந்தான்படர்சடைமேற்பான்மதியந் [ப்
தாங்கினான்பூம்புகார்ச்சாய்க்காட்டான்றாணிழற்கீ
ழோங்கினாரோங்கினாரெனவுரைக்குமுலகமே.

—ஞா, திருச்சாய்க்காடு.

அடிபேரிற்பாதாளம்பேருமடிகண்
முடிபேரின்மாமுகடுபேருங்—கடக
மறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரு
மறிந்தாடுமாற்றாதரங்கு.

தாளொன்றாற்பாதாளமூடுருவத்தண்விசும்பிற்
றாளொன்றாலண்டங்கடந்துருவித்—தோளொன்றாற்
றிக்கனைத்தும்போர்க்குந்திறற்காளிகாளத்தி
நக்கனைத்தான்கண்டநடம்.

அடியொன்றுபாதலமேழிற்குமப்புறம்பட்டதிப்பான்
முடியொன்றிவ்வண்டங்களெல்லாங்கடந்ததுமுற்றும்வெள்ளைப்
பொடியொன்றுதோளெட்டுத்திக்கின்புறத்தனபூங்கரும்பின்
செடியொன்றுதில்லைச்சிற்றம்பலத்தான்றன்றிருநடமே.

இப்பரிசியற்றியவுடலிருங்கடலுட்
டெப்புரவென்னுஞ்சுழித்தலைப்பட்டுழி
யாவாவென்றுநின்னருளினைப்பெற்றவர்
நாவாயாகியநாதநின்பாத

முந்திச்சென் றுமுறைமையின் வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச்செவ்விதினிறுத்தி
யுருகியவார்வப்பாய்விரித்தார்த்துப்
பெருகியநிறையெனுங்கயிற்றிடைப்பிணித்துத்
துன்னியசுற்றத்தொடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப்பொறியினைமுறுக்கிக்
காமப்பாரெனுங்கடுவெளியற்ற
தூமச்சோதிச்சுடர்க்குறநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித்துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவினீள்கரையேற்ற
வாங்கயாத்திரைபோக்குதிபோலு
மோங்குகடலுடுத்தவொற்றியூரோயே.

—பதினொராந்திருமுறை.

நிலைப்பாடேநான்கண்டதேடீகேளாய்
நெருநலைநற்பகலிங்கோரடிகள்வந்து
தலைப்பாடுங்கண்மலருங்கலக்கநோக்கிக்
கலந்துபலியிடுவேனெங்குங்காணேன்
சலப்பாடேயினியொருநாட்காண்பேனாகிற்
றன்னாகத்தென்னாகமோடுங்கும்வண்ண
முலைப்பாடேபடத்தழுவிப்போகலொட்டே
னொற்றியூருறைந்திங்கேதிரிவானையே.

—நா, திருவொற்றியூர்.

எம்பிரானென்றதேகொண்டென்னுளேபுகுந்துநின்றிங்
கெம்பிரானாட்டவாடியென்னுளேயுழிதர்வேனை
யெம்பிரானென்னைப்பின்னைத்தன்னுளேகரக்குமென்று
மெம்பிரானென்னினல்லாலென்செய்கேனேழையேனே.

—நா, தனித்திருநேரிசை.

தொண்டரஞ்சுகளிறுமடக்கிச்சுரும்பார்மல
ரிண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே.

—ஞா, திருக்கேதாரம்.

அஞ்சுமோன்றியாறுவீசிநீறுபூசிமேனியிற்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னிமன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
யஞ்சொலாராங்கெடுக்குமந்தணாரூரென்பதே.

—ஞா, திருவாரூர்.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லே
னழிவுடைத்தாயவாழ்க்கையைவராலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே.

—நா, திருக்கடவூர்வீரட்டம்.

எனும்பாலணியிறையம்பலத்தோனேல்லைசேல்குறுவோர்
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
சலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே.

—திருக்கோவையார்.

செம்மைவெண்ணீற்றொருமையினாரிரண்டுபிறப்பின்சிறப்பினார்
மும்மைத்தழலோம்பியநெறியார்நான்குவேதமுறைபயின்றார்
தம்மையைந்துபுலனும்பின்செல்லுந்தகையாரறுதொழிலின்
மெய்ம்மையொழுக்கமேழுலகும்போற்றுமறையோர்விளங்குவது.

போருவருந்தவத்தான்புலிக்காலனா
மருமுனியெந்தையர்ச்சித்துமுள்ளது
பெருமைசேர்பெரும்பற்றப்புலியூரென்
றோருமையாளர்வைப்பாம்பதியோங்குமால்.

அறிவினெல்லையாயதிருத்தில்லையேல்லையமர்ந்திறைஞ்சிப்
பிறிவிலாததிருவடியைப்பெருகுமுள்ளத்தினிற்பெற்றுச்
செறியுஞானபோனகர்வந்தருளும்புகலிசென்றிறைஞ்சி
மறிசேர்கரத்தார்கோயில்பலவணங்கிமகிழ்ந்துவழிக்கொள்வார்.

—பெரியபுராணம்.

மேலே கூறிய தேவாரமுதலியவற்றால், ஆன்மா அருள் எனப் படும் ஞானவிளக்குக்கொண்டு, கருடபாவனைபோலச் சிவோஹம் பாவனைவாயிலாக அறிவுவிரிந்து சிவத்தை நாடி, அச்சிவத்துள்ளே தான் என்று ஒருமுதல் காணப்படுமாறின்றிச் சிவவியாபகத்துள் அடங்கிநிற்றல் உணர்த்தப்பட்டதாம் என்க.

*நிர்க்குணனாய்நின்மலனாய்நித்தியானந்தனாய்த்
தற்பரமாய்நின்றதனிமுதல்வ—னற்புதம்போ
லானுவறிவாயளவிறந்துதோன்றானே
வானேமுதல்களையின்வந்து.

கண்டதையன்றன்றெனவிட்டுக்கண்டசத்தா
யண்டனையான்மாவிலாய்ந்துணரப்—பண்டணைந்த
வூனத்தைத்தான்விடுமா றுத்தமனின்றெண்கருட
சானத்திற்றீர்விடம்போற்றான்.

நானவனென்றெண்ணினர்க்குநாடுமுளமுண்டாத
லானெனவோன்றின்றியேதானதுவாய்—நானெனவோன்
றில்லென்றுதானேயேனுமவரைத்தன்னடிவைத்
தில்லென்றுதானுமிறை.

—சிவஞானபோதம்.

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே.

—திருவாசகம்.

திரண்டாம்பயனெனுந்திருவருடெளியிற்
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றா
மென்றிறையியற்கையியம்புதறகும்.

—சங்கற்பநிராகரணம்.

---

* 'நிர்க்குணனாய்' 'கண்டதை' 'நானவனென்' என்றற்றொடக்கத்த திருவெண்பாக்களின் பொருளைச் "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்து கூ-ம் சூத்திரத்து உஎ, ௩௩, 1,6,7,8,9-ம் பிரிவுகளினும், ௧0-ஞ் சூத்திரத்து ௧௩-ம் பிரிவினுங் காண்க.

பந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்படிவழிசென்றுசென்றேறிச், சிந்தையுந்தானுங்கலந்ததோர்கலவிதெரியினுந்தெரிவுருவண்ண, மெந்தையுந்தாயும்யானுமேன்றிங்ஙனேண்ணில்பல்லூழிகளுடனாய், வந்தணுகாதுநணுகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே.

—திருவிசைப்பா.

இங்ஙனம் திராவிடசித்தாந்தசாஸ்திரப்பொருளும் திராவிடவேதப்பொருளும் ஒற்றுமையுற நிற்பதை ஓர்ந்துணர்க. ௯, ௧௦—ம் சூத்திரங்களால் துரிய அருட்சிதம்பர எல்லையே அறிவுறுத்தப்பட்டதாம் என்க. வேதமுடிவிலே கூறப்பட்ட தியானயோகமும், ஈண்டுச் சித்தாந்தத்திலே கூறிய ஞானயோகமும் அருட்சிதம்பர வெல்லையினவாய் நிற்றலால், இவ்விரு யோகப்பயனும் ஒன்றும் என்க.

ஏனைய பதஞ்சலியோகம், ஏகான்மவாத நிர்குணசாங்கிய யோக (இராஜயோகம்) முதலியவனைத்தும் மூலப்பிரகிருதிப் புருஷ தத்துவத்தின்பாலதாய்ப் பசுநிஷ்டையாய் நிலைத்து, முப்பத்தாறு தத்துவங்களைக் கடந்த அருட்சிதம்பரவெல்லையைத் தலைப்பட்டுச் சிவத்தை அறியமாட்டாமையாலன்றோ,

எண்ணுயிரத்தாண்டுயோகமிருக்கினுங்
கண்ணாரமுதனைக்கண்டறிவாரில்லை
யுண்ணாடியுள்ளேயொளிபெறநோக்கிடிற்
கண்ணாடிபோலேகலந்திருந்தானே.

என்றார் திருமூலநாயனார்.

---

(௧௦௯) திருச்சிற்றம்பலவர் தரிசனத்தினால் நோயெல்லாம் நீங்கும்.

𑌨𑍈𑌤𑌂 𑌸𑍇𑌤𑍁𑌮𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌤𑌰𑌤𑍋 𑌨 𑌜𑌰𑌾 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌨 𑌶𑍋𑌕𑍋 𑌨 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌨 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 । 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑍋𑌽𑌤𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌏𑌤𑌂 𑌸𑍇𑌤𑍁𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾𑌽𑌨𑍍𑌧𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑌨𑌂

யோ பவதி வித்தஸ்ஸந்நவித்தோ பவத்யுபதாபீ ஸந்நநுபதா
பீ பவதி தஸ்மாத்வா ஏதம் ஸேதும் தீர்த்வாபி நக்தமஹரே
வாபிநிஷ்பத்யதே ஸக்ருத்விபாதோ ஹ்யேவைஷ ப்ரஹ்ம
லோகஃ|

நைதக்ம் ஸேதுமஹோராத்ரே தரதோ ந ஜரா ந ம்ருத்யுர்ந ஶோகோந ஸுக்ருதம் நதுஷ்க்ருதம் | ஸர்வே பாப்மாநோதோ நிவர்த்தந்தே பஹதபாப்மாஹ்யேஷ ப்ரஹ்மலோகஸ்தஸ்மாத்வா ஏதக்ம் ஸேதும் தீர்த்வாந்தஸ்ஸந்நநந்தோ பவதி வித்தஸ்ஸந்நவித்தோ பவத்யுபதாபீஸந்நுபதாபீபவதி தஸ்மாத்வா ஏதக்ம் ஸேதும் தீர்த்வாபிநக்தமஹரேவாபிநிஷ்பத்யதே ஸக்ருத்விபாதோஹ்யேவைஷ ப்ரஹ்மலோகஃ|

"அந்தத் (திருச்சிற்றம்பல) சேதுவைப் பகல் இரவேனும், ஜரையேனும், மரணமேனும், சோகமேனும், நன்மையேனும், தீமையேனும் கடப்பதில்லை; பாவிகளெல்லாம் அங்கிருந்து மீண்டு விடுவர்; இந்தப் பிரமலோகம் பாவத்தினின்று நீங்கியதன்றோ; அதனாற் குருடாயுள்ளோன் இந்தச் சேதுவைக் கடந்து குருடு நீங்கப்பெறுவன்; காயமுற்றோன் காயம் நீங்கப்பெறுவன்; துன்புற்றோன் துன்பம் நீங்கப்பெறுவன்; ஆகலின், இந்தச் சேதுவைக் கடந்தபோது இராவானது பகலாகின்றது; பிரமலோகம் (யாவர்க்கும்) ஒரேமுறையிற் பிரகாசிப்பது" என்றது சாந்தோக்கியம் (அ. ௮. ௧, ௨)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே.

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே.

—ஞா, கோயில்.

(க௦௭) ஆன்மாவை வியாபகமாக்குதற்குச் சிவபெருமான் வசீகரிப்பவர்.

ஏகோ வஶீ।

ஏகோ வஶீ।

"(ஆன்மாவின் அறிவை அருண்ஞானத்தினால்) *வசீகரித்து (வியாபகஞ் செய்யும் ஏகர் (சிவபிரான்)" என்று கடோபநிடத (ரு. க௨)மும்,

ஸர்வஸ்ய வஶீ।

ஸர்வஸ்ய வஶீ।

"அனைத்தையும் வசீகரிப்பவர்" என்று பிருகதாரணியோபநிடத (௬. ௪. ௨௨) மும் கூறுகின்றன.

பிறையார்சடையண்ணன்
மறையார்மருதரை
† நிறையானினைபவர்
குறையாரின்பமே.

—ஞா, திருவிடைமருதூர்.

† நிறைவுவேண்டுவீ
ரறவனன்னியூர்
மறையுளான்கழற்
குறவுசெய்ம்மினே.

—ஞா, திருவன்னியூர்.

(க௦அ) ஆன்மா முத்திதசையிலே சிவனாரது அபகதபாப்மத்துவாதி (சர்வஞ்ஞத்துவாதி) எண்குணங்களைச் சாமியமாக (ஒப்பாக) அடைதல்.

நிரஞ்ஜநः பரமம் ஸாம்யமுபைதி।

நிரஞ்ஜநః பரமம் ஸாம்யமுபைதி।

"நிரஞ்சனனாய் ஆன்மா பரமசாமியத்தை அடைகின்றான்" என்று முண்டகோபநிடத (௩. க. ௩) மும்,

---

* வசிப்பவரும்வியாபகத்தனமலந்தபமுத்தியடைவ—திருத்தணிகைப் புராணம். † நிறைவு—வியாபகம்.

[illegible]

முக்தஸ்ஶிவ ஸமோபவேத்।

"முக்தன் சிவசாமியமுறுகின்றன்" என்றும்,

[illegible]

ஸாத்யம் ஶிவஸமாநதா।

"சாதிக்கற்பாலது சிவசாமியம்" என்றும் வாயுசங்கிதையும்,

[illegible]

ஈஶ்வராத்தத்குணாஸ்ஸர்வே ஸம்க்ரமந்தே ததாத்மநி।
புண்யபூருஷ ஸம்பர்க்காத்புண்யாநீவததோந்யத:।
புண்யம் ஸம்க்ரமதே பும்ஸாமித்யாதி வசநாத்ஸ்புடம்।
ததாச சிவவந்முக்தாஸ் ஸர்வஜ்ஞத்வாதி தார்மிகா:।
இத்யேவம் குணஸம்க்ராந்த ஸாம்யபக்ஷோ நிரூபித:॥

"சிவபெருமானினின்று அக்குணமனைத்தும் அப்போது ஆன்மாவிற் சங்கிரமிக்கின்றன; புண்ணியபுருஷசம்பர்க்கத்தினாற் புண்ணியங்கள் ஒருவனுக்கு எய்துமாறுபோல என்றற்றொடக்கத் தவற்றால் வெளிப்படை; அங்ஙனமே சிவபெருமானைப்போல முக்தராயினோரும் சர்வஞ்ஞத்துவாதி குணங்களையுடையராயினர்; இங்ஙனம் குணங்கள் ஆன்மாவிற் சங்கிரமிக்கும் என்னும் சாமிய பக்ஷம் நிரூபிக்கப்பட்டது" என்று சித்தாந்தவிவேகமும் உரைக்கின்றன.

பிரஹ்மசூத்திரசைவபாஷ்யத்து ஆவிருத்தியதிகரணத்திற் கூறியாங்கு சிவபாவனை செய்தலாற் சிவசாமியம் ஆன்மாவுக்கு எய்தும். இதனை ௧௦௫-ம் இலக்க யோக விஷயத்தினுங் காண்க.

பத்திப்பேர்வித்திட்டேபரந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப்பகையறும்வகைநினையா
முத்திக்கேவிக்கத்தேமுடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக்கரணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேவித்திட்டுத்திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
*சேர்வார்தாமேதானாகச்செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர்சட்டங்கங்கலந்திலங்குநற்பொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே.

—ஞா, திருக்கழுமலம்.

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கைலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகயிலாயம்.

வழித்தலைப்படுவான்முயல்கின்றே
னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளங்
கழித்தலைப்பட்டநாயதுபோல
வொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
யொழித்துநீயருளாயினசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

---

* "சேர்வார்தாமேதானாகச்செயுமவன்" என்பது தம்மை இடைவிடாது தியானிப்போரை எண்குணங்களானிறைத்துத் தன்வண்ணமாகச் செய்பவர் எனப் பொருள்படும். இதனால் ஆன்மா சிவமாதல் வெளிப்படை.

பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு
மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந்
தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட
வேன்வண்ணமேவ்வண்ணமவ்வண்ணமாகியவீசனுக்கே.

—பதினொராந்திருமுறை.

தன்னையறிவித்துத்தான்றனைச்செய்தானைப்
பின்னைமறத்தல்பிழையலது—முன்னவனே
தானேதானுச்செய்துந்தைவமென்றுந்தைவமே
மானேதொழுகைவலி.

—சிவஞானபோதம்.

---

(௧௦௧) ஞானயோகிகள் சிவலோகஞ் செல்லும் நெறி.

𑌤𑍇 𑌯 𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌯𑍇 𑌚𑌾𑌮𑍀 𑌅𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂
𑌸𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌰𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌅𑌰𑍍𑌚𑌿𑌷𑍋𑌽𑌹
𑌰𑌹𑍍𑌨 𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌪𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌪𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍍 𑌷
𑌣𑍍𑌮𑌾𑌸𑌾𑌨𑍁𑌦𑌙𑍍𑌙𑌾𑌦𑌿𑌤𑍍𑌯 𑌏𑌤𑌿 𑌮𑌾𑌸𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕𑌂 𑌦𑍇𑌵
𑌲𑍋𑌕𑌾𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌂 𑌤𑌾𑌨𑍍𑌵𑍈𑌦𑍍𑌯𑍁𑌤𑌾𑌨𑍍 𑌪𑍁
𑌰𑍁𑌷𑍋 𑌮𑌾𑌨𑌸 𑌏𑌤𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌗𑌮𑌯𑌤𑌿 𑌤𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰
𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌃 𑌪𑌰𑌾𑌵𑌤𑍋 𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌪𑍁𑌨
𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃।

தே ய ஏவமேதத்விதுர் யேசாமீ அரண்யே ஶ்ரத்தாம் ஸத்யமுபாஸதே தே அர்ச்சிரபிஸம்பவந்தி அர்ச்சிஷோஹரஹ்ந ஆபூர்யமாண பக்ஷமாபூர்யமாணபக்ஷாத்யாந் ஷண்மாஸாநுதங்ஙாதித்ய ஏதி மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யமாதித்யாத் வைத்யுதம் தாந்வைத்யுதாந் புருஷோ மாநஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி தேஷு ப்ரஹ்மலோகேஷு பராஃ பராவதோ வஸந்தி தேஷாம் நபுநராவ்ருத்திஃ।

"பஞ்சாக்கினிவித்தை அறிந்தவர்களும், வனத்திலிருந்து பக்திஞானம்வாயிலாக உபாசிப்பவர்களும், ஒளியை அடைந்து, இதிலிருந்து பகலை அடைந்து, இதிலிருந்து பூருவபக்கமடைந்து, இதிலிருந்து உத்தராயணமடைந்து, இதிலிருந்து தேவலோகத்தை அடைந்து, இதிலிருந்து ஆதித்தியலோகத்தை அடைந்து, இதிலிருந்து மின்னலை அடைய, அங்கே ஓர் அமானவன் வந்து அவர்களைப் பிரஹ்மலோகத்துக்கு (சிவலோகத்துக்கு) நடாத்தச் சென்று அங்கே போய்ப் பெரியோராய் நீடு வசிக்கின்றார்; அவர்களுக்குப் புநராவர்த்தி இல்லை" என்று பிருகதாரணியோபநிடதம் (அ.௨.௧௫) கூறுகின்றது.

𑌸𑍂𑌰𑍍𑌯𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌤𑍇 𑌵𑌿𑌰𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌿।

ஸூர்ய த்வாரேண தே விரஜா꞉ ப்ரயாந்தி।

"அவர்கள் துகளிலாய்க் கதிரோன் வழியே செல்கின்றார்கள்" என்று முண்டக (௧. ௨. ௧௧) சுருதியும்,

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍇𑌕𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌯𑍋 𑌭𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌤𑍇𑌨 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍॥

ஊர்த்வமேக꞉ ஸ்திதஸ் தேஷாம் யோ பித்வா ஸூர்யமண்டலம்।
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம்॥

"அவைகளுள்ளே ஒன்று மேற்கொண்டு சூரியமண்டலத்தைப் பிளந்து போகின்றது; அதனால் அவன் பிரஹ்மலோகத்தை அடைந்து மேலான கதியை அடைகின்றான்" என்று யாஞ்ஞவற்கிய ஸ்மிருதியுங் கூறுகின்றன.

ஆதிக்கணான்முகத்திலொன்றுசென்று
  வல்லாதசொல்லுரைக்கத்தன்கைவாளாற்
சேதித்ததிருவடியைச்செல்லநல்ல
  சிவலோகநெறிவகுத்துக்காட்டுவோனை
மாதிமையமாதொருகூறுயினானை
  மாமலர்மேலயனோடுமாலுங்காணா
நாதியைநம்பியைநள்ளாற்றானை
  நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே.

—நா, திருநள்ளாறு.

அங்கதிரோனவனையண்ணலாக்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைந்துகோண்மி
னங்கதிரோனவனையுடன்வைத்தவாதிமூர்த்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே.

—நா, திருச்சோற்றுத்துறை

---

(௧௧௦) சிவபெருமானுக்குள்ள ஸ்திரமாகிய மூர்த்தங்கள்போல, உபாசகர் சிவலோகத்திற் கொள்ளும் உருவங்களும் கேடில்லாதன.

𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌉𑌗𑍍𑌰𑌃।

ஸ்திரேபிரங்கை: புருரூப உக்ர:।

—இருக்குவேதம், ௨. ௩௩. ௯.

"உக்கிரர் (சிவபெருமான்) ஸ்திரமாகிய அங்கங்களோடு பல ரூபமுடையர்."

𑌆𑌦𑌾𑌵𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤𑌾 𑌵𑌿𑌭𑍁𑌨𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃।
𑌕𑍃𑌪𑌯𑍈𑌵 𑌮𑌹𑍇𑌶𑍇𑌨 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑍋𑌚𑌿𑌤𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍।
𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌶𑍍𑌚𑍈𑌤𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌿𑌤𑌿 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃।
𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌹𑍇𑌤𑍁𑌃 𑌸𑌾𑌵𑌧𑌿𑌵𑌾𑌦𑌿𑌕𑌃।
𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍 𑌤𑌰𑍍𑌕𑌸𑍍𑌯 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃।
𑌅𑌥𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌹𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍈𑌰𑍍𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌕𑌥𑌮𑍍।
𑌕𑍁𑌤𑍋𑌽𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌧𑌰𑍍𑌮𑌾 𑌅𑌨𑌾𑌕𑍃𑌤𑍇𑌃॥

ஆதாவேவாத்மமோக்ஷார்த்தம் ஸ்வீக்ருதா விபுநா த்விஜா:।
க்ருபயைவ மஹேஶேந தத்தத்காலோசிதம் த்ருவம்।
ஸ்திராஶ் சைதா: ஸ்திரஸ்யாஸ்ய ஸ்திரேபிரிதிஹி ஶ்ருதி:।
ஸ்வதந்த்ரஶக்திமத்யஸ்மிந்ஹேதுஸ் ஸாவதிவாதிக:।
ந திஷ்டத்யப்ரதிஷ்டாநாத் தர்க்கஸ்யச விஶேஷத:।
அதோந்யதாஹி வேதாந்தைர் வீர்யாணாஞ்ச ஸ்ம்ருதி: கதம்।
குதோபஹதபாப்மத்வாத்யஷ்டதர்மா அநாக்ருதே:॥

—உபதேசகாண்டம்.

"ஆதியிலே ஆன்மா மோக்ஷமடையும்பொருட்டு அவ்வக் காலங்களுக்கியைய வியாபகராகிய சிவபெருமானால் (மகேசுவர மூர்த்தங்கள்) நிச்சயமாய்க் கிருபையினோடு கொள்ளப்பட்டன;

அவர் ஸ்திரர் (நித்தியர்) ஆதலின் அவரது மூர்த்தங்களும் ஸ்திரமாயுள்ளன என்று கூறிற்றுச் சுருதி; சுவதந்திர சக்தியையுடைய இந்தச் சிவபெருமானிடத்துக் காலவரைக்குட்பட்டவர் என்று ஊகிக்கும் தர்க்கமானது விசேஷமாய் அநுமானத்துக்கு நில்லாமை பற்றி நிலைக்கமாட்டாது; இங்ஙனமல்லாவிடின் உபநிடதங்களால் வீரியங்களுடையவர் என்றும், அபகதபாப்மத்துவாதி (சாந்தோக்கியோபநிடதம், அ. க. ரு) எண்குணங்களுடையர் என்றும் சுருதிகூறுதற்கு இடம் எங்ஙனமாம்?

> கரையார்கடனாகைக்காரோணம்மேய
> நரையார்விடையானைநவிலுஞ்சம்பந்த
> னுரையார்தமிழ்மாலைபாடும்மவரெல்லாங்
> *கரையாவுருவாகிக்கலிவானடைவாரே.
>
> —ஞா, திருநாகைக்காரோணம்.

(கக௧) இரு பற்றும் அற்றவர்க்குச் சிவபெருமான் அத்துவிதமாதல்.



𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍।

ஸோத்வநஃ பாரமாப்நோதி தத்விஷ்ணோஃ பரமம் பதம்।

"அவன் அத்துவாவின் கரையை அடைகின்றான்; அது சிவனாது (பரமாகாய) பரமபதம்" என்று கடவல்லியுபநிடத (௩. ௯) மும்,

𑌕𑌲𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌭𑍁𑌵𑌨𑌂 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑌦𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍।

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌷𑌡𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌪𑌠𑍍𑌯𑌤𑍇॥

கலாதத்வஞ்ச புபநம் வர்ணம் பதமதஃ பரம்।

மந்த்ரஸ்சேதி ஸமாஸேந ஷடத்வா பரிபட்யதே॥

"கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்னும் ஆறும் தொகுப்புற ஷடத்துவா எனப்படுகின்றது" என்றும்,

---

* ஸ்திரமாகிய வடிவம்.

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌪𑌦𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦𑌤𑌃 |
𑌭𑍁𑌵𑌨𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑌾 𑌕𑌲𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ||

மந்த்ராத்வாச பதாத்வாச வர்ணாத்வாசேதி ஶப்ததஃ।
புவநாத்வாச தத்வாத்வா கலாத்வா சார்த்ததஃ க்ரமாத்॥

"மந்திரம், பதம், வர்ணம் என்பன சப்தாத்துவா எனவும், புவனம், தத்துவம், கலை என்பன அர்த்தாத்துவா எனவும் படும்" என்றும் வாயுசங்கிதையும் கூறுகின்றது.

இதனால் மந்திரமுதலிய மூன்றும் ஒலி வடிவம், எனவும், புவனமுதலிய மூன்றும் பொருள் வடிவம் எனவும் ஓர்க.

இவற்றுட் புவனம் தத்துவத்தைப்பற்றி நிற்கும்; தத்துவம் கலையைப்பற்றி நிற்கும். வர்ணம் பதம் மந்திரம் என்னும் (ஒலிவடிவாகிய) மூன்று அத்துவாக்களும் (பொருள்வடிவாகிய) புவனத்திற்றோன்றிய சரீரங்களைப்பற்றி நிற்கும். இதுபற்றியே, சர்வாத்துமசம்புசிவாசாரியர்

(𑌵𑌰𑍍𑌣𑌪𑌦𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌧𑍍𑌵𑌾𑌨𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌰𑍂𑌪𑌾𑌃) 𑌏𑌤𑍇𑌷𑍁 𑌭𑍁𑌵𑌨𑌾𑌧𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑌾𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 | 𑌏𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌲𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 | 𑌵𑌰𑍍𑌣𑌪𑌦𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌧𑍍𑌵𑌾𑌨𑍋 𑌭𑍁𑌵𑌨𑌶𑌰𑍀𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 ||

(வர்ணபத மந்த்ராத்மநஸ்த்ரயோத்வாநஶ்ஶப்தரூபாஃ) ஏதேஷு புவநாத்வா தத்வாத்வாநமாஶ்ரித்ய வர்த்ததே । ஏவம் தத்வம் கலாமாஶ்ரித்ய வர்த்ததே । வர்ணமதமந்த்ரத்ரயோத்வாநோ புவநஶரீராபேக்ஷயா வர்த்தந்தே॥

என்று கூறினர்.

இந்த ஆறு அத்துவாக்களும் ஆன்மாக்களுக்குப் பந்தமாயிருக்கும். இந்தப் பொருள் ஒலிவடிவினவாய அத்துவாக்கள் ஆன்மாக்களுக்குப் பந்தமானமைக்குக் காரணம் என்னை எனிற் கூறுதும்:—

ஆன்மாவைச் செம்பிற் களிம்புபோல அநாதிக்கண்ணே பந்தித்தது மூலமலமோகம். இந்த மூலமலமோகமானது பெரிய

அந்தகாரத்தையும் ஊழிகாலத்துக் கதிரொளி என்னுமாறு மிகவும் அவாவே சொரூபமாயுள்ளது. இந்த மோகமாகிய அவாவானது புகழ்ப்பற்றும் பொருட்பற்றும் என இருவகைப்படும். புகழ்ப் பற்றுனது ஒலியைப்பற்றியது; பொருட்பற்றுனது பொருளைப் பற்றியது. வண்ணான் ஆடையின் அழுக்கைச் சாணம் உவர்மண் முதலிய அழுக்கைக்கொண்டு நீக்குமாறு போல, சிவபெருமான் ஆன்மாவைப்பற்றிய புகழாசை பொருளாசை என இருதிறப் பட்ட மூலமலத்தை ஒலிவடிவும் பொருள்வடிவுமாகிய மாயேயமல மாகிய இருபிரகாரத்ததாகிய அத்துவாவை மருந்தாகக்கொண்டு தீர்ப்பார். ஆன்மாவுக்கு இருவினையொப்பு மலபரிபாகம் என்பன சிவபுண்ணியமிகுதியினுல் எய்திய காலத்து, ஞானசாரியர்வாயி லாக அத்துவசுத்தி செய்யப்பெற்று அவ்வான்மாவானது 'புகழ்ச் சியைக்கடந்தபோகமே' என்று அருளிச்செய்யப்பட்டவாறு பொ ருட்சார்பு புகழ்ச்சார்பாகி இருபற்றும் அற்றுப்போகத் தன்னி டத்துச் சிவம் இரண்டற நிற்றலாகிய அத்துவிதபாபோகம் விளை யப்பெறும். பட்டினத்தடிகள் இருவகை அத்துவாக்களின் எல் லையையும் அருட்கண்ணுற் கடந்து, அதுகாரணமாக அறிவுஞ் செயலுமிழந்து, அதனுற் றம்மை மறந்துசிவத்தை நாடி நிற்கும் அன்பருள்ளக்கண்ணுக்கு அச்சிவம் புலப்படும் என்று கொண்டே,

உரையின்வரையும்பொருளினளவு
மிருவகைப்பட்டவெல்லையுங்கடந்து
தம்மைமறந்துநின்னைநினைப்பவர்
செம்மைமனத்தினுந்தில்லைமன்றினுநட
மாடுமேம்பலவாண......

---பதினொராந்திருமுறை.

என்றருளிச்செய்தார். ஈண்டு உரை என்றது சப்தாத்துவா வையும், பொருள் என்றது அர்த்தாத்துவாவையும் சுட்டியவாம் எனக.

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினியற்கையையொ
*டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. [ழிந்திட்

—ஞா, திருவாலவாய்.

---

* புகழ்ப்பற்று பொருட்பற்று என்னும் இருவகைப்பற்றும் அற்றவரி டத்தில் இரண்டற்று அத்துவிதமாய் விளங்குபவர் சிவபெருமான்.

அப்பொற்பதிவாழ்வணிகக்குலத்தான்றதொன்மைச்
செப்பத்தகுசீர்க்குடிசெய்தவஞ்செய்யவந்தா
ரேப்பற்றினையுமறுத்தேறுகைத்தேறுவார்தாண்
மெய்ப்பற்றேனப்பற்றிவிடாதவிருப்பின்மிக்கார்.

அப்பொற்பதியினிடைவேளாண்குலத்தைவிளக்கவவதரித்தார்
செப்பற்கரியபெருஞ்சீர்த்திச்சிவனார்செய்யகழற்பற்றி
யேப்பற்றினையுமறவெறிவாரெல்லைதெரியவொண்ணுதார்
மெய்ப்பத்தர்கள்பாற்பரிவுடையாரெம்பிரானார்விறன்மிண்டர்.

—பெரியபுராணம்.

---

(௧௧௨) ஞானம்.

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌮𑍍।
𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌪𑌤𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌿𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍।
𑌪𑌤𑌿𑌃 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌪𑌶𑍍𑌚𑌾𑌸𑍌 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌾𑌰𑌕𑌃॥

ஸர்வேஷ்வேவ ஹி ஶாஸ்த்ரேஷு ஜ்ஞேயம் வஸ்து சதுஷ்டயம்।
பஶுபாஶபதிஶ்சைவ ஶிவஶ்சேதி யதாக்ரமம்।
பதிஸ் ஸதாஶிவோ ஜ்ஞேயோ மந்த்ராத்மா மந்த்ரவிக்ரஹ:।
ஸர்வமந்த்ராதிபஶ்சாஸௌ ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரக:॥

"சர்வசாஸ்திரங்களினும் பசு பாசம் பதி சிவம் என்னும் நான்கு வஸ்துக்களும் கிரமமாக அறியற்பாலன; பதியாவார் சதாசிவர்; இவர் மந்திரான்மாவும், மந்திரவடிவினரும், சர்வமந்திரங்களுக்கும் அதிபரும், சிருஷ்டி (ஸ்திதி) சங்கார (திரோபவ அநுக்கிரகம்) என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்பவருமாயுள்ளார்" என்று சர்வஞ்ஞானோத்தரம் கூறுகின்றது.

𑌕𑌵𑌾𑌰𑍍𑌦𑍍𑌵𑌾 𑌕𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑍇 𑌨𑌾𑌯𑌾 𑌕𑍋
𑌵𑍇𑌦 𑌯𑌤 𑌆𑌬𑌭𑍂𑌵 । 𑌯𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌮𑍇
𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍𑌸𑍋 𑌅𑌙𑍍𑌗 𑌵𑍇𑌦 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑍇𑌦 ॥

அர்வாக் தேவா அஸ்ய விஸர்ஜநேநாதா கோ வேத யத ஆபபூவ । யோஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந் ஸோ அங்கவேத யதிவா நவேத ॥

—இருக்குவேதம், ௧0. ௧௨௯. ௬. எ.

"தேவர்கள் உலக சிருஷ்டிக்குப் பின்னர்த்தான் உளராயி ஞர்கள்; அங்ஙனமாயின் அது எங்கிருந்து உளதாயிற்று என்று யார் அறிவார்" என்று வினவி, "பரமவியோம(திருச்சிற்றம்பல)த் தின்கண்ணே எவர் பிரபஞ்சத்துக்கு அத்தியக்ஷராய் (அதிபதி யாய்) நின்றாரோ, அவரே அதனை அறிவார்; மற்றெவரும் அறி யார்" என்று உத்தரம் இறுத்தது இருக்குவேதம். இதனாற் சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியஞ் செய்பவர் பரமவியோமத்திலுள்ள அத்தியக்ஷர் என்று பெறப்படுகின்றது. அந்த அத்தியக்ஷர் யா ரெனின்,

[illegible]

ய ஏஷோந்தர்ஹ்ருதய ஆகாஶஸ்தஸ்மிந்சேதே ஸர்வஸ்யவஶீ ஸர்வஸ்யேஶாநஸ் ஸர்வஸ்யாதிபதி:।

"எது இதயத்துள் ஆகாயமாய்த் (திருச்சிற்றம்பலமாய்) இருக்கின்றதோ, அதில் அனைத்தையும் வசிகரிப்பவரும், அனைத் துக்கும் அதிபதியும் அனைத்துக்கும் ஈசானருமாயினர் அயர் கின்றார்" என்று பிருகதாரணியம் கூறுமாற்றால், பரமவியோமத் தினர் ஈசானர் என்று பெறப்படுகின்றது. அந்த ஈசானர் யாரெ னின்,

[illegible]

ஈஶாநம் ந்ருத்தரூபந்து பஞ்சமந்த்ராத்மகம் பரம்।
ப்ராஹ்மரந்த்ரே ஶிவம் வித்யா தூர்த்வே ந்ருத்தம் விசிந்தயேத்।
த்வாதஶாந்தாத் பரோ யஸ்மாத திஸூக்ஷ்மஸ் திதோ விது:।
ஆநந்தந்ருத்தகஸ் ஸாக்ஷாத் தேவதேவோ ஜகத்குரு:॥

''பஞ்சமந்திரான்மகபாராகிய ஈசானரைத் தாண்டவேசுவரர் என்றும், பிரமரந்திரத்திலே (சாதாக்கியதத்துவச்) சிவன் உளராயினர் என்றும் அறிக; அவர்க்கு மேலுள்ள (சமஷ்டிரூப சதாசிவ) தாண்டவேசுவரரைத் தியானிக்க; துவாதசாந்தத்துக்கு மேலுள்ளாராதலில் அவர் அதிசூக்குமவடிவினர் என்று அறிகின்றார்கள்; அவர் நேரே தேவதேவரும், ஜகத்குருவுமாகிய ஆனந்ததாண்டவேசுரராம்'' என்று காரணாகமம் கூறுகின்றது. ஆகவே, இருக்குவேதத்துக் கூறப்பட்ட பரமாகாயத்து அத்தியக்ஷர் சூக்குமவடிவினராகிய சமஷ்டிரூப மகாசதாசிவ தாண்டவேசுரராம் என்க.

ஶிவவஸ்து பரஸ்மாந்மந்த்ராதீதோ நிரஂஜநஃ|
நிராமயோ நிராதாரோ வர்ணரூபவிவர்ஜிதஃ||

ஶிவவஸ்து பரம்தஸ்மாந்மந்த்ராதீதோ நிரம்ஜநஃ|
நிராமயோ நிராதாரோ வர்ணரூபவிவர்ஜிதஃ||

''சிவப்பொருளானது பரவடிவாகும்; ஆகலின், அவ்வஸ்து மந்திராதீதமாய், மலமிலதாய், நிராமயமாய், நிராதாரமாய், வர்ணம் வடிவம் இல்லாததாயுள்ளது. ஆகவே, மாயாவாதிகளது விமல சத்துவப்பிரதான மூலப்பிரகிருதி மாயோபாதிகனும் கற்பித ஆபாசனுமாகிய தாழ்ந்த ஈசுரசகுணவழிபாட்டினுயர்ந்து, (சர்வசாரமுதலிய ஏகான்மவாதோபநிடதப்பிரகாரம்) மூலப்பிரகிருதி கடந்துள்ள ஆன்மப்பிரமசிவம் வேறு என்றும், மூலப்பிரகிருதி கடந்து, அதற்கப்பாலுள்ள சூக்குமப்பிரகிருதி கடந்தப்பாலுள்ள பரப்பிரகிருதிப்பாலராய், நித்தியராய், சூக்குமவடிவினராயுள்ள திருச்சிற்றம்பலவாது ஸ்தானத்தில் உயர்ந்த அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாக ஈண்டுக் கூறப்பட்ட அதிகாரவர்ச்சித சிவப்பொருள் வேறு என்றும் ஓர்க.

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லா
*ஞெப்புடையனல்லனொருவனல்ல
னோரூரனல்லனோருவமனில்லி
யப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
மவனருளேகண்ணாகக்காணினல்லா
லிப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே.

—நா, வினாவிடைத்திருத்தாண்டகம்.

---

*ஒப்புடையனல்லன் என்றற்றொடக்கத்தவற்றாற் சிவத்தின் சொரூப நிலை உணர்த்தப்பட்டது.

இன்னவுருவின்னநிறமென்றறிவதேலரிதுநீதிபலவுந்
தன்னவுருவாமெனமிகுத்ததவனீதியொடுதானமர்விட
முன்னைவினைபோய்வகையினான்முழுதுணர்ந்துமுயல்கின்றமுனிவர்
மன்னவிருபோதுமருவித்தொழுதுசேரும்வயல்வைகாவிலே.

—ஞா, திருவைகாவூர்.

கொள்ளுங்கில்லெனையன்பரிற்கூய்ப்பணி
கள்ளும்வண்டுமறாமலர்க்கொன்றையா
னுள்ளுங்கீழுளுமேலுளும்யாவுளு
மெள்ளுமெண்ணெயும்போனின்றவெந்தையே.

—திருவாசகம்.

ஆயினும்பெரியாரவரென்பது
மேயவிவ்வியல்பேயன்றிவிண்முதற்
பாயபூதங்கள்பல்லுயிரண்டங்க
ளேயும்யாவுமிவர்வடிவென்றதாம்.

பின்புமாறிவாரவர்பெற்றியை
யென்பதியாருணர்வாருஞ்சென்றெட்டொணா
மன்பெருந்தன்மையாரெனவாழ்த்தினா
ரன்புசூழ்சண்பையாண்டகையாரவர்.

—பெரியபுராணம்.

𑌤𑌦𑌿𑌦𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌦𑍍𑌯𑌮𑌰𑍈𑌰𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑍁 𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃।
𑌤𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌤𑍁 𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍।
𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑌰𑍈𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑍈𑌰𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍈𑌃।
𑌬𑌹𑍁𑌨𑌾𑌤𑍍𑌰 𑌕𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑌰𑌮𑍍।
𑌶𑌿𑌵𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌸𑍍𑌤𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥

ததிதம் த்ரிவிதம் ரூபம் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ததஃ பரம்।
அஸ்மதாத்யமரைர் த்ருஶ்யம் ஸ்தூலம் ஸூக்ஷ்மந்து யோகிபிஃ।
ததஃ பரந்து யந்நித்யம் ஜ்ஞாநமாநந்தமவ்யயம்।
தந்நிஷ்டை ஸ்தத்பரைர்பக்தைர் த்ருஶ்யந் தத்ரூபமாஸ்திகைஃ।
பஹுநாத்ர கிமுக்தேந குஹ்யாத் குஹ்யதமம் பரம்।
ஶிவே பக்திர் நஸந்தேஹஸ்தயா யுக்தோ விமுச்யதே॥

"சிவபெருமானுக்கு ஸ்தூலவடிவம், சூக்குமவடிவம், பரவடிவம் என மூவடிவங்கள் உள்ளன; திருசியமாகிய ஸ்தூலவடிவம் அமரர்களாகிய எங்களானும், சூக்குமவடிவம் (வைதிகபாசுபத)ஞான யோகிகளானும், ஞானானந்த அவ்வியயமாகிய அந்தப் பரவடிவம் சிவநிஷ்டர்களாய், சிவபரர்களாய், சிவாஸ்திகர்களாயுள்ள பக்தர்களாலும் காணற்பாலன; ஈண்டு அதிகஞ்சொல்லி என்! பரவடிவம் மறைவினும் மறைவாய் உள்ளது; எவனுக்குச் சிவனிடத்திலே அன்பு சந்தேகமின்றி உளதோ, அவன் அவ்வன்பினாலேயே அதனை வீடுறுகின்றான்" என்றது சிவபுராணம். சர்வஞ்ஞானோத்தரத்திற் கூறப்பட்ட அதிகாரவர்ச்சித சிவப்பொருளின் சொரூபமே ஈண்டு பரவடிவம் எனப்பட்டது. இது கேவலாவஸ்தை சகலாவஸ்தை என்னும் இரண்டும் நீங்கியவிடத்தே எய்தற்பாலது.

𑌨 𑌦𑌿𑌨𑍇 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌵𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌨𑍈𑌵 𑌚 𑌨𑍈𑌵 𑌚।
𑌸𑌨𑍍𑌤𑌤𑌂 𑌪𑍂𑌜𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌵𑌂 𑌦𑌿𑌵𑌾𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌚 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍।

நதிநே பூஜயேத் தேவம் ராத்ரௌ நைவச நைவச।
ஸந்ததம் பூஜயேத் தேவம் திவாராத்ரௌச வர்ஜயேத்।

"பகல் எனப்படும் சகலாவஸ்தையிற் சிவனை வழிபடற்க; இரவு எனப்படும் கேவலாவஸ்தையில் அவரை வழிபடற்க; பின் கேவலசகலமொழிந்து எஞ்ஞான்றும் சுத்தாவஸ்தையில் அவரை வழிபடுக" என்று கூறிற்றுச் சிவாகமம்.

உறவியுமின்புறுசீருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
*மறவியஞ்சிந்தனைமாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானார்பெரும்புலியூர்பிரியாரே.

—ஞா, திருப்பெரும்புலியூர்.

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

—திருவாசகம்.

---

* மறவி சிந்தனை என்றமையானும், கரந்து பரந்தது என்றமையானும், இரா பகல் என்றமையானும், நினைப்பு மறப்பு என்றமையானும் கேவலசகலாவஸ்தைகள் குறிக்கப்பட்டன.

இராப்பகலற்றவிடத்தேயிருந்து
பராக்கறவானந்தத்தேறல்பருகா
ரிராப்பகலற்றவிறையடியின்பத்
திராப்பகன்மாயையிரண்டடித்தேனே.

நினைப்புமறப்புமிலாதவர்நெஞ்சம்
வினைப்பற்றறுக்கும்விமலனிருக்கும்
வினைப்பற்றறுக்கும்விமலனைத்தேடி
நினைக்கப்பெறிலவனீளியனுமே.

— திருமந்திரம்.

𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌽𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌶𑌿𑌵𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌗𑌰𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌰𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌗𑍌𑌰𑌵𑌾𑌤𑍍।
𑌨 𑌕𑌰𑍍𑌮𑌕𑌰𑌣𑍀𑌯𑌂 𑌹𑌿 𑌬𑌹𑌿𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍃𑌤𑍇𑌨 𑌤𑍃𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚𑍈𑌵 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌨 𑌚 𑌬𑌹𑌿𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿 𑌕𑌦𑌾𑌚𑌨।

பாஹ்யேப்யர்ச்ய ஶிவம் பஶ்சாதந்தர்யாகரதோ பவேத்।
ரதிரப்யந்தரே யஸ்ய ந பாஹ்யே புண்யகௌரவாத்।
நகர்மகரணீயம் ஹி பஹிஸ்தஸ்ய மஹாத்மநः।
ஜ்ஞாநாம்ருதேந த்ருப்தஸ்ய பக்த்யாசைவ ஶிவாத்மநः।
நாந்தர்நச பஹிः க்ருஷ்ண க்ருத்யமஸ்தி கதாசந॥

"புறப்பூசையினுற் சிவத்தை வழிபட்டு, பின்னர் அந்தரியாகத்திலே விருப்பமுடையனுகின்றுன்; புண்ணியமிகுதியினுல் அந்தரியாகத்தினும் புறப்பூசையினும் பற்றிலனுகின்றுனே, அந்த மகாத்துமாவுக்குப் புறத்தே செயற்பாலதொன்றுமின்று; ஞானமிர்தத்தினுலும் பக்தியினுலும் திருப்தியுடையனுகிய சிவன்முக்தனுக்கு அகத்தும் புறத்தும் ஓர்காலும் செய்யவேண்டியதொன்றுமின்றும்" என்று சிவபுராணம் கூறுகின்றது.

உள்ளும்புறம்புநினைப்பறினின்னுள்ளே
மொள்ளாவமுதமென்றுந்தீபற
முளையாதுபந்தமென்றுந்தீபற.

—திருவுந்தியார்.

(இ-ள்) சகமார்க்கம்போலப் பரவடிவாகிய சிவப்பொருளை ஏக தேசப்படுத்தி உள்ளே தியானிப்பதும், புத்திரமார்க்கம்போல அகத்தும் புறத்தும் வழிபடுவதும், தாதமார்க்கம்போற் புறத்தே வழிபடுவதும் ஒழித்து, சன்மார்க்கமுறையாகிய சுத்தாவஸ்தை யைத் தலைப்பட்டு, அகண்டாகார நித்தவியாபகசச்சிதானந்த சொரூபநிலையை அறிந்து ஒருவர் வழிபடின், அவ்வன்பர் அறி வின்கண்ணே பருகத் தொலையாப் பரபோகம் விளையும்; அது விளையவே பாசங்கள் முளைக்கமாட்டாவாம் எ-று.

இரவுபகலில்லாவின்பவெளியூடே
விரவிவிரவிநின்றுந்தீபற
விரையவிரையநின்றுந்தீபற.

(இ-ள்) கேவலசகலாவஸ்தைகளிற் புசிக்கும் சிற்றின்பம் போலன்றி, "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின் னும் புதிதா"கலின், அந்த இன்பபூரண வெளியாகிய சிவத்துடனே புணர்ந்து விரவி ஒன்றேயாகி நிற்குமாயினும், அந்தச் சிவாநு பவத்தில் விரைந்துநின்று உணர்வதொரு பொருளுண்டாகலின் அவ்விடத்து அது உண்டு இல்லை என்று பேசுதற்கில்லையாம் என்றே கொள்ளப்படும். ஆன்மா அவ்விடத்து உண்டென்னில், ஞாதிரு ஞான ஞேயம் என்னும் சங்கற்பவிகற்பங்கள் உண்டாம்; அவ்விடத்து ஆன்மா என்றொரு முதல் இல்லை என்னில், அது சற்காரியமாகிய மெய்ப்பொருள் என்பதற்கு இழுக்காகி அநித்திய பதார்த்தங்களில் ஒன்றாகும்; அதனை ஒன்று என்றும் இரண்டு என்றும் பகுத்தறியின், அவசித்தாந்தமாகும்; ஆன்மா என்று ஒரு முதல் ஆண்டு உண்டென்பதும் இல்லையென்பதுமின்றி அந்தப் பேரானந்த சிவபோகத்தைப் பொருந்துமுறைமையை ஆராயின், அந்தச் சிவபெருமான் "ஏகமாய் உள்ளத்தின்கண்ணானுள்கு வாருள்கிற்றை உள்ளத்தாற் காணேனே வுற்று" என்றும், ஆன்ம ஞானத்தினிடத்து ஏகமாய் விட்டுநீங்காதவாராகலான், கருது வார் கருதிய பொருளாகிய தம்மை அவர் அறிவோடு கூடிநின் றறியார்கொல்லோ என்றும் வருமாற்றால், அவ்விடத்து ஆன்மா வைத் தாமாகும்வண்ணஞ் செய்து, அவ்வின்பத்தை உயிர் அறி யும்பொருட்டு உடனாய்நின்று அறிவர் எ-று.

போன்வாண்முன்கொண்மூவிற்புக்கொடுங்கிப்போயகலத்
தன்வாளையெங்குமாந்தன்மைபோன்—முன்வாண்
மலத்துண்மறைந்தள்ளமற்றுலகையுண்ணு
மலத்திரித்துச்செல்லும்வரத்து.

—சிவஞானபோதம்.

இதன் பொருளைச் "சிவஞானபோதவசனாலங்காரதீப"த்து ௧௧-ஞ் சூத்திரத்து ௬௩-ம் பிரிவிற் காண்க.

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே.

—திருவாசகம்.

ஈண்டு மூலபண்டாரம் என்றது பேரானந்தசிவபோகத்தின் பேற்று. இதனை அடையுநெறி வருமாறு.—

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவர்க்காய்ச்
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்ட
மென்றுவந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே.

—நா, கோயில்.

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே.

—ஞா, திருப்பிரமபுரம்.

எண்ணொன்றிநினைந்தவர்தம்பா
லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையில்வண்டு
பண்ணின்றொலிசெய்பனையூரே.

—ஞா, திருப்பனையூர்.

ஏகமாய்நின்றேயிணையடிகளோன்றுணரப்
போகமாய்த்தான்விளைந்தபோற்பினு—னேகமா
யுள்ளத்தின்கண்ணணுளுள்குவாருள்கிற்றை
யுள்ளத்தாற்காணுமேனுவுற்று.

—சிவஞானபோதம்.

பரபோகானந்தமும் ஆனந்தக்கூத்தும் ஒன்றுமெனல்.



உணர்வுநேர்பெறவருஞ்சிவபோகத்தையொழிவின்றியுருவின்க
ணணையுமைம்பொறியளவினுமெளிவரவருளினையெனப்போற்றி
யிணையில்வண்பெருங்கருணையேயேத்திமுன்னெடுத்தசொற்பதிக
புணருமின்னிசைபாடினராடினர்பொழிந்தனர்விழிமாரி. [த்திற்

எவ்வுலகுமுய்யவெடுத்தருளியசேவடியாரைச்
செவ்வியவன்புறவணங்கிச்சிந்தைகளிவரத்திளைத்து
வவ்வியமெய்யுணர்வின்கண்வருமானந்தக்கூத்தை
யவ்வியல்பிற்கும்பிட்டங்காராமையமர்ந்திருந்தார்.

பரவுவாய்குளறிக்காதல்படிதிருப்படியைத்தாழ்ந்து
விரவுமெய்யங்கமைந்துமெட்டினும்வணங்கிவேட்கை
யுரனுறுதிருக்கூத்துள்ளமார்தரப்பெருகிநெஞ்சிற்
கரவிலாதவரைக்கண்டாநிறைவுதங்கருத்திற்கொள்ள.

பண்ணார்பதிகத்திருக்கடைக்காப்புப்பரவி
யுண்ணாடுமென்புமுயிருங்கரைந்துருக்கும்
விண்ணாயகன்கூத்துவெட்டவெளியேதிளைத்துக்
கண்ணாரமுதுண்டார்காலம்பெறவழுதார்.

அண்ணலார்தமக்களித்தமெய்ஞ்ஞானமேயானவம்பலமுந்த
முண்ணிறைந்தஞானத்தெழுமானந்தவொருபெருந்தனிக்கூத்துங்
கண்ணின்முன்புறக்கண்டுகும்பிட்டெழுங்களிப்பொடுங்கடற்காழி
புண்ணியக்கொழுந்தனையவர்போற்றுவார்புனிதராடியபொற்பு. [ப்

—பெரியபுராணம்.

புதியையாயினியையாம்பூந்தென்றல்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனைமதித்திட்டமதிகங்கை
விதியாளனேன்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானே.

—நா, திருப்பழனம்.

மெய்யுணர்வு எனப்படும் அருளின் எல்லையாகிய துரியநிலை கடந்த பின்னர்த் துரியாதீதத்துச் சிவபோகம் எனப்படும் ஆனந்தக்கூத்து எய்துவதாமாதலின், "உணர்வுநேர்பெற வருஞ்சிவபோகத்தை" என்றும், "மெய்யுணர்வின்கண்வருமானந்தக் கூத்து" என்றும், "உரனுறுதிருக்கூத்து" என்றும், "மெய்ஞ்ஞனமேயானவம்பலமுந் தம்முண்ணிறைந்த ஞானத்தெழுமானந் தவொருபெருந்தனிக்கூத்தும்" என்றும் கூறப்பட்டதாம்.

ஆனந்தத்தை ஆன்மாவுக்கு விளைவிப்பவர் சிவபெருமான்.

𑌆𑌨𑌨𑍍𑌦𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮।
ஆநந்தோ ப்ரஹ்ம।

"ஆனந்தகுணமுடையது பிரஹ்மம்" என்றும்

𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌃।
அந்யோந்தர ஆத்மாநந்தமயஃ।

"அனைத்துக்கும் வேறாய் உள்ளே உள்ள (பரம) ஆன்மாவாகிய சிவபெருமான் ஆனந்தமிகுதியுடையர்" என்றும்,

𑌸 𑌏𑌕𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌆𑌨𑌨𑍍𑌦𑌃।
ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்தஃ।

"அது பிரஹ்மத்தின் ஒரு ஆனந்தம்" என்றும்,

𑌏𑌷 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌯𑌾𑌤𑌿।
ஏஷஹ்யேவாநந்தயாதி।

"இவரன்றோ (ஆன்மாவுக்கு) ஆனந்தத்தை விளைவிப்பவராகின்றார்" என்றும்,

𑌰𑌸𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿।
ரஸம் லப்த்வாநந்தீ பவதி।

"பிரஹ்மானந்தத்தை ஆன்மா அடைந்து ஆனந்தமாகின்றான்" என்றும்,

𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌨।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் நபிபேதி குதஶ்சந।

"பிரஹ்மானந்தத்தை (அநுபூதியில்) அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன்" என்றும் தைத்திரீயசுருதியும்,

𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍।
ஆநந்தமயோப்யாஸாத்।

"(சிவபெருமான்) ஆனந்தமயர்; *அப்பியாசத்தினால்" என்றும்,

---

* தைத்திரீய சுருதி ஆனந்தமிகுதியுடைய பரப்பிரஹ்மசிவனாரது ஆனந்தத்தை ஆராய்வதாகத் தொடங்கி, மனுஷ்யானந்தத்தை முதற்கண்ணே கூறி, அதினும் நூறுமடங்கு மனுஷ்யகந்தருவானந்தம் என்றும், அதினும் நூறு மடங்கு தேவகந்தருவானந்தம் என்றும், இங்ஙனம் இந்திரன், பிருகஸ்பதி, பிரமா என்போருடைய ஆனந்தங்களும் ஒன்றுக்கொன்று நூறுநூறுமடங்காம் என்றும் கூறி, அவற்றிற்குமேற் பிரஹ்மானந்தத்தைக் கூறினமைபற்றி "அப்பியாசம்" என்று கூறப்பட்டது.

𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌚𑍍𑌚।

தத்தேதுவ்யபதேஶாச்ச।

"அவர் (சிவபெருமான்) அதற்கு (ஆனந்தம் விளைத்தற்கு) ஏதுவாகக் கூறப்படலானும்" என்றும்,

𑌵𑌿𑌕𑌾𑌰𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨 𑌪𑍍𑌰𑌾𑌚𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍।

விகாரஶப்தாந்நேதிசேந்ந ப்ராசுர்யாத்।

ஆனந்தமயத்தில் விகாரம் எனப் பொருள்படுகின்ற மயம் என்னும் சப்தமுண்மையின், ஆனந்தமயம் பிரஹ்மமன்றும் என்று ஆக்ஷேபிக்கின், அது (பொருந்துவ) தன்று; அந்த மயம் என்பது மிகுதி என்னும் பொருட்டாமாகலின் என்றும் வேதாந்தசூத்திரமும்,

𑌰𑌸𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌸𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾।

ரஸோ ப்ரஹ்மரசம் லப்த்வாநந்தீ பவதி நாந்யதா।

"பிரமம் ஆனந்தகுணமுடையது; அந்தப் பிரஹ்மானந்தத்தை ஆன்மா அடைந்து ஆனந்தமாயிருக்கின்றான்; பிறிதோர் பிரகாரத்தாலன்று" என்று ஆனந்தாமிர்தமும்,

𑌯 𑌆𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌚𑍁𑌰𑍋 𑌯𑌤𑌃।
𑌆𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌿𑌨𑍍𑌨𑍈𑌵 𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌾 𑌇𑌦𑌂 𑌨𑌮𑌃॥

ய ஆநந்தமயோப்யாஸாதாநந்தப்ரசுரோயதஃ।
ஆநந்த்யாதாநந்தவிந்நைவ விபேத்யஸ்மா இதம் நமஃ॥

(தைத்திரீயசுருதியும் இதனை ஆதாரமாகக்கொண்ட வேதாந்தசூத்திரமும்) அப்பியாசத்தினால் எந்தச் சிவன் ஆனந்தமயராயுள்ளாரோ என்றும், ஆனந்தமயம் என்றதில் மயம் என்றது ஆனந்தமிகுதி எனப் பொருள்படுதலின் எவர் ஆனந்தமிகுதியுடையவரோ என்றும், ஆன்மாவுக்கு ஆனந்தத்தை விளைவிக்கின்றாரோ என்றும், (அந்தப்) பிரஹ்மானந்தத்தை அறிந்தவன் யாண்டும் பயப்படுவானல்லன் என்றும் கூறுகின்றனவோ, அவ்வியல்பினராகிய உமக்கு நமஸ்காரம்" என்று சுருதியுபப்பிருங்கணமாகிய சம்பவகாண்டமும் கூறுகின்றன.

துன்பாயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்க
ணன்பாற்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருந்தானையேத்துவார்க்கின்பமே.

—ஞா, திருநாலூர்மயானம்.

கண்ணினயலேகண்ணொன்றுடையார்கழலுன்னி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுவகைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே.

—ஞா, திருப்பாசூர்.

தேனுமாயமுதாகிநின்றான்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடிக்
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவா
ரூனமானவைபோயறுமுய்யும்வகையதே.

—ஞா, திருமங்கலக்குடி.

தேனிலுமினியர்பாலனநீற்றர்தீங்கரும்பனையர்தந்திருவடி தொழுவா, ரூனயந்துருகவுவகைகடருவாருச்சிமேலுறைபவரொன்றலாதூரார், வானகமிறந்துவையகம்வணங்கவயங்கொளநிற்பதோர்வடிவினையுடையா, ரானையினுரிவைபோர்த்தவெம்மடிகளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே.

—ஞா, திருவச்சிறுபாக்கம்.

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளுமரசினு
மினியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே.

—நா, திருவிடைமருதூர்.

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைசெய்து
பருகியூறலைப்பற்றிப்பதமறிந்
துருகிநைபவர்க்கூனமொன்றின்றியே
யருகுநின்றிடுமானைக்காவண்ணலே.

—நா, திருவானைக்கா.

பொறிப்புலன்களைப்போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்துநினைந்தவர்சிந்தையு
ளறிப்புறும்மமுதாயவனேகம்பங்
குறிப்பினுற்சென்றுகூடித்தொழுதுமே.

—நா, திருக்கச்சியேகம்பம்.

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டுநல்லிட்டமாய்த்
திருப்புத்தூரானைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றிலுமண்ணிக்குங்காண்மினே.

—நா, அரிசிற்கரைப்புத்தூர்.

கருகுகண்டத்தன்காய்கதிர்ச்சோதியன்
பருகுபாலமுதேயெனும்பண்பின
னருகுசென்றிலளாவடுதண்டுறை
யொருவனென்னையுடையகோவென்னுமே.

—நா, திருவாவடுதுறை.

அருமறையனையானொடுபெண்ணனைக்
கருவிடம்மிகவுண்டவெங்கண்டனைப்
புரிவெண்ணூலனைப்புள்ளிருக்குவேளூ
ருருகிநைபவருள்ளங்குளிருமே.

—நா, திருப்புள்ளிருக்குவேளூர்.

காமாத்தம்மெனுங்கார்வலைப்பட்டுநான்
போமாத்தையறியாதுபுலம்புவே
னுமாத்தூரானேயென்றழைத்தலுந்
தேமாத்தீங்கனிபோலத்தித்திக்குமே.

—நா, திருவாமாத்தூர்.

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரே
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
யினிதுசாலவுமேசற்றவர்கட்கே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

விள்ளத்தானொன் றுமாட்டேன்விருப்பெனும்வேட்கையாலே
வள்ளத்தேன்போலநுன்னைவாய்மடுத்துண்டிடாமே
யுள்ளத்தேநிற்றியேனுமுயிர்ப்புளேவருதியேனுங்
கள்ளத்தேநிற்றியம்மாவெங்ஙனங்காணுமாறே.

—நா, தனித்திருநேரிசை.

விரும்பியூறுவிடேன்மடநெஞ்சமே
கரும்பினூறல்கண்டாய்கலந்தார்க்கவ
னிரும்பினூறலறாததோர்வெண்டலை
யெறும்பியூர்மலையானெங்களீசனே.

—நா, திருவெறும்பியூர்.

கங்கைதங்கியசடையுடைக்கரும்பே
கட்டியேபலர்க்குங்களைகண்ணே
யங்கைநெல்லியின்பழத்திடையமுதே
யத்தாவென்னிடரார்க்கெடுத்துரைக்கேன்
சங்குமிப்பியுஞ்சலஞ்சலமுரல
வயிரமுத்தொடுபொன்மணிவரன்றி
யோங்குமாகடலோதம்வந்துலவு
மொற்றியூரெனுமூருறைவானே.

—சு, திருவொற்றியூர்.

போருங்கைமதகரியுரிவைப்போர்வையானைப்
பூவணமும்வலஞ்சுழியும்பொருந்தினானைக்
கரும்புதருகட்டியையின்னமிர்தத்தைத்தேனைக்
காண்பரியசெழுஞ்சுடரைக்கனகக்குன்றை
யிருங்கனகமதிலாரூர்மூலட்டானத்
தெழுந்தருளியிருந்தானையிமையோரேத்து
மருந்தவனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே.

—நா, திருவாரூரரநெறி.

மாலையெழுந்தமதியேபோற்றி
மன்னியென்சிந்தையிருந்தாய்போற்றி
மேலைவினைகளறுப்பாய்போற்றி
மேலாடுதிங்கண்முடியாய்போற்றி
யாலைக்கரும்பின்றெளிவேபோற்றி
யடியார்கட்காரமுதமானாய்போற்றி
காலைமுளைத்தகதிரேபோற்றி
கைலைமலையானேபோற்றிபோற்றி.

—நா, ஸ்ரீகைலாயம்.

அளியானையண்ணிக்குமான்பாறன்னை
வான்பயிரைப்பயிரின்வாட்டந்தீர்க்குந்
துளியானையயன்மாலுந்தேடிக்காணுச்
சுடரானைத்துரிசறத்தொண்டுபட்டார்க்
கெளியானையாவர்க்குமரியான்றன்னை
யின்கரும்பின்றன்னுள்ளாலிருந்ததேறற்
றெளியானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே.

—நா, திருநாகேச்சரம்.

கரும்பிருந்தகட்டிதனைக்கனியைத்தேனைக்
கன்ருப்பினடுதறியைக்காறையானை
யிரும்பமர்ந்தமூவிலைவேலேந்தினானை
யென்னானைத்தென்னானைக்காவான்றன்னைச்
சுரும்பமருமலர்க்கொன்றைசூடினானைத்
தூயானைத்தாயாகியுலகுக்கெல்லாந்
தரும்பொருளைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாள்போக்கினேனே.

—நா, திருத்தலையாலங்காடு.

குற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக்குலைத்தநம்பிசிலையாவரை கையிற், பற்றுநம்பிபரமானந்தவெள்ளம்பணிக்குநம்பியெனப் பாடுவதல்லான், மற்றுநம்பியுனக்கென்செயவல்லேன்மதியிலியேன் படுவெந்துயரெல்லா, மெற்றுநம்பியென்னையாளுடைநம்பியெழு பிறப்புமெங்கணம்பிகண்டாயே.

—சு, திருமுதுகுன்றம்.

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்
சங்கராவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றே
னியாதுநீபெற்றதொன்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்
றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டா
யானிதற்கிலனோர்கைம்மாறே.

—திருவாசகம்.

கரும்புந்தேனுங்கலந்ததோர்காயத்தி
லரும்புங்கந்தமுமாகியவானந்தம்
விரும்பியேயுள்ளம்வெளியுறக்கண்டபின்
கரும்புக்கைத்ததுதேனும்புளித்ததே.

—திருமந்திரம்.

அடிசார்ந்தவர்க்குமுடியாவின்ப
நிறையக்கோடும்பினுங்குறையாச்செல்வ.

—பதினொராந்திருமுறை.

ஆனந்தவெள்ளத்தினிடைமூழ்கியம்பலவர்
தேனுந்துமலர்ப்பாதத்தமுதுண்டுதேளிவெய்தி
யூனந்தானிலாகியுவந்திருந்தார்தம்மைக்கண்
டீனந்தங்கியதிலதாமென்னவதிசயமென்றார்.

—பெரியபுராணம்.

பிறவிநோயை அறுக்கும் மருந்தாகிய சிவம் பெத்தகாலமுதல் முத்திகாலம்வரையும் ஆன்மா தன்னோடு உடனின்று அறிவித்தும் அறிந்தும் வரும் பேருபகாரத்தை மறவாது இடையீடின்றிச் சிந்திக்குங்கால், அன்பினிலேயே அதுவாய், பரமானந்தப்பேருஞ் செல்வமே சுயந்திருமேனியாயுள்ள அப்பரம்பொருள் போறுப்பரிய பேரன்பை அருளி அதன்வழியே எங்குமிலாப் பேரும் போகத்தைப் புரியுமாறு புகுந்திடும்.

ஓயாதேயுள்குவாருள்ளிருக்குமுள்ளானைச்
சேயானைச்சேவகனைத்தென்னன்பெருந்துறையின்
மேயானைவேதியனைமாதிருக்கும்பாதியனை
நாயானநந்தம்மையாட்கொண்டநாயகனைத்
தாயானதத்துவனைத்தானேயுலகேழு
மாயானையாள்வானைப்பாடுதுங்காணம்மானாய்.

—திருவாசகம்.

உன்னுமுளதையமிலதுணர்வாயோவாது
மன்னுபவந்தீர்க்குமருந்து.

—திருவருட்பயன்.

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுமுணராநஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகிவுடனுவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே.

—ஞா, திருவாய்மூர்.

உள்ளமுருகிவுடனுவரல்லது
தெள்ளவரியரென்றுந்தீபற
சிற்பரச்செல்வரென்றுந்தீபற.

—திருவுந்தியார்.

சிவபோகச்செல்வர்சித்துச் சிவாமிர்தம் தித்தித்தூறல்.

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
யாறுசேஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே.

—நா, திருவாட்போக்கி.

ஏறதேறுமிடைமருதீசனர்
கூறுவார்வினைதீர்க்குங்குழகனை
ராறுசேஞ்சடைவைத்தவழகனூர்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே.

—நா, திருவிடைமருதூர்.

ஊனெக்குமின்பம்வேண்டியுழலாதே
வானெக்கும்வழியாவதுநின்மினோ
தானெக்குந்தன்னடியவர்நாவினிற்
றேனெக்குந்திருவெண்காடடைநெஞ்சே.

—நா, திருவெண்காடு.

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே.

—நா, தனித்திருக்குறுந்தொகை.

அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டே
யன்பொடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையுங்
கற்பகப்பொழிலுமுழுதுமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே.

—திருவிசைப்பா.

சிவபோகச்செல்வர்க்கு மயிர்ப்புளகம் ஆனந்தபாஷ்பம் பரவசப்பட்டுவீழ்தல் உளவாதல்.



புளிக்கண்டவர்க்குப்புனலூறுமாபோற்
களிக்குந்திருக்கூத்துக்கண்டவர்க்கெல்லா
மளிக்குமருட்கண்ணீர்சோர்நெஞ்சுருக்கு
மொளிக்குளானந்தத்தமுதூறுமுள்ளத்தே.

—திருமந்திரம்.

நேடிதுபோதுயிர்த்துநின்றுநிறைந்தெழுமயிர்க்காறேறும்
வடிவேலாம்புளகம்போங்கமலர்க்கணீரருவிபாய
வடியனேற்கிவர்தாமிங்கேயகப்பட்டாரச்சோவென்று
படியிலாப்பரிவுதானோர்படிவமாம்பரிசுதோன்ற.
போற்றிமெய்யருட்டிறம்பெறுபரிவுடன்வணங்கி
நீற்றின்மேனியினிறைமயிர்ப்புளகங்கணெருங்கக்
கூற்றடர்த்தவர்கோயிலின்புறம்புபோந்தருளி
யாற்றுமின்னருள்வணிகர்மேற்செலவருள்செய்வார்.
பரவிவருமானந்தநிறைந்ததுளிகண்பனிப்ப
விரவுமயிர்ப்புளகங்கண்மிசைவிளங்கப்புறத்தணைவுற்
றாவுநெடுந்திரைவேலையணிவான்மியூரதனுட்
சிரபுரத்துப்புரவலனூர்சிலநாளங்கினிதமர்ந்தார்.

வீழ்ந்துபோற்றிப்பரவசமாய்விம்மியெழுந்துமெய்யன்பால்
வாழ்ந்தசிந்தையுடன்பாடிமாறுவிருப்பிற்புறம்போந்து
சூழ்ந்ததொண்டருடன்மருவுநாளிற்றில்லைக்கச்சிநகர்த்
தாழ்ந்தசடையாராலயங்கள்பலவுஞ்சார்ந்துவணங்குவார்.

பூதமுதல்வர்புற்றிடங்கொண்டிருந்தபுனிதர்வன்றொண்டர்
காதல்புரிவேதனைக்கிரங்கிக்கருணைத்திருநோக்களித்தருளிச்
சீதமலர்க்கண்கொடுத்தருளச்செவ்வேவிழித்துமுகமலர்ந்து
பாதமலர்கண்மேற்பணிந்துவீழ்ந்தாருள்ளம்பரவசமாய்.

—பெரியபுராணம்.

திண்டாடிவீழ்கைசிவானந்தமாவது
வுண்டார்க்குணர்வுண்டாமுன்மத்தஞ்சித்திக்குங்
கொண்டாடமென்றுட்குளிக்குந்திருக்கூத்துக்
கண்டார்வருங்குணங்கெட்டார்க்குமொக்குமே.

—திருமந்திரம்.

சிவபோகச்செல்வர்க்கு முடிவிலாவானந்த
சிவமே யாண்டும் தோற்றுதல்.

𑌯𑍋 𑌵𑍈 𑌭𑍂𑌮𑌾 𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌨𑌾𑌲𑍍𑌪𑍇 𑌸𑍁𑌖𑌮𑌸𑍍𑌤𑌿 𑌭𑍂𑌮𑍈
𑌵 𑌸𑍁𑌖𑌂 𑌭𑍂𑌮𑌾 𑌤𑍍𑌵𑍇𑌵 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌭𑍂
𑌮𑌾𑌨𑌂 𑌭𑌗𑌵𑍋 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸 𑌇𑌤𑌿।

யோ வை பூமா தத்ஸுகம் நால்பே ஸுகமஸ்தி பூமைவ ஸுகம் பூமா த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்ய இதி பூமாநம் பகவோ விஜிஜ்ஞாஸ இதி।

"எது முடிவிலா ஆனந்தமோ (பூமாவோ) அது இன்பம்; அற்பத்திலே இன்பம் இல்லை; பூமாவே இன்பம்; (முடிவிலா ஆனந்தமாகிய) பூமாவே அறியற்பாற்று; பகவானே! முடிவிலா ஆனந்தத்தை அறியவிரும்புகின்றேன்" என்றும்,

𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍃𑌣𑍋𑌤𑌿 𑌨𑌾
𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌸 𑌭𑍂𑌮𑌾।

யத்ர நாந்யத்பஶ்யதி நாந்யச் ச்ருணோதி நாந்யத்விஜா
நாதி ஸ பூமா।

"எங்கே மற்றொன்றும் காண்கிலனே, மற்றொன்றும் கேட்கிலனே, மற்றொன்றும் அறிகிலனே, அது பூமா" என்றுஞ் சாந்தோக்கியோபநிடதமும்,

ஹார்த்தாய ஸர்வஜந்தூநாம் துப்பம் பூமாய தே நமः|

ஹார்த்தாய ஸர்வஜந்தூநாம் துப்பம் பூமாய தே நமः|

"சமஸ்த செந்துக்களின் இதயத்தின்கண்ணே வசிப்பவரும், முடிவிலா இன்பமுடையருமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று சம்பவகாண்டமும் கூறுமாற்றால், முடிவிறந்த சிவானந்தத்துள்ளே அமிழ்ந்திய சீவன்முக்தர் மற்றோர் அற்ப இன்பத்தை விரும்பி ரூபாதிவிஷயங்களைக் கண்டு பிரவர்த்தித்துப் பிராரத்தவாதனையிற் படுவாரல்லராய், எவ்விடத்தும் சிவத்தோற்றம் ஒன்றையே காணப் பெறுவர்.

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே.

—திருவாசகம்.

தோண்டர்மனம்பிரியாததிருப்படியைத்தொழுதிறைஞ்சி
மண்டுபெருங்காதலினாலேக்கிமுகமலர்ந்தெழுவா
ரண்டமெலாநிறைந்தெழுந்தவானந்தத்துள்ளலைந்து
கண்டபேரின்பத்தின்கரையில்லாநிலையணைந்தார்.

—பெரியபுராணம்.

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே.

—ஞா, திருவாலவாய்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங்
கொள்ளுங்கிழமையாங்கோளேதானும்
பருகாவமுதமாம்பாலினெய்யாம்
பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணா
மொருகாலுமையாளோர்பாகனுமா
முண்ணின்றநாவிற்குரையாடியாங்
கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்
கண்ணாங்கருகாவூரெந்தைதானே.

—நா, திருக்கருகாவூர்.

ஊனாகியுயிராகியதனுணின்ற
வுணர்வாகிப்பிறவனைத்துங்நீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வந்து
நல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய்
தேனாருங்கொன்றையனேநின்றியூராய்
திருவானைக்காவிலுறைசிவனேஞான
மானாயுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே.

—நா, திருவானைக்கா.

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே.

—சு, திருவெண்ணெய்நல்லூர்.

மூலப்பிரகிருதி கடந்தவிடத்துள்ள ஆன்மப்பிரமம் மாயா வாதோபநிடதப்பிரகாரம் சிவன் எனப்படுகின்றது; இந்தச் சிவனையுற்று ஏகான்மவாதவராகோபநிடதம் "சிவனே சகலமும், சிவனைக்காட்டிலும் வேறொன்றும் இல்லை" என்று கூறுகின்றது. இங்ஙனம் பௌதிகயோகத்துக்கும் வைதிகபசுபதயோகத்துக்கும் இடைக்கண்ணே மூலப்பிரகிருதிப்பாற்பட்டுள்ள நிர்க்குண சாங்கியயோக சிவனையுற்றுக் கூறினமை பொருத்தமேயாக, மூலப்பிரகிருதி கடந்து, அதற்கு அப்பாலுள்ள சூக்குமப்பிர கிருதி கடந்து, அதற்கு அப்பாலுள்ள பரப்பிரகிருதி கடந்து, அப்பாற்பட்டுள்ள சைவசித்தாந்த சொரூபசிவத்தையுற்றுப்போந்த மேலே கூறிய "குற்றநீ குணங்கணீ" என்றற்றொடக்கத்த திருவருட்பாக்களைத் தமது கீழ்நிலைக்கண்ணதாகிய பசுப்பிரம மாகிய சிவனுக்கேற்றி ஏகான்மவாதிகள் தலைதடுமாறிநிற்கின்றார் கள். இது வயிரக்கல்லுக்கு ஏற்றப்படும் உயர்ந்த விலையை அற்ப விலையுடைய ஸ்படிகக்கற்கு ஏற்றினமை போலவும், சிரேஷ்டமாகிய குதிரைக்குக் கூறப்பட்ட உயர்ந்த விலையைக் கோவேறுவே சரிக்கு ஏற்றினமைபோலவுமன்றோ முடிகின்றது. "அரக்கர் சேனை நீறுபட்டழிய" என்ற செய்யுட்பாகத்தைக் கண்டவுடனே ஒருவர் விபூதிமான்மிய உபநிடதப்பிரமாணங்களோடு இந்தக்

கம்பராமாயணச் செய்யுளையும் திரிவுணர்ச்சிகொண்டு சேர்த்து எழுதினமைபோல, தேவாரதிருவாசகமுதலியவற்றிலே "ஊனு யுயிரானாய்" "வானாகிமண்ணாகி" என்றற்றொடக்கத்த அருட்பாக் களைக் கண்டவுடனே, தங்கள் ஏகான்மவாதத்துக்குரிய நிர்க் குணப்பிரமசிவனை உணர்த்தும் ஏகான்மவாதச்செய்யுட்களோடு அத்திருவருட்பாச்செய்யுட்களையுஞ் சேர்த்து எழுதிச் சைவசித் தாந்தத்தையும் மாயாவாதத்தையும் ஒன்றாகக் கலக்கிக் குழறு படை செய்வதையுற்றுச் சைவநேயர்கள் விழிப்பாயிருப்பார்க ளாக.

ஹிஸிதாதோஸ் ஸிம்ஹஶப்தோ வஶகாந்தேள ஶிவஃ ஸ்ம்ருதஃ।
வர்ணவ்யத்யயதஸ் ஸித்தேள பஶ்யகஃ கஶ்யபோ யதா॥

ஹிஸிதாதோஸ் ஸிம்ஹஶப்தோ வஶகாந்தேள ஶிவஃ ஸ்ம்ருதஃ।
வர்ணவ்யத்யயதஸ் ஸித்தேள பஶ்யகஃ கஶ்யபோ யதா॥

"பச்யக என்பதினாற் கச்யப என்னும் பதமும், ஹிம்சித்தல் எனப்பொருள்படும் ஹிசி தாதுவினின்று சிம்மசப்தமும் வர்ண வியத்யயத்தினால் எய்தினாற் போல, அன்புறுதல் எனப் பொருள் படும் வச என்னும் பகுதியினின்று சிவ என்னும் சப்தமும் எய்தி யது" ஆகலின், சிவம் என்னும் மொழி அன்பு எனப் பொருள் படும்.

அபுத்திபூருவம், புத்திபூருவம், உபாயச்சரியை, உபாயக்கி ரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரியை, உண்மைக் கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் என்னும் பதின்வகைச் சிவபுண்ணியங்களுள்ளே, ஒன்றாகிய உண்மைஞானமானது "(சிவ ஞானபோதவசனாலங்காரதீப"த்தின் உ, ரு, சு, எ, அ, கூ, க0, கக—ம் சூத்திரங்களின் கீழே உணர்த்தப்பட்டவாறு) தத்துவரூபமுதற் சிவபோகம் இறுதியாகப் பத்துவகைப்படும். படவே, துரியா தீதத்துச் சிவபோகம் சிவபுண்ணியமேயாம். இச்சிவபுண்ணிய சிவபோகம் சிவமாகிய அன்புநிலையேயாம். அது

> இன்பி லினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா
> மன்பு நிலையே யது.

—திருவருட்பயன்.

முன்பு ஈட்டிய தவத்தின் முதிர்ச்சியினால் ஒருவர்க்கு அன்பு என்பது இப்பொழுது உளதாயின், எல்லா இன்பங்களினும் இனி மையுடைத்தென்று சிறப்பித்துப் புகழப்படும் பேரின்பசிவபோ கம் இப்பொழுதே உளதாம்; அது மிகுந்த அன்பினது நிலை யையே தனக்கு நிலையாகவுடையதாகலான் என்பது.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

—திருமந்திரம்.

சிவபோகத்தை எய்துதற்கு உரிய நெறிகள் சன்மார்க்க முறை அன்புநெறி என இரண்டு உளவாம்.

உள்ளும் புறம்பு நினைப்பொழியி லுன்னிடையே
வள்ள லெழுந்தருளு மாதினொடு—தெள்ளி
யறிந்தொழிவா யன்றியே யன்புடையை யாயிற்
செறிந்தொழிவா யேதேனுஞ் செய்.

—திருக்களிற்றுப்படியார்.

பரம்பொருளை ஏகதேசப்படுத்திச் சகமார்க்கத்தினால் அகத்தே தியானிப்பதும், புத்திரமார்க்கம்போல அகத்தும் புறத்தும் தியானிப்பதும், தாதமார்க்கம்போற் புறத்தே தியானிப்பதுமொழிந்து பூரணநிலையை அறிந்து வழிபடின், உன் அறிவிலே காருண்ணியத்தினோடும் சிவம் பிரகாசிக்கும்; சகமார்க்க புத்திமார்க்க தாதமார்க்கத் தியான நினைப்பு ஒழியுமாறு, குருவருள்பெற்று மெய்யுணர்தலிற் றலைப்பட்டுச் சன்மார்க்கமுறையினொழுகுதி; அங்ஙனமின்றி அன்பு செய்ய வருமாகின் முதல்வனிடத்து அன்பு செய்து சிவத்திடைச் செறிந்து நிற்குதி; இவ்விரண்டனுள் இயன்றதொன்றைச் செய்குதி என்றது திருக்களிற்றுப்படியார் என்னும் சித்தாந்தசாஸ்திரம்.

அன்புநெறி.

அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

—திருக்களிற்றுப்படியார்.

இங்கே "அறிவழியும் அன்பு" என்றது ஞானக்கிரியைகள் இழந்தவிடத்துளதாம் அன்பின் மேலதாயிற்று. மேலும், திருக்களிற்றுப்படியாரில் "அவிழ்ந்த துணியில்" "சுரந்ததிருமுலைக்கே" என்றற்றொடக்கத்த திருவெண்பாக்களிலே போந்த அவிழ்ந்த மனம் தாழ்ந்தமனம் என்பனவும் செயலிழந்த அன்பினை உணர்த்தியவாம்.

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கீரிறையேவந்துசார்மின்களே.

—ஞா, திருப்பாசுரம்.

மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றுமேன்ப
தாதிச்சுடர்ச்சோதியையன்பினகத்துள்ளாக்கிப்
போதித்தநோக்குற்றொழியாமற்பொருந்திவாழ்ந்து
பேதித்தபந்தப்பிறப்பின்னெறிபேர்மினென்றும்.

—பெரியபுராணம்.

ஆர்வல்லார்காணவரனவனையன்பேன்னும்
போர்வையதனாலேபோர்த்தமைத்து—சீர்வல்ல
தாயத்தானூழ்ந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தோமறைத்து.

—காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி.

பத்திவலையிற்படுவோன்காண்க.

—திருவாசகம்.

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
யன்படைத் தெம்பெரு மானை யறிகிலார்
வன்படைத் திந்த வகலிட வாழ்வினி
லன்படைத் தான்ற னகலிடந் தானே.

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவ
னன்பினுள் ளாகி யமரு மரும்பொரு
ளன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே.

செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தோடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாமே.

ஒத்துல கேழு மறியா வொருவனென்
றத்த னிருந்திட மாரறி வார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படி னல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரே.

கண்டறி வாரில்லை காயத்தி னுந்தியை
யெண்டிசை யோரு மிறைவனென் றேத்துவ
ரண்டங் கடந்த வளவிலா வானந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே.

—திருமந்திரம்.

பொருப்பினில் வந்தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மே
லருப்புறுமென் மலர்முன்னை யவைநீக்கு மாதரவால்
விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படியவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

உருகியவன் பொழிவின்றி நிறைந்தவவ னுருவென்னும்
பெருகியகோள் கலமுகத்திற் பிறங்கியினி தொழுகுதலா
லொருமுனிவன் செவியுமிழு முயர்கங்கை முதற்றீர்த்தப்
பொருபுனலி னெனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம்.

நண்ணிமா மறைக்குலங்க ளுடவென்று நீடுமத்
தண்ணிலா வரும்புகொன்றை தங்குவேணி யார்தமைக்
கண்ணினீடு பார்வையொன்று கொண்டுகொணு மன்பர்முன்
னெண்ணில்பார்வை கொண்டுவேட ரெம்மருங்கு மேகினார்.

உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளைச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண் விமலரையு முடன்கண்ட விருப்பும் பொங்கிப், பள்ளத்தி லிழிபுனல்போற் பரந்து செல்லப் பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன், வள்ளத்தில் ஞானவா ரமுது முண்டார் மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார்.

—பெரியபுராணம்.

"முன்பு செய்தவத்தினீட்ட முடிவிலாவின்பமான வன்பினை யெடுத்துக்காட்ட" என்று கூறப்படலான், முன்னர் ஈட்டிய பெருந் தவமே முடிவிலா இன்ப அன்புக்குக் காரணமாகின்றது. அறிவு செயல் இழந்த விடத்துளதாம் அன்புப்போர்வைகொண்டே னும், அன்புவலைகொண்டேனும், அன்புநாழிகொண்டேனும் சிவானந்த மகோததியிலே படிந்து, போர்த்து,முகந்து நீடித்து நிற்றற்கு நீடித்த அன்பு வேண்டும். சிவபுண்ணியமுதிர்ச்சியின் றேல், அன்பினகத்துட்கொண்டு சிவத்தை நீடித்துப் பார்த்தல் கூடாதாகி முடிந்துவிடும். சிவதீக்ஷையின்றி அறுபத்துமூன்று நாயன்மார் அன்பினுற் சிவத்தை அகத்துள் அடக்கினின்ருர்களே, நாமும் அங்ஙனம் தீக்ஷையின்றிச் சிவத்தை அடைந்துவிடலாமே எனின், கூறுதும்: கண்ணப்பநாயனுர் காளத்தியப்பரை ஆறு நாளும் இடையே வற்றி அற்றுப்போகாத நெடுகிய அன்பினுல் நீண்டபார்வைகொண்டு பார்த்து முத்தியடைந்தாரன்றே, அங்ங னம் மற்றைய அடியார்களும் சாயாத அன்பினுற் சிவத்தை உணர் ந்திருந்தார்கள். சிவபுண்ணியமிலாமையால் நீடித்துச் சிவத்தை நோக்கவியலாத நாம் அறுபத்துமூன்றுநாயனுர்போலப் பக்தியை அநுசரித்துச் சிவதீக்ஷையின்றி வாழுவோம் எனல் நாடகமாத்தி ரையேயாம். இடையீடின்றி முறுகி ஓங்கிய அன்புக் குருமணிக ளாகிய அறுபத்துமும்மை நாயன்மார்களுள்ளே, திருஞானசம்பந்த மூர்த்திநாயனுரை ஞானப்பால்கொண்டும், திருநாவுக்கரசுநாயனு ரைச் சூலைநோய்கொண்டும், சுந்தரமூர்த்திநாயனுரை அடிமையோ லைகொண்டும், கண்ணப்பநாயனுரைச் சாட்சுஷிதீக்ஷைகொண்டும், அமர்நீதிநாயனுரைக் கௌபீனங்கொண்டும், திருநீலகண்டநாய னுரை ஓடுகொண்டும், காரைக்காலம்மையாரை மாம்பழங்கொண் டும் "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமுமாதிமாண்புங் கேட்பான் புகிலளவில்லை" என்னும் திருப்பாசுரப் பிரகாரம், சிவபெருமான் வேதாகமங்களின் விதிகடந்து தீக்ஷைசெய்து அடிமைகொண்டார். அவற்றையெல்லாம் சிற்றறிவினேமாகிய யாமா அளவிட்டு இன்னு ருக்கு இன்ன தீக்ஷை செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லவல்லேம். ஆகலின், தீக்ஷையின்றியமையாததேயாம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியானேக்கினேற்குத்
திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
யறைகழலிறைஞ்சுமாரூரப்பனேயஞ்சினேனே.

—சு, திருவாரூர்.

வேதாகம இதிகாசபுராணப்பொருள்களை அடக்கிய திராவிட வேதமாகிய தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளிலே புகழப் பட்ட சிவபெருமானது பெருமையைச் சிந்தித்து உணர்ந்து, சிவத் தோடு ஆன்மாவானது அத்துவிதமாய் இசைந்த இன்பமே இன் பத்தோடிசைந்த வாழ்வாகும் என்றுண்மை கடைப்பிடித்து உய் தல் சிவநேசச் செல்வர் யாவர்க்கும் கடமையாம்.

தேவாரம் வேதசாரம்

முற்றுப்பெற்றது.


திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பி ழை தி ரு த் த ம்.



பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க௨	௨௯	பட்டது	பட்டவர்
க௩	௩	சிவப்பிர	சுவப்பிர
,,	௭	வெளி	வளி
க௫	௨	பெமான்	பெருமான்
க௬	க௮	போதை	பேதை
௨0	௯	ஶ்ருதி	ஶ்ருதி
௨௮	௨௨	஬ஹு஧ெநா஽	஬ஹு஧நா஽
௨௯	௭	ஹாஸ	ஹாக்
௩௨	௪	௪௭	௪
௬க	க௨	ஹ்ரூஶ	ஹ்ரூஶ
௭௩	௨௪	வர்மா	வர்ணமா
௯௬	௮	படாத	படாதது
க௨க	௭	பிலா	பில்லா
க௫௪	க௨	நிதட	நிடத
,,	௨௫	ஞிதழ	ஞிதழ
க௫௭	க௯,௨0	ஹரிகெஶெ ஹ்யா நமஃ ஹரிகேஶேப்யோ நமஃ	நமோ ஹரிகெ ஶாயொவவீதி ந நமோ ஹரிகேஶா யோபவீதிநே
க௫௮	௬	ஶிஜ	ஶிஜ
க௫௯	க0	ஸ்ஹா	ஸா

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௭௨	௧௮	ணாஃ	ணாழ
௧௮௩	௧௬	ஸ்ஸ த	ஸ்ஸ த
௧௮௪	௨௧	ந்ஹா	த்ஹா
௨௦௦	௧௮	ஜெரா	ஜெநா
௨௧௨	௧௩	ஞன்கா	ஞன்காண்
௨௧௫	௧௧	௫. ௮௮	௫. ௮. ௮
௨௨௬	௨௯	நரத்மா	நாத்மா
௨௨௯	௨௨	மெருமா	பெருமா
௨௪௭	௧௧	ஷாஜி	ஷ்வாஜி
௨௫௭	௧௪	ஷவா	ஷ்வா
௨௫௮	௧௮	த்ஹெஸ்ஸஃ	த்க்ஹெஸ்வஃ
௨௬௮	௫	ஹமந்ர	ஹமவந்ர
,,	௭	ஹவக்ஷீ	ஹவக்ஷே
௨௭௧	௨௨	ஜீந்ர௦	ஜீநந்ர௦
௨௮௦	௫	வாஜா	வாஜு
,,	௧௧	ந்ரி	ந்ராதி
௨௮௯	௨	தக்ஷ	தக்ஷ
,,	௪	தைம்பார்த்தற்ரு	தைப்பார்த்தற்கு
௨௯௨	௧௦	வேனு	வேணு
௩௦௬	௧	க௦யந	க௦யா
,,	௧௭	நிமாநி	நீமாநீ
௩௧௦	௩௩	வரன்	வா
௩௧௩	௨௭	உன்னில்	உன்னிலுன்னும்
௩௩௮	௨௯	கபப்	கப்ப
௩௪௫	௧௬	யாரோடு	யாரொடு
௩௪௯	௧௨	ஞஹந	ஞக்ஷண
௩௫௪	௩௦, ௩௧	இதனுற் [தகரபுண்டரீகத்தின்பாலதாகிய] பிரமாண்டமாகிய சரீரத்திலே உள்ள	இதனுற்பிரமாண்டமாகிய சரீரத்திலே உள்ள தகரபுண்டரீகத்தின்பாலதாகிய
௩௫௫	௬	மமப	மம்ப
௩௬௮	௧௬	பாலதாய்	பாலனவாய்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩௯அ	௨௭	ஷேத்ரு	நஷேத்ரு
௩௭௯	௨௩	புபநம	புவநம்
௩௭௭	௧௯	தஷ	தெஷ
௩௭அ	௧௪	புகழ்ச்சார்பாகி	புகழ்ச்சார்பாகிய
,,	௧௬	கண் ணு	கண் ணு
௩௭௬	௯	கழற்	கழல்
௩௬௬	௧௬	பசுப	பாசுப

விக்கிரயபுத்தகம்.

		ரூ.	அ.
1.	நீலகண்டபாஷ்யத்தமிழ்மொழிபெயர்ப்பு	6	0
2.	வைதிகசுத்தாத்துவிதசைவ சித்தாந்ததத்துவப்படம்	3	0
3.	ஷை வினுவிடை	1	0
4.	வச்சிரதண்டமுந்தாந்திரிகதுண்டகண்டனகண்டனமும்	0	8
5,	மகாவுக்கிரவீரபத்திராஸ்திரம் ஏகான்மவாதகண்டனம் பற்றியது.	0	8
6.	ஸ்ரீசீகாழிப்பெருவாழ்வின் சிவகாருண்ணியமாட்சி	0	4

(தபாற்சார்ஜ்வேறு.)

இங்ஙனம்

சி. சிவசம்புநாதையர்

திருப்பரங்குன்றம், மதுரை.

		ரூ.	அ.
1.	சிவஞானபோதவசனலங்காரதீபம்	2	8
2.	தேவாரம்வேதசாரம்	3	0
3.	சிவலிங்கமகத்துவம்	0	4
4.	திருநீற்றின்உண்மை	0	4

விலாசம்:—

சி. சு. ஏகாம்பரமுதலியார்

24 சாமிபண்டாரம் தெரு

சிந்தாத்திரிப்பேட்டை சென்னை.

